# நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024 – 2025

மானியக் கோரிக்கை எண். 34

**கே.என். நேரு**
நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2024

# பொருளடக்கம்


| வ. எண் | | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|---|
| தொலை நோக்குத் திட்டம் | | | 1 |
| 1. | முன்னுரை | | 2–8 |
| | 1.1 | துறைகள் | 8–9 |
| | 1.2 | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் விவரங்கள் | 9–12 |
| 2. | நகராட்சி நிருவாக இயக்குநரகம் | | 13 |
| | 2.1 | நிருவாகம் | 13–25 |
| | 2.2 | உட்கட்டமைப்பு மேம்பாடு | 25–52 |
| | 2.3 | நகர்ப்புர சுகாதார கட்டமைப்பு | 52–62 |
| | 2.4 | நவீன நூலகங்கள் | 62–65 |
| | 2.5 | முன்னோடி திட்டங்கள் | 65–72 |
| | 2.6 | செயல்பாட்டிலுள்ள திட்டங்கள் | 73–102 |
| | 2.7 | பன்னாட்டு நிதியுதவித் திட்டங்கள் | 102–112 |
| | 2.8 | நிதி மேலாண்மை | 112–119 |
| | 2.9 | தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் | 120–121 |
| | 2.10 | முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் | 121–123 |
| | 2.11 | மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் நிதிநிலை | 123–124 |

| வ. எண் | தலைப்பு | | பக்கம் எண் |
|---|---|---|---|
| | 2.12 | நகராட்சி நிருவாக இயக்குநரக நிர்வாகத்தின் கீழ் செயல்படும் மாநகராட்சிகள் | 125–229 |
| 3. | பெருநகர சென்னை மாநகராட்சி | | 230 |
| | 3.1 | உட்கட்டமைப்பு | 231–269 |
| | 3.2 | சுகாதாரம் மற்றும் தூய்மை | 269–303 |
| | 3.3 | வருவாய் | 303–309 |
| | 3.4 | கல்வி | 309–329 |
| | 3.5 | நமக்கு நாமே திட்டம் | 329–330 |
| | 3.6 | நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம் | 331–332 |
| | 3.7 | சிங்கார சென்னை 2.0 | 332–336 |
| 4. | பேரூராட்சிகளின் இயக்குநரகம் | | 337 |
| | 4.1 | நிருவாகம் | 338–345 |
| | 4.2 | பேரூராட்சிகளின் செயல்பாடுகள் | 345–357 |
| | 4.3 | சுகாதாரம் | 357–370 |
| | 4.4 | எரிவாயு / மின்தகன கூடங்கள் | 370–371 |
| | 4.5 | சுற்றுச்சூழல் மேம்பாடு | 371–376 |
| | 4.6 | ஒன்றிய அரசின் திட்டங்கள் | 376–383 |
| | 4.7 | மாநில அரசின் திட்டங்கள் | 383–400 |
| | 4.8 | பேரூராட்சிகளில் மின் ஆளுமை | 400–404 |
| | 4.9 | நிதி மேலாண்மை | 404–409 |
| | 4.10 | விருதுகள் | 409–410 |

| வ. எண் | தலைப்பு | | பக்கம் எண் |
|---|---|---|---|
| 5. | சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் | | 411 |
| | 5.1 | குடிநீர் வழங்கல் மேலாண்மை | 416–429 |
| | 5.2 | குடிநீர் வழங்கல் திட்டங்கள் | 429–443 |
| | 5.3 | கழிவுநீர் மேலாண்மை | 443–452 |
| | 5.4 | கழிவுநீர் திட்டங்கள் | 452–460 |
| | 5.5 | மறுசுழற்சி மற்றும் மறு உபயோகம் | 460–472 |
| | 5.6 | பணியாளர் திறன் மேம்படுத்துதல் | 472–473 |
| | 5.7 | தொழில்நுட்பப் பயன்பாடு | 473–480 |
| | 5.8 | சென்னைப் பெருநகர கூட்டாண்மை திட்டம் | 481–491 |
| | 5.9 | நுகர்வோர் குறைகளை கண்காணித்தல் | 491–495 |
| | 5.10 | பணியாளர்களின் நலன் | 496–501 |
| | 5.11 | நிதி நிலைமை | 501–504 |
| 6. | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் | | 505 |
| | 6.1 | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தொலைநோக்குப் பார்வை | 508–510 |
| | 6.2 | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் செயல்பாடுகள் | 510 |
| | 6.3 | கூட்டுக்குடிநீர் திட்டங்களின் இயக்கம் மற்றும் பராமரிப்பு | 511–523 |

| வ. எண் | தலைப்பு | | பக்கம் எண் |
|---|---|---|---|
| | 6.4 | 2023–24 ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் | 523–529 |
| | 6.5 | செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள் | 529–541 |
| | 6.6 | சிறப்புத் திட்டம் | 542–545 |
| | 6.7 | புதிய கூட்டுக் குடிநீர் திட்டங்கள் | 546–547 |
| | 6.8 | செயலாக்கத்தில் உள்ள பாதாள சாக்கடைத் திட்டங்கள் | 548–553 |
| | 6.9 | புதிய பாதாள சாக்கடைத் திட்டங்கள் | 554 |
| | 6.10 | ஆராய்ச்சி, வடிவமைப்பு, பயிற்சி மற்றும் திட்ட மேலாண்மை மையம் | 555–565 |
| | 6.11 | கட்டுமான பொருட்கள் சோதனை மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் | 566–567 |
| | 6.12 | குடிநீரின் தரப்பரிசோதனை மற்றும் கண்காணிப்பு | 567–569 |
| | 6.13 | நிலநீர் புவியியல் (Hydro geology) பிரிவின் செயல்பாடுகள் | 569–576 |
| | 6.14 | மின்னணு தரவு செயலாக்கப் பிரிவு | 576–578 |
| | 6.15 | நிதி நிலை | 578–580 |
| | 6.16 | உயிர் நீர் இயக்கம் (Jal Jeevan Mission) | 580–595 |
| 7. | **தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம்** | | 596 |
| | 7.1 | தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம் | 597–600 |

| வ. எண் | தலைப்பு | | பக்கம் எண் |
|---|---|---|---|
| | 7.2 | வெளி ஆதாரத் திட்டங்கள் | 600–617 |
| | 7.3 | திட்ட மேம்பாட்டுச் சேவைகள் | 617–620 |
| | 7.4 | திட்ட மேலாண்மை சேவைகள் | 621–622 |
| | 7.5 | குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் | 622–624 |
| 8. | **சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை** | | 625 |
| | 8.1 | நிறைவுற்ற சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டங்கள் | 626–631 |
| | 8.2 | நடைபெற்றுவரும் சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டங்கள் | 631–641 |
| 9. | **தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்** | | 642 |
| | 9.1 | திட்ட இயக்குநரகம் / திட்ட முகமை | 642–643 |
| | 9.2 | நிதி மேலாளர் | 643–644 |
| | 9.3 | அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் | 644–649 |
| | 9.4 | அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் 2.0 | 649–652 |
| | 9.5 | சீர்மிகு நகரத் திட்டம் | 653–654 |
| | 9.6 | கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் | 654–659 |
| | 9.7 | சிங்காரச் சென்னை 2.0 | 660–662 |
| | 9.8 | நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 663–665 |

| வ. எண் | தலைப்பு | | பக்கம் எண் |
|---|---|---|---|
| | 9.9 | சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் – சுழற்சி நிதி | 665–666 |
| | 9.10 | மாநில நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி | 666–669 |
| | 9.11 | டுபிட்கோ உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டம் | 669–670 |
| 10. | **புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்** | | 671–681 |
| 11. | **தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம்** | | 682 |
| | 11.1 | செயல்படுத்தப்பட்டுள்ள முக்கியமான சில திட்டங்கள் | 684–697 |
| | 11.2 | நடைபெற்று வரும் திட்டங்கள் | 697–698 |
| | 11.3 | நடைபெற்று வரும் பெரிய அளவிலான திட்டங்கள் | 699–703 |
| | 11.4 | விருதுகள் | 704 |
| | 11.5 | இந்திய அரசுக்கான பணிகள் | 704–706 |
| | 11.6 | நிறுவனத்தின் நிதிநிலை | 706 |
| 12. | **நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்கு** | | 707 |
| 13. | **பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு** | | 712 |
| 14. | **தொடர் செயல் திட்டம்** | | 715 |

## மானியக் கோரிக்கை எண்.34

## நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2024-25

# தொலைநோக்குத் திட்டம்

*சுத்தம், பசுமை, ஆரோக்கியச் சுற்றுச்சூழல், அடிப்படை வசதி, பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு, வறுமை நிலை அகற்றல் மற்றும் நகர்ப்புர வளர்ச்சி போன்றவற்றில் வெளிப்படைத் தன்மையுடன் கூடிய பங்கேற்பு அணுகுமுறையை பின்பற்றுவதன் மூலமாக அனைவருக்கும் சிறந்த வாழ்க்கைத் தரத்தினை வழங்குவதற்கு வழிவகுத்தல்.*

## 1. முன்னுரை

உத்திரமேரூர் சதுர்வேதி மங்கலத்தின் கல்வெட்டில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளபடி, கி.பி. 10ஆம் நூற்றாண்டு முதல் மக்களாட்சி நிர்வாகத்தின் வளமான பாரம்பரியத்தைக் கொண்ட தமிழ்நாடு, தற்போது, நவீன காலகட்டத்தில், நகரமயமாதலில் குறிப்பிடத்தக்க எழுச்சியை அடைந்து, பெரிய மாநிலங்களிடையே வளர்ச்சியடைந்த மாநிலமாக திகழ்கிறது.

2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 48.45% மக்கள் நகர்ப்புரத்தில் வசிக்கின்றனர், இந்த மிக உயர்ந்த நகரமயமாக்கல் விகிதத்தைக் கொண்டு, இந்தியாவின் மிகவும் நகரமயமாக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றாக தமிழ்நாடு தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், தமிழ்நாட்டின் நகர்ப்புர மக்கள் தொகை 1.9 கோடியிலிருந்து (மொத்த மக்கள்

தொகையில் 34 விழுக்காடு) 3.5 கோடியாக (மொத்த மக்கள் தொகையில் 48.45 விழுக்காடு) அதாவது, 83% அதிகரித்துள்ளது. மாறாக, இந்தியாவின் நகர்ப்புர மக்கள் தொகை 1991–இல் 25.71% ஆக இருந்து 2011–இல் 31.16% ஆக உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டின் நகரமயமாதல் மிகவும் உயர்ந்த நிலையிலிருந்து தொடங்கிய போதிலும், இதே காலகட்டத்தில், ஒட்டுமொத்த இந்தியாவையும் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டின் நகர்ப்புர மக்கள் தொகைப் பெருக்கம் கணிசமான விரைவான வளர்ச்சி விகிதத்தை வெளிப்படுத்தியுள்ளது.

துரிதமான நகரமயமாதல் போக்கினால் எழும் சவால்களும், வாய்ப்புகளும் கண்கூடானவை. தமிழ்நாட்டின் உயர்ந்த நகரமயமாக்கல் நிலை, அதன் துடிப்பான மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட பொருளாதார அடித்தளத்திற்கு பங்களிப்பதுடன், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் இந்திய மாநிலங்களில் இரண்டாவது பெரிய மாநிலமாக

நிலைநிறுத்துகிறது. எனினும், நகரமயமாக்கலின் இடைவிடாத வேகம், நகர்ப்புர உட்கட்டமைப்பு மற்றும் சேவை வழங்கல் மீதான அழுத்தத்தை அதிகரிப்பதுடன், நகர்ப்புர வாழ்க்கையின் தரம் குறித்த கவலைகளையும் எழுப்புகிறது. நமது மாநிலம் வரலாற்று ரீதியாக பாராட்டத்தக்க நகர்ப்புர உட்கட்டமைப்பு உள்ளடக்கத்தை பராமரித்து வந்த நிலையிலும், விரைவான நகரமயமாக்கல் பாதை தற்போதுள்ள சேவை இடைவெளிகளை அதிகரிக்கக்கூடும், இது நகர்ப்புர வாழ்க்கைத் தரத்திற்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். மேலும், பொருளாதாரத் திறன் மற்றும் தனிநபர் வருமானம் அதிகரிக்கும் நிலையில், நகர்ப்புரச் சேவைகள் தொடர்பான குடிமக்களின் விருப்பங்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்பட வேண்டியதை அவசியமாக்குகின்றன. இத்தகைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, நகர்ப்புர உட்கட்டமைப்பு வசதிகளுக்கான முதலீடுகளை தற்போதைய

அளவிலிருந்து கணிசமாக அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை தமிழ்நாடு அரசு உணர்ந்துள்ளது.

மேலும், நகரங்களின் கருத்துருவாக்கத்தில், முன்னுதாரண மாற்றத்திற்கான அவசரத் தேவை உள்ளது. நகரங்களை வெறும் கட்டடங்கள், சாலைகள் போன்ற இயல் கட்டமைப்புகளின் தொகுப்பாகக் கருதுவதற்குப் பதிலாக, அவை மனித வளத்தின் தொகுப்புகளாகக் கருதப்பட வேண்டும். இத்தகைய நிலைப்பாட்டுடன் அனைவரையும் உள்ளடக்கிய நகர்ப்புர வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்க இந்த அரசு உறுதியளிக்கிறது.

தொலைநோக்குப் பார்வை 2021–2031–இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, குடிநீர் வழங்கல், தூய்மை இந்தியா திட்டம், அறிவுசார் மையங்கள் மற்றும் நகர்ப்புர பசுமையாக்கம் போன்ற முக்கியத்துவம் வாய்ந்தவற்றில் நகர்ப்புர வசதிகளையும் சேவைகளையும் வழங்கக் கவனம் செலுத்தப்படுகிறது.

தொழில்நுட்பம் மற்றும் உட்கட்டமைப்பு முன்னேற்றங்கள், மேம்பட்ட போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு தளங்கள், தரமான கல்வி, மருத்துவ வசதிகளை வழங்குதல் ஆகியன நகரமயமாக்கலின் நன்மை பயக்கும் தாக்கங்களாகக் கருதப்படுகின்றன. இருப்பினும், வீட்டுவசதி மற்றும் போக்குவரத்துத் துறைகளின் விரிவாக்கத்திற்கு ஏற்ப, உறுதிப்படுத்தப்பட்ட மற்றும் சரிவிகித குடிநீர் வழங்கல், சிறப்பான வடிகால் மற்றும் திடக்கழிவு மேலாண்மை போன்ற நகர்ப்புர சேவைகளில் அதிகரித்து வரும் தேவைகளை ஈடுசெய்வதில் பெரும் சவால் உள்ளது.

மத்திய அரசு நிதியுதவி மற்றும் மாநில திட்டங்களிலிருந்து நிதி ஒதுக்கீடுகளை பெறுவதில் இடைவெளிப் பகுப்பாய்வுடன் கூடிய நடப்பு அணுகுமுறையும், அதைத் தொடர்ந்த கூர்ந்த நகரத் திட்டமிடலும், முக்கிய கருவிகளாக உள்ளன. கூட்டு நிதி உத்திகளைப் பயன்படுத்தியும், பொதுமக்களின்

பங்களிப்பைக் கோரியும் உரிய நிதி ஒதுக்கீட்டுடன் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, காலநிலை–நெகிழ்திறன் நடவடிக்கைகள், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் விழிப்புணர்வை வளர்த்தல் ஆகியவற்றிற்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. காலநிலை மாற்றத்தின் சுற்றுச்சூழல் தாக்கத்தைக் குறைக்க நீர்நிலைகளைப் பாதுகாத்தல், அவற்றை மீட்டெடுத்தல், அதனால் கிடைக்கப் பெறும் நீரைப் பயன்படுத்துதல் மற்றும் உள்ளூர் தாவர வளர்ப்புடன் நகர்ப்புர பசுமையாக்கலை ஊக்குவித்தல் போன்ற உத்திகள் பின்பற்றப்படுகின்றன. கூடுதலாக, பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், நகர்ப்புர இட மேம்பாடு, பாரம்பரிய கட்டட மறுசீரமைப்பு மற்றும் தெரு விளக்குகள் ஆகியவற்றிற்கென்றே ஒதுக்கப்பட்ட நிதி நகர்ப்புர வாழ்வாதாரத்தை மேம்படுத்த பங்களிக்கிறது. இவ்வாறான நடவடிக்கைகள், நகர்மயமாதலால் ஏற்படும்

சவால்களைத் திறம்பட எதிர்கொள்வதற்கும், பொறுப்பான நிர்வாகத்திற்கான கலங்கரை விளக்கமாக தமிழ்நாடு உருவெடுப்பதற்கும் முக்கிய உந்து சக்தியாக திகழ்கின்றன.

## 1.1 துறைகள்

தமிழ்நாட்டில் உள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதற்கு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் பின்வரும் துறைத் தலைமையகங்கள் செயல்படுகின்றன:

1. நகராட்சி நிருவாக இயக்குநரகம் (DMA)
2. பெருநகர சென்னை மாநகராட்சி (GCC)
3. பேரூராட்சிகள் இயக்குநரகம் (DTP)
4. சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் (CMWSSB)
5. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWADB)
6. தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL)

7. சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை (CRRT)
8. தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO)
9. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம் (NTADCL)
10. தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் (TWIC)

**1.2 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் விவரங்கள்**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் நிருவாக கட்டுப்பாட்டின் கீழ் 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகள் ஆகியன செயல்பட்டு வருகின்றன.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 2023–24ஆம் நிதியாண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்களால், காரைக்குடி, திருவண்ணாமலை, புதுக்கோட்டை மற்றும் நாமக்கல் நகராட்சிகள் மாநகராட்சிகளாக தரம் உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

இதனடிப்படையில் காரைக்குடி, திருவண்ணாமலை, புதுக்கோட்டை மற்றும் நாமக்கல் ஆகிய நகராட்சிகளை மாநகராட்சிகளாக தரம் உயர்த்தும் அரசின் உத்தேச முடிவினை அறிவித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) எண்.55,56,57 மற்றும் 58 நாள் 15.3.2024–ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

உத்தேச ஆணைகளைத் தொடர்ந்து, தனிநபர்கள் மற்றும் பொதுநல சங்கங்களின் சார்பாக பெறப்பட்ட ஆட்சேபணைகள்/கருத்துக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

மாவட்ட வாரியான நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் விவரங்கள் பின்வருமாறு.

# அட்டவணை 1.1

## உள்ளாட்சி அமைப்புகளின் விவரங்கள் (மாவட்ட வாரியாக)

| வ. எண் | மாவட்டம் | மாநகராட்சிகள் | நகராட்சிகள் | பேரூராட்சிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | அரியலூர் | – | 2 | 2 | 4 |
| 2. | சென்னை | 1 | – | – | 1 |
| 3. | கோயம்புத்தூர் | 1 | 7 | 33 | 41 |
| 4. | கடலூர் | 1 | 6 | 14 | 21 |
| 5. | தர்மபுரி | – | 1 | 10 | 11 |
| 6. | திண்டுக்கல் | 1 | 3 | 23 | 27 |
| 7. | ஈரோடு | 1 | 4 | 42 | 47 |
| 8. | காஞ்சிபுரம் | 1 | 2 | 3 | 6 |
| 9. | செங்கல்பட்டு | 1 | 4 | 6 | 11 |
| 10. | கன்னியாகுமரி | 1 | 4 | 51 | 56 |
| 11. | கரூர் | 1 | 3 | 8 | 12 |
| 12. | கிருஷ்ணகிரி | 1 | 1 | 6 | 8 |
| 13. | மதுரை | 1 | 3 | 9 | 13 |
| 14. | நாகப்பட்டினம் | – | 2 | 4 | 6 |
| 15. | மயிலாடுதுறை | – | 2 | 4 | 6 |
| 16. | நாமக்கல் | – | 5 | 19 | 24 |
| 17. | நீலகிரி | – | 4 | 11 | 15 |
| 18. | பெரம்பலூர் | – | 1 | 4 | 5 |
| 19. | புதுக்கோட்டை | – | 2 | 8 | 10 |
| 20. | இராமநாதபுரம் | – | 4 | 7 | 11 |
| 21. | சேலம் | 1 | 6 | 31 | 38 |
| 22. | சிவகங்கை | – | 4 | 11 | 15 |
| 23. | தஞ்சாவூர் | 2 | 2 | 20 | 24 |
| 24. | தேனி | – | 6 | 22 | 28 |
| 25. | திருவள்ளூர் | 1 | 6 | 8 | 15 |
| 26. | திருவண்ணாமலை | – | 4 | 10 | 14 |
| 27. | திருவாரூர் | – | 4 | 7 | 11 |
| 28. | தூத்துக்குடி | 1 | 3 | 18 | 22 |
| 29. | திருச்சிராப்பள்ளி | 1 | 5 | 14 | 20 |
| 30. | திருநெல்வேலி | 1 | 3 | 17 | 21 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 31. | தென்காசி | – | 6 | 17 | 23 |
| 32. | திருப்பூர் | 1 | 6 | 15 | 22 |
| 33. | வேலூர் | 1 | 2 | 4 | 7 |
| 34. | திருப்பத்தூர் | – | 4 | 3 | 7 |
| 35. | இராணிப்பேட்டை | – | 6 | 8 | 14 |
| 36. | விழுப்புரம் | – | 3 | 7 | 10 |
| 37. | கள்ளக்குறிச்சி | – | 3 | 5 | 8 |
| 38. | விருதுநகர் | 1 | 5 | 9 | 15 |
| | **மொத்தம்** | **21** | **138** | **490** | **649** |

## 2. நகராட்சி நிருவாக இயக்குநரகம்

### 2.1 நிருவாகம்

தமிழ்நாட்டில் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் 20 மாநகராட்சிகளும், 138 நகராட்சிகளும் செயல்பட்டு வருகின்றன.

மக்கள் தொகையின் அடிப்படையில் மாநகராட்சிகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**மாநகராட்சிகளின் வகைப்பாடு**

**அட்டவணை 2.1**

| வ. எண் | வகைப்பாடு | மக்கள் தொகை (இலட்சத்தில்) | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சிறப்பு நிலை (A) | 15–க்கு மேல் | 3 |
| | சிறப்பு நிலை (B) | 10 – 15 | 3 |
| 2 | தேர்வு நிலை | 5 – 10 | 5 |
| 3 | முதல் நிலை | 3– 5 | 3 |
| 4 | இரண்டாம் நிலை | 3–க்கு கீழ் | 6 |
| **மொத்தம்** | | | **20** |

ஆண்டு வருமானத்தின் அடிப்படையில், நகராட்சிகளின் வகைப்பாடு பின்வருமாறு

**நகராட்சிகளின் வகைப்பாடு**

**அட்டவணை 2.2**

| வ. எண் | வகைப்பாடு | ஆண்டு வருமானம் (ரூ.கோடியில்) | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சிறப்பு நிலை | 15 மற்றும் அதற்கு மேல் | 16 |
| 2 | தேர்வு நிலை | 9 – 15 | 29 |
| 3 | முதல் நிலை | 6 – 9 | 31 |
| 4 | இரண்டாம் நிலை | 6–க்கு கீழ் | 62 |
| **மொத்தம்** | | | **138** |

**மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் புதிய பணியிடங்கள் தோற்றுவித்தல் மற்றும் பணியிடங்களை முறைப்படுத்தி வரையறைகள் நிர்ணயம் செய்தல் :**

மாநகராட்சிகள், மக்கள் தொகைக்கேற்ப நான்கு நிலைகளாக வகைப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு நிலையிலான மாநகராட்சிக்கும் புதிய பணியிடங்கள் தோற்றுவித்தும், ஏற்கனவே உள்ள பணியிடங்களை முறைப்படுத்தியும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்

வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்.152, நாள்.20.10.2022ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும், நகராட்சிகளின் வகைப்பாட்டின் நிலைகளுக்கேற்ப புதிய பணியிடங்கள் தோற்றுவித்தும், ஏற்கனவே உள்ள பணியிடங்களை முறைப்படுத்தியும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண். 10, நாள் 23.01.2023–ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு அரசாணைகளின் அடிப்படையில் பணியிடங்கள் முறைப்படுத்தப்பட்டு, பணியிடங்கள் தொடர்பான வரையறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவு ஆகியவற்றின் கீழ் காலியாக உள்ள 1,621 பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள்**

தமிழ்நாட்டிலுள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 243W எனும் உறுப்பு மற்றும் பன்னிரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 18 செய் கடமைகளில், மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் தீயணைப்பு தவிர்த்து இதர 16 செய்கடமைகளை செயல்படுத்தி வருகின்றன.

**2.1.1 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் மற்றும் 2023ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகளை நடைமுறைப்படுத்துதல்:**

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகிய நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொருந்தக் கூடிய பொதுவான சட்டத்தின் தேவை மற்றும் அவசியம் கருதி, 2000 ஆம் ஆண்டு முதல் இடைநிறுத்தம் செய்யப்பட்ட 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள்

சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தவும் மற்றும் தேவையான திருத்தங்களை மேற்கொள்ளவும், 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 35/2022) இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் 2023ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் மற்றும் 2023ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 13.04.2023 அன்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

**நகராட்சிகளை தரம் உயர்த்துதல்:**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை (நிலை) எண்.49, நாள்:15.04.2023–ன்படி திருத்தணி, நந்திவரம்–கூடுவாஞ்சேரி, பூவிருந்தவல்லி, திருவள்ளூர் மற்றும் திருவேற்காடு ஆகிய 5 நகராட்சிகள்,

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை(நிலை) எண்.57 நாள்:02.05.2023–ன்படி விழுப்புரம், கள்ளக்குறிச்சி, தாராபுரம், காங்கேயம், திருமுருகன்பூண்டி, மயிலாடுதுறை, வேதாரண்யம், திருவாரூர், ஜெயங்கொண்டம், பெரம்பலூர், இராமேஸ்வரம், போடிநாயக்கனூர், தேனி–அல்லிநகரம் மற்றும் தென்காசி ஆகிய 14 நகராட்சிகள் என மொத்தம் 19 நகராட்சிகள் பின்வருமாறு தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

## அட்டவணை 2.3

| வ. எண் | நகராட்சி | ஏற்கனவே இருந்த தரநிலை | உயர்த்தப்பட்ட தரநிலை |
|---|---|---|---|
| 1 | திருவேற்காடு | தேர்வு நிலை | சிறப்பு நிலை |
| 2 | விழுப்புரம் | தேர்வு நிலை | சிறப்பு நிலை |
| 3 | மயிலாடுதுறை | தேர்வு நிலை | சிறப்பு நிலை |
| 4 | தேனி–அல்லிநகரம் | தேர்வு நிலை | சிறப்பு நிலை |
| 5 | பூவிருந்தவல்லி | முதல் நிலை | தேர்வு நிலை |
| 6 | திருவள்ளூர் | முதல் நிலை | தேர்வு நிலை |
| 7 | கள்ளக்குறிச்சி | முதல் நிலை | தேர்வு நிலை |
| 8 | தாராபுரம் | முதல் நிலை | தேர்வு நிலை |
| 9 | திருவாரூர் | முதல் நிலை | தேர்வு நிலை |

| | | | |
|---|---|---|---|
| 10 | பெரம்பலூர் | இரண்டாம் நிலை | தேர்வு நிலை |
| 11 | போடிநாயக்கனூர் | முதல் நிலை | தேர்வு நிலை |
| 12 | தென்காசி | முதல் நிலை | தேர்வு நிலை |
| 13 | திருத்தணி | இரண்டாம் நிலை | முதல் நிலை |
| 14 | நந்திவரம்–கூடுவாஞ்சேரி | இரண்டாம் நிலை | முதல் நிலை |
| 15 | காங்கேயம் | இரண்டாம் நிலை | முதல் நிலை |
| 16 | திருமுருகன்பூண்டி | இரண்டாம் நிலை | முதல் நிலை |
| 17 | வேதாரண்யம் | இரண்டாம் நிலை | முதல் நிலை |
| 18 | ஜெயங்கொண்டம் | இரண்டாம் நிலை | முதல் நிலை |
| 19 | இராமேஸ்வரம் | இரண்டாம் நிலை | முதல் நிலை |

### 2.1.2 அலுவலகக் கட்டடம்

2022–23 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் புதியதாக உருவாக்கப்பட்ட 28 நகராட்சிகளுக்கு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த ஒவ்வொரு நகராட்சிக்கும் சிறப்பு நிதியாக தலா ரூ.2.00 கோடி என மொத்தம் ரூ.56.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேற்கண்டவாறு அறிவிக்கப்பட்டுள்ளதற்கு இணங்க சோளிங்கர், முசிறி, தாரமங்கலம், திருமுருகன்பூண்டி, திட்டக்குடி, மாங்காடு, வடலூர்,

பள்ளப்பட்டி, திருச்செந்தூர், திருக்கோவிலூர், கருமத்தம்பட்டி, நந்திவரம்–கூடுவாஞ்சேரி, உளுந்தூர்பேட்டை, திருநின்றவூர் மற்றும் அதிராம்பட்டினம் ஆகிய 15 நகராட்சிகளுக்கு தலா ரூ.3.50 கோடி மதிப்பீட்டிலும், இடங்கணசாலை, கோட்டக்குப்பம் மற்றும் கூடலூர் (கோவை) நகராட்சிகளுக்கு மொத்தம் ரூ.9.65 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

உளுந்தூர்பேட்டை, திருக்கோவிலூர், வடலூர், சோளிங்கர், முசிறி, தாரமங்கலம் மற்றும் திருநின்றவூர் ஆகிய நகராட்சிகளில் புதிய அலுவலக கட்டுமானப் பணிகள் முடிவுற்றுள்ளன.

· திருமுருகன்பூண்டி, கருமத்தம்பட்டி, நந்திவரம்–கூடுவாஞ்சேரி, திட்டக்குடி, பள்ளப்பட்டி மற்றும் திருச்செந்தூர் ஆகிய நகராட்சிகளில் புதிய அலுவலக கட்டுமானப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

மாங்காடு மற்றும் இடங்கணசாலை நகராட்சிகளில் அலுவலகக் கட்டுமானப்பணிகள் 70% வரை முடிவுற்றுள்ளன. கூடலூர் (கோவை), அதிராம்பட்டினம் ஆகிய நகராட்சிகளில் புதிய அலுவலகக் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**கூடுதல் அலுவலகக் கட்டடம்**

சுரண்டை, களக்காடு மற்றும் குன்றத்தூர் ஆகிய நகராட்சிகளுக்கு கூடுதல் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகளுக்கு தலா ரூ.0.50 கோடி மதிப்பீட்டிலும், மானாமதுரை, பொன்னேரி, காரமடை மற்றும் புகளூர் ஆகிய நகராட்சிகளுக்கு மொத்தம் ரூ.5.14 கோடி மதிப்பீட்டில் கூடுதல் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு பணிகள் அனுமதிக்கப்பட்டு பணிகள் முடிவுற்றுள்ளன.

**சிறப்பு நிதியின் கீழ் இதர மேம்பாட்டுப் பணிகள் (2022–23)**

- புதிதாக தரம் உயர்த்தப்பட்ட 3 நகராட்சிகளுக்கு ரூ.4.58 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டும்

பணிகள் மற்றும் 2 நகராட்சிகளுக்கு ரூ.2.88 கோடி மதிப்பீட்டில் சமுதாய நலக்கூடம் மற்றும் திருமண மண்டபம் கட்டும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புதிதாக தரம் உயர்த்தப்பட்ட 2 நகராட்சிகளில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்கும் பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் அடிப்படை கட்டமைப்புகளை உருவாக்குதல்**

**ஆறாவது மாநில நிதி ஆணைய மானியம் 2022-23**

ஆறாவது மாநில நிதி ஆணைய பரிந்துரையின் படி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை(ப) எண்.130, நாள்.16.03.2023 ல், புதிதாக தரம் உயர்த்தப்பட்ட நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கு ஏற்ற சேவைகளை வழங்கிட

2022–23 ஆம் நிதியாண்டிற்கு, ரூ.60.00 கோடி மானியம் அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

புதிதாக தரம் உயர்த்தப்பட்ட கடலூர், கரூர், காஞ்சிபுரம் மற்றும் கும்பகோணம் ஆகிய மாநகராட்சிகளில் காய்கறி அங்காடி, வணிக வளாகம், பேருந்து நிலைய மேம்பாடு முதலான பணிகளை மேற்கொள்வதற்கு, மாநகராட்சியின் பங்களிப்புத் தொகையாக தலா ரூ.3.00 கோடி அனுமதிக்கப்பட்டது.

புதிதாக தரம் உயர்த்தப்பட்ட 14 நகராட்சிகளுக்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ள நகராட்சி பங்களிப்புத் தொகையாக தலா ரூ.1.50 கோடி அனுமதிக்கப்பட்டது.

புதிதாக தரம் உயர்த்தப்பட்ட 4 நகராட்சிகளுக்கு ரூ.4.94 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம் மற்றும் சமுதாய நலக்கூடம் கட்டும் பணிகளுக்கும், 2 நகராட்சிகளில் ரூ.2.05 கோடி மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டும் பணிகளுக்கும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மதுக்கரை நகராட்சியில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கூடுதல் அலுவலகக் கட்டடம் மற்றும் புகளூர் நகராட்சியில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் கட்டும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**ஆறாவது மாநில நிதி ஆணைய மானியம் 2023-24**

ஆறாவது மாநில நிதி ஆணைய பரிந்துரையின் அடிப்படையில், புதிதாக தரம் உயர்த்தப்பட்ட நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கு ஏற்ற சேவைகளை வழங்கிட 2023-24 ஆம் நிதியாண்டிற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை(ப) எண்.11, நாள் 10.01.2024ல், ரூ.60.00 கோடி மானியம் அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

புதிதாக தரம் உயர்த்தப்பட்ட கரூர் மற்றும் கும்பகோணம் மாநகராட்சிகளுக்கு ரூ.3.31 கோடி மதிப்பீட்டிலும், புதிதாக தரம் உயர்த்தப்பட்ட 7 நகராட்சிகளுக்கு ரூ.9.62 கோடி மதிப்பீட்டிலும்

வணிக வளாகம் கட்டும் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

· புதிதாக தரம் உயர்த்தப்பட்ட 10 நகராட்சிகளுக்கு ரூ.7.04 கோடி மதிப்பீட்டில் சமுதாய நலக்கூடம் கட்டும் பணிகளையும், ரூ.7.38 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் கட்டும் பணிகளையும் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பள்ளப்பட்டி நகராட்சியில் ரூ.1.46 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 2.2 உட்கட்டமைப்பு மேம்பாடு

### 2.2.1 குடிநீர் வழங்கல்

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் விரிவாக்கம், பெருகி வரும் குடியிருப்புகள் மற்றும் மக்கள் தொகை வளர்ச்சி போன்ற காரணிகளால் பொது மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்படும் குடிநீரின்

தேவை அதிகரித்து வருகிறது. எனவே, நகர்ப்புர பகுதிகளில் வசிக்கும் மற்றும் தினசரி இடம்பெயர்வோர் ஆகிய அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான தேவையினை நிறைவு செய்யவும், குடிநீர் விநியோகிக்கும் காலத்தினை முறைப்படுத்தவும், பல்வேறு காலகட்டங்களில் நிறைவேற்றப்பட்ட குடிநீர்த்திட்டங்களை ஒருங்கிணைத்து தற்போதுள்ள உட்கட்டமைப்புகளைப் புனரமைப்பு செய்யவும், புதிய நீர் ஆதாரங்களைக் கண்டறிந்து புதிய குடிநீர் விநியோக திட்டங்களை குறிப்பிட்ட காலவரையறைக்குள் நிறைவேற்றவும் அரசு முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் தற்போது குடிநீர் வழங்கும் விவரம் பின்வருமாறு:

## அட்டவணை 2.4

| நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் விவரங்கள் | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு குடிநீரின் அளவு [LPCD] (லிட்டர்) | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| மாநகராட்சிகள் | 135 மற்றும் அதற்கு மேல் | 5 |
| | 110–134 | 8 |
| | 70–109 | 6 |
| | 70க்கும் குறைவாக | 1 |
| நகராட்சிகள் | 135 மற்றும் அதற்கு மேல் | 8 |
| | 110–134 | 22 |
| | 70–109 | 97 |
| | 70க்கும் குறைவாக | 11 |
| **மொத்தம்** | | **158** |

மாநகராட்சிகள் மற்றும் பாதாள சாக்கடை வசதி உள்ள நகராட்சிகளில், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் குடிநீரும், இதர நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் குடிநீரும் வழங்கும் வகையில்,

ஒவ்வொரு குடியிருப்பிற்கும் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குவதற்கு பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அம்ருத் 2.0 (AMRUT 2.0) திட்டத்தின் கீழ் 30 நகராட்சிகள் மற்றும் 12 மாநகராட்சிகளில் 42 பணிகளுக்கு ரூ.3,087.87 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்ட பணிகள் அனுமதிக்கப்பட்டதில், 40 குடிநீர் திட்ட பணிகளுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 2 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளன.

கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின் (KNMT) கீழ் 5 நகராட்சிகளுக்கு ரூ.216.66 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப்பணிகள் அனுமதிக்கப்பட்டு பல்வேறு நிலைகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

தமிழ்நாடு காலநிலை நெகிழ்வு நிலையைத் தாங்கும் நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தின் (TNCRUDP) கீழ் 9 மாநகராட்சிகள் மற்றும் 3 நகராட்சிகளில்

ரூ.319.91 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டம் செயல்படுத்திட ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது. மேலும், இத்திட்டத்தின் கீழ் ஆவடி மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாநகராட்சிகளில் ரூ.374.54 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

கரூர் மாநகராட்சி மற்றும் திருவேற்காடு நகராட்சியில் ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (Kfw) நிதியுதவியின் கீழ் ரூ.223.20 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகின்றது.

**நீராதார அமைப்புகளை புனரமைத்தல்**

மாநில அளவில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் அமைந்துள்ள நீர்நிலைகளின் விவரங்கள் பின்வரும் அட்டவணை 2.5ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.5**

| வ. எண். | நகர்புர உள்ளாட்சி அமைப்புகள் | நீர் நிலைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மாநகராட்சிகள் | 603 |
| 2 | நகராட்சிகள் | 1,874 |
| | **மொத்தம்** | **2,477** |

நீர் நிலைகளில் கழிவு நீர் கலப்பதனை தடுத்தல், நீர்வரத்து கால்வாய்களை புனரமைத்தல், நீர் நிலைகளை தூர்வாருதல் மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரினை மறுசுழற்சி செய்தல் போன்ற பணிகளை முறையாக செயல்படுத்தி அதிகளவு நீரினை தேக்கிவைக்க இயலும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றது.

கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் (KNMT), நமக்கு நாமே திட்டம் (NNT), மூலதன மானிய நிதி (CGF), 15வது நிதிக்குழு மானியம் (15th FC) மற்றும் அடல் நகர்ப்புர புனரமைத்தல் மற்றும் மாற்றத்திற்கான திட்டம் 2.0 (AMRUT 2.0) ஆகிய திட்டங்களின் கீழ், 2021–22,

2022–23 மற்றும் 2023–24 ஆகிய மூன்று ஆண்டுகளில் ரூ. 283.35 கோடி மதிப்பீட்டில் 338 நீர் நிலைகளை மேம்படுத்தும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டதில் 176 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 162 பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

### 2.2.2 தெருவிளக்குகள்

தற்பொழுது, 20 மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக) மற்றும் 138 நகராட்சிகளில் 8.62 இலட்சம் தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு 30 மீட்டர் இடைவெளிக்கும் ஒரு தெருவிளக்கு என்ற வரையறையினை எய்தும் வகையில், தற்போதுள்ள தெரு விளக்குகளில் 33% வரை மின் நுகர்வு கட்டணத்தை குறைத்து, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆற்றல் திறன்மிக்க தெரு விளக்கு வசதியை ஏற்படுத்தவும், குறைந்த மின் பயன்பாடு, பிரகாச அளவுகள், பாதுகாப்பான போக்குவரத்து, குறைந்த

பராமரிப்பு செலவு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்றவற்றை நோக்கமாகவும் கொண்டு அனைத்து தெரு விளக்குகளும் LED விளக்குகளாக மாற்றப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2021–22ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, 16 மாநகராட்சிகள் மற்றும் 119 நகராட்சிகளில் ரூ.374.09 கோடி மதிப்பீட்டில் 3,30,633 எண்ணிக்கையிலான தெரு விளக்குகளை மின்சேமிப்பு ஆற்றல்மிகு தெருவிளக்குகளாக மாற்றவும், ரூ.118.35 கோடி மதிப்பீட்டில் 77,667 எண்ணிக்கையிலான புதிய தெரு விளக்குகள் அமைக்கவும், மாநில நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (SUIDF) மற்றும் 15வது நிதிக் குழு மானியம் ஆகியவற்றின் கீழ் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், மாநில நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டு (SUIDF) நிதியின் கீழ் 6 மாநகராட்சிகளில் ரூ.64.81 கோடி மதிப்பீட்டில் 33,660 புதிய ஆற்றல்மிகு

தெருவிளக்குகள் அமைக்கவும், புதியதாக தோற்றுவிக்கப்பட்ட 10 நகராட்சிகளில் ரூ.20.41 கோடி மதிப்பீட்டில் 17,704 தெருவிளக்குகளை ஆற்றல் மிகு விளக்குகளாக மாற்றும் பணிகள் மேற்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டு, இதுவரை, 3,81,054 தெரு விளக்குகள் பொருத்தப்பட்டு மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**2.2.3 சாலைகள்**

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் மொத்தம் 31,483 கி.மீ சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சாலைகள் அமைக்கப்பட்டு 5 ஆண்டுகளுக்கும் மேலான சாலைகளை முன்னுரிமை அடிப்படையில் சீரமைக்க பல்வேறு திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நகர்ப்புர சாலைகளின் விவரங்கள் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.6**

| வ. எண் | சாலைகளின் வகைப்பாடு | மொத்த நீளம் (கி.மீ.) | விழுக்காடு (%) |
|---|---|---|---|
| 1. | சிமெண்ட் கான்கிரிட் சாலைகள் | 6,768 | 21 |
| 2. | தார் சாலைகள் | 20,224 | 64 |
| 3. | கப்பி சாலைகள் | 207 | 1 |
| 4. | மண் சாலைகள் | 2,429 | 8 |
| 5. | பேவர் பிளாக் சாலைகள் உள்ளிட்ட மற்ற சாலைகள் | 1,855 | 6 |
| **மொத்தம்** | | **31,483** | **100** |

கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம், மூலதன மானிய நிதி, தமிழ்நாடு நகர்ப்புர நீடித்த நிலையான வளர்ச்சி திட்டம் மற்றும் மாநில நிதிக்குழு மானியம் முதலான பல்வேறு திட்டங்களின் கீழ் 2021–22, 2022–23 மற்றும் 2023–24 ஆகிய நிதியாண்டுகளில் 8,752.47 கி.மீ நீளமுள்ள 50,144 சாலைப்பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 8,051.18 கி.மீ நீளமுள்ள 46,286 சாலைப்பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள

701.29 கி.மீ நீளமுள்ள 3,858 சாலைப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

**சாலைகள் மறுசீரமைப்பு**

பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக தமிழ்நாட்டிலுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 11,872 கி.மீ நீளமுள்ள சாலைகளை, 2022-23 முதல் 2025-26 வரையிலான நான்கு ஆண்டுகளில் படிப்படியாக மேம்படுத்த தக்க வகையில் பணிகளை செயல்படுத்த வழிகாட்டுதல்கள் வழங்கி வெளியிடப்பட்ட அரசாணை எண்.423, நாள் 19.11.2022ன்படி, ஏற்கனவே நடப்பில் உள்ள திட்டங்கள் தவிர சிறப்பு நிதியாக நகர்ப்புர சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.1,000.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பாதாள சாக்கடைத் திட்டம், குடிநீர் மேம்பாட்டு திட்டப் பணிகள், அதிகமான மழைப்பொழிவு ஆகியவற்றின் காரணமாக சேதமடைந்த சாலைகள்

மற்றும் சாலைகள் அமைத்து 5 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு சேதமடைந்த சாலைகள் ஆகியவற்றைச் சீரமைப்பதற்காக 2021-22, 2022-23 மற்றும் 2023-24 ஆகிய நிதியாண்டுகளில் சாலை பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**பள்ளி மேம்பாட்டு மானியம்**

6வது மாநில நிதி ஆணையத்தின் (6th SFC) பரிந்துரையின் படி 2022-23 ஆம் நிதி ஆண்டு முதல் நகராட்சி மற்றும் மாநகராட்சி பள்ளிகளின் அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தும் பொருட்டு புதிய பள்ளிக் கட்டடங்கள், புதிய கழிப்பறைகள் கட்டுதல் மற்றும் பழுதடைந்த பள்ளிக் கட்டிடங்கள், கழிப்பறைகளை மராமத்து பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண்.646, நாள்.20.11.2023ல் வெளியிடப்பட்டுள்ளன.

**மூலதன பணிகள்**

2022-23 ஆம் நிதி ஆண்டில் மாநகராட்சிகளில் உள்ள பள்ளிகளுக்கு 63 புதிய வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் அமைக்கும் பணிகள் ரூ.30.44 கோடி மதிப்பீட்டிலும், நகராட்சிப் பள்ளிகளில் 88 புதிய வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் அமைக்கும் பணிகள் ரூ.35.99 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

2023-24 ஆம் நிதி ஆண்டில் மாநகராட்சிகளில் உள்ள பள்ளிகளுக்கு 71 புதிய வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் அமைக்கும் பணிகள் ரூ.34.57 கோடி மதிப்பீட்டிலும், நகராட்சிகளில் உள்ள பள்ளிகளில் 89 புதிய வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் அமைக்கும் பணிகள் ரூ.40.00 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு 2 பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மராமத்து பணிகள்**

2022–23 ஆம் நிதி ஆண்டில் மாநகராட்சிகளில் உள்ள பள்ளிகளுக்கு 87 வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகளை மராமத்து செய்யும் பணிகள் ரூ.18.60 கோடி மதிப்பீட்டிலும், நகராட்சிகளில் உள்ள பள்ளிகளில் 155 வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகளை மராமத்து செய்யும் பணிகள் ரூ.21.60 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு 71 பணிகள் முடிவுற்று இதர பணிகள் நடைபெற்று வருகின்றன.

2023–24 ஆம் நிதி ஆண்டில் மாநகராட்சிகளில் உள்ள பள்ளிகளுக்கு 139 வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகளை மராமத்து செய்யும் பணிகள் ரூ.20.46 கோடி மதிப்பீட்டிலும், நகராட்சிகளில் உள்ள பள்ளிகளில் 155 வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகளை மராமத்து செய்யும் பணிகள் ரூ.25.40 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**வெள்ளத் தடுப்பு பணிகள்**

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை புறநகர் பகுதிகளில் வெள்ள அபாயத்தை தடுக்கும் பொருட்டும், அதற்கான நிரந்தர தீர்வுகாணும் பொருட்டும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை (ப) எண்.362, நாள் 22.10.2021ன்படி முனைவர் வெ.திருப்புகழ், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தலைமையில் வல்லுநர்கள் அடங்கிய வெள்ளநீர் மேலாண்மை ஆலோசனைக்குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவினருடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பல்வேறு கட்ட கலந்தாலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

சென்னை புற நகர்ப்பகுதிகளில் வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கு தாம்பரம் மாநகராட்சி, ஆவடி மாநகராட்சி மற்றும் மாங்காடு, குன்றத்தூர் மற்றும் திருவேற்காடு நகராட்சிகளில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, அரசாணை (நிலை) எண்.214, நாள் 17.05.2022–ன்படி ரூ.82.15 கோடி

மதிப்பீட்டில் 30.31 கி.மீ நீளத்திற்கு 21 எண்ணிக்கையிலான மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிவுற்றுள்ளன.

மேலும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, அரசாணை (நிலை) எண்.305, நாள் 21.06.2023–ன் படி தாம்பரம், ஆவடி மற்றும் கடலூர் மாநகராட்சி, மாங்காடு, குன்றத்தூர், நந்திவரம் கூடுவாஞ்சேரி, பூந்தமல்லி, பொன்னேரி மற்றும் திருவேற்காடு நகராட்சிகளில் ரூ.145.24 கோடி மதிப்பீட்டில் 69.56 கி.மீ நீளத்திற்கு 53 எண்ணிக்கையிலான மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு 33 பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

தூத்துக்குடி மாநகராட்சியில் இனி வருங்காலங்களில் வெள்ள பாதிப்பு ஏற்படாமல் தடுக்கும் வண்ணம், மழைநீர் வடிகால் அமைக்கும்

பணியானது நான்கு கட்டங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

இதில், முதல்கட்ட பணியானது, தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சி திட்டத்தின் (TNSUDP) கீழ் ரூ.230.90 கோடி மதிப்பீட்டில் 25.386 கி.மீ நீளத்திற்கும், இரண்டாம் கட்ட மற்றும் மூன்றாம் கட்ட பணிகள் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ரூ.122.86 கோடி மதிப்பீட்டில் 56.359 கி.மீ நீளத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளன.

உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதி (I&A) 2022–2023ன் கீழ் ரூ.42.55 கோடி மதிப்பீட்டில் 43.094 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு 42.036 கி.மீ முடிக்கப்பட்டு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

இது தவிர, ஆசிய மேம்பாட்டு வங்கி நிதி உதவியுடன் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி,

நான்கு சிப்பங்களாக ரூ.82.98 கோடி மதிப்பீட்டில் 36.38 கி.மீ நீளத்திற்கும், மாநில பேரிடர் தடுப்பு நிதி (SDMF) 2023–24–ன் கீழ் ரூ.12.00 கோடி மதிப்பீட்டில் 3.7 கி.மீ நீளத்திற்கும் மழைநீர் வடிகால் அமைக்க அனுமதிக்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேற்படி பணிகளை எதிர்வரும் மழைக்காலத்திற்குள் விரைந்து நிறைவேற்றி, வரும் மழைக்காலங்களில் வெள்ளத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை பெருமளவு தவிர்க்கும் வகையில் சீரிய முயற்சிகள் இவ்வரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2.2.4. நகரமைப்பு**

பொதுமக்களின் தேவையை நிறைவேற்றுவதற்காகவும் கட்டட அனுமதி வழங்கும் நடைமுறைகளில் கால அவகாசத்தை குறைக்கவும், கட்டட அனுமதி பெறுவதற்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கும், மென்பொருள் மேம்படுத்தப்பட்டு, பொதுமக்கள் எளிதில் கையாளும் வகையில்

பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. கட்டட அனுமதி வழங்க இணைய வழியில் ஒப்புதல் அளித்தவுடன், கட்டணம் செலுத்துவதற்கான கேட்பு நேரடியாக விண்ணப்பதாரருக்கு சென்றடைவதுடன், இணைய வழியாக மட்டுமே கட்டணம் செலுத்துவதற்கேற்ப தற்போது மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதன் காரணமாக பொது மக்கள் கட்டட அனுமதி பெறுவதற்காக எந்த ஒரு சூழ்நிலையிலும் மாநகராட்சி/நகராட்சி அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகார பகிர்வுக்கு மேலான பரப்பளவிலான கட்டடங்கள் கட்டுவதற்கு நகர் ஊரமைப்பு இயக்குநரகம் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் திட்ட அனுமதி பெற்றிடவும், அதனை தொடர்ந்து உள்ளாட்சிகள் கட்டட அனுமதி வழங்கிடவும் பொதுவான இணைய வழி முகப்பு வசதிகள்

(Single window Portal) 21.08.2023 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சேவை வசதியின் பயனாக கட்டட அனுமதி வழங்குவதில் காலதாமதங்கள் தவிர்க்கப்பட்டு உரிய காலக் கெடுவிற்குள் இறுதி உத்தரவு வழங்குவது உறுதி செய்யப்படுகிறது.

**2.2.5 இதர உட்கட்டமைப்புகள்**

**(i) நவீன பேருந்து நிலையங்கள்**

பல்வேறு மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பராமரிக்கப்படும் 184 பேருந்து நிலையங்களின் விவரங்கள் பின்வருமாறு

**தற்போதுள்ள பேருந்து நிலையங்களின் விவரங்கள்**

**அட்டவணை 2.7**

| **தரம்** | **மாநகராட்சிகள்** | **நகராட்சிகள்** | **மொத்தம்** |
|---|---|---|---|
| A | 21 | 14 | 35 |
| B | 11 | 42 | 53 |
| C | 5 | 63 | 68 |
| D | 6 | 22 | 28 |
| **மொத்தம்** | **43** | **141** | **184** |

பயணிகளுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கும் வகையில், நகர்ப்புரங்களில் அமைந்துள்ள அனைத்து பேருந்து நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட தேவையான நடவடிக்கைகள் அரசு மேற்கொண்டுள்ளது.

2021-22 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை (ப) எண் 497, நாள் 28.12.2021-ன் வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின் கீழ் ரூ.140 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வணிக மையத்துடன் கூடிய ஒருங்கிணைந்த பேருந்து முனையம் அமைக்கும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. மேலும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை (நிலை) எண் 20, நாள் 25.01.2022-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, ஈரோடு மற்றும் கரூர் மாநகராட்சிகள் மற்றும் நாமக்கல்,

திருத்தணி, திருவண்ணாமலை, திண்டிவனம், மயிலாடுதுறை, மன்னார்குடி, ராணிப்பேட்டை, சங்கரன்கோவில், திருமங்கலம் ஆகிய நகராட்சிகளுக்கு ரூ.266.76 கோடி மொத்த மதிப்பீட்டில் ரூ.139.14 கோடி தொகை உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு, நவீனப் பேருந்து நிலையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2022–23 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை (நிலை) எண் 173, நாள் 18.12.2022–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, திருப்பூர் மற்றும் ஓசூர் மாநகராட்சிகள் மற்றும் கூடலூர் (தே), அரியலூர், வடலூர், வேதாரண்யம், மேலூர், பட்டுக்கோட்டை, குளச்சல் மற்றும் பொள்ளாச்சி ஆகிய நகராட்சிகளிலும் ரூ.115.37 கோடி மொத்த மதிப்பீட்டில் ரூ.57.05 கோடி தொகை உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு, நவீனப்

பேருந்து நிலையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை (நிலை) எண் 28, நாள் 22.02.2023-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, ஆற்காடு, எடப்பாடி, இராமநாதபுரம், திருவள்ளூர், மேட்டூர், சிதம்பரம் மற்றும் உசிலம்பட்டி ஆகிய நகராட்சிகளில் ரூ.93.40 கோடி மொத்த மதிப்பீட்டில் ரூ.46.70 கோடி தொகை உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு, புதிய பேருந்து நிலையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 10 பேருந்து நிலைய மேம்பாட்டு பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள 7 பணிகள் நடைபெற்று வருகின்றன.

2023-24 ஆம் ஆண்டில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மூலதன மானிய நிதியின்

கீழ் 8 புதிய பேருந்து நிலையங்கள் அமைக்கும் பணிகள் மற்றும் 15 பேருந்து நிலைய மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**(ii) பூங்காக்கள்**

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், பொதுமக்களின், குறிப்பாக குழந்தைகளின் நலனுக்காக, விளையாட்டுத் திடல்கள் மற்றும் பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் மொத்தம் 8,575 விளையாட்டு திடல்கள் மற்றும் பூங்காக்கள் உள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 2.8**

| உள்ளாட்சி அமைப்புகள் | பூங்காக்களின் எண்ணிக்கை |
|---|---|
| மாநகராட்சிகள் | 4,337 |
| நகராட்சிகள் | 4,238 |
| **மொத்தம்** | 8,575 |

2021–22 முதல் 2023–24 வரை உள்ள ஆண்டுகளில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம்,

நமக்கு நாமே திட்டம், மூலதன மானிய நிதி, 15வது நிதிக்குழு மற்றும் அடல் புத்துணர்ச்சி மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் 2.0 ஆகிய திட்டங்களின் கீழ் ரூ.162.96 கோடி மதிப்பீட்டில் 416 பூங்காக்கள் மேம்படுத்தும் பணிகள் எடுக்கப்பட்டு 296 பணிகள் முடிவுற்றுள்ளன. 120 பணிகள் நடைபெற்று வருகின்றன.

**(iii) எரிவாயு தகன மேடைகள்**

அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நவீன எரிவாயு தகன மேடை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு மாநகராட்சி மற்றும் நகராட்சிக்கும் குறைந்தபட்சம் ஒரு நவீன எரிவாயு தகன மேடை அமைக்க திட்டமிடப்பட்டது. அதன்படி, 2021 முதல் 2024 வரை மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய எரிவாயு தகன மேடை அமைக்கும் பணிகள் மற்றும் எரிவாயு தகன மேடை மேம்பாட்டுப் பணிகளின் விவரம் பின்வருமாறு.

## அட்டவணை 2.9

| உள்ளாட்சி அமைப்பு | 2021-22 | 2022-23 | | 2023-24 | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | புதியது | புதியது | மேம்பாடு | புதியது | மேம்பாடு | புதியது | மேம்பாடு |
| மாநகராட்சிகள் | 20 | 2 | - | 3 | 8 | 25 | 8 |
| நகராட்சிகள் | 32 | 19 | 16 | 16 | 8 | 67 | 24 |
| **மொத்தம்** | 52 | 21 | 16 | 19 | 16 | 92 | 32 |

உயிரி எரிவாயு (Bio-mass gasifier) எரிபொருளாக பயன்படுத்தப்படும் அனைத்து தகன மேடைகளையும் திரவ எரிவாயு/மின் தகன மேடைகளாக படிப்படியாக மாற்ற அரசு முடிவு செய்துள்ளது. 2021-22, 2022-23 மற்றும் 2023-24 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் பல்வேறு திட்டங்களின் கீழ், ரூ.144.72 கோடி மதிப்பீட்டில், 92 புதிய எரிவாயு தகன மேடைகள் அமைக்கும் பணிகள் மற்றும் ரூ.12.86 கோடி மதிப்பீட்டில், 32 தகன மேடைகள் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எரிவாயு தகன மேடைகள் இல்லாத நகராட்சிகளில் புதியதாக எரிவாயு தகன மேடைகள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**(IV) சந்தைகள்**

பொதுமக்களின் அன்றாட தேவைகளுக்கான பொருட்களை விற்பனை செய்வதில் சந்தைகளின் பங்கு மிகவும் இன்றியமையாதது. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் வருவாயில் சந்தைகள் முக்கிய பங்களிப்பை வழங்குகின்றன.

தினசரி மற்றும் வாரச்சந்தைகளை மேம்படுத்துதல் மற்றும் நவீனப்படுத்துவது இன்றியமையாததாகும். 2021–22, 2022–23 மற்றும் 2023–24–ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கைகளின்படி மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில், ரூ.390.43 கோடி மதிப்பீட்டில் 67 புதிய சந்தைகள் அமைப்பதற்கும், ரூ.135.79 கோடி மதிப்பீட்டில் 32 சந்தைகள் மேம்படுத்தவும் பணிகள்

எடுத்துக்கொள்ளப்பட்டு, பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

**2.3 நகர்ப்புர சுகாதார கட்டமைப்பு**

**15 வது நிதிக்குழு சுகாதார மானியம் (15th CFC Health Grant)**

15வது நிதி ஆணையம், பொது சுகாதார உட்கட்டமைப்பு மற்றும் கிராமப்புற மற்றும் நகர்ப்புர மக்களுக்கு வழங்கும் சேவையினை வலுப்படுத்துவதற்காக, குறிப்பிட்ட மானியங்களை வழங்கியுள்ளது.

ஒட்டுமொத்த ஆரம்ப சுகாதார சேவைகளை நோக்காகக் கொண்டு, கிராமப்புறங்களில் உள்ள துணை மையங்கள் மற்றும் பொது சுகாதார மையங்கள் மற்றும் நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையங்களில் நோய் கண்டறியும் உட்கட்டமைப்புக்கான நிதியுதவியினை 15வது நிதி ஆணையம் அனுமதித்துள்ளது. இதன்படி கீழ்க்காணும் பணிகள் 2021–22, 2022–23 மற்றும் 2023–24–ம் நிதி ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்டு,

பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**அட்டவணை 2.10**

| வ. எண் | கூறின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடி) | முடிவுற்ற பணிகளின் எண்ணிக் கை | முன்னேற்றத்தில் உள்ள பணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | நகர் நல மையங்கள் | 507 | 126.75 | 476 | 31 |
| 2. | நகர்ப்புர பொது சுகாதார ஆய்வகம் | 28 | 5.60 | 26 | 2 |
| 3 | துணை சுகாதார மையங்கள், வட்டார பொது சுகாதார அலகுகள் | 178 | 54.45 | 8 | 170 |
| 4 | நகர்ப்புர சுகாதார மையங்கள் மற்றும் அரசு மருத்துவ மனைகளுக்கு கூடுதல் கட்டடங்கள் | 95 | 142.00 | – | 95 |
| | மொத்தம் | 808 | 328.80 | 510 | 298 |

## 2.3.1 தூய்மைப் பணியாளர்கள் நலத்திட்டம்

தூய்மைப் பணியாளர்கள் நமது சுகாதார உள்கட்டமைப்பை பராமரிக்க தங்களை முழுமையாக அர்ப்பணிக்கும் பொழுது சில நேரங்களில் எதிர்பாராத ஆபத்தை எதிர் கொள்வதால் தூய்மைப்

பணியாளர்களின் சமூக, பொருளாதார வளர்ச்சி மற்றும் வாழ்வினை மேம்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு அரசு 2022-2023 மானியக்கோரிக்கையின் போது தூய்மைப் பணியாளர்களின் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை அறிவிப்பு செய்ததின் அடிப்படையில். இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 09.12.2022 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் திடக்கழிவு தொடர்புடைய பணிகளில் ஈடுபட்டிருக்கும் தூய்மைப் பணியாளர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கியும் அவர்களை மாற்றுப் பணியில் ஈடுபடுத்தி சமூக பொருளாதார வாழ்வாதாரத்தைப் பெருக்கும் நோக்குடன் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் நிரந்தர பணியாளர்கள் மற்றும் தற்காலிக ஒப்பந்தப் பணியாளர்கள் மட்டுமல்லாமல் தனியார் துறைகள், நிறுவனங்கள் மற்றும் தூய்மைப் பணியில் ஈடுபட்டுள்ள

அனைத்து முறைசாரா பணியாளர்களும் இத்திட்டத்தின் மூலம் பயனடைவார்கள்.

இத்திட்டத்தினை நகர்ப்புர மேலாண்மை மையம் (Urban Management Centre) அகமதாபாத் என்ற நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் சிறப்பாக செயல்படுத்திட திட்டமிடப்பட்டு, இத்திட்டமானது தற்பொழுது அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 31.05.2024 வரை 91,620 தூய்மை பணியாளர்கள் கணக்கெடுப்பு செய்யப்பட்டு சரிபார்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் இறுதி பட்டியல் வெளியிடப்பட்ட பின்பு கண்டறியப்பட்ட தூய்மை பணியாளர்களுக்கு உரிய பயிற்சி வழங்கப்பட்டு அவர்களை பல்வேறு துறைகளில் உள்ள திட்டங்களில் இணைப்பதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படும்.

**தேசிய நகர்ப்புர சுகாதார இயக்கம்**

தேசிய சுகாதார இயக்கத்தின் (NHM) துணைத் திட்டமாக தேசிய நகர்ப்புர சுகாதார திட்டம் (NUHM) 2013 ஆம் ஆண்டு மே 1 முதல் செயல்பட்டு வருகிறது. நகர்ப்புர நலிந்தோர்களை மையமாகக் கொண்டு குறிப்பாக விளிம்பு நிலையில் உள்ள பொருளாதாரத்தில் நலிந்த மற்றும் பின்தங்கிய மக்கள், தெருவோர வியாபாரிகள், வீடற்ற மக்கள் போன்றவர்களின் சுகாதாரத் தேவையினை நிறைவு செய்வதுடன், சிகிச்சைக்கான செலவினங்களை குறைத்து அவர்களின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. மாநில தலைநகரங்கள், மாவட்ட தலைமையகம் மற்றும் 50,000 மக்கள் தொகைக்கு மேற்பட்ட பிற நகரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2022-23 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் ஏற்கனவே உள்ள 43 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிதாக கட்டிடம் கட்டுவதற்கு ரூ.51.60 கோடி

மதிப்பீட்டிலும் மற்றும் 2 மாநகராட்சிகளில் 4 எண்ணிக்கையிலான சுகாதார நிலையங்களை தரம் உயர்த்துவதற்கு ரூ.2.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 6 பணிகள் முடிவுற்று மற்ற பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**2.3.2 பாதாளசாக்கடைத் திட்டம் மற்றும் கசடு கழிவு நீர் மேலாண்மை**

தமிழ்நாட்டில் 20 மாநகராட்சிகளில் (பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக), 18 மாநகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் எடுக்கப்பட்டு, 16 மாநகராட்சிகளில் பணிகள் முடிக்கப்பெற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. ஓசூர் மாநகராட்சிக்கு பாதாளசாக்கடைத் திட்டம் ரூ.582.54 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. சிவகாசி மாநகராட்சியில் கசடு கழிவு மேலாண்மைத்திட்டம் செயல்பாட்டில் உள்ளது. மேலும் சிவகாசி மாநகராட்சியில் பாதாள சாக்கடைத்

திட்டம் செயலாக்கத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்பாட்டில் உள்ள அனைத்து நகரங்களிலும் விடுபட்டுள்ள பகுதிகளுக்கு திட்டத்தை விரிவுப்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளது. நகரம் முழுமைக்கும் 100% பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்யும் நோக்கில், 10 மாநகராட்சிகளில், புதியதாக சேர்க்கப்பட்ட மற்றும் விடுபட்டப் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த, அம்ரூத், சீர்மிகுநகரங்கள் திட்டம் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவி திட்டங்களின் கீழ் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்ட செயலாக்க நிலை**

மொத்தமுள்ள 138 நகராட்சிகளில் 52 நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நகரின் குறிப்பிட்ட பகுதிகளுக்கு மட்டும் செயல்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இத்துடன் இராமேஸ்வரம், ஆம்பூர், திண்டிவனம், மற்றும் பொன்னேரி ஆகிய நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. அதன் விவரம் பின்வருமாறு

**அட்டவணை 2.11**

| வ. எண் | நகராட்சி | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | இராமேஸ்வரம் | 52.60 |
| 2 | ஆம்பூர் | 139.83 |
| 3 | திண்டிவனம் | 268.00 |
| 4 | பொன்னேரி | 54.78 |

இவற்றுடன் மேட்டூர் நகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்காக ரூ.10.78 கோடி மதிப்பீட்டிலும்,

விழுப்புரம் நகருடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு ரூ.263.00 கோடி மதிப்பீட்டிலும் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது. தற்போது கீழ்க்காணும் நகர்ப்புர உள்ளாட்சிகளில் அடல் புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான இயக்கம் 2.0 மற்றும் பன்னாட்டு நிதி உதவியின் கீழ் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**அட்டவணை 2.12**

| வ.எண் | உள்ளாட்சி அமைப்பு | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செங்கல்பட்டு | 188.25 |
| 2 | திருச்சி (பகுதி IV) | 230.61 |
| 3 | மதுரை | 471.89 |
| 4 | திருநெல்வேலி (STP) | 93.44 |

மேலும் பூந்தமல்லி, திருவேற்காடு, மாங்காடு நகராட்சிகளில் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தவும், கரூர் மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்கம் 2.0 மற்றும் பன்னாட்டு நிதி

உதவியின் கீழ் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.13**

| வ. எண் | உள்ளாட்சி அமைப்பு | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | பூந்தமல்லி, திருவேற்காடு, மாங்காடு தொகுப்பு | 972.73 |
| 2 | கரூர் | 476.12 |

இது தவிர, பாதாளச் சாக்கடைத் திட்டம் இதுவரை செயல்படுத்தப்படாத ஓசூர் மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி மற்றும் திருப்பூர் மாநகராட்சிகளில் விடுபட்ட பகுதிகள் மற்றும் மன்னார்குடி, அருப்புக்கோட்டை, மயிலாடுதுறை, மறைமலைநகர், பழனி ஆகிய நகராட்சிகளுக்கு பாதாள சாக்கடை திட்டப்பணிகள் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்படும் நிலையில் உள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அடல் புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான இயக்கம்

2.0 மற்றும் தூய்மை இந்தியா இயக்கம் 2.0 ஆகியவற்றின் கீழ் அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**அட்டவணை 2.14**

| வ. எண் | மாநகராட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் (புதியதாக சேர்க்கப்பட்ட பகுதிகளில்) | 318.90 |
| 2 | கோயம்புத்தூர் (ஒண்டிபுதூர் விடுபட்ட பகுதிகளில்) | 185.00 |

## 2.4 நவீன நூலகங்கள் (நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள்)

நகர்ப்புர உள்ளாட்சி பகுதிகளில் வசிக்கும் மாணவர்கள் மற்றும் போட்டி தேர்விற்கு தயாராகும் தேர்வர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டும், பொதுமக்களுக்கு அறிவுசார் தகவல்கள் கிடைக்க வழிவகை செய்வதற்கும் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம், மூல தன மானிய நிதி மற்றும் சீர்மிகு நகர திட்டங்களின் கீழ் ரூ.198.35 கோடி மதிப்பீட்டில்

100 எண்ணிக்கையிலான நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள் மாநகராட்சி (பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக), நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் மூன்று வகையான வடிவமைப்புகளில் கட்டுவதற்கு ஆணை வழங்கப்பட்டது.

அறிவுசார் மையங்கள் பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும், உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச தகவல்களை பெறுவதற்கும், அறிவுத்திறனை வளர்ப்பதற்கும், நுழைவு வாயில்களாக உள்ளன.

முதல் கட்டமாக, 71 நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 05.01.2024 அன்று காணொளி வாயிலாக திறந்து வைக்கப்பட்டன. இரண்டாம் கட்டமாக 24.02.2024 அன்று மேலும் 6 நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள் திறந்து வைக்கப்பட்டு தற்போது 77 நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள் செம்மையாக செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 23 மையங்களின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அனைத்து நூலகம் மற்றும் அறிவுசார் மையங்களும் கணினிமயமாக்கப்பட்டு இணையதள வசதியுடன், மாணவர்களுக்கு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி நடத்துவதற்கு உகந்தவகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

நூலகம் மற்றும் அறிவுசார் மையங்களில் மாணவர்கள் போட்டித் தேர்வுகளில் பங்குபெற்று அவர்களின் வேலைவாய்ப்புக் கனவை நிறைவு செய்யும் வகையில் அவர்களுக்கு தேவைப்படும், முக்கிய போட்டித் தேர்வுகளுக்கான நூல்களை பொது நூலகத்துறையின் பரிந்துரையின் அடிப்படையில் 244 பதிப்பகதாரர்களிடமிருந்து 2,754 புத்தகங்கள் கொள்முதல் செய்யப்பட்டு ஒவ்வொரு மையத்திலும் பயன்பாட்டிற்கு வைக்கப்பட்டுள்ளன.

இம்மையங்களில் உள்ள நூல்களை நூலகத்துறையைப் போன்றே திறம்பட கையாளுவதற்காகவும், மாணவர்களுக்கு நூல் விவரங்களை வழிகாட்டும் பொருட்டும்,

நூலகத்துறையிலிருந்து பணிஓய்வு பெற்ற பணியாளர்களை கொண்டு வழிகாட்டியாக (Mentor) ஒருவரும், வெளிமுகமை மூலமாக நூலகர் ஒருவரும் அனைத்து மையங்களிலும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவ்வறிவுசார் மையங்களில், தமிழ்நாடு அரசு தேர்வாணையம், சீருடை பணியாளர் தேர்வாணையம் மற்றும் ஒன்றிய அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித்தேர்வுகளுக்கு தேவைப்படும் அனைத்து வகையிலான நூல்களும் இடம் பெற்றுள்ளன. மேலும், அறிவுசார் மையங்களின் செயல்பாட்டினை திறம்பட கண்காணிக்க அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

## 2.5. முன்னோடித்திட்டங்கள்

### 2.5.1. கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் (KNMT)

"கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம்" நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில், அடிப்படை கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காக 2021-22,

2022-23 மற்றும் 2023-24ஆம் ஆண்டுகளில் ஒவ்வோர் ஆண்டிற்கும் ரூ.1,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மக்களுக்கு தேவைப்படும் அடிப்படை பணிகளான குடிநீர் விநியோகப் பணிகள், தெருவிளக்கு அமைத்தல், சாலைகளை மேம்படுத்துதல், சமுதாயக் கூடங்கள் அமைத்தல், சந்தைகள் மேம்படுத்துதல், நவீன நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள் அமைத்தல், எரிவாயு தகன மேடைகள் அமைத்தல் மற்றும் இதர கட்டமைப்பு வசதிகளான புதிய பேருந்து நிலையங்கள் அமைத்தல், பேருந்து நிலையங்களை மேம்பாடு செய்தல், நீர்நிலைகளை புனரமைத்தல், திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்களை நிறுவுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ், பல்வேறு நகராட்சிகளில் நடைபெற்று வரும் பணிகளின் விவரம் பின்வருமாறு:

# அட்டவணை 2.15

**(ரூபாய் கோடியில்)**

| வ எண் | வகைப்பாடு | 2021-22 | | 2022-23 | | 2023-24 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு | பணிகளின் எண்ணிக்கை | தொகை |
| 1 | நூலகம் (ம) அறிவுசார் மையம் | 25 | 45.21 | 34 | 64.99 | 10 | 19.14 |
| 2 | சந்தைகள் – புதியன/ மறுசீரமைப்பு | 23 | 103.55 | 33 | 183.75 | 31 | 142.33 |
| 3 | புதியபேருந்து நிலையம் | – | – | – | – | 6 | 53.55 |
| 4 | பேருந்து நிலையம் மறுசீரமைப்பு | – | – | 16 | 31.43 | 15 | 80.31 |
| 5 | பூங்காக்கள் | 81 | 45.59 | 106 | 36.78 | 46 | 19.28 |
| 6 | நீர்நிலைகள் | 87 | 98.08 | 76 | 37.29 | 27 | 18.21 |
| 7 | எரிவாயு தகன மேடை – புதியது | 35 | 51.83 | 18 | 26.27 | 16 | 26.98 |
| 8 | எரிவாயு தகன மேடை – மேம்பாடு | – | – | 16 | 5.64 | – | – |
| 9 | சாலைகள் | 331 | 211.35 | 134 | 121.37 | 122 | 128.23 |
| 10 | குடிநீர் வசதி | – | – | 18 | 64.12 | 6 | 120.91 |
| 11 | பிற பணிகள் (வணிக வளாகம், வாகன நிறுத்தம்) | – | – | – | – | 2 | 24.79 |
| | **மொத்தம்** | **582** | **555.61** | **451** | **571.64** | **281** | **633.73** |

2021-22 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 582 பணிகளில் 544 பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள 38 பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. 2022-23 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட 451 பணிகளில் 315 பணிகள் முடிவடைந்துள்ளன, 136 பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. 2023-24ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 281 பணிகளில் 112 பணிகள் முடிவடைந்துள்ளன, மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**2.5.2 நமக்கு நாமே திட்டம் (நகர்ப்புரம்)**

அரசு, நகர்ப்புர பகுதிகளில் வசிக்கும் மக்களின் தற்சார்பு முறையினை ஊக்குவித்து, பொது மக்களின் பங்களிப்பு வாயிலாக சமுதாய உட்கட்டமைப்புகளை உருவாக்கி, அவற்றினை பராமரிக்க, நமக்கு நாமே திட்டத்தினை செயல்படுத்தியுள்ளது. மொத்த மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்குத்தொகை

பங்களிப்பாக பெறப்பட்டு மீதித்தொகை அரசால் வழங்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் நகர்ப்புர பகுதிகளில் பொதுமக்கள் பயன்பெறும் வகையிலும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அசையா சொத்தினை உருவாக்கும் நோக்கிலும் நீர் நிலைகளை சீரமைத்தல், பூங்காக்களை உருவாக்குதல் மற்றும் மேம்பாடு செய்தல், விளையாட்டுத் திடல்கள், போக்குவரத்து திட்டுகள், நீரூற்றுகள், தெருவிளக்குகள் போன்றவற்றை அமைத்தல், கண்காணிப்பு கேமராக்கள் நிறுவுதல், மரம் நடுதல் மற்றும் அவற்றினை பாதுகாத்தல், பள்ளிகள், கல்லூரிகள், வணிக வளாகங்கள் மற்றும் பொதுமக்களுக்கு பயன்படும் பொது கட்டடங்களை கட்டுதல், சாலைகள், பாலங்கள் முதலான உட்கட்டமைப்பு வசதிகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், இத்திட்டத்தின் கீழ் பட்டியல் இனத்தவர் அதிகம் பயன்பெறும் பொருட்டு அப்பகுதிகளில்

நடைபெறும் பணிகளுக்கு பொதுமக்கள் பங்களிப்பு தொகை மொத்த மதிப்பீட்டில் ஐந்தில் ஒரு பகுதியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 2021-22 ஆம் நிதி ஆண்டில் ரூ.150.00 கோடி, 2022-23 ஆம் நிதி ஆண்டில் ரூ.200.00 கோடி மற்றும் 2023-24 ஆம் நிதி ஆண்டில் ரூ.100.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு.

**அட்டவணை 2.16**

**(ரூ. கோடியில்)**

| வ. எண் | உள்ளாட்சி வகை | 2021-22 | | 2022-23 | | 2023-24 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை |
| 1. | மாநகராட்சி | 240 | 67.06 | 323 | 129.78 | 239 | 50.00 |
| 2. | நகராட்சி | 686 | 81.07 | 577 | 79.01 | 222 | 35.32 |
| | **மொத்தம்** | **926** | **148.13** | **900** | **286.01** | **461** | **85.32** |

2021-22ஆம் நிதியாண்டில் அனுமதிக்கப்பட்ட 926 பணிகளில் அனைத்து பணிகளும் முடிவுற்றுள்ளன. 2022-23 ஆம் ஆண்டில்

அனுமதிக்கப்பட்ட 900 பணிகளில் 853 பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. 2023-24 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 461 பணிகளில் 136 பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**2.5.3 தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம்**

நகர்ப்புர ஏழைகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கி அவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த ,பொதுச் சொத்துகளான பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், மழைநீர் வடிகால்கள், மரம்வளர்ப்பு மற்றும் நீர்நிலைகளை உருவாக்குதல், புதுப்பித்தல் மற்றும் பாதுகாத்தல் முதலான பணிகள் மேற்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம் (TNUES) அரசால் தொடங்கப்பட்டது. 2021-22-ஆம் நிதி ஆண்டில் ரூ.75.00 கோடி ஒதுக்கப்பட்டு முன்னோட்டமாக, சென்னை மாநகராட்சியில் 2 மண்டலங்களிலும், 14 மாநகராட்சிகளில்

தலா 1 மண்டலத்திலும், 7 நகராட்சிகளிலும், 37 மாவட்டங்களில் தலா 1 பேரூராட்சியிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2022-23-ஆம் நிதி ஆண்டில் ரூ.25.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஊதிய விகிதம் வழங்கப்பட்டு வருகிறது.

**அட்டவணை 2.17**

| **நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள்** | **ஊதிய விகிதம்** (நாளொன்றுக்கு ரூபாய்) |
|---|---|
| பெருநகர சென்னை மாநகராட்சி, கோயம்புத்தூர் மற்றும் ஆவடி மாநகராட்சிகள். | 382 |
| இதர மாநகராட்சிகள் | 363 |
| நகராட்சிகள் | 342 |
| பேரூராட்சிகள் | 300 |

இத்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட 208 பணிகளில், 76 பணிகள் முடிக்கப்பட்டு, இதுவரை ஏறக்குறைய 2.53 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

## 2.6 செயல்பாட்டிலுள்ள திட்டங்கள்

### 2.6.1 இந்திய அரசின் திட்டங்கள்

**(I) சீர்மிகு நகரங்கள் திட்டம்**

சீர்மிகு நகரங்கள் திட்டமானது மேம்படுத்தப்பட்ட மற்றும் நிலைத்த உட்கட்டமைப்பு, சுத்தமான மற்றும் நீடித்த நிலையான சுற்றுச்சூழல் மற்றும் நகர்ப்புரத்தின் தொடர் வளர்ச்சிக்கான தீர்வுகள் வழங்குதல் போன்றவற்றின் மூலம் மக்களுக்கு உயர்ந்த வாழ்க்கை தரத்தை வழங்கக்கூடிய நகரங்களை உருவாக்கும் நோக்கத்துடன் ஒன்றிய அரசினால் 2015 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. மேலும், இத்திட்டத்தின் மூலமாக நிலைக்கத்தக்க, உள்ளடக்கிய வளர்ச்சியில், சேவைகள் வழங்குவதில் சீர்மிகு தீர்வுகளை பயன்படுத்தவும் மற்றும் ஒரு குறிப்பிட்ட பகுதியை தேர்ந்தெடுத்து அதில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணியானது நகரத்தின் பிற பகுதிகளில்

பின்பற்றக்கூடிய மற்றும் வளர்ச்சி அடையக் கூடிய நிலையில் உள்ள மற்ற நகரங்களுக்கு கலங்கரை விளக்கமாக திகழக்கூடிய வகையிலான பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாட்டில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், தஞ்சாவூர், வேலூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருப்பூர், திருச்சிராப்பள்ளி மற்றும் ஈரோடு ஆகிய 11 மாநகராட்சிகளில் சீர்மிகு நகரத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது, இத்திட்டத்தில் குடிநீர்மேம்பாட்டு பணிகள், பாதாளச் சாக்கடை பணிகள், பேருந்து நிறுத்தங்கள், நீர்நிலை மேம்பாட்டு பணிகள், சூரிய சக்தி மூலம் தெரு விளக்குகள் அமைத்தல், பூங்காக்கள் மேம்பாடு போன்ற பணிகள் ரூ.1,000 கோடி திட்ட நிதியில் 50:50 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பங்காக ஒவ்வொரு நகரத்திற்கும் ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், 10 மாநகராட்சிகளில் (பெரு நகர

சென்னை மாநகராட்சி தவிர) இதுவரை, ரூ.9,658.48 கோடி மதிப்பிலான 682 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, ரூ.8,067.29 கோடி மதிப்பிலான 647 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. சீர்மிகு நகரங்கள் திட்டக் காலம் தற்போது 2024– ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**(II) அடல் புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம்**

அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் மாற்றத்திற்கான திட்டம் 25.6.2015 அன்று துவங்கப்பட்டது. இத்திட்டமானது ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில், சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி, திருப்பூர், தூத்துக்குடி, தஞ்சாவூர், ஈரோடு, திண்டுக்கல், வேலூர், நாகர்கோவில், ஆவடி,

ஓசூர் மாநகராட்சிகள், பல்லாவரம், தாம்பரம், கடலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கும்பகோணம், ராஜபாளையம், புதுக்கோட்டை, ஆம்பூர், காரைக்குடி, நாகப்பட்டினம், ராமேஸ்வரம் நகராட்சிகள் மற்றும் வேளாங்கண்ணி பேரூராட்சி ஆகிய 28 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் ரூ.9,977.37 கோடி மதிப்பீட்டில் 14 குடிநீர் வழங்கல் திட்டங்கள், 13 பாதாள சாக்கடை திட்டங்கள் மற்றும் 358 பூங்காக்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள 385 திட்டங்களில் 373 திட்டங்கள் ரூ.4,363.93 கோடி மதிப்பீட்டில் நிறைவு பெற்றுள்ளது. 12 திட்டங்கள் வெவ்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

அனைத்து திட்டங்களை செயல்படுத்துவதில் முன்னோடி மாநிலமாக திகழும் தமிழ்நாடு அரசு இத்திட்டத்தினையும் செம்மையாக செயல்படுத்தி வருகிறது.

**(III) அடல் புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் – 2.0 (அம்ருத் 2.0 )**

அம்ருத் திட்டத்தின் தேவையை கருத்தில் கொண்டு அனைத்து நகரங்களுக்கும் அடல் புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான அம்ருத் 2.0 திட்டமானது 01.10.2021–ல் துவங்கப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள 21 மாநகராட்சிகள் 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறது, இத்திட்டத்தின் செயல்பாட்டுக் காலம் அக்டோபர் 2021 முதல் 5 ஆண்டுகள் ஆகும். அம்ருத் 2.0 திட்டத்தின் முக்கிய கூறுகள்; அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குதல், கழிவு நீர் மற்றும் கழிவு கசடு மேலாண்மை, சுத்திகரிக்கப்பட்ட நீரின் மறுசுழற்சி மற்றும் மறு பயன்பாடு, நீர்நிலைகளுக்கு புத்துயிர் அளித்தல் மற்றும் பசுமை வழி பூங்காக்களை உருவாக்குதல் முதலியவை ஆகும்.

ஒன்றிய அரசினால் தமிழ்நாட்டிற்கு அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ. 2,257.06 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசினால் ரூ.1545.96 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளின் நிதியாக ரூ.2,852.78 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது வரை மொத்தம் ரூ.6,655.80 கோடி மதிப்பீட்டில் 446 பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதில் 42 குடிநீர்த் திட்டப்பணிகள் மற்றும் கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகள் ரூ.3,087.87 கோடி மதிப்பீட்டிலும் 14 பாதாளச் சாக்கடைத் திட்டப்பணிகள் ரூ.3,360.65 கோடி மதிப்பீட்டிலும் 186 நீர்நிலைகள் மேம்பாடு ரூ.131.67 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் 204 பசுமை வழி பூங்காக்கள் ரூ.75.59 கோடி மதிப்பீட்டிலும் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

எடுத்துக்கொள்ளப்பட்ட 446 திட்டங்களில் 228 திட்டங்கள் ரூ.114.43 கோடி மதிப்பீட்டில்

நிறைவுபெற்றுள்ளன. மீதமுள்ள திட்டங்கள் அனைத்தும் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**(iv) தூய்மை இந்தியா திட்டம் (நகர்ப்புரம்)**

அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி பகுதிகளையும் குப்பைகள் இல்லாத நகரங்களாகவும், திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நகரங்களாகவும் மாற்றுவதே தூய்மை இந்தியா திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத நகரங்களாக 158 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (20 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள்) அறிவிக்கப்பட்டுள்ளன.

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகர்ப்புரத்தில் இதுவரை 5,07,143 தனிநபர் வீட்டுக் கழிவறைகள் (IHHL), சமூக கழிப்பறைகள் (CT) மற்றும் பொது கழிப்பறைகளில் (PT) 22,337 இருக்கைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டத்தின் கீழ், திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக பேட்டரியில்

இயங்கும் வாகனங்கள், இலகுரக வணிக வாகனங்கள் மற்றும் டிப்பர் லாரி போன்ற முதன்மை சேகரிப்பு வாகனங்களை வாங்குதல் போன்ற பணிகளுடன் நுண்ணுயிர் மையங்கள், வள மீட்பு மையங்கள் மற்றும் பிற உட்கட்டமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

**தூய்மை இந்தியா திட்டம் 2.0**

தூய்மை இந்தியா திட்டம் 2.0, அக்டோபர் 1, 2021 ஆம் ஆண்டு முதல் அக்டோபர் 2026 ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டு திட்டமாகும்.

**தூய்மை இந்தியா திட்டம் 2.0 நோக்கங்கள்:**

i. இத்திட்டத்தின் நோக்கமானது அனைத்து நகர்ப்புர உள்ளாட்சிகளிலும் உள்ள அனைத்து வீடுகளிலும் தனி நபர் கழிப்பிட வசதிகளை ஏற்படுத்தி அதன் மூலம் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத நகரமாக மாற்றுதல், மேலும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை

உருவாக்கி அனைத்து நகர்ப்புரங்களையும், குப்பையில்லா நகரங்களாக உருவாக்குல்.

ii. சுத்திகரிக்கப்படாத கசடு கழிவு (கழிவுநீர், பயன்படுத்தப்பட்ட நீர்) அல்லது கழிவுநீர் சுற்றுப்புறத்தில் வெளியேற்றப்படாததை உறுதி செய்தல் மற்றும் 1 இலட்சத்திற்கு குறைவான மக்கள் தொகை கொண்ட நகரங்களில் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரின் பயன்பாட்டினை அதிகப்படுத்துதல்.

iii. அனைத்து நகரங்களிலும் திடக்கழிவு மேலாண்மையை திறம்பட செயல்படுத்தும் விதமாக, தினசரி உருவாகும் திடக்கழிவுகளை குப்பை உருவாகும் இடத்திலேயே தரம் பிரித்து (மக்கும் குப்பை, மக்காத குப்பை, நெகிழி குப்பை, கட்டுமானம் மற்றும் கட்டட இடிப்பாட்டுக் கழிவுகள், மின்னனு கழிவுகள் மற்றும் இதர கழிவுகள்) அதனை 100% அறிவியல் முறையில் செயலாக்கம் செய்தல், மேலும் ஏற்கனவே

குப்பை கிடங்குகளில் சேகரமாகியுள்ள தேக்க திடக்கழிவுகளை உயிரி அகழ்வு (Biomining) முறையில் பிரித்து எடுத்து அகற்றுதல்

**தூய்மை இந்தியா திட்டம் 2.0–ன் நிதிப்பங்களிப்பு விவரம்**

**அட்டவணை 2.18**

| மாநகர / நகர மக்கள் தொகை | ஒன்றிய அரசின் பங்களிப்பு | மாநில அரசின் பங்களிப்பு | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு |
|---|---|---|---|
| 10 இலட்சத்திற்கும் மேல் மக்கள் தொகை | 25% | 16% | 59% |
| 1 இலட்சத்திலிருந்து 10 இலட்சம் வரை மக்கள் தொகை | 33% | 22% | 45% |
| 1 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை | 50% | 33% | 17% |

**சுகாதாரம்**

தூய்மை இந்தியா திட்டம் 2.0 வழிகாட்டுதல்களின்படி, தற்போதைய மற்றும் 2026ஆம் ஆண்டின் உத்தேச மக்கள் தொகையின் அடிப்படையில் சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மையை அனைத்து நகர்ப்புர

உள்ளாட்சிகளிலும் திறம்பட செயல்படுத்த தேவையான அடிப்படை கட்டமைப்புகளுக்கான செயல்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**தனிநபர் கழிப்பிடம்**

அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத நிலையினை உறுதி செய்யும் வகையில், 2021–22, 2022–23 மற்றும் 2023–24 ஆகிய நிதியாண்டுகளில் 8,854 தனிநபர் வீட்டுக் கழிப்பறைகள் (IHHL) கட்ட அனுமதி வழங்கப்பட்டு, 7,778 கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டு, மீதமுள்ள 1,076 கழிப்பறைகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**சமுதாயக் கழிப்பறை**

தனிநபர் வீட்டுக் கழிப்பறை (IHHL) கட்டுவதற்கு இடவசதி இல்லாத நிலையிலுள்ள குடும்பங்களின் சுகாதாரத்தை உறுதிப்படுத்துவதற்காக, சமுதாயக் கழிப்பறைகள் கட்டப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. தூய்மை இந்தியா

திட்டத்தின் கீழ் 2021-22, 2022-23 மற்றும் 2023-24 ஆகிய நிதியாண்டுகளில் ரூ.74.79 கோடி மதிப்பீட்டில் 422 சமுதாய கழிப்பிடம் கட்டும் பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு, 147 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 275 சமுதாய கழிப்பிடம் கட்டும் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**பொது கழிப்பிடம்**

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பொது கழிப்பறைகள் பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 2021-22, 2022-23 மற்றும் 2023-24 ஆகிய நிதியாண்டுகளில், ரூ.87.09 கோடி மதிப்பீட்டில் 296 பொது கழிப்பிடம் கட்டும் பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு, 111 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 185 பொது கழிப்பிடம் கட்டும் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும், ரூ.10.88 கோடி மதிப்பீட்டில் 801 சிறுநீர் கழிப்பிடங்கள்

கட்டும் பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு, 360 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 441 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**திடக்கழிவு மேலாண்மை**

தமிழ்நாட்டில் உள்ள 20 மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி தவிர) மற்றும் 138 நகராட்சிகளில் நாள்தோறும் சுமார் 7,500 மெட்ரிக் டன் திடக்கழிவு உருவாகின்றன. இவற்றில் 54% ஈரக்கழிவுகள் மற்றும் 46% உலர்கழிவுகளாக உள்ளன. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உருவாகும் திட மற்றும் திரவக் கழிவுகளை அறிவியல் ரீதியாகவும், சுற்றுச் சூழலுக்கு இணக்கமான வகையிலும் கையாள்வது நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் முக்கிய பணியாகும்.

நகர்ப்புர பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மையை திறம்பட செயல்படுத்தும் விதமாக, தினசரி உருவாகும் திடக்கழிவுகளை அவை உருவாகும் இடத்திலேயே தரம் பிரித்து (மக்கும் குப்பை,

மக்காத குப்பை, நெகிழி குப்பை, கட்டுமானம் மற்றும் கட்டட இடிப்பாட்டுக் கழிவுகள், மின்னனு கழிவுகள் மற்றும் இதர கழிவுகள்) 100% அறிவியல் முறையில் செயலாக்கம் செய்வதற்கு போதுமான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், உயிரி எரிவாயு கட்டமைப்புகளை நிறுவி எரிவாயு தயாரிக்கும் பணிகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பல்வேறு இடங்களில் தேங்கியுள்ள தேக்கத் திடக்கழிவுகளை உயிரி அகழ்வு (Bio–mining) முறையில், சுற்றுச்சூழலுக்கு இணக்கமான வகையில், முழுமையாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மீட்டெடுக்கப்பட்ட நிலத்தின் பகுதி, நிலத்தின் தேவை மற்றும் தன்மைக்கேற்ப, அவற்றை நகர்ப்புர உட்கட்டமைப்பு வசதிகள், நகர்ப்புர காடுகள் மற்றும் பூங்காக்களாக மாற்ற அரசு உறுதி பூண்டுள்ளது.

தூய்மை இந்தியா திட்டம் 2.0 வழிகாட்டுதல்களின் அடிப்படையில், 158 உள்ளாட்சி அமைப்புகளிலும், 2026ஆம் ஆண்டின் உத்தேச தேவைக்கான, திடக் கழிவு மேலாண்மை கட்டமைப்பு வசதிகள் தொடர்பான இடைவெளி கண்டறியப்பட்டு நகர திடக்கழிவு செயல்திட்டம் (CSWAP) தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செயல்திட்டத்திற்கு தூய்மை இந்தியா திட்டத்தின் மாநில உயர்நிலைக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது. இச்செயல்திட்டத்தில் ஈர மற்றும் உலர்கழிவுகளை கையாளுவதற்காக 156 நுண்ணுர மையங்கள், 6 உயிரி எரிவாயு அமைப்புகள், 7 உயிரி இயற்கை எரிவாயு (Bio CNG) ஆலைகள், 230 பொருள் மீட்பு வசதிகள், 7 குப்பை மாற்று நிலையங்கள் மற்றும் 7 முழு தானியங்கி வளமீட்பு மையங்கள் போன்ற பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

2022-23 மற்றும் 2023-24 ஆகிய நிதியாண்டுகளில், ரூ.81.76 கோடி மதிப்பீட்டில் 156 நுண்ணுர மையங்கள் அமைக்கும் பணிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டு, 56 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 100 பணிகளில் 24 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. 76 பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

2022-23 மற்றும் 2023-24 ஆகிய நிதியாண்டுகளில், ரூ.216.16 கோடி மதிப்பீட்டில் 218 வளமீட்பு மையங்கள் அமைக்கும் பணிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டு, 77 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 141 பணிகளில் 40 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. 101 பணிகள் ஒப்பந்தப் புள்ளி கோரும் நிலையில் உள்ளன.

2021-22ஆம் நிதியாண்டில் ரூ.22.50 கோடி மதிப்பீட்டில் கோவை, மதுரை, திருச்சி, சேலம்,

தூத்துக்குடி மற்றும் திருப்பூர் ஆகிய 6 மாநகராட்சிகளில் நாளொன்றுக்கு மொத்தம் 375 மெட்ரிக் டன் கட்டுமானம் மற்றும் கட்டட இடிபாடு கழிவுகளை கையாளும் திறன் கொண்ட வசதிகளை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தூசி மற்றும் காற்று மாசுபாட்டை தடுக்கும் வகையில் கோவை, மதுரை, திருச்சி, சேலம் மற்றும் தூத்துக்குடி ஆகிய 5 மாநகராட்சிகளில் சாலை துப்புரவு இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. 2023–24 ஆம் ஆண்டில் ஆவடி மற்றும் தூத்துக்குடி மாநகராட்சிக்கு 3 சாலை துப்புரவு இயந்திரங்கள் கொள்முதல் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**தேக்கத் திடக்கழிவினை அகற்றுதல்**

குப்பைக் கிடங்குகளில் உள்ள தேக்க திடக்கழிவுகளை உயிரி அகழ்வுமுறை (Biomining) மூலம் அகற்றும் பணிகள் பல்வேறு நகர்ப்புர

உள்ளாட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் நிர்வாக கட்டுப்பாட்டில் உள்ள 111 நகரங்களில் உள்ள தேக்க திடக்கழிவுகளின் மொத்த அளவு 106 லட்சம் கன மீட்டர் ஆகும்.

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 18 மாநகராட்சிகள் மற்றும் 93 நகராட்சிகளில் உயிரி அகழ்வு முறை மூலம் தேக்கத் திடக்ழிவுகளை அகற்ற ரூ.600.48 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உயிரி அகழ்வு முறையில் தேக்கக் கழிவுகளை அகற்றும் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பல்வேறு நகரங்களில் மீட்கப்பட்ட நிலத்தின் ஒரு பகுதி திடக்கழிவு செயலாக்க வசதிகளை ஏற்படுத்துவதற்கும், உபரி நிலங்கள் பூங்காக்கள் மற்றும் பசுமையான நகர்ப்புர காடுகளை உருவாக்குதல் உள்ளிட்ட பொது நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

தூய்மை இந்தியா திட்டம் 2.0–ன் கீழ் 2021–22, 2022–23 மற்றும் 2023–24 ஆகிய நிதியாண்டுகளில் ரூ.257.96 கோடி மதிப்பீட்டில் தேக்க திடக்கழிவுகளை உயிரி அகழ்வு முறை மூலம் அகற்ற 84 பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு, 12 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 72 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**நகர்ப்புர காடுகள்**

42 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உயிரி அகழ்வு முறையில் மீட்டெடுக்கப்பட்டுள்ள 132.04 ஏக்கர் நிலத்தில் ரூ.1.72 கோடி மதிப்பீட்டில் நாவல், நெல்லி, கொடுக்காப்புளி, பாதாம், வேம்பு, புளியமரம் மற்றும் புங்கன்மரம் போன்ற 56,958 நாட்டு மரக்கன்றுகள் நடப்பட்டு சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**பயன்படுத்தப்பட்ட நீர் மேலாண்மை**

தூய்மை இந்தியா திட்டம் 2.0ன் கீழ், ரூ.94.28 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 38.44 மில்லியன் லிட்டர்

சுத்திகரிக்கும் திறன் கொண்ட 2 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், ரூ.114.42 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 31.66 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்ட 12 கழிவுநீர் மற்றும் கசடு கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் மற்றும் ரூ.3.01 கோடி மதிப்பீட்டில் 21 கசடு வடிகால் நிலையங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டு பணிகள் முன்னேற்ற நிலைகளில் உள்ளன.

மேலும், ரூ.49.73 கோடி மதிப்பீட்டில் 115 கசடு மற்றும் கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் கொள்முதல் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

**தூய்மையான நகரங்களுக்கான மக்கள் இயக்கம் (தூய்மை நகரப் பிரச்சாரம்)**

தமிழ்நாடு அரசு, நகரத் தூய்மைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. அரசின் முயற்சியுடன் பெருமளவிலான மக்கள் பங்களிப்பும் இருந்தால்தான் நீடித்த நிலையான மாற்றத்துடன் தூய்மையான நகரங்களை உருவாக்க இயலும் என்பதன் அடிப்படையில் தூய்மை நகரங்களுக்கான மக்கள்

இயக்கம் 03.06.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கப்பட்டது.

தூய்மை இயக்க செயல்பாடுகள், ஒவ்வொரு மாதத்தின் இரண்டாவது மற்றும் நான்காவது சனிக்கிழமைகளில் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சிகளிலும் நடத்தப்படுகிறது. இவ்வியக்கத்தின் செயல்பாடுகள் பின்வரும் 7 முக்கியமான கருப்பொருள்களை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

1. பெருமளவிலான மக்கள் பங்களிப்புடன் பொது இடங்களை சுத்தம் செய்தல்.
2. குப்பையை சேகரிக்கும் இடத்திலேயே பிரித்து அளித்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
3. நீர்நிலைகள், மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் மரம் நடுதல்.
4. அனுமதியில்லாத விளம்பர பலகை, பேனர்கள், உபயோகமற்ற வாகனங்கள் மற்றும் சேதமடைந்த பொருட்களை அப்புறப்படுத்துதல்.

5. தூய்மைப்பணி மேற்கொள்ளும் பணியாளர்களை பெருமைப்படுத்துதல்.
6. அனுமதியின்றி கொட்டப்படும் அனைத்து கட்டடக் கழிவுகள் மற்றும் சுவரொட்டிகளை அகற்றுதல்.
7. ஒவ்வொரு மாதமும் மூன்றாவது புதன்கிழமை அன்று பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை மற்றும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல்.

இத்திட்டத்தில் 8,43,000 தன்னார்வலர்கள் மற்றும் 9,454 மக்கள் பிரதிநிதிகள் தங்களது பங்களிப்பை அளித்துள்ளனர். 3,500க்கும் அதிகமான குப்பை கொட்டும் இடங்களை கண்டறிந்து சுத்தம் செய்யப்பட்டு மாற்று உபயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. 3,200 கி.மீ மழைநீர் வடிகால் சுத்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 25,000 தூய்மை பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் பெருமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

**இயற்கை உரம்–செழிப்பு**

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் பிரித்தெடுக்கப்படும் மக்கும் குப்பைகள் நுண்ணுரக் கூடங்களில் இயற்கை உரமாக மாற்றப்படுகிறது. தரமான இயற்கை உரத்தை நுகர்வோருக்கு அளிக்கும் பொருட்டு, உரத்தின் தழை சத்து, மணி சத்து மற்றும் சாம்பல் சத்து பகுப்பாய்வு செய்யப்படுகிறது. இப்பகுப்பாய்வு உரக்கட்டுப்பாட்டு ஆணை 1985–ன் வழிகாட்டுதலின் படி செய்யப்படுகிறது. இவ்வாறு பகுப்பாய்வு செய்யப்பட்ட உரமானது 'செழிப்பு' என்ற பெயரில் விவசாயிகளுக்கும், சமையல் தோட்ட பயன்பாட்டிற்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பொது மக்கள் பெருமளவில், உரத்தினை பெற்று பயன்படுத்தி வருகின்றனர்.

**(v) தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (NULM)**

தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ், நகர்ப்புர தெருவோர வியாபாரிகளுக்கான திட்டம் மற்றும் நகர்ப்புர வீடற்றவர்களுக்கு தங்குமிடம் கட்டும்

திட்டம் ஆகியன நகராட்சி நிர்வாக இயக்குநரகம் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

**நகர்ப்புர வீடற்றவர்களுக்கான தங்குமிடம் (SUH)**

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் தெருவோரம் வசிப்பவர்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகள் ஏற்படுத்த வேண்டும் என்பதே அரசின் கொள்கை முடிவாகும். இத்திட்டத்தின் கீழ் தெருவோரம் வசிப்பவர்கள் பயன்பெறும் வகையில் மத்திய அரசின் நிதிப் பங்களிப்புடன் 20 மாநகராட்சிகள் மற்றும் 66 நகராட்சிகளில் இதுவரை 127 புதிய தங்குமிடங்களும், 35 பழைய தங்குமிடங்கள் புதுப்பிக்கப்பட்டும் மொத்தம் 162 தங்குமிடங்கள் ரூ.88.42 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேலும், 2023-24 ஆம் ஆண்டில் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் 11 புதிய தங்குமிடங்கள் அமைக்க பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

**நகர்ப்புர தெருவோர வியாபாரிகளுக்கான திட்டம் (SUSV)**

அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள தெருக்களில் பொருள்களை விற்பனை செய்து வரும் தெருவோர வியாபாரிகளுக்கு மத்திய அரசின் நிதிப்பங்களிப்புடன் விற்பனை வண்டிகள் இலவசமாக வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின்படி இதுவரை மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் உள்ள தெருவோர வியாபாரிகளுக்கு ரூ.35.28 கோடி மதிப்பீட்டில் 4,577 வண்டிகள் கொள்முதல் செய்ய அனுமதி வழங்கப்பட்டு, கொள்முதல் செய்யப்பட்டு வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. 2023-24 ஆம் ஆண்டில், 10 நகராட்சிகளில் ரூ.1.45 கோடி மதிப்பீட்டில் விற்பனை சந்தைகள் அமைக்க பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

**பிரதமரின் தெருவோர வியாபாரிகளுக்கான வங்கி கடன் திட்டம் (PM–SVANidhi)**

தகுதியுள்ள தெருவோர வியாபாரிகளுக்கு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக வங்கி கடன் 7% வட்டி மானியத்துடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 01.06.2020 முதல் தொடங்கப்பட்டு முதல் தவணையாக 3,80,095 தெருவோர வியாபாரிகளுக்கு, அதிகபட்சமாக ரூ.10,000 வீதம் ரூ.377.67 கோடியும், இரண்டாம் தவணையாக 1,00,304 தெருவோர வியாபாரிகளுக்கு, அதிகபட்சமாக ரூ.20,000 வீதம் ரூ.199.94 கோடியும், மூன்றாம் தவணையாக 14,644 தெருவோர வியாபாரிகளுக்கு, அதிகபட்சமாக ரூ.50,000 வீதம் ரூ.71.93 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

**2.6.2 மாநில அரசின் திட்டங்கள்**

**(I) மூலதன மானிய நிதி (Capital Grant Fund)**

ஆறாவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 2022–23-ம் நிதி ஆண்டு முதல் ரூ.500 கோடி மூலதன மானிய நிதியானது

மாநகராட்சிகளுக்கு 31%, நகராட்சிகளுக்கு 36%, பேரூராட்சிகளுக்கு 33% என ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆண்டுக்கு ரூ.50 கோடி கூடுதலாக அதிகரித்தும் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிதி, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் மூலதன பணிகளான குடிநீர் வழங்கல் பணிகள், பாதாள சாக்கடைப் பணிகள், பேருந்து நிலையம் அமைத்தல், மழைநீர் வடிகால்கள் அமைத்தல், சந்தைகள் மற்றும் பூங்காக்கள் அமைத்தல் உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்பு பணிகள் மற்றும் சேவைகள் தொடர்பான மூலதன பணிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

இந்நிதியின் கீழ், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கு 2022-2023-ம் நிதி ஆண்டிற்கு ரூ.335.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 61 எண்ணிக்கையிலான உட்கட்டமைப்பு பணிகள் அனுமதிக்கப்பட்டு 11 பணிகள் முடிவுற்று, மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. 2023-2024-ம் நிதி ஆண்டிற்கு

ரூ.368.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 62 எண்ணிக்கையிலான உட்கட்டமைப்பு பணிகள் அனுமதிக்கப்பட்டு 5 பணிகள் முடிவுற்று, மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**(II) இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி (Operation and Maintenance Deficit Grant)**

ஆறாவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 2022–23ம் நிதி ஆண்டு முதல் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி ரூ.200 கோடி (மாநகராட்சிகளுக்கு 31%, நகராட்சிகளுக்கு 36%, பேரூராட்சிகளுக்கு 33%) ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேலும் ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ. 20 கோடி கூடுதலாக அதிகரித்தும் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிதி, அடிப்படை வசதிகளான குடிநீர் வழங்குதல் மற்றும் பாதாள சாக்கடை பணிகளுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவிற்கும், நிலுவையில் உள்ள குடிநீர் கட்டணம்

மற்றும் மின் கட்டணம் செலுத்தவும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிதியின் கீழ், 2022–23–ம் நிதி ஆண்டிற்கு ரூ.134 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.98.03 கோடி நிலுவையில் உள்ள மின்கட்டணமாகவும், ரூ.33.69 கோடி நிலுவையில் உள்ள குடிநீர் கட்டணமாகவும் செலுத்தப்பட்டது. ரூ.2.28 கோடிக்கு இதர பணிகள் அனுமதிக்கப்பட்டன. 2023–24–ம் நிதி ஆண்டிற்கு ரூ.147.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.25.15 கோடி மாநகராட்சி மற்றும் நகராட்சிகளின் நிலுவையில் உள்ள குடிநீர் கட்டணம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. பல்வேறு குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கு உள்ளாட்சி பங்களிப்பாக ரூ.48.92 கோடியும், ரூ.1.96 கோடி மாநகராட்சி மற்றும் நகராட்சிகளின் நிலுவையில் உள்ள மின் கட்டணம் செலுத்தவும், ரூ.0.79 கோடி இதர பணிகளுக்கும்

அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.3.76 கோடி மதிப்பீட்டில் 3 பேருந்து நிலைய மேம்பாட்டுப் பணிகளும், ரூ.1.54 கோடி மதிப்பீட்டில் ஒரு மேம்பாலம் மற்றும் சாலை பணிகளும், ரூ.19.29 கோடி மதிப்பீட்டில் 4 எண்ணிக்கையிலான பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணிகளும், ரூ.28.70 கோடி மதிப்பீட்டில் 23 எண்ணிகையிலான குடிநீர் திட்டப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**2.7 பன்னாட்டு நிதியுதவித் திட்டங்கள்**

தமிழ்நாடு அரசு வெளிநாட்டு நிதியுதவியுடன் பல்வேறு உட்கட்டமைப்பு திட்டங்களைச் செயல்படுத்திவருகிறது.

**2.7.1 ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி (Kfw) நிதியுதவியுடன் நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவித் திட்டம்– தமிழ்நாடு (SMIF – TN)**

ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி நிதியுதவியுடன் 37 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் சாலை மேம்பாட்டு பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், குடிநீர்

மேம்பாட்டுப் பணிகள், பாதாளச் சாக்கடைத் திட்டம், நீர்நிலைகள் புனரமைப்பு மற்றும் விளையாட்டுத் திடலுடன் கூடிய பூங்காக்கள் மேம்பாடு போன்ற 35 பணிகள் ரூ.3,062.51 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில், 34 திட்டப்பணிகள் ரூ.2,832.51 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன. எஞ்சிய பணிகள் பல்வேறு கட்டங்களில் முன்னேற்றத்தில் உள்ளன. அனைத்துப் பணிகளையும் விரைந்து நிறைவேற்றி பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

ஜெர்மானிய மேம்பாட்டு நிதியுதவியுடனான நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவித் திட்டம்–தமிழ்நாடு–IIIன் கீழ், 19 துணைத் திட்டங்களுக்கு ரூ.2,760 கோடி நிதியுதவி வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி நிதியுதவியுடன் 15 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் 16 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் கூடிய பாதாள சாக்கடைத் திட்டங்கள், 2 குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் என மொத்தம் 18 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பல்வேறு கட்டங்களில் முன்னேற்றத்தில் உள்ளன. அனைத்துப் பணிகளையும் விரைந்து நிறைவேற்றி பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

### 2.7.2 உலக வங்கி நிதியுதவியுடனான தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNSUDP)

உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNSUDP) ரூ.3,831 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டமானது, மூன்று துணைக் கூறுகளை உள்ளடக்கியதாகும். மேற்கூறிய 3 துணைக் கூறுகளில், நகர்ப்புர ஆளுகை (மாதிரி நகரம்) மற்றும் நகர்ப்பகுதிகளுக்கான தொழில்நுட்ப உதவி ஆகியவை நகராட்சி நிருவாக இயக்குநரகத்தால்

செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகர்ப்புர சேவைகளுக்கான முதலீட்டுக் கூறு, தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**(i) நகர்ப்புர ஆளுகை செயல்பாடுகளின் அடிப்படையிலான மானியத்திற்கான கூறு**

இக்கூறின் முக்கிய நோக்கமானது நகர்ப்புர மேலாண்மையில் சிறந்த நகரங்களை முன்னிலைப்படுத்துவதாகும்.

இக்கூறின் கீழ் ஈரோடு, வேலூர் மற்றும் ஓசூர் மாநகராட்சிகள் ஆகியவை மாதிரி நகரங்களாக தேர்வு செய்யப்பட்டன. நகர்ப்புர மேலாண்மை மற்றும் ஆளுகையில் மாதிரி நகரங்கள் தமிழ்நாட்டிலுள்ள பிற நகர்ப்புர உள்ளாட்சிஅமைப்புகளுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். மாதிரி நகரங்களில் நகர்ப்புரமேலாண்மை நடைமுறைகளை மேம்படுத்திட திட்ட காலமான 7 ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ.383.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2021–2022ஆம் ஆண்டு வரை நகர்ப்புர மேலாண்மை இலக்குகள் எய்தப்பட்டமைக்காக மேற்குறிப்பிட்ட ஈரோடு, வேலூர் மற்றும் ஓசூர் ஆகிய 3 மாநகராட்சிகளுக்கு ரூ.356.48 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**(ii) நகர்ப்புரப் பகுதிக்கான தொழில் நுட்ப உதவிக் கூறு**

**அ) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் மின் ஆளுகை**

நகராட்சி நிருவாகத்தில் மின் ஆளுகை மூலம் பணிகளை கையாள்வதற்கு, "மையப்படுத்தப்பட்ட இணைய வழி மென் பொருள்" என்ற சீரிய திட்டம் ரூ.18.31 கோடியில் செயல்படுத்தப்பட்டு, 20 மாநகராட்சிகள் மற்றும் 138 நகராட்சிகளில் அனைத்து மின் ஆளுகை சேவைகளும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

**ஆ) நிகழ்நிலை வருவாய் கண்காணிப்பு முறை (Revenue Dashboard)**

உள்ளாட்சி அமைப்புகளில் பல்வேறு உட்கட்டமைப்புத் திட்டங்களை செயல்படுத்த

உள்ளாட்சி அமைப்புகளின் வரிவசூல் முக்கிய பங்கு வகிக்கிறது. மாநகராட்சி/நகராட்சிகளின் வரிவசூல் முன்னேற்றத்தை கண்காணிக்கவும் / மதிப்பாய்வு செய்யவும் வரைகலை இணைய முகப்புடன் கூடிய புதிய தொகுதி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது (http://tnurbanepay.tn.gov.in/revenue). இந்தத் தொகுதியின் மூலம் அனைத்து மாநகராட்சி/நகராட்சிகளின் வரிவசூல் தொடர்புடைய விவரங்கள் நிகழ் நேரத்தில் கண்காணிக்கப்படுகிறது.

**(இ) முதலமைச்சரின் நிகழ்நிலை திட்ட கண்காணிப்பு முறை (UTIS integration with CM dashboard)**

இத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகளை நிகழ்நிலை திட்ட கண்காணிப்பு முறையில் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் மாநகராட்சி/நகராட்சி அளவில் உள்ளீடு செய்யப்படும் விவரங்கள் முதலமைச்சர் அலுவலகத்தில் உள்ள கண்காணிப்பு தளத்திற்கு தானியங்கியாக தினந்தோறும் UTIS மென்பொருள் வழியாக பதிவுகள் பரிமாறப்பட்டு,

கண்காணிக்க ஏதுவாக மென்பொருள் நிறுவப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது.

**(ஈ) சொத்து வரி செலுத்தியவருக்கு ஊக்கத் தொகை வழங்குதல் (Incentive for Early Payment of Property Tax)**

மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் மாநகராட்சி மற்றும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரி தொகையை அந்த அரையாண்டு தொடங்கிய 30 நாட்களுக்குள் செலுத்துவோருக்கு வரி தொகையில் 5% அல்லது அதிகபட்சம் ரூ.5,000/- ஊக்க தொகையாக வழங்க UTIS மென்பொருளில் வசதிகள் செய்யப்பட்டு 24.04.2023 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது,

**(உ) மாநகராட்சி மற்றும் நகராட்சி பணியாளர்களுக்கு பொதுவான மூதுரிமை விவரம் பதிவேற்றம் செய்ய தொகுதி உருவாக்குதல் (Employee common seniority module)**

மாநகராட்சி மற்றும் நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் பொதுவான முதுநிலைப்பட்டியல் தயாரிக்க சம்பந்தப்பட்ட பணியாளர்களின் பணி

விவரங்களை பதிவேற்றம் செய்ய மென்பொருள் தொகுதி உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் உள்ள அனைத்து மாநகராட்சிகள் நகராட்சிகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அலுவலர்களின் விவரங்களை பதிவேற்றம் செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு காலநிலை நெகிழ்வு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNCRUDP)**

உலகவங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தின் (TNSUDP) தொடர்ச்சியாக தமிழ்நாடு காலநிலை நெகிழ்வு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNCRUDP) என பெயரிடப்பட்டுள்ள புதிய திட்டம் செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த செலவு மதிப்பு (Outlay) ரூ.3,838.65 கோடியாகும். இத்திட்டம் 2024-25 ஆம்

நிதியாண்டில் தொடங்கப்பட்டு 2029-30 வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தில் 12 மாநகராட்சிகள் மற்றும் 9 நகராட்சிகள் பயன் பெறத்தக்க வகையில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளும், குடிநீர் அபிவிருத்திப் பணிகளும் செயல்படுத்தப்படவுள்ளன.

இத்திட்டத்தில் பயன்பெறும் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் பின்வருமாறு:

**அட்டவணை 2.19**

| வ. எண் | பயன்பெறும் மாநகராட்சி/ நகராட்சிகள் பெயர்கள் | செயல்படுத்தபடவுள்ள பணிகளின் விவரம் | மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1. | ஆவடி மாநகராட்சி | குடிநீர் அபிவிருத்தி பணிகள் | 59.92 |
| | | பாதாள சாக்கடைத் திட்ட விரிவாக்க பணிகள் | 98.59 |
| 2. | தாம்பரம் மாநகராட்சி | 24 x7 குடிநீர் வழங்கல் திட்டப்பணிகள் | 20.29 |
| 3. | காஞ்சிபுரம் மாநகராட்சி | குடிநீர் அபிவிருத்தி பணிகள் | 331.88 |
| | | பாதாள சாக்கடைத் திட்ட விரிவாக்க பணிகள் | 340.15 |
| 4. | கடலூர் மாநகராட்சி | 24 x7 குடிநீர் வழங்கல் திட்டப்பணிகள் | 28.67 |

| | | | |
|---|---|---|---|
| | | பாதாள சாக்கடைத் திட்ட விரிவாக்க பணிகள் | 173.39 |
| 5. | ஈரோடு மாநகராட்சி | 24 x7 குடிநீர் வழங்கல் திட்டப்பணிகள் | 21.93 |
| 6. | சேலம் மாநகராட்சி | பாதாள சாக்கடைத் திட்ட விரிவாக்க பணிகள் | 557.65 |
| 7. | திருச்சி மாநகராட்சி | 24 x7 குடிநீர் வழங்கல் திட்டப்பணிகள் | 38.49 |
| 8.. | வேலூர் மாநகராட்சி | 24 x7 குடிநீர் வழங்கல் திட்டப்பணிகள் | 13.69 |
| 9. | தூத்துக்குடி மாநகராட்சி | 24 x7 குடிநீர் வழங்கல் திட்டப்பணிகள் | 16.06 |
| | | பாதாள சாக்கடைத் திட்ட விரிவாக்க பணிகள் | 153.29 |
| 10. | திருநெல்வேலி மாநகராட்சி | 24 x7 குடிநீர் வழங்கல் திட்டப்பணிகள் | 28.25 |
| 11. | நாகர்கோவில் மாநகராட்சி | 24 x7 குடிநீர் வழங்கல் திட்டப்பணிகள் | 64.68 |
| 12. | திண்டுக்கல் மாநகராட்சி | 24 x7 குடிநீர் வழங்கல் திட்டப்பணிகள் | 09.67 |
| | | பாதாள சாக்கடைத் திட்ட விரிவாக்க பணிகள் | 171.23 |
| 13. | நாமக்கல் நகராட்சி | பாதாள சாக்கடைத் திட்ட விரிவாக்க பணிகள் | 211.83 |
| 14. | கிருஷ்ணகிரி நகராட்சி | பாதாள சாக்கடைத் திட்ட விரிவாக்க பணிகள் | 49.86 |
| 15. | புதுக்கோட்டை நகராட்சி | 24 x7 குடிநீர் வழங்கல் திட்டப்பணிகள் | 25.31 |
| | | பாதாள சாக்கடைத் திட்ட விரிவாக்க பணிகள் | 101.34 |
| 16. | காரைக்குடி நகராட்சி | 24 x7 குடிநீர் வழங்கல் திட்டப்பணிகள் | 25.02 |
| | | பாதாள சாக்கடைத் திட்ட விரிவாக்க பணிகள் | 35.03 |

| | | | |
|---|---|---|---|
| 17. | திருவண்ணாமலை நகராட்சி | பாதாள சாக்கடைத் திட்ட விரிவாக்க பணிகள் | 105.82 |
| 18. | தேனி நகராட்சி | பாதாள சாக்கடைத் திட்ட விரிவாக்க பணிகள் | 67.76 |
| 19. | தருமபுரி நகராட்சி | பாதாள சாக்கடைத் திட்ட விரிவாக்க பணிகள் | 71.71 |
| 20 | இராஜபாளையம் நகராட்சி | 24 x7 குடிநீர் வழங்கல் திட்டப்பணிகள் | 27.85 |
| 21. | திருவாரூர் நகராட்சி | பாதாள சாக்கடைத் திட்ட விரிவாக்க பணிகள் | 29.46 |

## 2.8 நிதி மேலாண்மை

### 2.8.1 ஆறாவது மாநில நிதிக் குழு

ஆறாவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரையை ஏற்று, மாநிலநிதிக்குழு மானியத்தினை உள்ளாட்சிகளுக்கு பகிர்ந்தளிப்பது தொடர்பாக, அரசாணை (நிலை) எண் 60 நிதித்துறை, நாள் 28.02.2023 பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அரசாணையின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

மாநிலத்தின் மொத்த வரி வருவாயில் 10% உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

நகர்ப்புர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு இடையே 49:51 என்ற விகிதத்தில் நிதி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

நகர்ப்புர பங்கில் 16% பெருநகரத்திற்கு, [பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் வாரியத்திற்கு] பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

84% நகர்ப்புர பங்கு, இதர மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இந்நிதி 31:36:33 என்ற விகிதத்தில் மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக), நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

6வது மாநில நிதிக் குழு, பின்வரும் அளவீடு மற்றும் முக்கியத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி பகிர்வு செய்வதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

## அட்டவணை 2.20

| | மாநகராட்சிகள் (31 விழுக்காடு) | | நகராட்சிகள் (36 விழுக்காடு) | |
|---|---|---|---|---|
| அ | 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு | 65 % | 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு | 60% |
| ஆ | பரப்பளவு | 15% | பரப்பளவு | 20% |
| இ | குடிசைப் பகுதி மக்கள் தொகை | 20% | குடிசைப் பகுதி மக்கள் தொகை | 20% |

## 2022-23 மற்றும் 2023-24ஆம் ஆண்டிற்கான ஆறாவது மாநில நிதிக்குழு சிறப்பு மானியங்கள்

## அட்டவணை 2.21

(ரூ. கோடியில்)

| வ. எண் | திட்டங்கள் | தொகை 2022-23 | தொகை 2023-24 |
|---|---|---|---|
| 1. | தூய்மை பணியாளர்களின் நல வாரியத்திற்கு மானியம் | 10.00 | 10.00 |
| 2. | நூலக வரி முன்பணம் | 60.00 | 66.00 |
| 3 | பொது நூலகத்திற்கு முன்பணமாக அளிக்கப்படும் வரி (Advance Cess) | 90.00 | 99.00 |
| 4 | புவியியல் தகவல்படி வரைவுகள் | 10.00 | 10.00 |
| 5 | படிப்பு மற்றும் ஆவண திரட்டுகளுக்கு | 5.00 | 5.00 |
| 6 | தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் மற்றும் பயிற்சி தேவைகளுக்கு (TNIUS) | 5.00 | 5.00 |
| 7 | சுற்றுலா மானியம் | | |
| | அ) நிலையான மானியம் | 15.00 | 15.00 |
| | ஆ) மாறுதலுக்குட்பட்ட மானியம் | 5.00 | 5.00 |
| 8 | பள்ளிகள் மேம்பாடு | | |
| | அ) உட்கட்டமைப்பு | 100.00 | 110.00 |
| | ஆ) இயக்குதல் மற்றும் பராமரிப்பு | 60.00 | 66.00 |
| 9 | நகர்ப்புர சாலை மேம்பாட்டு நிதி | 200.00 | 220.00 |
| 10 | புதிதாக தோற்றுவிக்கப்பட்ட உள்ளாட்சிகளுக்கான மானியம் | 60.00 | 60.00 |

ஆறாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மற்றும் விடுவிக்கப்பட்ட மானியத் தொகை விவரங்கள் பின்வருமாறு:–

## அட்டவணை 2.22

(ரூ. கோடியில்)

| வகைப்பாடு | 2022–23 | | 2023–24 | |
|---|---|---|---|---|
| **மாநகராட்சிகள்** | **ஒதுக்கீடு** | **விடுவிக்கப் பட்டது** | **ஒதுக்கீடு** | **விடுவிக்கப் பட்டது** |
| மாநில நிதி ஆணைய மானியம் | 1,432.80 | 1,432.80 | 1,586.37 | 1586.37 |
| மூலதன மானியம் | 155.00 | 155.00 | 170.50 | 170.50 |
| இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை | 62.00 | 62.00 | 68.20 | 68.20 |
| **நகராட்சிகள்** | **ஒதுக்கீடு** | **விடுவிக்கப் பட்டது** | **ஒதுக்கீடு** | **விடுவிக்கப் பட்டது** |
| மாநில நிதி ஆணைய மானியம் | 1,663.89 | 1,663.89 | 1842.23 | 1842.23 |
| மூலதன மானியம் | 180.00 | 180.00 | 198.00 | 198.00 |
| இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதி பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை | 72.00 | 72.00 | 79.20 | 79.20 |

**2.8.2 15$^{வது}$ நிதி ஆணையம்**

ஒன்றிய வரி வருவாயினை மாநிலங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே பகிர்வு செய்வது குறித்தான பரிந்துரைகளை வழங்குவதற்காக அரசமைப்புச் சட்டத்தின் 280–வது பிரிவின் கீழ் 15$^{வது}$ ஒன்றிய நிதி ஆணையம் அமைக்கப்பட்டது. இந்நிதி ஆணையத்தின் பரிந்துரைக்காலம் 2020–21 முதல் 2025–26 வரை ஆகும்.

15$^{வது}$ நிதி ஆணையம் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை, 10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்கள் மற்றும் 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட நகரங்கள் என இரண்டாகப் பிரித்துள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிகள் 10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட மாநகராட்சிகளாகும். பிற மாநகராட்சிகள், அனைத்து நகராட்சிகள், பேரூராட்சிகள், வெலிங்டன்

மற்றும் புனித தோமையர் மலை கன்டோன்ட்மன்ட் போர்டுகள் ஆகியவை 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்டவையாகும்.

15வது நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் ஒன்றிய அரசு, 10 லட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்டுள்ள நகர்ப்புர உள்ளாட்சிகளுக்கு நிபந்தனையற்ற (UnTied) மானியம் மற்றும் நிபந்தனையுடன் கூடிய (Tied) மானியம் என இரண்டு பிரிவுகளாக தொகையினை வழங்குகிறது. கன்டோன்மன்ட் போர்டுகளுக்கும் மக்கள் தொகையின் அடிப்படையில் மானியம் வழங்க பரிந்துரைத்துள்ளது. 10 லட்சத்திற்கும் மேற்பட்ட நகரங்களுக்கு காற்றின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் திடக்கழிவு மேலாண்மைக்கு மானியத் தொகை வழங்கப்படுகிறது.

**10 இலட்சத்திற்கும் மேல் மக்கள் தொகை கொண்ட நகரங்கள்**

2022-23-ம் நிதியாண்டில் திடக்கழிவு மேலாண்மை நிதியின் கீழ் ரூ.124.00 கோடி

மதிப்பீட்டில் மொத்தம் 46 பணிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி தவிர) எடுக்கப்பட்டுள்ளன.

2022-23-ம் நிதியாண்டில் காற்றின் தரத்தை மேம்படுத்துதல் தலைப்பின் கீழ், 31 பணிகள் ரூ.27 கோடி மதிப்பீட்டில் (பெருநகர சென்னை மாநகராட்சி தவிர) எடுக்கப்பட்டுள்ளன.

2023-24 ஆம் ஆண்டில், திடக்கழிவு மேலாண்மை நிதியின் கீழ், நீர்நிலைகள் புனரமைப்பு செய்தல், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், குடிநீர் வழங்கல் வாகனங்கள் வாங்குதல் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை வெளி முகமை மூலம் மேற்கொள்ளுதல் போன்ற பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. காற்றின் தரத்தினை மேம்படுத்துதல் தலைப்பின் கீழ், ரூ.24.75 கோடி மதிப்பீட்டில் சாலைகள் மேம்படுத்துதல் போன்ற பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

**10 இலட்சத்திற்கும் கீழ் மக்கள் தொகை கொண்ட நகரங்கள்**

2022-23 ஆம் நிதி ஆண்டில், நிபந்தனையுடன் கூடிய மானியத்தில், ரூ.386.31 கோடி மதிப்பீட்டில் 662 பணிகள் எடுக்கப்பட்டு, 584 பணிகள் முடிக்கப்பட்டு மற்ற பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

2022-23-ம் நிதி ஆண்டில் நிபந்தனையற்ற மானியத்தின் கீழ், ரூ.260.07 கோடி மதிப்பீட்டில் 755 பணிகள் எடுக்கப்பட்டு 692 பணிகள் முடிக்கப்பட்டு பிற பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

2023-24 ஆம் ஆண்டில், நிபந்தனையுடன் கூடிய மானியத்தின் கீழ், ரூ.129 கோடி மதிப்பீட்டில் 216 பணிகள் எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

2023-24 ஆம் ஆண்டின் நிபந்தனையற்ற மானியத்தின் கீழ் ரூ.235 கோடி மதிப்பீட்டில் 279 பணிகள் எடுக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

**2.9 தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர்**

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை திறம்பட செயல்படுத்துவதற்கான திறனை மேம்படுத்தும் நோக்கில், 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூரில் நிறுவப்பட்டது. இப்பயிற்சி மையத்தின் நோக்கங்கள் பின்வருமாறு :

i. நகராட்சி நிர்வாகத்தின் பல்வேறு பிரிவுகளில் நவீன மேலாண்மை நுட்பங்களைப் பயன்படுத்துவதன் அவசியத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
ii. நகராட்சி நிர்வாகம் மற்றும் நகர்ப்புர வளர்ச்சி குறித்த பயிற்சிகள், கருத்தரங்குகள், மாநாடுகள், வெளியீடுகள் மூலமாக அறிவைப் பரப்புதல்.
iii. நகர்ப்புர மேம்பாடு, நகராட்சி நிர்வாகம் மற்றும் அவை சார்ந்த துறைகளில், ஆராய்ச்சிகள் மற்றும் ஆலோசனை மேற்கொள்ளுதல்.
iv. நகர்ப்புர உட்கட்டமைப்பு மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சியினை ஊக்குவித்தல்.

v. மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் வழங்கும் ஆண்டு பங்களிப்புத் தொகை இப்பயிற்சி நிறுவனத்தின் செயல்பாட்டிற்கு முக்கிய நிதி ஆதாரமாக அமைகிறது.

**2.10 முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1–ஆம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில் மாணவர்களுக்கு காலைச் சிற்றுண்டி வழங்கும் சிறப்புத் திட்டம் 15.09.2022 அன்று மதுரை மாநகராட்சியில் துவக்கப்பட்டு, 15 மாநகராட்சிகள் மற்றும் 23 நகராட்சிகளில் செயல்படுத்தப்பட்டது. பின்னர் 25.08.2023ல் விடுபட்டிருந்த 5 மாநகராட்சிகள், 115 நகராட்சிகள் மற்றும் அவற்றின் அருகிலுள்ள 62 பேரூராட்சிகளிலும் விரிவாக்கம் செய்யப்பட்டது. தற்பொழுது 220 நகர்ப்புர உள்ளாட்சிகளில் (மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள்) 2,256 பள்ளிகளில் 2,48,041 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.65.26 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாணவர்களுக்கு தினந்தோறும் காலைச்

சிற்றுண்டி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்தின் செயல்பாடு கைப்பேசி செயலியின் மூலமாக கண்காணிக்கப்படுகிறது.

## அட்டவணை 2.23

### திட்ட செயல்பாடு

| மொத்த உள்ளாட்சிகளின் எண்ணிக்கை | மொத்த சமையற்கூடங்களின் எண்ணிக்கை | அரசாணை (நிலை) எண். 33, நாள். 07. 06. 23 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் உள்ள பள்ளிகள் எண்ணிக்கை | மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை | பேரூராட்சிகளில் உள்ள பள்ளிகள் எண்ணிக்கை | பேரூராட்சிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை | மொத்த பள்ளிகள் எண்ணிக்கை | மொத்த மாணவர்களின் எண்ணிக்கை |
| 220 | 163 | 2039 | 2,30,604 | 217 | 17,437 | 2256 | 2,48,041 |

இத்திட்டத்தினால் அனைத்துப் பள்ளிகளிலும் மாணவர்களின் வருகை அதிகரித்துள்ளது மட்டுமின்றி ஏழை மாணவர்களின் கல்வித்திறன் மேம்பாடு அடைந்துள்ளது. இதன் அடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை முன் மாதிரியாகக் கொண்டு பிற மாநிலங்களிலும் செயல்படுத்த ஆர்வம் காட்டி வருகின்றனர். தினமும் காலை 5.00 மணிக்குள் சமையற் கூடங்களில் உணவு தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டு காலை 6.30 மணிக்குள் உணவு தயார் செய்து முடிக்கப்பட்டு சூடான

வெங்கலனில் நிரப்பப்பட்டு பாதுகாப்பாக பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

· தயார் செய்யப்பட்ட உணவு வெங்கலனில் நிரப்பப்பட்டு, காலை 7.00 மணிக்குள் வாகனம், உணவு சமையற் கூடத்தில் இருந்து புறப்பட்டு காலை 8.30 மணிக்குள் பள்ளி பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்படுகிறது. தினமும் காலை 9 மணிக்குள் மாணவர்களுக்கு உணவு பரிமாறப்படுகிறது.

## 2.11 மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் நிதிநிலை

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் வருவாய் மற்றும் செலவினங்களின் சுருக்கம் அட்டவணை 2.24 மற்றும் 2.25 – இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.24**

| வருவாய் | | | | | | | (ரூ. கோடியில் ) |
|---|---|---|---|---|---|---|---|
| வ.எண் | விவரம் | மாநகராட்சிகள் | | | நகராட்சிகள் | | |
| | | 2021 – 22 | 2022–23 | 2023–24 | 2021 – 22 | 2022–23 | 2023–24 |
| வருவாய் | | | | | | | |
| 1 | வரியினம் | 714.92 | 1,147.62 | 2154.15 | 414.11 | 612.08 | 793.78 |
| 2 | வரியில்லா இனம் | 458.71 | 534.00 | 673.8 | 229.73 | 315.00 | 248.61 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | ஒதுக்கப் பட்ட வருவாய் இனம் | 102.99 | 322.65 | 204.05 | 138.78 | 185.00 | 105.76 |
| 4 | மாநில ஒன்றிய நிதிக்குழு மானியங்கள் | 1,122.20 | 2,237.80 | 2031.23 | 1,140.81 | 1,932.14 | 1493.03 |
| | மொத்தம் | 2,398.91 | 4,242.07 | 5063.59 | 1,923.43 | 3,044.22 | 2575.23 |
| **செலவினம்** | | | | | | | |
| 1 | பணியமைப்பு நிர்வாகம் மற்றும் இயக்குதல் & பராமரித்தல் செலவு | 2,584.11 | 3,968.13 | 4503.72 | 2,137.00 | 2,859.00 | 2222.13 |
| | மொத்தம் | 2,584.11 | 3,968.13 | 4503.72 | 2,137.00 | 2,859.00 | 2222.13 |
| | உபரி/ பற்றாக்குறை | -185.20 | 273.94 | 559,87 | -213.57 | 185.22 | 353.10 |

## அட்டவணை 2.25

| **மூலதனம்** | | | | | **(ரூ.கோடியில்)** | | |
|---|---|---|---|---|---|---|---|
| **வ. எண்** | **விவரம்** | **மாநகராட்சிகள்** | | | **நகராட்சிகள்** | | |
| | | **2021 – 2022** | **2022– 2023** | **2023– 2024** | **2021 – 2022** | **2022– 2023** | **2023– 2024** |
| 1. | மூலதன வருவாய் | 2,275.75 | 2,440.31 | 3817.72 | 714.93 | 1,123.00 | 2178.33 |
| 2. | மூலதன செலவினம் | 2,235.94 | 3,248.24 | 4853.48 | 1,050.57 | 1,848.48 | 2084.16 |

## 2.12 நகராட்சி நிர்வாக இயக்குநரக நிர்வாகத்தின் கீழ் செயல்படும் மாநகராட்சிகள்

### I. மதுரை மாநகராட்சி

மதுரை மாநகராட்சி 01.05.1971 அன்று தோற்றுவிக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 147.99 ச.கி. மீ. 2011– ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 15,73,616 மற்றும் தற்போதைய தோராய மக்கள் தொகை 20,31,266 ஆகும். மதுரை மாநகராட்சியில் 100 வார்டுகள் உள்ளன. நிர்வாக நலனுக்காக மாநகராட்சி 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம், வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய / மாநில அரசு மானியங்கள் உட்பட ரூபாய் 1,147.40 கோடி ஆகும்.

### குடிநீர் வழங்கல்

மாநகரின் நீர் தேவையானது வைகை – I, வைகை – II, காவேரி ஆறு குடிநீர் திட்டங்கள் மற்றும் உள்ளூர் நீர் ஆதாரங்களிலிருந்து 159.15 மில்லியன்

லிட்டர் தண்ணீர் நாள்தோறும் பெறப்படுகிறது. மாநகரின் தினசரி மொத்த குடிநீர்த் தேவை 317.00 மில்லியன் லிட்டர் என்ற நிலையில் ஒரு நாளைக்கு 159.15 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மொத்தமுள்ள 3.01 இலட்சம் வீடுகளில் 1.66 இலட்சம் வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது நடைபெற்று வரும் முல்லைப் பெரியாறு குடிநீர் திட்டப் பணிகள் முடிவடையும் பொழுது மாநகரின் தினசரி குடிநீர் விநியோகம் 317.00 மில்லியன் லிட்டர் என்ற அளவினை எட்டும்.

**பாதாள சாக்கடைத் திட்டம்**

மாநகரில் 170.70 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட 2 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளன. தினந்தோறும் சேகரமாகும் 25 மில்லியன் லிட்டர் கழிவுநீர், சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்படுகிறது. மொத்தமுள்ள 3.01 இலட்சம் வீடுகளில் இதுவரை மொத்தம் 1.67 இலட்சம்

வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 100 வார்டுகளில் 67 வார்டு பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்பாட்டில் உள்ளது. மீதமுள்ள, 33 வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வடக்கு வைகை ஆற்றுப் பகுதி மற்றும் தெற்கு வைகை ஆற்றுப் பகுதி ஆகிய விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தை ரூ. 471.89 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்காக விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பழைய பாதாள சாக்கடை திட்டத்தை புனரமைப்பதற்காக விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது,

**திடக்கழிவு மேலாண்மை**

மாநகரில் தினசரி 750 முதல் 800 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் உருவாகிறது. இதில் ஈரக்கழிவுகள் 60 சதவீதம் ஆகும். ஈரமான கழிவுகளைக் கையாள்வதற்காக 38 நுண்ணுர மையங்களும், உலர்

கழிவுகளை கையாளுவதற்காக 1 வளமீட்பு மையமும் கட்டப்பட்டுள்ளன.

**சாலைகள்**

மாநகரில் மொத்தம் 1686.20 கி.மீ சாலைகள் உள்ளன. பழுதடைந்த சாலைகளை சீரமைக்கும் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2021-22 மற்றும் 2022- 23 ஆம் ஆண்டுகளில் 346.62 கிமீ சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும், 2023-24 ஆம் ஆண்டில் 273.80 கி.மீ சாலைகள், சாலை மேம்பாடு மற்றும் மறுசீரமைப்பு பணிகளுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தெருவிளக்குகள்**

மாநகரில் மொத்தம் 57,877 தெருவிளக்குகள் உள்ளன, மேலும் 2,882 புதிய தெரு விளக்குகள் அமைக்கவும் 7,447 தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றியமைக்கவும் 2023-24 ஆம்

ஆண்டில் திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மாநகராட்சியின் பிரதான நிதி ஆதாரங்கள்**

மாநகராட்சியின் மொத்த சொந்த வருவாய் ரூ.577.40 கோடியில், வசூலிக்கத்தக்க இனங்களான சொத்து வரி – ரூ.307.01 கோடி, காலிமனை வரி ரூ.67.43 கோடி, தொழில் வரி – ரூ.46.50 கோடி, குடிநீர் கட்டணம் ரூ.36.05 கோடி மற்றும் வரி அல்லாத வருமானம் ரூ.120.41 கோடி ஆகியவை மாநகராட்சியின் பிரதான நிதி ஆதாரங்ளாகும்.

**அட்டவணை 2.26**

**நடைபெற்று வரும் முக்கிய பணிகள்**

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | தூய்மை இந்தியா திட்டம்2.0 & 15 வது மாநில குழு | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் உயிரி எரிவாயு முறையில் வெள்ளகல்லில் தேங்கியுள்ள குப்பைகளை அகற்றும் பணி | 34.95 |
| 2 | உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதி 22-23 | வண்டியூர் கண்மாய் மேம்படுத்துதல் மற்றும் அழகுப்படுத்தும் பணி | 50.00 |
| 3 | உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதி 22-23 | மாட்டுத்தாவணி காய்கறி அங்காடி பகுதியில் புதிதாக வெங்காய மார்க்கெட் கட்டும் பணி | 10.30 |

| | | | |
|---|---|---|---|
| 4 | மூலதன மானிய நிதி 22–23 | வார்டு எண்.49ல் அமைந்துள்ள தயிர் மார்க்கெட்டினை மேம்படுத்தும் பணி | 1.53 |
| | | வார்டு எண்.77ல் உள்ள சுப்பிரமணியபுரம் மார்க்கெட் புனரமைக்கும் பணி | 1.99 |
| | | வார்டு எண்.58ல் உள்ள ஆரப்பாளையம் பேருந்து நிலையம் மேம்படுத்தும் பணி | 1.07 |
| | | வார்டு எண்.33ல் உள்ள மாட்டுத்தாவணி எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம் மேம்படுத்தும் பணி | 1.81 |
| | | வார்டு எண்.36ல் அமைந்துள்ள மேலமடை மயானத்தினை மின் மயானமாக மாற்றவும் மற்றும் அடிப்படை வசதிகள் பணி | 2.00 |
| 5 | மூலதன மானிய நிதி 23–24 | வார்டு எண்.31ல் உள்ள ரேஸ்கோர்ஸ் சாலையினை மேம்படுத்துதல் மற்றும் அழகுப்படுத்தும் பணி | 6.30 |
| | | மண்டலம் எண்.3ல் அமைந்துள்ள பெரியார் பேருந்து நிலையத்தில் HT மற்றும் LT கேபிள் அமைக்கும் பணி | 9.12 |
| | | வார்டு எண்.31, 33 மற்றும் 34ல் கரும்பாலை, கே.கே.நகர் மற்றும் எஸ்.எம்.பி காலனி ஆகிய இடங்களில் பாதாள சாக்கடை குழாய் அமைக்கும் பணி | 5.80 |

# அட்டவணை 2.27

**செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள்** **(ரூபாய் கோடியில்)**

| வ.எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | அம்ரூத் 2.0 | வைகை ஆற்றின் வடக்கு பகுதியில் விடுபட்ட பகுதிகள் மற்றும் புதிதாக இணைக்கப்பட்ட வார்டு பகுதிகளில் 5 ஆண்டுகளுக்கு பாதாள சாக்கடை அமைத்தல், செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு பணி | 179.09 |

| | | | |
|---|---|---|---|
| 2 | அம்ரூத் 2.0 | வைகை ஆற்றின் தெற்கு பகுதியில் விடுபட்ட பகுதிகள் மற்றும் புதிதாக இணைக்கப்பட்ட வார்டு பகுதிகளில் 5 ஆண்டுகளுக்கு பாதாள சாக்கடை அமைத்தல், செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு பணி | 292.80 |

| செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள பணிகள் | |
|---|---|
| **வ.எண்** | **பணியின் விவரம்** |
| 1 | பழைய 72 வார்டு பகுதிகளில் பாதாள சாக்கடை புனரமைப்பு பணிக்கான சர்வே நடைபெற்று வருகின்றது. இப்பணி M/s. டாடா கன்சல்டன்சி நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| 2 | மதுரை மாநகராட்சியில் உள்ள 5 மண்டலங்களிலும் புதிதாக மழைநீர் வடிகால் அமைப்பதற்கு சர்வே பணி நடைபெற்று வருகின்றது. இப்பணி ஆர்வி அசோசியேட்ஸ் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| 3 | 250 TPD கட்டிட கழிவுகளை 20 வருடத்திற்கு அகற்றுவதற்கு PPP முறையில் வடிவமைத்தல். கட்டமைத்தல், நிதி மற்றும் இயக்குதல் செய்யும் பணி |

## II. கோயம்புத்தூர் மாநகராட்சி

கோயம்புத்தூர் மாநகராட்சி 01.05.1981 அன்று தோற்றுவிக்கப்பட்டது, மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 257.04 ச.கி.மீ மற்றும் மக்கள் தொகை 2011 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 16,04,925 மற்றும் தற்போதைய மக்கள் தொகை தோராயமாக 22,88,052 ஆகும். நிர்வாக நலனுக்காக மாநகராட்சி 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய / மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.2,523.84 கோடி ஆகும். கோயம்புத்தூர் மாநகராட்சியில் 100 வார்டுகள் உள்ளன.

**குடிநீர் வழங்கல்**

மாநகரின் நீர் ஆதாரமான சிறுவாணி, பில்லூர்–1, பில்லூர்–2, ஆழியார் மற்றும் பவானி ஆறுகளில் இருந்து தினசரி 447.75 மில்லியன் லிட்டர் குடிநீர் எடுக்க திட்டங்கள் வடிவமைக்கப் பட்டுள்ளது. மாநகரின் மொத்த குடிநீர்த் தேவை நாளொன்றுக்கு 308.88 மில்லியன் லிட்டர் மற்றும் ஒரு நாளைக்கு சராசரியாக பெறப்படும் குடிநீர் அளவு 248.03 மில்லியன் லிட்டர் ஆகும். மொத்தம் 3,09,685 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் பில்லூர் – III குடிநீர்த் திட்டம் முழுமையாக பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்ட பிறகு மாநகராட்சிக்கு தினசரி குடிநீர் விநியோகம்

447.75 மில்லியன் லிட்டராக அதிகரித்து குடிநீர்த் தேவை முழுமையாக பூர்த்தியாகும்.

**பாதாள சாக்கடைத் திட்டம்**

மாநகரில் மொத்தம் 200.53 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட 4 கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்பாட்டில் உள்ளன. இதுவரை 1,06,457 பாதாளசாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 100 வார்டுகளில் 38 வார்டு பகுதிகளில் பாதாள சாக்கடை வசதி உள்ளது. மேலும். 47 வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திடக்கழிவு மேலாண்மை**

மாநகரில் நாளொன்றுக்கு உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 950 முதல் 1100 மெட்ரிக் டன் ஆகும். இதில் 605 மெட்ரிக் டன் ஈரக்கழிவுகள் மற்றும் மீதமுள்ளவை உலர்கழிவுகள் ஆகும், ஈரக் கழிவுகளை செயலாக்க 22 நுண்ணுர செயலாக்க மையங்களும்,

உலர்கழிவுகளைக் கையாள 19 வளமீட்பு மையங்களும் உள்ளன.

**சாலைகள்**

மாநகரில் மொத்தம் 3212 கி.மீ சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்டம், நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (NSMT), மாநில நிதிக்குழு சிறப்பு நிதி (SFC) ஆகிய திட்டங்களின் மூலம் 278.12 கிமீ நீளத்திலான 1,636 சாலைப் பணிகள் ரூ.142.76 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 2023-24ஆம் ஆண்டில் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்டம், நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் (NSMT), மாநில நிதிக்குழு சிறப்பு நிதி (SFC) ஆகிய திட்டங்களின் கீழ் 334.46 கி.மீ நீளத்திலான 2108 சாலைப் பணிகள் ரூ.138.54 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

**தெருவிளக்குகள்**

மாநகரில் மொத்தம் 95,423 தெருவிளக்குகள் உள்ளன. 2023 – 24 ஆம் ஆண்டில் 8,759 புதிய LED விளக்குகள் அமைக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டதில், 7,701 புதிய LED தெருவிளக்குகள் SUIDF நிதியின் கீழும், 1,058 LED தெருவிளக்குகள் பொது நிதியின் கீழும் அமைக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**மாநகராட்சியின் பிரதான நிதி ஆதாரங்கள்**

மாநகராட்சியின் மொத்த சொந்த வருவாய் ரூ.1,324.79 கோடியில் வசூலிக்கத்தக்க இனங்களான சொத்துவரி – ரூ.403.31 கோடி, காலிமனைவரி – ரூ.43.32 கோடி, தொழில்வரி – ரூ.45.38 கோடி, குடிநீர்கட்டணம்– ரூ.126.82 கோடி மற்றும் வரி அல்லாத வருமானம் – ரூ.705.96 கோடி ஆகியவை பிரதான நிதி ஆதாரங்களாகும்.

# அட்டவணை 2.28

**நடைபெற்று வரும் முக்கிய பணிகள்** **(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | 15 ஆவது நிதிக்குழு மானியம் 2023 –24 | 11 நகர்ப்புர துணை சுகாதார மையங்கள் கட்டும் பணி | 3.30 |
| 2 | | 4 நகர்ப்புர துணை சுகாதார மையங்கள் கட்டும் பணி | 4.80 |
| 3 | நகர்ப்புர வீடற்றோர் தங்கும் விடுதி 2023–24 | 3 நகர்ப்புர வீடற்றோர் தங்கும் விடுதி கட்டும் பணி | 5.00 |
| 4 | அம்ரூத் 2.0 திட்டம் – 2023 – 24 | ஒண்டிபுதூர் பகுதியில் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாளசாக்கடை இணைப்புகள் வழங்கும் பணி | 1.85 |
| 5 | | சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி, வெள்ளகிணறு பகுதிகளுக்கு பாதாளசாக்கடை திட்டம் அமைக்கும் பணி | 3.18 |
| 6 | அம்ரூத் 2.0 திட்டம் – 2023 – 24 | வார்டு எண்.12க்குட்பட்ட சின்னவேடம்பட்டி குளத்தினை புனரமைப்பு பணி, வார்டு எண்.14க்குட்பட்ட உருமாண்டம்பாளையம் குட்டையினை புனரமைப்பு பணி மற்றும் வார்டுஎண் 74க்குட்பட்ட க.ச.எண்.322 நரசிம்மபதி குளத்தினை புனரமைத்தல் மற்றும் ஏரியின் கரையை பலப்படுத்தி நடைபாதை மற்றும் மின்விளக்குகள் அமைக்கும் பணி | 2.66 |
| 7 | செம்மொழிப் பூங்கா | உலகத்தமிழ் செம்மொழி மாநாட்டை பறைசாற்றும் வகையில் மாணாக்கர்களுக்கு கல்வி, ஆராய்ச்சி, சுற்றுச்சூழல் மேலாண்மை ஆகியவற்றிற்கு பயன் பெறும் வகையிலும், பொதுமக்கள் குழந்தைகளுக்கு சிறந்த பொழுது போக்கிற்கு பயன்பெறும் வகையிலும் முதற்கட்டமாக 45.00 ஏக்கர் நிலப்பரப்பில் பூங்கா அமைத்தல் பணி | 167.25 |

## அட்டவணை 2.29

**செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள் (ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 (நகர்ப்புரம்) திட்டம் | உயிரி அகழ்வு முறையில் வெள்ளலூர் குப்பை கிடங்கு வளாகத்தில் தேங்கியுள்ள 7,43,287 மெட்ரிக்டன் திடக் கழிவை அகற்றும் பணி. | 58.54 |
| 2 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 (நகர்ப்புரம்) திட்டம் | திடக்கழிவு மேலாண்மைப் திட்டத்தில் 250 டிபிடி உயிரி எரிவாயு கலன் அமைத்தல் | 68.79 |
| 3 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 (நகர்ப்புரம்) திட்டம் | கவுண்டம்பாளையம், பீளமேடு மற்றும் உக்கடம் ஆகிய பகுதிகளில் குப்பை மாற்று நிலையங்கள் அமைத்தல் | 27.00 |

## அட்டவணை 2.30

**செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள பணிகள்**

| வ. எண் | பணியின் விபரம் |
|---|---|
| 1 | உக்கடம் பேருந்துநிலையம் அருகே நெடுஞ்சாலை துறையினரால் அமைக்கப்பட்டு வரும் மேம்பாலத்தால் அகற்றப்பட்ட பேருந்து நிலையத்தினை ரூ 20.00 கோடி மதிப்பீட்டில் நவீனமுறையில் கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 14.03.2024 அன்றுஅறிவிக்கப்பட்டுள்ளது. |
| 2 | ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் விளையாட்டுத்திடல் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 14.03.2024 அன்றுஅறிவிக்கப்பட்டுள்ளது. |

**III. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 01.06.1994 அன்று தோற்றுவிக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 167.23 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 9,15,569 மற்றும் தற்போதைய மக்கள் தொகை தோரயமாக 10,81,234 ஆகும். மாநகராட்சியில் 65 வார்டுகள் உள்ளன. நிர்வாக நலனுக்காக மாநகராட்சி 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம், வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய / மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.1,023.15 கோடி ஆகும்.

**குடிநீர் வழங்கல்**

மாநகரின் குடிநீர் விநியோகத்திற்கு, மாநகராட்சியின் 8 நீர் ஆதாரங்கள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 3 ஆதாரங்கள் ஆகியவற்றிலிருந்து தினசரி 156 மில்லியன் லிட்டர்

தண்ணீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் தினசரி மொத்த குடிநீர் தேவை 146 மில்லியன் லிட்டர். மொத்தமுள்ள 2,73,538 வீடுகளில் 1,20,541 வீடுகளுக்கு 146 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

**பாதாள சாக்கடைத் திட்டம்**

மாநகரில் 58.64 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று உள்ளது. தினசரி உருவாகும் 55 மில்லியன் லிட்டர் கழிவுநீர், சுத்திகரிக்கப்பட்டு கோரையாற்றில் விடப்படுகிறது. 2,73,538 வீடுகளில் இதுவரை மொத்தம் 67,033 வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 65 வார்டுகளில் 15 வார்டுகளில் முழுமையாகவும் மீதமுள்ள 49 வார்டுகளில் பகுதியாகவும் அம்ரூத் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் 8 வார்டுகளில் முழுமையாக பாதாள சாக்கடை திட்டப்

பணிகள் செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

**திடக்கழிவு மேலாண்மை**

மாநகரில் தினசரி உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 470 முதல் 500 மெட்ரிக் டன் ஆகும். இதில் 280 மெட்ரிக் டன் ஈரக் கழிவுகள் மற்றும் மீதமுள்ளவை உலர் கழிவுகள் ஆகும். ஈரமான கழிவுகளை இறுதியாக்கம் செய்வதற்கு 40 நுண்ணுர செயலாக்க மையங்களும், உலர் கழிவுகளைக் கையாள 5 வளமீட்பு மையங்களும் செயல்பட்டு வருகிறது.

**சாலைகள்**

மாநகரில் மொத்தம் 1,352.811 கி.மீ சாலைகள் உள்ளன. 2021–22 மற்றும் 2022–23 ஆம் ஆண்டில் 447.91 கி.மீ சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும் 2023–24 ஆம் ஆண்டில் 350.67 கி.மீ மற்றும் 2024–25 ஆம் ஆண்டில் 152.78 கி.மீ சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## தெருவிளக்குகள்

மாநகரில் மொத்தம் 44,170 தெருவிளக்குகள் உள்ளன. 2023-24 ஆம் ஆண்டில் மேலும் 6,264 புதிய LED விளக்குகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## மாநகராட்சியின் பிரதான நிதி ஆதாரங்கள்

மாநகராட்சியின் மொத்த சொந்த வருவாய் ரூ.396.28 கோடியில் வசூலிக்கத்தக்க இனங்களான சொத்து வரி – ரூ.116.00 கோடி, காலிமனை வரி – ரூ.7.00 கோடி, தொழில் வரி – ரூ.18.00 கோடி, குடிநீர் கட்டணம் – ரூ.32.00 கோடி மற்றும் வரி அல்லாத வருமானம் – ரூ.223.28 கோடி ஆகியவை பிரதான நிதி ஆதாரங்களாகும்.

### அட்டவணை 2.31

**நடைபெற்று வரும் முக்கிய பணிகள் (ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | அம்ரூத் பகுதி 2 திட்டம் 2016-17 | மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கான பாதாளச் சாக்கடைப் பணிகள் (தொகுப்பு – II) 284.464 கி.மீ நீளம் | 377.29 |

| | | | |
|---|---|---|---|
| 2 | அம்ரூத் பகுதி 3 திட்டம் 2017–18 | மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கான பாதாளச் சாக்கடைப் பணிகள் (தொகுப்பு – III) 292.900 கி.மீ நீளம் | 335.07 |
| 3 | சீர்மிகு நகரத் திட்டம் 2016–2024 | வரையறுக்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் ( தொகுப்பு –அ) | 70.76 |
| 4 | | வரையறுக்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் ( தொகுப்பு –ஆ) | 62.03 |
| 5 | | வரையறுக்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் ( தொகுப்பு –இ) | 77.51 |
| 6 | | குடிநீர் பணிகள் – பெரியார் நகர், கம்பரசம்பேட்டை நீர்சேகரிப்பு கிணற்றில் புதிதாக நீள்சுற்று வட்டக் குழாய்கள் அமைத்தல், புதிதாக மோட்டார் பம்பு செட் மற்றும் டீசல் ஜெனரேட்டர் அமைத்தல் (தொகுப்பு எண்.1) | 9.33 |
| 7 | சீர்மிகு நகரத் திட்டம் 2016–2024 | குடிநீர் பணிகள் – பெரியார் நகர் கம்பரசம்பேட்டையிலுள்ள நீர் சேகரிப்பு கிணற்றிலிருந்து, அபிவிருத்தி சார்ந்த பகுதிகளில் (ABD Area) உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு புதிதாக 17.50 கி.மீட்டருக்கு குடிநீர் உந்து குழாய் பதித்தல் (தொகுப்பு எண்.3) | 22.49 |
| 8 | உட்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி நிதி 2022–2023 | தொகுப்பு –1– ஒருங்கிணைந்த பேருந்து முனையம் கட்டும் பணி மற்றும் பல்வகை பயன்பாடுகள் மற்றும் வசதிகளுக்கான மையம் கட்டும் பணி | 243.78 |
| 9 | | தொகுப்பு – 2– கனரக சரக்கு வாகன முனையம் கட்டும் பணி மற்றும் சாலைகள், மழைநீர் வடிகால் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள். | 106.20 |
| 10 | | மாரிஸ் தியேட்டர் அருகில் உள்ள இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி | 34.10 |
| 11 | மூலதன மானிய நிதி 2022–23 | ஸ்ரீரங்கம் பேருந்து நிலையம் கட்டும் பணி | 11.10 |
| 12 | அம்ரூத் 2.0 2023–24 | பஞ்சப்பூரில் புதிதாக 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி | 226.35 |

## அட்டவணை 2.32

**செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள்**

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | அம்ருத் 2.0 | விடுப்பட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் பணி (தொகுப்பு IV) | 230.61 |
| 2 | அம்ருத் 2.0 | வார்டு எண்.51,52,53,54,55 மற்றும் 56-க்குட்பட்ட பகுதிகளில் பரீட்சார்த்த முறையில், 24x7 குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோக பணிகளை மேற்கொள்ளுதல். | 38.49 |
| 3 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 2023-24 | திடக்கழிவுகளை திறம்பட கையாள 100 MT கொள்ளளவுடைய உயிரி எரிவாயு கலன் அமைக்கும் பணி | 30.78 |

## அட்டவணை 2.33

**செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள பணிகள்**

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | பஞ்சப்பூர் முதல் கோணக்கரை கரூர் புறவழி சாலை வரை, கோணக்கரை மற்றும் உய்ய கொண்டான் வாய்க்கால் கிழக்கு கரை பகுதியில் புறவழி சாலை அமைக்கும் பணி. | 350.50 |
| 2 | பஞ்சப்பூர் பகுதியில் ஒருங்கிணைந்த மார்க்கெட் அமைக்கும் பணி. | 161.70 |

**IV.திருநெல்வேலி மாநகராட்சி**

திருநெல்வேலி மாநகராட்சி 01.06.1994 அன்று தோற்றுவிக்கப்பட்டது, மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 108.65 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 4,74,838 மற்றும் தற்போதைய தோராய மக்கள் தொகை 5,54,522. மாநகராட்சியில் 55 வார்டுகள் உள்ளன. நிர்வாக நலனுக்காக மாநகராட்சி 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம், வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.247.58 கோடி ஆகும்.

**குடிநீர் வழங்கல்**

மாநகரின் குடிநீர் விநியோகத்திற்கு 15 தலைமை குடிநீரேற்று நிலையங்களிலிருந்து தினசரி 48 மில்லியன் லிட்டர் நீரும் அரியநாயகிபுரம் குடிநீர் திட்டத்திலிருந்து தினசரி 25 மில்லியன் லிட்டர் நீரும் எடுக்கப்படுகிறது. மாநகரின் தினசரி

மொத்த குடிநீர்த் தேவை 72.90 மில்லியன் லிட்டர். ஒரு நாளுக்கான மொத்த குடிநீர் விநியோக அளவு 73 மில்லியன் லிட்டர் ஆகும். மொத்தமுள்ள 1,69,453 வீடுகளில், 85,609 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**பாதாள சாக்கடைத் திட்டம்**

மாநகரில் 24.2 மில்லியன் லிட்டர் திறனுள்ள 1 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது. தினசரி 12.00 மில்லியன் லிட்டர் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு வருகின்றது. மொத்தமுள்ள 1,69,453 வீடுகளில் இதுவரை மொத்தம் 27,212 பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 55 வார்டுகளில் 10 வார்டுகளில் முழுமையாக பாதாள சாக்கடை வசதி உள்ளது. மேலும் 1 முதல் 37 வரை, 39 முதல் 55 வரை மற்றும் 38 ஆம் வார்டில் பகுதியாக பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திடக்கழிவு மேலாண்மை**

மாநகரில் தினசரி உருவாகும் மொத்த திடக் கழிவுகள்–200 முதல் 230 மெட்ரிக் டன் வரை ஆகும். இதில், 133 மெட்ரிக் டன் ஈரக் கழிவுகள் மற்றும் மீதமுள்ளவை உலர் கழிவுகள். ஈரமான கழிவுகளை இறுதியாக்கம் செய்ய 47 நுண்ணுர மையங்களும், உலர் கழிவுகளைக் கையாள 4 வள மீட்பு மையங்களும் செயல்பட்டு வருகின்றன.

**சாலைகள்**

மாநகரில் மொத்தம் 935.66 கி.மீ சாலைகள் உள்ளன. இதில், 807.53 கி.மீ. மாநகராட்சி சாலைகள் மற்றும் 112.65 கி.மீ. மாநில நெடுஞ்சாலைகள் ஆகும்.

2022–23 ஆம் ஆண்டுகளில் 93.99 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. 2023–24 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட 87.57 கி.மீ சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 2024–25

ஆம் ஆண்டில் 72.71 கி.மீ சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளன.

**தெருவிளக்குகள்**

மாநகரில் மொத்தம் 31,214 தெரு விளக்குகள் உள்ளன. 2023-24 ஆம் ஆண்டில் மேலும் 1,968 புதிய LED விளக்குகள் அமைக்கப்படவுள்ளன.

**மாநகராட்சியின் பிரதான நிதி ஆதாரங்கள்**

மாநகராட்சியின் மொத்த சொந்த வருவாய் ரூ.192.22 கோடியில், வசூலிக்கத்தக்க இனங்களான சொத்துவரி – ரூ.89.95 கோடி, காலிமனை வரி, ரூ.18.69 கோடி, தொழில் வரி – ரூ.14.92 கோடி, குடிநீர் கட்டணம் ரூ.28.92 கோடி, வரி அல்லாத வருமானம் ரூ.20.70 கோடி மற்றும் திடக்கழிவு மேலாண்மை கட்டணம் ரூ.19.04 கோடி ஆகியவை பிரதான நிதி ஆதாரங்களாகும்.

## அட்டவணை 2.34

**நடைபெற்று வரும் முக்கிய பணிகள்** **(ரூபாய் கோடியில்)**

| வ.எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | 15வது மத்திய நிதிக்குழு மானியம் (2021–22) | 26 குடிநீர் பணிகள், 3 திரவ எரிவாயு தகன மேடைகள், 2 வடிகால் பணிகள், 1 சுற்றுச்சுவர் கட்டும் பணி, 9 திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் 4 தார்ச்சாலை அமைக்கும் பணிகள் | 42.70 |
| 2 | அம்ரூத் திட்டம் 2016 –2017 | பாதாள சாக்கடை திட்டப் பணிகள் (தொகுப்பு I மற்றும் II) | 960.03 |
| 3 | தேசிய நகர்ப்புர சுகாதார இயக்கம் 2023–24 | 2 நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையம் மற்றும் 5 நகர்ப்புர சுகாதார துணை மையம் கட்டும் பணிகள் | 3.90 |

## அட்டவணை 2.35

**செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள்** **(ரூபாய் கோடியில்)**

| வ.எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | 15 வது மத்திய நிதிக்குழு கட்டப்படாத மானியம் 2023–24 | 84 சாலைகள் அமைக்கும் பணி | 7.92 |

## அட்டவணை 2.36

**செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள பணிகள்**

| வ.எண் | பணியின் விபரம் |
|---|---|
| 1 | அம்ரூத் 2.0 திட்டம் 2023 – 24 திட்டத்தின் கீழ் ரூ.28.25 கோடி மதிப்பீட்டில் 24 X 7 குடிநீர் விநியோக பணி |
| 2 | ஜெர்மன் வங்கி மேம்பாட்டு நிதி உதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புர மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.91.91 கோடி மதிப்பீட்டில் இராமையன்பட்டி உரக்கிடங்கு வளாகத்தில் 58.00 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி |

**V. சேலம் மாநகராட்சி**

சேலம் மாநகராட்சி 01.06.1994 அன்று தோற்றவிக்கப்பட்டது, மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 91.34 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 8,29,267 மற்றும் தற்போதைய தோராய மக்கள் தொகை 10,83,506. மாநகராட்சியில் 60 வார்டுகள் உள்ளன. நிர்வாக நலனுக்காக மாநகராட்சி 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம், வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/ மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.436.02 கோடி ஆகும்.

**குடிநீர் வழங்கல்**

மாநகரின் குடிநீர் ஆதாரமாக காவிரி ஆறு உள்ளது. 148.00 மில்லியன் லிட்டர் நீரும் தினசரி காவிரி ஆற்றிலிருந்து எடுக்கப்பட்டு பொது மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. மாநகரின் தினசரி மொத்த குடிநீர் தேவை 146.28 மில்லியன் லிட்டர்

நாளொன்றுக்கான மொத்த குடிநீர் விநியோக அளவு 144.50 மில்லியன் லிட்டர் ஆகும். மொத்தமுள்ள 2,09,953 வீடுகளில் 1,16,437 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**பாதாள சாக்கடைத் திட்டம்**

மாநகரில் 98 மில்லியன் லிட்டர் திறனுள்ள 4 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளன. தினசரி உருவாகும் 46 மில்லியன் லிட்டர் கழிவுநீர், சுத்திகரிக்கப்பட்டு திருமணிமுத்தாற்றில் விடப்படுகிறது. மொத்தமுள்ள 84,222 வீடுகளில் இதுவரை மொத்தம் 13,365 பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 60 வார்டுகளில் 18 வார்டுகளில் பாதாள சாக்கடை வசதி உள்ளது. மேலும் 9 வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திடக்கழிவு மேலாண்மை**

மாநகரில் தினசரி உருவாகும் மொத்த திடக்கழிவுகள்– 500 முதல் 550 மெட்ரிக் டன் வரை

ஆகும். இதில் 319 மெட்ரிக் டன் ஈரக் கழிவுகள் மற்றும் மீதமுள்ளவை உலர் கழிவுகள். ஈரமான கழிவுகளை இறுதியாக்கம் செய்ய 29 நுண்ணுர மையங்களும், உலர் கழிவுகளைக் கையாள 5 வளமீட்பு மையங்களும் செயல்பட்டு வருகின்றன.

**சாலைகள்**

மாநகரில் மொத்தம் 1,040 கி.மீ சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 163.269 கிமீ சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. 2023-24 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட 145.280 கி.மீ சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளன.

**தெருவிளக்குகள்**

மாநகரில் மொத்தம் 42,349 தெருவிளக்குகள் உள்ளன 2023-24 ஆம் ஆண்டில் மேலும் 800 புதிய LED விளக்குகள் அமைக்கப்படவுள்ளன.

## மாநகராட்சியின் பிரதான நிதி ஆதாரங்கள்

மாநகராட்சியின் மொத்த சொந்த வருவாய் ரூ.130.32 கோடியில், வசூலிக்கத்தக்க இனங்களான சொத்து வரி – ரூ.71.45 கோடி, காலி மனை வரி ரூ.2.20 கோடி, தொழில் வரி – ரூ.12.51 கோடி, குடிநீர் கட்டணம் ரூ.23.65 கோடி, வரி அல்லாத வருமானம் ரூ.20.51 கோடி ஆகியவை பிரதான நிதி ஆதாரங்களாகும்.

### அட்டவணை 2.37

**நடைபெற்று வரும் முக்கிய பணிகள்** **(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | தேசிய நகர்ப்புர சுகாதார திட்டம் – 2023 – 24 | 17 நகர்ப்புர சுகாதார நல மையங்கள் கட்டும் பணிகள் | 7.20 |
| 2 | பள்ளி மேம்பாட்டு மானிய நிதி | பள்ளிகள் மேம்படுத்துதல் பணி | 12.03 |
| 3 | இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி திட்டம் – 2023–24 | தனிக்குடிநீர் திட்டத்தின் நீரேற்றும் நிலையத்திற்கு மோட்டார்கள் பொருத்தும் பணிகள் | 2.40 |
| 4 | சுகாதாரம் மற்றும் சுகாதார உணவு தெருக்கள் மானியம் | உணவுத் தெரு ( Food Street ) அமைக்கும் பணி | 3.00 |

| | | | |
|---|---|---|---|
| 5 | உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி | மூக்கனேரி, போடிநாயக்கன்பட்டி ஏரி மற்றும் அல்லிக்குட்டை ஆகிய 3 ஏரிகளை அழகுபடுத்தும் பணிகள் | 52.00 |
| 6 | உங்கள்தொகுதியில் முதல்வர் (2023-24) | சேலம் வடக்கு, சேலம் மேற்கு மற்றும் சேலம் தெற்கு சட்டமன்ற தொகுதிகளில் நீண்ட காலமாக தீர்வு காணப்படாமல் ,இருந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் 8 எண்ணிக்கையிலான பணிகள் | 22.97 |
| 7 | 15வது நிதிகுழு ஆணையம் 2023-24 | அல்லிக்குட்டை ஏரியின் உபரி நீர் கொண்டு செல்லும் கால்வாய் அமைக்கும் பணி | 1.77 |
| 8 | அம்ருத் 2.0 | குமரகிரி ஏரியில் 1 எம்எல்டி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி | 4.63 |
| 9 | மூலதன நிதி - 2023-24 | மூக்கனேரியில் இருந்து வெளியேறும் உபரி நீரை திருமணிமுத்தாற்றில் கொண்டு செல்லும் கால்வாய் அமைக்கும் பணி | 11.07 |
| 10 | திடக்கழிவு மேலாண்மை | திடக்கழிவு மேலாண்மை பணிக்காக (செறிவூட்டப்பட்ட உயிரி எரிவாயு ஆலை ) அமைத்து பராமரிக்கும் பணி | 57.00 |

## அட்டவணை 2.38

**செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள் (ரூபாய் கோடியில்)**

| வ.எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | அம்ருத் 2.0 | மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தை செயல்படுத்துதல் | 548.00 |

## அட்டவணை 2.39

**செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள பணிகள்** **(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் 24X7 குடிநீர் மேம்பாடு நிர்வாக அனுமதி பெறப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. | 758.13 |

### VI. ஈரோடு மாநகராட்சி

ஈரோடு மாநகராட்சி 01.01.2008 அன்று தோற்றுவிக்கப்பட்டது, மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 109.52 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 4,98,121 மற்றும் தற்போதைய தோராய மக்கள் தொகை 5,86,602. மாநகராட்சியில் 60 வார்டுகள் உள்ளன. நிர்வாக நலனுக்காக மாநகராட்சி 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம், வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய /

மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ. 650.37 கோடி ஆகும்.

**குடிநீர் வழங்கல்**

மாநகரின் குடிநீர் ஆதாரமாக காவிரி ஆறு விளங்குகிறது. காவிரி ஆற்றிலிருந்து தினசரி 105 மில்லியன் லிட்டர் நீரும் எடுக்கப்படுகிறது. மாநகரின் தினசரி மொத்த குடிநீர்த் தேவை 79.19 மில்லியன் லிட்டர். ஒரு நாளைக்கான மொத்த குடிநீர் விநியோக அளவு 79.19 மில்லியன் லிட்டர் ஆகும். மொத்தமுள்ள 1,69,912 வீடுகளில் 1,05,000 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**பாதாள சாக்கடைத் திட்டம்**

நகரில் 50.55 மில்லியன் லிட்டர் திறனுள்ள 1 கழிவுநீர் சத்திகரிப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது. தினசரி உருவாகும் 25 மில்லியன் லிட்டர் கழிவுநீர், சுத்திகரிக்கப்பட்டு பெரும்பள்ளம் ஓடையில் விடப்படுகிறது. மொத்தமுள்ள 1,69,912 வீடுகளில்

இதுவரை மொத்தம் 79,398 பாதாள சாக்கடைத் திட்ட இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 60 வார்டுகளில் 53 வார்டுகளில் பாதாள சாக்கடை வசதி உள்ளது. மேலும் 7 வார்டுகளில் பாதாள சாக்கடை அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு கலந்தாலோசகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

**திடக்கழிவு மேலாண்மை**

மாநகரில் உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 196 முதல் 236 மெட்ரிக் டன் வரை ஆகும். இதில் 90 மெட்ரிக் டன் ஈரக் கழிவுகள் மற்றும் மீதமுள்ளவை உலர் கழிவுகள். ஈரமான கழிவுகளை இறுதியாக்கம் செய்ய 24 நுண்ணுர செயலாக்க மையங்களும், உலர் கழிவுகளைக் கையாள 2 வளமீட்பு மையங்களும் உள்ளன.

**சாலைகள்**

மாநகரில் மொத்தம் 841.01 கி.மீ சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23ஆம் ஆண்டுகளில் 90.16 கிமீ சாலை சீரமைப்புப் பணிகள்

நடைபெற்றுள்ளன. 2023–24 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட 240.14 கி.மீ சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

**தெருவிளக்குகள்**

மாநகரில் மொத்தம் 23,881 தெருவிளக்குகள் உள்ளன. 2023–24 ஆண்டில் மேலும் 5,431 புதிய LED விளக்குகள் அமைக்கப்படவுள்ளன.

**மாநகராட்சியின் பிரதான நிதி ஆதாரங்கள்**

மாநகராட்சியின் மொத்த சொந்த வருவாய் ரூ.290.90 கோடியில், வசூலிக்கத்தக்க இனங்களான சொத்து வரி – ரூ.70.18 கோடி, காலி மனை வரி ரூ.16.10 கோடி, தொழில் வரி – ரூ.6.75 கோடி, குடிநீர் கட்டணம் ரூ.75.52 கோடி, வரி அல்லாத வருமானம் ரூ.122.35 கோடி ஆகியவை பிரதான நிதி ஆதாரங்களாகும்.

## அட்டவணை 2.40

| நடைபெற்று வரும் முக்கிய பணிகள் (ரூபாய் கோடியில்) | | | |
|---|---|---|---|
| **வ. எண்** | **திட்டத்தின் பெயர்** | **பணியின் விபரம்** | **மதிப்பீட்டு தொகை** |
| 1 | உட்கட்டமைப்பு வசதிகள் நிதி | சோலார் புதூர் பகுதியில் புதிய பேருந்துநிலையம் அமைக்கும் பணி | 63.50 |

## அட்டவணை 2.41

| செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள் (ரூபாய் கோடியில்) | | | |
|---|---|---|---|
| **வ. எண்** | **திட்டத்தின் பெயர்** | **பணியின் விபரம்** | **மதிப்பீட்டு தொகை** |
| 1 | அம்ருத் 2.0 | ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட 6 வார்டுகளில் பரீட்சார்த்த முறையில் 24X7 குடிநீர் விநியோகம் செய்யும் பணி | 21.93 |
| 2 | உட்கட்டமைப்பு வசதிகள் நிதி | சக்தி சாலையில் கனிராவுத்தன்குளம் பகுதியில் ஒரு புதிய பேருந்துநிலையம் அமைக்கும் பணி | 144.38 |

## அட்டவணை 2.42

| செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள பணிகள் | |
|---|---|
| வ. எண் | பணியின் விபரம் |
| 1 | சோலார் புதூர் பகுதியில் ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மொத்த காய்கறி, கனிகள் மற்றும் மளிகை சந்தை வளாகம் அமைத்தல் |
| 2 | ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் வ.உ.சி. பூங்காவினை உலகத்தரம் வாய்ந்த சுற்றுச்சூழல் பூங்காவாக மேம்படுத்துதல் பணி. |
| 3 | ரூ.30.00 கோடியில் ஈரோடு மாநகராட்சி பகுதியில் காவேரி ஆற்று முகப்பினை மேம்படுத்துதல் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் |

### VII. திருப்பூர் மாநகராட்சி

திருப்பூர் மாநகராட்சி 01.01.2008 அன்று தோற்றுவிக்கப்பட்டது, மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 159.35 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 8,77,778 மற்றும் தற்போதைய தோராய மக்கள் தொகை 13,99,700. மாநகராட்சியில் 60 வார்டுகள் உள்ளன. நிர்வாக நலனுக்காக மாநகராட்சி 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் சராசரி

ஆண்டு வருமானம், வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய / மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.1,301.06 கோடி ஆகும்.

**குடிநீர் வழங்கல்**

திருப்பூர் மாநகராட்சி பகுதியில் மக்களுக்கு தினசரி தேவைப்படும் குடிநீர் அளவு 189 மில்லியன் லிட்டராகும். ஆனால், தற்சமயம் இரண்டாவது குடிநீர் திட்டத்தில் தினசரி சராசரியாக 20 மில்லியன் லிட்டர், மற்றும் மூன்றாவது குடிநீர் திட்டத்தின் மூலம் 90 மில்லியன் லிட்டர் மற்றும் நான்காவது குடிநீர் திட்டத்தின் மூலம் சுமார் 40 மில்லியன் லிட்டர் ஆக மொத்தம் 150 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறப்படுகிறது. தினசரி தோராயமாக 107 மில்லியன் லிட்டர் நீரும் வழங்கப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 2,68,904 வீடுகளில் 2,04,784 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**பாதாள சாக்கடைத் திட்டம்**

மாநகரில் 2008 முதல் 135 கி.மீ நீளத்திற்கு பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் 15 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையம் பயன்பாட்டில் செயல்பட்டு வருகிறது. இதுவரை மொத்தம் 14,638 பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது அம்ரூத் திட்டத்தின் கீழ் சுமார் 542 கி.மீ நீளத்திற்கு பாதாள சாக்கடை அமைக்கும் பணி ரூ.636.40 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் 57,835 வீட்டு இணைப்புகள் வழங்கும் பணி நடைபெற்று வருகின்றது. மூன்று சுத்திகரிப்பு நிலையங்களில் 20 மற்றும் 36 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளன. 15 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது.

மொத்தமுள்ள 60 வார்டுகளில் 48 வார்டுகளில் பகுதி மற்றும் முழுமையாக பாதாள சாக்கடை வசதி உள்ளது. திருப்பூர் மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்கு அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.179.74 கோடி மதிப்பீட்டில் 16,708 வீட்டு இணைப்புகள் மூலம் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. மொத்தமுள்ள 2,68,904 வீடுகளில் ஏற்கனவே உள்ள மற்றும் நடைபெற்று வரும் திட்டங்களின் மூலம் 30,916 பாதாள சாக்கடைத் திட்ட இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**திடக்கழிவு மேலாண்மை**

மாநகரில் தினசரி உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 480 முதல் 770 மெட்ரிக் டன் ஆகும். இதில் 315 மெட்ரிக் டன் ஈரக் கழிவுகள் மற்றும் மீதமுள்ள 455 மெட்ரிக் டன் உலர் கழிவுகள். ஈரமான கழிவுகளை இறுதியாக்கம் செய்ய 26 நுண்ணுர மையங்களும், உலர் கழிவுகளைக் கையாள 6 வளமீட்பு மையங்களும்

உள்ளன. 10 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட உயிரி எரிவாயு மையம் செயல்பாட்டில் உள்ளது.

**சாலைகள்**

மாநகரில் மொத்தம் 1,523.69 கி.மீ சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 336.31 கி.மீ சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. 2023-24 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட 401.88 கி.மீ சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளன.

**தெருவிளக்குகள்**

திருப்பூர் மாநகராட்சி பகுதியில் 35,950 தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வரப்படுகின்றன. தற்போது 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2022-23ன் கீழ் ரூ.17.51 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக 13,436 புதிய LED விளக்குகள் அமைக்க பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மொத்த தெருவிளக்குகளின் எண்ணிக்கை 43,631. இதில் 4,755 சோடியம் ஆவி விளக்குகளில் 1,956 எல்.இ.டி விளக்குகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 8,681 புதிய எல்.இ.டி விளக்குகள் பொருத்த திட்டமிடப்பட்டதில் 1,155 LED விளக்குகள் அமைக்கப்படவுள்ளன.

**மாநகராட்சியின் பிரதான நிதி ஆதாரங்கள்**

மாநகராட்சியின் மொத்த சொந்த வருவாய் ரூ.146.31 கோடியில், வசூலிக்கத்தக்க இனங்களான சொத்து வரி – ரூ.103.96 கோடி, காலி மனை வரி ரூ.4.31 கோடி, தொழில் வரி – ரூ.4.25 கோடி, குடிநீர் கட்டணம் ரூ.20.69 கோடி, வரி அல்லாத வருமானம் ரூ.13.10 கோடி ஆகியவை பிரதான நிதி ஆதாரங்களாகும்.

## அட்டவணை 2.43

**நடைபெற்று வரும் முக்கிய பணிகள்** **(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதி – 2022–23 | திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட கோயில்வழி பகுதியில் புதிதாக பேருந்து நிலையம் கட்டுதல் | 26.00 |
| 2 | உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதி – 2023–24 | புதிய பாலம் கட்டும் பணி | 36.36 |
| 3 | பள்ளி மேம்பாட்டு மானிய நிதி – 2022–23 | வகுப்பறை கட்டடம் கட்டும் பணி | 13.36 |
| 4 | தேசிய நகர்ப்புர சுகாதார திட்டம் 2023–24 | புதிய நகர்ப்புர துணை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி | 9.28 |

# அட்டவணை 2.44

**செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள்** **(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 2023-2024 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தானியங்கி மறு சுழற்சி மையம் அமைத்தல் | 29.75 |
| 2 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 2023-2024 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் உயிரி எரிவாயு மையம் அமைத்தல் | 58.04 |
| 3 | அம்ருத் 2.0 -2023-24 | திருப்பூர் மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை அமைத்தல் (மண்டலம் 11, 11.1 மற்றும் 11.3) பணி (60 மாதங்கள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி உட்பட) | 192.95 |
| | | திருப்பூர் மாநகராட்சியில் சுமார் 1,25,000 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் கூடிய மாநகராட்சி மைய அலுவலக கட்டிடம் கட்டுதல். | 40.00 |

| | | | |
|---|---|---|---|
| | | மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 13/03/2024 அன்று திருப்பூர் மாவட்டத்திற்கான அறிவிப்பின் கீழ் அறிவிக்கப்பட்ட பி.என்.ரோடு நல்லாற்றில் – பொம்மநாயக்கன்பாளையம் முதல், போயம்பாளையம் சாலை வரை புதிய பாலங்கள் கட்டுதல். | 7.00 |
| | | மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 13.03.2024 அன்று திருப்பூர் மாவட்டத்திற்கான அறிவிப்பின் கீழ் அறிவிக்கப்பட்ட பிச்சம்பாளையம் மெயின் சாலை முதல் ராஜா நகரை இணைக்கும் நல்லாற்றில் மேம்பாலம் கட்டுதல். | 4.50 |

## VIII. தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி 05.08.2008 அன்று தோற்றுவிக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 90.66 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 3,72,408 மற்றும் தற்போதைய தோராய மக்கள் தொகை 4,90,362. மாநகராட்சியில் 60 வார்டுகள் உள்ளன. நிர்வாக நலனுக்காக மாநகராட்சி 4 மண்டலங்களாக

பிரிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம், வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.212.16 கோடி ஆகும்.

**குடிநீர் வழங்கல்**

மாநகரின் குடிநீர் ஆதாரமான தாமிரபரணி ஆற்றிலிருந்து தினசரி 68.00 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் தினசரி மொத்த குடிநீர்த் தேவை 66.20 மில்லியன் லிட்டர், விநியோக அளவு 63.10 மில்லியன் லிட்டர் ஆகும். மொத்தமுள்ள 1,55,455 வீடுகளில் 91,079 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**பாதாள சாக்கடைத் திட்டம்**

மாநகரில் 28 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. தினசரி உருவாகும் 7 மில்லியன் லிட்டர் கழிவுநீர், சுத்திகரிக்கப்பட்டு கௌசிக மகாநதி ஆறு மற்றும் மியாவாக்கி காடுகளில் விடப்படுகிறது. மொத்தமுள்ள

1,55,455 வீடுகளில் இதுவரை 16,122 பாதாள சாக்கடைத் திட்ட இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 60 வார்டுகளில் 24 வார்டுகளில் பாதாள சாக்கடை வசதி உள்ளது. மேலும் 13 வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திடக்கழிவு மேலாண்மை**

மாநகரில் தினசரி உருவாகும் மொத்த திடக்கழிவுகள்–170 முதல் 180 மெட்ரிக் டன் ஆகும். இதில், 97 மெட்ரிக் டன் ஈரக் கழிவுகள் மற்றும் மீதமுள்ளவை உலர் கழிவுகள். ஈரமான கழிவுகளை இறுதியாக்கம் செய்ய 17 நுண்ணுர செயலாக்க மையங்களும், உலர் கழிவுகளைக் கையாள 1 வளமீட்பு மையமும் செயல்பட்டு வருகிறது.

**சாலைகள்**

மாநகரில் மொத்தம் 691.98 கி.மீ சாலைகள் உள்ளன. 2021–22 மற்றும் 2022–23 ஆம் ஆண்டில் 144.85 கி.மீ சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன.

மேலும், 2023–24 ஆம் ஆண்டில் 146.14 கி.மீ சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளன.

**தெருவிளக்குகள்**

மாநகரில் மொத்தம் **18,266** தெருவிளக்குகள் உள்ளன. 2023–24 ஆம் ஆண்டில் மேலும் **2,887** புதிய LED விளக்குகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாநகராட்சியின் பிரதான நிதி ஆதாரங்கள்**

மாநகராட்சியின் மொத்த சொந்த வருவாய் ரூ.117.33 கோடியில், வசூலிக்கத்தக்க இனங்களான சொத்து வரி – ரூ.54.26 கோடி, காலிமனை வரி – ரூ.11.07 கோடி. தொழில் வரி – ரூ.10.80 கோடி, குடிநீர் கட்டணம் – ரூ.35.63 கோடி மற்றும் வரி அல்லாத வருமானம் – ரூ.5.57 கோடி ஆகியவை பிரதான நிதி ஆதாரங்களாகும்.

## அட்டவணை 2.45

**நடைபெற்று வரும் முக்கிய பணிகள்** **(ரூபாய் கோடியில்)**

| **வ. எண்** | **திட்டத்தின் பெயர்** | **பணியின் விபரம்** | **மதிப்பீட்டு தொகை** |
|---|---|---|---|
| 1 | சீர்மிகு நகர திட்டம் | பாதாளச் சாக்கடை அமைக்கும் பணி, குடிநீர் பணிகள், சோலார் மேற்கூரை அமைக்கும் பணி மற்றும் பாதாளச்சாக்கடை வீட்டிணைப்பு வழங்கும் பணி | 199.27 |
| 2 | அம்ரூத் 2.0 | பாதாளச் சாக்கடை திட்டப் பணி (விடுப்பட்ட பகுதிகளுக்கு) | 152.14 |
| 3 | ஆசிய மேம்பாட்டு வங்கி நிதி | மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் 36.36 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால் பணிகள் அமைக்கும் பணி | 82.98 |
| 4 | மாநில பேரிடர் மேலாண்மை நிதி | சங்கரபேரி பகுதியில் மழைநீர் வடிகால் பணிகள் அமைக்கும் பணி | 12.00 |
| 5 | உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி 2022-2023 | 43.57 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால் பணிகள் அமைக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டதில் 40.58 கி.மீ நீளத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. | 45.19 |
| 6 | பள்ளி மேம்பாட்டு மானிய நிதி | மாநகராட்சி பள்ளிகளை சீரமைக்கும் பணி. | 2.48 |

| | | | |
|---|---|---|---|
| 7 | தேசிய சுகாதார திட்டம் 2023-2024 (15வது நிதிக்குழு மானிய நிதி) | ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கூடுதல் கட்டிடம் மற்றும் துணை மையம் அமைக்கும் பணி. | 3.38 |
| 8 | மூலதன மானிய நிதி 2023-2024 | வல்லநாடு தலைமை நீரேற்று நிலையப் பகுதியில் நடைபாதை மேம்பாலம் அமைக்கும் பணி | 8.60 |

## அட்டவணை 2.46

**செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள் (ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | அம்ரூத் 2.0 | குடிநீர் பணிகள் 24x7 (குடிநீர் திட்டம்) | 16.06 |
| 2 | தூய்மை இந்தியா இயக்கம் 2.0 | கட்டுமானப் பொருட்கள் மீட்பு மையம் மற்றும் நுண்ணுர செயலாக்க மையத்தின் கட்டுமானம் | 6.00 |

## அட்டவணை 2.47

**செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள பணிகள் (ரூபாய் கோடியில்)**

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ் நான்காவது இரயில்வே கேட் LC No 432 மேம்பாலம் அமைக்கும் பணி | 95.00 |

**IX.வேலூர் மாநகராட்சி**

வேலூர் மாநகராட்சி 01.08.2008 அன்று தோற்றுவிக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 87.915 ச.கி.மீ. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 5,04,079 மற்றும் தற்போதைய தோராய மக்கள் தொகை 6,57,842. மாநகராட்சியில் 60 வார்டுகள் உள்ளன. நிர்வாக நலனுக்காக மாநகராட்சி 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ. 223.08 கோடி ஆகும்.

**குடிநீர் வழங்கல்**

மாநகரின் குடிநீர் விநியோகத்திற்காக 11 நீர் ஆதாரங்களில் இருந்து, 62 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் தினசரி மொத்த குடிநீர்த் தேவை 61.50 மில்லியன் லிட்டர் என்ற நிலையில் ஒரு நாளைக்கு 61.50 மில்லியன் லிட்டர்

குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மொத்தமுள்ள 1,49,261 வீடுகளில், 63,401 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**பாதாள சாக்கடைத்திட்டம்**

மொத்தமுள்ள 60 வார்டுகளில் 14 வார்டுகளில் பாதாள சாக்கடை வசதி உள்ளது. மேலும் 34 வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 10.28 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட ஒரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. 7.50 மில்லியன் லிட்டர் கழிவுநீர் உற்பத்தி செய்யப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட பின்னர் ரங்காபுரத்தில் உள்ள வேலவாடி ஏரியில் வெளியேற்றப்படுகிறது. மொத்தமுள்ள 1,49,261 வீடுகளில் இதுவரை மொத்தம் 4,990 பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**திடக்கழிவு மேலாண்மை**

மாநகரில் தினசரி உருவாகும் திடக்கழிவு 241 மெட்ரிக் டன் ஆகும். இதில் 128 மெட்ரிக் டன்

ஈரக் கழிவுகள் மற்றும் 113 மெட்ரிக் டன் உலர்கழிவுகள் ஆகும். ஈரமான கழிவுகளைச் இறுதியாக்கம் செய்வதற்கு 50 நுண்ணுர மையங்களும், உலர் கழிவுகளை செயலாக்க ஒரு வளமீட்பு மையமும் செயல்பட்டு வருகிறது.

**சாலைகள்**

மாநகரில் 565 கிமீ சாலைகள் உள்ளது. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டில் 120 கிமீ சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. 2023-24 ஆம் ஆண்டிற்கு 87 கிமீ சாலைப் பணிகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தெருவிளக்குகள்**

மாநகரில் 28,600 தெருவிளக்குகள் உள்ளன. மேலும் 2023-24 ஆம் ஆண்டில் 653 புதிய LED தெருவிளக்குகள் அமைக்க முன் மொழியப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாநகராட்சியின் நிதி ஆதாரம்**

மாநகராட்சியின் மொத்த சொந்த வருவாய் ரூ.147.62 கோடியில் வசூலிக்கத்தக்க இனங்களான சொத்துவரி – ரூ.64.41 கோடி, காலி மனை வரி – ரூ.8.91 கோடி, தொழில்வரி – ரூ.10.94 கோடி, குடிநீர் கட்டணம் – ரூ.39.13 கோடி மற்றும் வரி அல்லாத வருமானம் ரூ.24.23 கோடி ஆகியவை மாநகராட்சியின் பிரதான நிதி ஆதாரங்களாகும்.

**அட்டவணை 2.48**

**நடைபெற்று வரும் முக்கிய பணிகள்** **(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | துய்மை இந்தியா திட்டம் 2.0 | இத்திட்டத்தின் கீழ் சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பொதுக் கழிப்பிடங்கள், 10 திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் | 3.65 |
| 2 | மாநில நிதிக்குழு 2023 2024 | பள்ளிகளில் புதிய வகுப்பறைகள் கட்டவும், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் 32 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது | 6.26 |

| | | | |
|---|---|---|---|
| 3 | 15வது நிதிக்குழு திட்டம் | இத்திட்டத்தின் கீழ் 87 மழைநீர் வடிகால் பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 8 குடிநீர் பணிகள் நடைபெற்று வருகிறது. | 47.95 |

## அட்டவணை 2.49

| செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள் (ரூபாய் கோடியில்) | | | |
|---|---|---|---|
| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை |
| 1 | துய்மை இந்தியா திட்டம் (நகரம்) 2.0 | சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பொதுக் கழிப்பிடங்கள், திடக்கழிவு மேலாண்மை அமைக்க 24 பணிகளுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது | 9.76 |
| 2 | அம்ரூத் 2.0 | 24X7 குடிநீர் வழங்கும் திட்டம் | 13.69 |

## X. தஞ்சாவூர் மாநகராட்சி

தஞ்சாவூர் மாநகராட்சி 19.02.2014 அன்று தோற்றுவிக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 36.31 ச.கி.மீ. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,22,943 மற்றும் தற்போதைய தோராய மக்கள் தொகை 2,69,450. மாநகராட்சியில் 51 வார்டுகள் உள்ளன. நிர்வாக நலனுக்காக மாநகராட்சி 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின்

சராசரி ஆண்டு வருமானம், வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.345.00 கோடி ஆகும்.

**குடிநீர் வழங்கல்**

மாநகரின் நீர் ஆதாரமான கொள்ளிடம் ஆற்றிலிருந்து 27.50 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் தினசரி மொத்த குடிநீர்த் தேவை 30.05 மில்லியன் லிட்டர் குடிநீர் தேவை 27.50 மில்லியன் லிட்டர் விநியோக அளவு ஆகும். மொத்தமுள்ள 56,836 வீடுகளில் 30,213 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**பாதாள சாக்கடை திட்டம்**

மாநகரில் 28.05 மில்லியன் லிட்டர் திறனுள்ள ஒரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது. தினசரி 18 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு சமுத்திரம் ஏரியில் விடப்படுகிறது. மொத்தமுள்ள 56,836 வீடுகளில் இதுவரை மொத்தம் 28,016 பாதாள சாக்கடை இணைப்புகள்

வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 51 வார்டுகளில் பாதாள சாக்கடை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், விடுபட்ட இடங்களுக்கு சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

**திடக்கழிவு மேலாண்மை**

மாநகரில் தினசரி உருவாகும் மொத்த திடக்கழிவுகள்– 97 முதல் 107 மெட்ரிக் டன் வரை ஆகும். இதில் 64.2 மெட்ரிக் டன் ஈரக் கழிவுகள் மற்றும் மீதமுள்ளவை உலர் கழிவுகள். ஈரமான கழிவுகளை இறுதியாக்கம் செய்ய 12–நுண்ணுர செயலாக்க மையங்களிலும் நுண்ணுயிர் உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**சாலைகள்**

மாநகரில் மொத்தம் 365.266 கி.மீ சாலைகள் உள்ளன. 2021–22 மற்றும் 2022–23 ஆம் ஆண்டுகளில் 47.94 கி.மீ சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 2023–24 ஆம்

ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட 96.30 கி.மீ சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2024 – 25 ஆம் ஆண்டில் 10.122 கி.மீ சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தெருவிளக்குகள்**

மாநகரில் மொத்தம் 13,998 தெருவிளக்குகள் உள்ளன. மேலும் 2023–24 ஆம் ஆண்டில் 13,421 புதிய LED தெருவிளக்குகள் அமைக்க முன்மொழியப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாநகராட்சியின் பிரதான நிதி ஆதாரங்கள்**

மாநகராட்சியின் மொத்த சொந்த வருவாய் ரூ38.35 கோடியில், வசூலிக்கத்தக்க இனங்களான சொத்து வரி – ரூ.16.91 கோடி, காலி மனை வரி – ரூ.1.13 கோடி, தொழில் வரி – ரூ.3.80 கோடி, குடிநீர் கட்டணம் ரூ.2.66 கோடி மற்றும் வரி அல்லாத வருமானம் ரூ.13.85 கோடி ஆகியவை பிரதான நிதி ஆதாரங்களாகும்.

## அட்டவணை 2.50

**நடைபெற்று வரும் முக்கிய பணிகள்** **(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | நமக்கு நாமே திட்டம் 2022-23 | முப்பத்திரண்டு எண்ணிக்கையிலான பல்வேறு பணிகள் | 10.03 |
| 2 | நமக்கு நாமே திட்டம் 2023-24 | மூன்று எண்ணிக்கையிலான பல்வேறு பணிகள் | 1.86 |
| 3 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 2022-23 | ஐந்து இடங்களில் MRF கிடங்கு அமைக்கும் பணி | 4.25 |
| 4 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 2023-24 | பதினான்கு எண்ணிக்கையிலான கழிவறைகள் அமைக்கும் பணி | 3.06 |
| 5 | தேசிய நகர்ப்புர சுகாதார திட்டம் 2022-2023 | ஏழு துணை சுகாதார கட்டடங்கள் அமைக்கும் பணி | 2.70 |
| 6 | பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு மானிய நிதி -2022-23 | நான்கு பள்ளிக்கூட கட்டடப்பணிகள் | 4.33 |

## XI. திண்டுக்கல் மாநகராட்சி

திண்டுக்கல் மாநகராட்சி 19.02.2014 அன்று தோற்றுவிக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 14.01 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,07,225 மற்றும்

தற்போதைய தோராய மக்கள் தொகை 2,49,944. மாநகராட்சியில் 48 வார்டுகள் உள்ளன. நிர்வாக நலனுக்காக மாநகராட்சி 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம், வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய / மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.148.00 கோடி ஆகும்.

**குடிநீர் வழங்கல்**

மாநகரின் நீர் ஆதாரமான ஆத்தூர் காமராஜர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து தினசரி 15.00 மில்லியன் லிட்டர் நீரும், காவேரி கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்து (CWSS) தினசரி 5.00 மில்லியன் லிட்டராக மொத்தம் 20.00 மில்லியன் லிட்டராக என்ற அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 52,550 வீடுகளில், 32,359 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**பாதாள சாக்கடைத் திட்டம்**

மாநகரில் 13.65 மில்லியன் லிட்டர் திறனுள்ள கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையம் உள்ளது. தினசரி உருவாகும் 4.00 மில்லியன் லிட்டர் கழிவுநீர், சுத்திகரிக்கப்பட்டு குடகனாற்றில் விடப்படுகிறது. மொத்தமுள்ள 19,420 வீடுகளில் இதுவரை மொத்தம் 12,989 பாதாள சாக்கடைத் திட்ட இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 48 வார்டுகளில், 13 வார்டுகளில் முழுமையாகவும் 13 வார்டுகளில் பகுதியாகவும் ஆக மொத்தம் 26 வார்டுகளில் பாதாள சாக்கடை வசதி உள்ளது. மேலும் 22 வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ள TNCRUDP திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திடக்கழிவு மேலாண்மை**

மாநகரில் தினசரி உருவாகும் மொத்த திடக் கழிவுகள் 92 மெட்ரிக் டன் ஆகும். இதில் 46 மெட்ரிக் டன் ஈரக் கழிவுகள் மற்றும் மீதம் உள்ளவை உலர்

கழிவுகள். ஈரமான கழிவுகளை இறுதியாக்கம் செய்ய 9 நுண்ணுர மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் 10 நுண்ணுர செயலாக்க மையங்கள் விரைவில் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும். உலர் கழிவுகளைக் கையாள 3 வள மீட்பு மையங்கள் உள்ளன.

**சாலைகள்**

மாநகரில் மொத்தம் 266.92 கி.மீ நீளத்திற்கு சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 46.47 கி.மீ சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும் 2023-24 ஆம் ஆண்டில் 13.60 கி.மீ சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளன.

**தெருவிளக்குகள்**

மாநகரில் மொத்தம் 6,577 தெருவிளக்குகள் உள்ளன. 2023-24 ஆம் ஆண்டில் மேலும் 869 புதிய LED விளக்குகள் அமைக்கப்படவுள்ளன.

**மாநகராட்சியின் பிரதான நிதி ஆதாரங்கள்**

மாநகராட்சியின் மொத்த சொந்த வருவாய் ரூ.72.32 கோடியில், வசூலிக்கத்தக்க இனங்களான சொத்துவரி – ரூ.19.82 கோடி, காலிமனை வரி– ரூ.0.16 கோடி, தொழில் வரி – ரூ.1.51 கோடி, குடிநீர் கட்டணம் – ரூ.7.03 கோடி வரி அல்லாத வருமானம் – ரூ.43.80 கோடி ஆகியவை பிரதான நிதி ஆதாரங்களாகும்.

## அட்டவணை 2.51

**நடைபெற்று வரும் முக்கிய பணிகள்** **(ரூபாய் கோடியில்)**

| வ . எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | தூய்மை இந்தியா இயக்கம் 2022–23 | முருகபவனம் உரங்கிடங்கில் உயிரி அகழ்வு முறையில் கூடுதல் திடக்கழிவுகள் அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. | 7.45 |
| 2 | மூலதன மானிய நிதி 2021– 22 | வாரச்சந்தை கடைகள் கட்டும் பணி (ரூ.5.00 கோடி மற்றும் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில்), பாரதிபுரம் இரும்பு கடைகள் கட்டும் பணி (ரூ.5.00 கோடி மதிப்பீட்டில்) முடிவுறும் தருவாயில் உள்ளது | 15.00 |
| 3 | மூலதன மானிய நிதி 2022–23 | 37.914 கி.மீ நீளமுள்ள மழைநீர் வடிகால்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது | 19.68 |
| 4 | மாநில நிதிக் குழு திட்டம் 2022–23 – பள்ளிகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் | 9 மாநகராட்சி பள்ளிகளில் மராமத்து பணிகள் மற்றும் 10 மாநகராட்சி பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது | 5.11 |

## அட்டவணை 2.52

| செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள் (ரூபாய் கோடியில்) | | | |
|---|---|---|---|
| **வ. எண்** | **திட்டத்தின் பெயர்** | **பணியின் விபரம்** | **மதிப்பீட்டு தொகை** |
| 1 | தமிழ்நாடு தட்பவெப்ப நிலையைத் தாங்கும் நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் | விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத்திட்டம் அமைத்தல். ரூ.13,063.60 இலட்சம் 2) 14.60 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் ரூ.3755.00 இலட்சம் | **168.18** |
| 2 | அம்ருத் 2.0 | குடிநீர் மண்டலம் 2 மற்றும் 10க்கு உட்பட்ட பகுதிகளில் பரீட்சார்த்த முறையில் 24x7 குடிநீர் வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. | 9.67 |

## அட்டவணை 2.53

**செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள பணிகள்**

| வ. எண் | பணியின் விபரம் |
|---|---|
| 1 | மாநகரின் புறநகர் பகுதியில் புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு விரிவான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகிறது. |

## XII. ஓசூர் மாநகராட்சி

ஓசூர் மாநகராட்சி 28.02.2019 அன்று தோற்றுவிக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 72.41 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை

கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,45,354 மற்றும் தற்போதைய தோராய மக்கள் தொகை 3,79,720. மாநகராட்சியில் 45 வார்டுகள் உள்ளன. நிர்வாக நலனுக்காக மாநகராட்சி 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம், வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய / மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.113.28 கோடி ஆகும்.

**குடிநீர் வழங்கல்**

மாநகரின் நீர் ஆதாரமான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்து 13.00 மில்லியன் லிட்டர் நீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் தினசரி மொத்த குடிநீர்த் தேவை 35.00 மில்லியன் லிட்டர். ஒரு நாளுக்கான மொத்த குடிநீர் விநியோக அளவு 27.00 மில்லியன் லிட்டர் ஆகும். மொத்தமுள்ள 1,08,491 வீடுகளில் 39,671 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**பாதாள சாக்கடை திட்டம்**

அரசாணை (நிலை) எண்.143 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 08.11.2023–ன் மூலம் ரூ.582.54 கோடிக்கு பாதாள சாக்கடை திட்டப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு தொழில்நுட்ப கூர்ந்தாய்வில் உள்ளது.

**திடக்கழிவு மேலாண்மை**

மாநகரில் தினசரி உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 113 முதல் 118 மெட்ரிக் டன் வரை ஆகும். இதில் 47 மெட்ரிக் டன் ஈரக் கழிவுகள் மற்றும் மீதமுள்ளவை உலர் கழிவுகள். ஈரமான கழிவுகளை இறுதியாக்கம் செய்ய 11 நுண்ணுர மையங்களும், உலர் கழிவுகளை கையாள 6 வளமீட்பு மையமும் உள்ளன.

**சாலைகள்**

மாநகரில் மொத்தம் 539.60 கி.மீ சாலைகள் உள்ளன. 2021–22 மற்றும் 2022–23 ஆம்

ஆண்டுகளில் 42.17 கி.மீ சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும் 2023-24 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட 31.97 கி.மீ சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளன.

**தெருவிளக்குகள்**

மாநகரில் மொத்தம் 13,234 தெரு விளக்குகள் உள்ளன. 2023-24 ஆம் ஆண்டில் மேலும் 3,000 புதிய LED விளக்குகள் அமைக்கப்படவுள்ளன. மாநில நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி 2022-23ன் கீழ் ஏற்கனவே உள்ள தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றும் பணி ரூ.10.44 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

**மாநகராட்சியின் பிரதான நிதி ஆதாரங்கள்**

மாநகராட்சியின் மொத்த சொந்த வருவாய் ரூ.55.37 கோடியில், வசூலிக்கத்ததக்க இனங்களான சொத்து வரி – ரூ.38.34 கோடி, காலிமனை வரி ரூ.3.60 கோடி, தொழில் வரி – ரூ.6.87 கோடி, குடிநீர் கட்டணம் ரூ.5.94 கோடி வரி அல்லாத வருமானம்

ரூ.0.62 கோடி ஆகியவை பிரதான நிதி ஆதாரங்களாகும்.

## அட்டவணை 2.54

**நடைபெற்று வரும் முக்கிய பணிகள் (ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி 2022-23 | மோரனப்பள்ளியில் புதியதாக பேருந்து நிலையம் கட்டுதல் பணி | 33.00 |
| 2 | மாதிரி நகரம் 2020-21 | கல்கேரி ஏரி, கர்னூர் ஏரி, அந்திவாடி ஏரி மற்றும் இராமநாயக்கன் ஏரிகளை மேம்படுத்துதல் பணி | 33.98 |
| 3 | மூலதன மானிய நிதி 2021-22 | புதியதாக வணிக வளாகம் கட்டும் பணி | 29.36 |
| 4 | தேசிய நகர்ப்புர சுகாதார திட்டம் 2022-23 | எஸ்.பி.எம் காலனியில் நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி | 1.20 |
| 5 | நமக்கு நாமே திட்டம் 2021-22 | சிப்காட் ஏரியில் மேம்பாட்டு பணி | 4.50 |
| 6 | நமக்கு நாமே திட்டம் 2023-24 | பல்வேறு உட்கட்டமைப்பு பணிகள் | 1.35 |
| 7 | 15 வது நிதிக்குழு 2023-24 | தார்சாலைகளை சீரமைத்தல் பணி, மழைநீர் வடிகால் அமைத்தல் பணி | 4.32 |
| 8 | பள்ளி மேம்பாட்டு மானிய நிதி பராமரிப்பு பணி 2023-24 | துவக்கப்பள்ளிகளில் உணவு உண்ணும் கூடம் புதிய வகுப்பறை கட்டடம் அமைக்கும் பணிகள். | 7.25 |

## அட்டவணை 2.55

**செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள்      (ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | அம்ரூத் 2.0 2022-23 | பாதாள சாக்கடை திட்டம் | 582.54 |

## அட்டவணை 2.56

**செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள பணிகள்      (ரூபாய் கோடியில்)**

| வ. எண் | பணியின் விபரம் |
|---|---|
| 1 | தூய்மை இந்தியா திட்டம் 2.0ன் கீழ் ரூ. 3.19 கோடி திட்ட மதிப்பீட்டில் தாசேப்பள்ளி உரக்கிடங்கில் உயிரி எரிவாயு பணி மேற்கொள்ளப்பட உள்ளது. |
| 2 | ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் திட்டம், பூங்காக்கள் மேம்பாடு செய்தல் மற்றும் நீர்நிலைகள் மேம்பாடு செய்தல் ஆகிய பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. |

## XIII. நாகர்கோவில் மாநகராட்சி

நாகர்கோவில் மாநகராட்சி 01.03.2019 அன்று தோற்றுவிக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 63.15 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,89,916 மற்றும் தற்போதைய தோராய மக்கள் தொகை 4,22,759. மாநகராட்சியில் 52 வார்டுகள் உள்ளன. நிர்வாக நலனுக்காக மாநகராட்சி 4 மண்டலங்களாக

பிரிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம், வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசுமானியங்கள் உட்பட ரூ.87.47 கோடி ஆகும்.

**குடிநீர் வழங்கல்**

மாநகரின் நீர் ஆதாரமான முக்கடல் அணையிலிருந்து 21 மில்லியன் லிட்டர் நீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் மொத்த குடிநீர்த் தேவை 24.00 மில்லியன் லிட்டர், ஒரு நாளுக்கான மொத்த குடிநீர் விநியோக அளவு 24.00 மில்லியன் லிட்டர் ஆகும். மொத்தமுள்ள 1,02,630 வீடுகளில் 47,170 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**பாதாள சாக்கடைத்திட்டம்**

மாநகரில் 17.77 மில்லியன் லிட்டர் திறனுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 1,02,630 வீடுகளில் இதுவரை மொத்தம் 15,575 பாதாள சாக்கடை திட்ட இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 52 வார்டுகளில் 18

வார்டுகளில் முழுமையாகவும் 17 வார்டுகளில் பகுதியாகவும் பாதாளசாக்கடை திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

**சாலைகள்**

மாநகரில் மொத்தம் 905.491 கி.மீ சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23ஆம் ஆண்டுகளில் 108.51 கி.மீ சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. 2023-24 ஆம் ஆண்டில் 180.15 கி.மீ சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

**தெருவிளக்குகள்**

மாநகரில் மொத்தம் 19,891 தெருவிளக்குகள் உள்ளன. மேலும் 2023-24 ஆம் ஆண்டில் 1,046 எண்ணிக்கையிலான புதிய LED விளக்குகள் 15வது மத்திய நிதிக்குழு திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ளன.

**மாநகராட்சியின் பிரதான நிதி ஆதாரங்கள்**

மாநகராட்சியின் மொத்த சொந்த வருவாய் ரூ.77.73 கோடியில் வசூலிக்கத்தக்க இனங்களான சொத்து வரி ரூ.50.68 கோடி, காலிமனை வரி ரூ.3.70 கோடி, தொழில்வரி ரூ.7.90 கோடி, குடிநீர் கட்டணம் ரூ.6.73 கோடி வரி அல்லாத வருமானம் ரூ.8.72 கோடி ஆகியவை பிரதான நிதி ஆதாரங்களாகும்.

## அட்டவணை 2.57

**நடைபெற்று வரும் முக்கிய பணிகள்** **(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | தூய்மை இந்தியா திட்டம் 18–19 | மாநகராட்சி வலம்புரிவிளை உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள குப்பைகளை உயிரி எரிவாயு முறையில் அகற்றும் பணி | 10.07 |
| 2 | தேசிய நகர்ப்புர சுகாதார திட்டம் | வார்டு 28, வடிவீஸ்வரம் மற்றும் வார்டு 3, பெருவிளை (கிறிஸ்டோபர் காலனி) பகுதிகளில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டும் பணிகள் | 2.40 |
| 3 | அம்ரூத் 2.0 | குளங்கள் மேம்பாட்டு பணிகள் | 1.50 |
| 4 | பிரதான் மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம் | வார்டு 41, வட்டவிளை பகுதியில் பல்நோக்கு கட்டடம் கட்டும் பணி | 1.40 |
| 5 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 | 4 கழிப்பறைகள் அமைக்கும் பணி | 1.23 |

## அட்டவணை 2.58

**செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள் (ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | அம்ரூத் 2.0 2023-24 | ஆளுர் மற்றும் தெங்கம்புதூர் பகுதிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் 7 நாட்களுக்கு 24 மணி நேரமும் குடிநீர் வழங்கும் பணி | 64.68 |
| 2 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 | எரிவாயு திட்டம் DBFOT முறையில் அமைக்கும் பணிகள், மீட்டெடுப்பு வசதி மையம் அமைக்கும் பணி மற்றும் பொது கழிப்பிடம் அமைக்கும் பணி | 21.77 |

## அட்டவணை 2.59

**செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள பணிகள் (ரூபாய் கோடியில்)**

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | வடசேரி பேருந்து நிலையம் மற்றும் வடசேரி கனகமூலம் சந்தையினை ஒருங்கிணைத்து புதிதாக நவீன பேருந்து நிலையம் அமைத்திட விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசின் ஒப்புதல் மற்றும் நிதி ஆதாரம் பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. | 35.54 |
| 2 | விடுப்பட்ட மற்றும் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்திட விரிவான திட்ட அறிக்கை தயார்செய்யப்பட்டுவருகிறது. | 542.40 |

## XIV. ஆவடி மாநகராட்சி

ஆவடி மாநகராட்சி 17.06.2019 அன்று தோற்றுவிக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 65.00 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 3,45,996 மற்றும் தற்போதைய தோராய மக்கள் தொகை 5,63,343. மாநகராட்சியில் 48 வார்டுகள் உள்ளன. நிர்வாக நலனுக்காக மாநகராட்சி 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம், வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய / மாநில அரசு மானியங்கள் உட்பட ரூபாய் 106.04 கோடி ஆகும்.

### குடிநீர் வழங்கல்

மாநகரின் புழல் ஏரியிலிருந்து மெட்ரோ திட்டத்தின் மூலம் 4 மில்லியன் லிட்டர் உட்பட, உள்ளூர் நீர் ஆதாரத்திலிருந்து மொத்தம் 21 மில்லியன் லிட்டர் குடிநீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் தினசரி மொத்த குடிநீர்த் தேவை 76.05

மில்லியன் லிட்டர் ஒரு நாளைக்கான மொத்த குடிநீர் விநியோக அளவு 21 மில்லியன் லிட்டர் ஆகும். மொத்தமுள்ள 82,557 வீடுகளில் 4,777 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**பாதாள சாக்கடைத்திட்டம்**

மாநகரில் 36 மில்லியன் லிட்டர் மற்றும் 4 மில்லியன் லிட்டர் திறனுள்ள 2 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. தினசரி உருவாகும் 8 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு கூவம் ஆற்றில் விடப்படுகிறது. மொத்தமுள்ள 82,557 வீடுகளில் இதுவரை மொத்தம் 7,855 பாதாள சாக்கடை திட்ட இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 48 வார்டுகளில் 44 வார்டுகளில் பகுதியாக பாதாள சாக்கடை வசதி உள்ளது. மேலும் விடுப்பட்டுள்ள வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திடக்கழிவு மேலாண்மை**

மாநகரில் தினசரி உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 180.74 மெட்ரிக் டன் ஆகும். இதில் 90.37 மேட்ரிக் டன் ஈரக் கழிவுகள் மற்றும் மீதமுள்ளவை உலர் கழிவுகள் ஆகும். ஈரமான கழிவுகளை இறுதியாக்கம் செய்ய 15 நுண்ணுயிர் பசுமை உரக்குடில்கள், உலர் கழிவுகளைக் கையாள 1 வளமீட்பு மையமும் உள்ளன. மேலும் 2 பொருட்கள் மீட்பு மையங்கள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

**சாலைகள்**

மாநகரில் மொத்தம் 718.68 கி.மீ சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 70.48 கிமீ சாலைப் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. 2023-24 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட 10.11 கி.மீ சாலைப் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

## தெருவிளக்குகள்

மாநகரில் மொத்தம் 21,538 தெருவிளக்குகள் உள்ளன. 2023–24 ஆம் ஆண்டில் மேலும் 4,445 எண்ணிக்கையிலான புதிய LED விளக்குகள் அமைக்கப்படவுள்ளன.

## மாநகராட்சியின் பிரதான நிதி ஆதாரங்கள்

மாநகராட்சியின் மொத்த சொந்த வருவாய் ரூ.36.73 கோடியில், வசூலிக்கத்தக்க இனங்களான சொத்து வரி ரூ.25.30 கோடி, காலிமனை வரி ரூ.5.21 கோடி, தொழில் வரி ரூ.4.41 கோடி, குடிநீர் கட்டணம் ரூ.1.08 கோடி வரி அல்லாத வருமானம் ரூ.0.73 கோடி ஆகியவை பிரதான நிதி ஆதாரங்களாகும்.

### அட்டவணை 2.60

**நடைபெற்று வரும் முக்கிய பணிகள்** **(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | மாநில பேரிடர் நிவாரண நிதி 2023–24 | 10 மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி | 30.61 |
| 2 | தேசிய நகர்ப்புர சுகாதாரத் திட்டம் 2021–22 மற்றும் 2022–23 | 3 புதிய நகர்ப்புர சுகாதார நிலைய கட்டடங்கள் கட்டும் பணி | 3.60 |
| 3 | 15 வது நிதிக்குழு ஆணையம் 2023–24 | புதிய நகர்ப்புர சுகாதார நிலைய கட்டடம் கட்டும் பணி மற்றும் புதிய சாலைகள் அமைக்கும் பணி. | 9.09 |

| | | | |
|---|---|---|---|
| 4 | தேசிய நகர்ப்புர சுகாதாரத் திட்டம் 2023-24 | 9 புதிய துணை மற்றும் கூடுதல் நகர்ப்புர சுகாதார நிலைய கட்டடங்கள் கட்டும் பணி | 3.20 |
| 5 | நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி 2022-23 | 18292 எண்ணிக்கையிலான மின் விளக்குகளை LED மின்விளக்குகளாக மாற்றி பொருத்துதல் பணி, 4445 எண்ணிக்கை புதிய LED விளக்குகள் பொருத்துதல் பணி | 22.10 |

## அட்டவணை 2.61

**செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள் (ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | அம்ருத் 2.0 | விடுபட்டுள்ள பகுதிகளுக்கு குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை வீட்டு இணைப்பு, பிரதான மற்றும் பகிர்மான குழாய்கள் பதித்தல் பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உள்ளது. | 151.03 |

## XV. தாம்பரம் மாநகராட்சி

தாம்பரம் மாநகராட்சி 03.11.2021 அன்று தோற்றுவிக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 87.64 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 7,23,017 மற்றும் தற்போதைய தோராய மக்கள் தொகை 9,60,887. மாநகராட்சியில் 70 வார்டுகள் உள்ளன. நிர்வாக நலனுக்காக மாநகராட்சி 5 மண்டலங்களாக

பிரிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம், வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய / மாநில அரசு மானியங்கள் உட்பட ரூபாய் 702.23 கோடி ஆகும்.

**குடிநீர் வழங்கல்**

மாநகரின் நீர் ஆதாரமான பாலாற்று படுகையில் 10 மில்லியன் லிட்டர் குடிநீரும், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மூலம் 23.90 மில்லியன் லிட்டர் குடிநீரும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 7.35 மில்லியன் லிட்டர், உள்ளூர் நீர் ஆதாரங்கள் மூலம் 33.76 மில்லியன் லிட்டர், ஒரு நாளைக்கான மொத்த குடிநீர் விநியோக அளவு 75.00 மில்லியன் லிட்டர் ஆகும். மாநகரின் மொத்த குடிநீர்த் தேவை 123.09 மில்லியன் லிட்டர், மொத்தமுள்ள 2,78,388 வீடுகளில் 88,473 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**பாதாள சாக்கடைத்திட்டம்**

மாநகரில் 30 மில்லியன் லிட்டர் திறனுள்ள ஒரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மேற்கு தாம்பரம் பகுதியில் செயல்பட்டு வருகிறது. இதில் தினசரி உருவாகும் 16 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு அடையாற்றில் விடப்படுகிறது. பல்லாவரம் பகுதியில் தினசரி உருவாகும் 12 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மூலம் பெருங்குடி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. மொத்தமுள்ள 2,78,388 வீடுகளில் இதுவரை மொத்தம் 61,432 வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 70 வார்டுகளில், 38 வார்டுகளில் பாதாள சாக்கடை வசதி உள்ளது. 11 வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் 21 வார்டுகளில் பாதாள சாக்கடை

வசதி ஏற்படுத்திட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**திடக்கழிவு மேலாண்மை**

மாநகரில் தினசரி உருவாகும் மொத்த திடக்கழிவுகள்–400 மெட்ரிக் டன் ஆகும். இதில் 160 மெட்ரிக் டன் ஈரக் கழிவுகள் மற்றும் மீதமுள்ளவை உலர் கழிவுகள். ஈரமான கழிவுகளைக் கையாள இறுதியாக்கம் செய்ய 27 நுண்ணுர மையங்களும், உலர் கழிவுகளைக் கையாள 5 வளமீட்பு மையங்களும் உள்ளன,

**சாலைகள்**

மாநகரில் மொத்தம் 991.64 கி.மீ சாலைகள் உள்ளன. 2022–23 மற்றும் 2023–24 ஆம் ஆண்டுகளில் 196.754 கி.மீ சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. 2024–25 ஆம் ஆண்டில் 40.74 கி.மீ சாலைகள் அமைக்கப்படவுள்ளன.

**தெருவிளக்குகள்**

மாநகரில் மொத்தம் 42,902 தெருவிளக்குகள் உள்ளன. 2023–24 ஆம் ஆண்டில் மேலும் 3,634 புதிய LED விளக்குகள் பொருத்தப்படவுள்ளன.

**மாநகராட்சியின் பிரதான நிதி ஆதாரங்கள்**

மாநகராட்சியின் மொத்த சொந்த வருவாய் ரூ.139.48 கோடியில், வசூலிக்கத்தக்க இனங்களான, சொத்து வரி ரூ.68.73 கோடி, காலி மனை வரி ரூ.15.54 கோடி, தொழில் வரி – ரூ.22.54 கோடி, குடிநீர் கட்டணம் ரூ.15.46 கோடி வரி அல்லாத வருமானம் ரூ. 17.21 கோடி ஆகியவை பிரதான நிதி ஆதாரங்களாகும்.

**அட்டவணை 2.62**

| **நடைபெற்று வரும் முக்கிய பணிகள் (ரூபாய் கோடியில்)** | | | |
|---|---|---|---|
| **வ. எண்** | **திட்டத்தின் பெயர்** | **பணியின் விபரம்** | **மதிப்பீட்டு தொகை** |
| 1 | சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை & தூய்மை இந்தியா திட்டம் | பாதாள சாக்கடை திட்டப் பணி | 212.15 |

| | | | |
|---|---|---|---|
| 2 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 | மாடம்பாக்கம், குண்டுமேடு, பல்லவபுரம் பெரிய ஏரி, வேங்கடமங்கலம் மற்றும் ஆப்பூர் ஆகிய 5 இடங்களில் உயிரி அகழ்வு முறையில் திடக் கழிவுகள் அகற்றும் பணி | 42.94 |
| 3 | அம்ருத் திட்டம் (2.0) | 9 நீர்நிலைகள் மேம்படுத்தும் பணி, 8 பூங்காக்கள் மேம்படுத்தும் பணி | 11.31 |
| 4 | 15வது நிதிக் குழு மானியம் | திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான வாகனம் மற்றும் பாதாள சாக்கடை திட்ட பணிகளுக்கான வாகன கொள்முதல் பணி | 10.48 |

## அட்டவணை 2.63

| செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள் (ரூபாய் கோடியில்) | | | |
|---|---|---|---|
| **வ. எண்** | **திட்டத்தின் பெயர்** | **பணியின் விபரம்** | **மதிப்பீட்டு தொகை** |
| 1 | 15வது நிதிக் குழு மானியம், மாநில நிதிக் குழு சிறப்பு நிதித் திட்டம் | புதிய அலுவலக கட்டடம் கட்டுதல் | 43.40 |
| 2 | தூய்மை இந்தியா திட்டம் | DBFOT முறையில் 150 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இயற்கை எரிவாயு (Bio CNG) கலன் அமைக்கும் பணி | 44.43 |
| 3 | அம்ருத் திட்டம் (2.0) | பல்லவபுரம் பகுதியில் 24x7 முறையில் குடிநீர் விநியோகம் செய்யும் திட்டப் பணி | 20.29 |

| அட்டவணை 2.64<br>செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள பணிகள் (ரூபாய் கோடியில்) | | |
|---|---|---|
| வ. எண் | பணியின் விவரம் | |
| 1 | 15 ஊராட்சிகளுக்கும் சேர்த்து ஒருங்கிணைந்த குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணி | 1575.00 |
| 2 | 15 ஊராட்சிகளுக்கும் சேர்த்து ஒருங்கிணைந்த பாதாள சாக்கடை திட்டப் பணி | 2010.00 |
| 3 | மண்டலம் 2, பல்லாவரம் பகுதியில் பாதாள சாக்கடை திட்டத்தினை புனரமைக்கும் பணி | 86.76 |

## XVI. காஞ்சிபுரம் மாநகராட்சி

காஞ்சிபுரம் மாநகராட்சி 21.10.2021 அன்று தோற்றுவிக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 36.14 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,32,816 மற்றும் தற்போதைய தோராய மக்கள் தொகை 2,46,070. மாநகராட்சியில் 51 வார்டுகள் உள்ளன. நிர்வாக நலனுக்காக மாநகராட்சி 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம், வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய /

மாநில அரசு மானியங்கள் உட்பட ரூபாய் 81.76 கோடி ஆகும்.

**குடிநீர் வழங்கல்**

மாநகரின் குடிநீர் ஆதாரமான பாலாற்றிலிருந்து 23 மில்லியன் லிட்டர் நீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் தினசரி மொத்த குடிநீர்த் தேவை 37.31 மில்லியன் லிட்டர், ஒரு நாளைக்கான மொத்த குடிநீர் விநியோக அளவு 23 மில்லியன் லிட்டர் ஆகும். மொத்தமுள்ள 51,890 வீடுகளில் 32,702 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**பாதாள சாக்கடை திட்டம்**

மாநகரில் 14.71 மில்லியன் லிட்டர் திறனுள்ள 1 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. தினசரி உருவாகும் 14.71 மில்லியன் லிட்டர் திறனுள்ள கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு கோரையாற்றில் விடப்படுகிறது. மொத்தமுள்ள 51,890 வீடுகளில் இதுவரை மொத்தம் 21,633 வீடுகளுக்கு

பாதாள சாக்கடை திட்ட இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 51 வார்டுகளில் 40 வார்டுகளில் பாதாள சாக்கடை வசதி உள்ளது. மேலும் 11 வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திடக்கழிவு மேலாண்மை**

மாநகரில் தினசரி உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 115 மெட்ரிக் டன் ஆகும். இதில் 56 மெட்ரிக் டன் ஈரக் கழிவுகள் மற்றும் மீதமுள்ளவை உலர் கழிவுகள். ஈரமான கழிவுகளை இறுதியாக்கம் செய்ய 9 நுண்ணுர மையங்களும், உலர் கழிவுகளைக் கையாள 4 வளமீட்பு மையங்களும் செயல்பட்டு வருகின்றன.

**சாலைகள்**

மாநகரில் மொத்தம் 361.76 கி.மீ சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 31.590 கிமீ சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. 2023-24 ஆம் ஆண்டில்

எடுத்துக்கொள்ளப்பட்ட 10.937 கி.மீ சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளன.

**தெருவிளக்குகள்**

மாநகரில் மொத்தம் 12,276 தெருவிளக்குகள் உள்ளன. 2023–24 ஆம் ஆண்டில் மேலும் 709 புதிய LED விளக்குகள் அமைக்கப்படவுள்ளன.

**மாநகராட்சியின் பிரதான நிதி ஆதாரங்கள்**

மாநகராட்சியின் மொத்த சொந்த வருவாய் ரூ.55.37 கோடியில், வசூலிக்கத்தக்க இனங்களான சொத்து வரி – ரூ.22.89 கோடி, காலிமனை வரி ரூ.6.08 கோடி, தொழில் வரி – ரூ.3.77 கோடி, குடிநீர் கட்டணம் ரூ.7.64 கோடி, வரி அல்லாத வருமானம் ரூ.14.99 கோடி ஆகியவை பிரதான நிதி ஆதாரங்களாகும்.

**அட்டவணை 2.65**

**நடைபெற்று வரும் முக்கிய பணிகள் (ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் | காவலன் கேட் முதல் உத்திரமேரூர் காஞ்சிபுரம் நெடுஞ்சாலை வரை தார் | 5.00 |

| | | | |
|---|---|---|---|
| | நிதி 2022–23 | சாலை மற்றும் தடுப்பு சுவர் அமைக்கும் பணி | |
| 2 | உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி 2022–23 | மஞ்சள் நீர் கால்வாய் பகுதியில் மழை நீர் வடிகால் கட்டுதல் மற்றும் மேல்மூடி அமைக்கும் பணி | 40.00 |
| 3 | பொது மானிய நிதி 2023–24 | அன்னை அஞ்சுகம் மைதானத்தில் மண்டபத்தினை நவீன வசதிகளுடன் திருமண மண்டபமாக மாற்றி அமைக்கும் பணி | 8.77 |
| 4 | மூலதன மானிய திட்ட நிதி 2022–23 | முருகன் குடியிருப்பு மற்றும் தாட்டித்தோப்பு பகுதியில் வேகவதி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் அமைக்கும் பணி | 2.30 |

## அட்டவணை 2.66

**செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள் (ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு காலநிலை நெகிழ்வு நகர்ப்புர வளர்ச்சி திட்டம் 2023–24 | காஞ்சிபுரம் மாநகராட்சியில் விடுபட்ட பகுதியில் மற்றும் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் 5 ஆண்டுகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தும் பணி (தொகுப்பு–I) | 254 |
| 2 | | காஞ்சிபுரம் மாநகராட்சியில் 36 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் நீரேற்று நிலையத்தினை எஸ் பி ஆர் தொழில்நுட்பத்திலான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை | 68.25 |

| | | | |
|---|---|---|---|
| | | வடிவமைத்தல், உருவாக்குதல், இயக்குதல் மற்றும் பராமரித்து ஒப்படைத்தல் முறையில் பணி (தொகுப்பு–II) | |
| 3 | தமிழ்நாடு காலநிலை மீட்டெடுப்பு வளர்ச்சி திட்டம் நிதி 2023–24 | குடிநீர் சேகரிப்பு கிணறுகள், நீர் உறிஞ்சு கிணறுகள், நீரேற்று நிலையம், நடைபாலம் மற்றும் தொடர்புடைய பணிகள் 36 மாதங்களுக்குள் அமைத்தல் மற்றும் 5 ஆண்டுகளுக்கு இயக்கி பராமரிப்பு மேற் கொள்ளும் பணி (சிப்பம்–I) | 169.28 |
| 4 | | காஞ்சிபுரம் மாநகராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டும் பணி, வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்குதல் 36 மாதங்களுக்குள் அமைத்தல் மற்றும் 5 ஆண்டுகளுக்கு பராமரிக்கும் பணி (சிப்பம்–II) | 149.24 |

## அட்டவணை 2.67

**செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள பணிகள்**

| வ. எண் | பணியின் விவரம் |
|---|---|
| 1 | புதிய பேருந்து நிலையம் அமைத்தல் |
| 2 | பன்னடுக்கு வாகன நிறுத்தும் இடம் அமைத்தல் |

**XVII. கடலூர் மாநகராட்சி**

கடலூர் மாநகராட்சி 08.10.2021 அன்று தோற்றுவிக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 27.69 ச.கி.மீ. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 1,73,636 மற்றும் தற்போதைய தோராய மக்கள் தொகை 1,98,987. மாநகராட்சியில் 45 வார்டுகள் உள்ளன. நிர்வாக நலனுக்காக மாநகராட்சி 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம், வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய / மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.86.52 கோடி ஆகும்.

**குடிநீர் வழங்கல்**

மாநகரின் 4 குடிநீரேற்று நிலையங்களிலிருந்து 20.70 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் மொத்த குடிநீர்த் தேவை 26.86 மில்லியன் லிட்டர். ஒரு நாளைக்கான மொத்த குடிநீர் விநியோக அளவு 20.70 மில்லியன் லிட்டர் ஆகும்.

மொத்தமுள்ள 49,515 வீடுகளில் 11,967 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**பாதாள சாக்கடைத்திட்டம்**

மாநகரில் 12.25 மில்லியன் லிட்டர் திறனுள்ள ஒரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது. தினசரி உருவாகும் 6.5 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு உப்பனாற்றில் விடப்படுகிறது. மொத்தமுள்ள 49,515 வீடுகளில் இதுவரை மொத்தம் 10,007 பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 45 வார்டுகளில் 27 வார்டுகளில் பாதாள சாக்கடை வசதி உள்ளது. விடுபட்டுள்ள வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகளை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திடக்கழிவு மேலாண்மை**

மாநகரில் தினசரி உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 56 முதல் 60 மெட்ரிக் டன் ஆகும். இதில் 24 மெட்ரிக் டன் ஈரக் கழிவுகள் மற்றும்

மீதமுள்ளவை உலர் கழிவுகள். ஈரமான கழிவுகளை இறுதியாக்கம் செய்ய 3 நுண்ணுர மையங்களும், உலர் கழிவுகளைக் கையாள 2 வளமீட்பு மையங்களும் உள்ளன.

**சாலைகள்**

மாநகரில் மொத்தம் 313.75 கி.மீ சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 50.32 கி.மீ சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும் 2023-24 ஆம் ஆண்டில் 16.275 கி.மீ சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளன.

**தெருவிளக்குகள்**

மாநகரில் மொத்தம் 8,570 தெருவிளக்குகள் உள்ளன. 2023-24 ஆம் ஆண்டில் மேலும் 1,287 புதிய LED விளக்குகள் அமைக்கப்படவுள்ளன.

**மாநகராட்சியின் பிரதான நிதி ஆதாரங்கள்**

மாநகராட்சியின் மொத்த சொந்த வருவாய் ரூ.86.52 கோடியில், வசூலிக்கத்தக்க இனங்களான சொத்து வரி - ரூ.40.22 கோடி, காலிமனை வரி

ரூ.4.94 கோடி, தொழில் வரி – ரூ.5.03 கோடி, குடிநீர் கட்டணம் ரூ.5.04 கோடி, வரி அல்லாத வருமானம் ரூ.31.29 கோடி ஆகியவை பிரதான நிதி ஆதாரங்களாகும்.

## அட்டவணை 2.68

**நடைபெற்று வரும் முக்கிய பணிகள்** **(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம் 2022–23 | கடலூர் துறைமுகம் பக்தவச்சலம் மார்க்கெட், மஞ்சக்குப்பம், அண்ணா மார்க்கெட் மற்றும் திருப்பாதிரிப்புலியூர் பான்பரி மார்க்கெட் ஆகிய பகுதிகளில் மூன்று தினசரி சந்தைகள் அமைக்கும் பணி | 17.90 |
| 2 | சிறப்பு நிதி 2022–23 | 4 மண்டல அலுவலக கட்டடங்கள் கட்டும் பணி | 10.00 |
| 3 | மாநில பேரிடர் மீட்பு திட்ட நிதி 2022–23 | மழை நீர் வடிகால் அமைக்கும் 14 பணிகள் | 14.36 |
| 4 | மூலதன மானிய திட்ட நிதி 2023– 24 | வெள்ளிக் கடற்கரை பூங்கா மேம்படுத்தும் பணி | 4.98 |
| 5 | பள்ளி மேலாண்மை மானிய நிதி 2023–24 | கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணி. | 4.28 |

## அட்டவணை 2.69

**செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள்** **(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு காலநிலை நெகிழ்வு நகர்ப்புர வளர்ச்சி திட்டம் 2023-24 | மாநகராட்சிக்குட்பட்ட விடுபட்டுள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தினை முழுமையாக செயல்படுத்தும் பணி | 149.20 |
| 2 | | பாதாள சாக்கடை திட்ட சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி | 26.56 |
| 3 | உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி 2023-24 | அரிசி பெரியாங்குப்பத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி | 36.00 |
| 4 | அம்ருத் 2.0 – 2023-24 | மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் 24X7 குடிநீர் விநியோகம் செய்யும் பணி | 28.67 |
| 5 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 2023-24 | வள மீட்பு மையம், நுண்உர மையம் அமைக்கும் பணி மற்றும் விளையாட்டரங்கம் பகுதியில் பொதுக்கழிப்பிடம் அமைக்கும் பணி | 15.59 |

## அட்டவணை 2.70

**செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள பணிகள்** **(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | ஆறாவது மாநில நிதிக்குழு மானியம் 2023-24ன் கீழ் கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தினை சுற்றியுள்ள பகுதியில் வணிக வளாக கட்டடம் கட்டும் பணி | 3.00 |

| | | |
|---|---|---|
| 2 | குடிநீர் வழங்கல் திட்டத்தில் தற்போது பயன்பாட்டில் உள்ள தொன்மையான பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய்கள் மாற்றியமைக்கும் பணி | 50.00 |
| 3 | 50 மெட்ரிக் டன் திறனுள்ள உயிரி எரிவாயு நிலையம் அமைக்கும் பணி | 20.00 |

## XVIII. கும்பகோணம் மாநகராட்சி

கும்பகோணம் மாநகராட்சி 24.12.2021 அன்று தோற்றுவிக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 14.89 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 1,55,482 மற்றும் தற்போதைய தோராய மக்கள் தொகை 1,71,013. மாநகராட்சியில் 48 வார்டுகள் உள்ளன. நிர்வாக நலனுக்காக மாநகராட்சி 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம், வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய / மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.91.22 கோடி ஆகும்.

**குடிநீர் வழங்கல்**

மாநகரின் முக்கிய குடிநீர் ஆதாரமான காவிரி ஆற்றிலிருந்து 20.47 மில்லியன் லிட்டர் நீர் தினந்தோறும் எடுக்கப்படுகிறது. மாநகரின் தினசரி மொத்த குடிநீர்த் தேவை 20.58 மில்லியன் லிட்டர். ஒரு நாளைக்கான மொத்த குடிநீர் விநியோக அளவு 135 மில்லியன் லிட்டர் ஆகும். மொத்தமுள்ள 38,676 வீடுகளில் 18,364 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**பாதாள சாக்கடைத்திட்டம்**

மாநகரில் 17 மில்லியன் லிட்டர் திறனுள்ள 1 கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது. தினசரி 13 மில்லியன் லிட்டர் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு பாசன வாய்க்காலில் விடப்படுகிறது. மொத்தமுள்ள 38,676 வீடுகளில், இதுவரை மொத்தம் 21,119 பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 48 வார்டுகளில் 43 வார்டுகளில் பாதாள சாக்கடை வசதி உள்ளது. மேலும்

5 வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

**திடக்கழிவு மேலாண்மை**

மாநகரில் தினசரி உருவாகும் மொத்த திடக் கழிவுகள் 75 மெட்ரிக் டன் வரை ஆகும். இதில் 46 மெட்ரிக் டன் ஈரக் கழிவுகள் மற்றும் மீதமுள்ளவை உலர் கழிவுகள். ஈரமான கழிவுகளை இறுதியாக்கம் செய்ய 5 எண்ணிக்கை நுண்ணுயிர் மையங்களும் உலர் கழிவுகளைக் கையாள 4 எண்ணிக்கை வள மீட்பு மையங்களும் உள்ளன.

**சாலைகள்**

மாநகரில் மொத்தம் 185.97 கி.மீ. சாலைகள் உள்ளன. 2021–22 மற்றும் 2022–23 ஆண்டுகளில் 55.53 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. 2023–24ம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட 15.14 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. 2024–25ம் ஆண்டில் 17.78 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்பட உள்ளன.

## தெருவிளக்குகள்

மாநகரில் மொத்தம் 6,428 தெரு விளக்குகள் உள்ளன. 2023-24ஆம் ஆண்டு மேலும் 200 புதிய LED விளக்குகள் அமைக்கப்படவுள்ளன.

## மாநகராட்சி பிரதான நிதி ஆதாரங்கள்

மாநகராட்சியின் மொத்த சொந்த வருவாய் ரூ.48.13 கோடியில், வசூலிக்கத்தக்க இனங்களான, சொத்து வரி ரூ.28.03 கோடி, காலி மனை வரி ரூ.1.59 கோடி, தொழில் வரி ரூ.4.72 கோடி, குடிநீர்க் கட்டணம் ரூ.2.39 கோடி, வரி அல்லாத வருமானம் ரூ.11.40 கோடி ஆகியவை பிரதான நிதி ஆதாரங்களாகும்.

**அட்டவணை 2.71**

**நடைபெற்று வரும் முக்கிய பணிகள் ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் 2023-24 | பழைய பேருந்து நிலையம் (சாம்பசிவம் பேருந்து நிலையம்) அருகில் வணிக வளாகம் கட்டும் பணி | 22.69 |
| 2 | மூலதன மானிய நிதி 2023-24 | பிடாரி குளம் அருகில் வணிக வளாகத்தினை மேம்பாடு செய்யும் பணி | 10.70 |

## அட்டவணை 2.72

**செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள்**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் |
|---|---|---|
| 1 | குடிநீர் விநியோகம் | தாராசுரம் பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பணி |
| 2 | பாதாள சாக்கடை திட்டம் | தாராசுரம் பகுதிக்கு புதிதாக பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கும் பணி |
| 3 | பாதாள சாக்கடை திட்டம் | பாணாதுறையில் 1960ம் ஆண்டில் அமைக்கப்பட்ட பழைய பாதாள சாக்கடைத் திட்டத்தை புதுப்பிக்கும் பணி |
| 4 | கட்டிடங்கள் | தாராசுரம் காய்கறி சந்தையை மேம்படுத்தும் பணி |

## XIX. கரூர் மாநகராட்சி

கரூர் மாநகராட்சி 20.10.2021 அன்று தோற்றுவிக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 53.26 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,14,412 மற்றும் தற்போதைய தோராய மக்கள் தொகை 2,46,574. மாநகராட்சியில் 48 வார்டுகள் உள்ளன. நிர்வாக நலனுக்காக மாநகராட்சி 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு

வருமானம், வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய / மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.11.41 கோடி ஆகும்.

**குடிநீர் வழங்கல்**

மாநகரின் குடிநீர் ஆதாரமான காவிரி ஆற்றிலிருந்து 31.50 மில்லியன் லிட்டர் நீர் தினந்தோறும் எடுக்கப்படுகிறது. மாநகரின் மொத்த குடிநீர் தேவை 32.60 மில்லியன் லிட்டர், ஒரு நாளைக்கான மொத்த குடிநீர் விநியோக அளவு 30.06 மில்லியன் லிட்டர் ஆகும். மொத்தமுள்ள 81,118 வீடுகளில் 55,137 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**பாதாள சாக்கடை திட்டம்**

மாநகரில் 15 மில்லியன் லிட்டர் திறனுள்ள ஒரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. தினசரி உருவாகும் 6 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு பஞ்சமாதேவி வாய்க்காலில் பாசனத்திற்காக விடப்படுகிறது. மொத்தமுள்ள

81,118 வீடுகளில் இதுவரை மொத்தம் 27,225 பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 48 வார்டுகளில் 32 வார்டுகளில் பாதாள சாக்கடை வசதி உள்ளது. மேலும் 16 வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.93 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.12.07.2023–ல் அனுமதி வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

**திடக்கழிவு மேலாண்மை**

மாநகரில் தினசரி உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 100 முதல் 110 மெட்ரிக் டன் ஆகும். இதில் 62 மெட்ரிக் டன் ஈரக் கழிவுகள் மற்றும் மீதமுள்ளவை உலர் கழிவுகள். ஈரமான கழிவுகளை இறுதியாக்கம் செய்ய 11 நுண்ணுர மையங்களும், உலர் கழிவுகளைக் கையாள 2 வளமீட்பு மையங்களும் உள்ளன.

**சாலைகள்**

மாநகரில் மொத்தம் 441.199 கி.மீ சாலைகள் உள்ளன. 2021–22, 2022–23 மற்றும் 2023–24 ஆம் ஆண்டுகளில் 81.35 கிமீ சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும் 2024–25–ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட 7.24 கி.மீ சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளன.

**தெருவிளக்குகள்**

மாநகரில் மொத்தம் 11,875 தெருவிளக்குகள் உள்ளன. 2023–24 ஆம் ஆண்டில் மேலும் 1,507 புதிய LED விளக்குகள் அமைக்கப்படவுள்ளன.

**மாநகராட்சியின் பிரதான நிதி ஆதாரங்கள்**

மாநகராட்சியின் மொத்த சொந்த வருவாய் ரூ.69.38 கோடியில், வசூலிக்கத்தக்க இனங்களான சொத்து வரி ரூ.33.89 கோடி, காலி மனை வரி ரூ.4.71 கோடி, தொழில் வரி – ரூ.4.80 கோடி, குடிநீர் கட்டணம் ரூ.11.77 கோடி, வரி அல்லாத வருமானம் ரூ.14.21 கோடி ஆகியவை பிரதான நிதி ஆதாரங்களாகும்.

## அட்டவணை 2.73

**நடைபெற்று வரும் முக்கிய பணிகள்** **(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் 2021–2022 | புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி | 40.00 |
| 2 | கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம் 2022–2023 | மீன் மார்க்கெட் வளாகம் அமைக்கும் பணி | 1.55 |

## அட்டவணை 2.74

**செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள்** **(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | கலங் கரை விளக்கத் திட்டம் | அரசாணை எண்.93 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.12.07.2023ல் கரூர் மற்றும் இனாம் கரூரின் விடுபட்ட பகுதிகள், சணப்பிரட்டி மற்றும் தாந்தோணி பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகளை ரூ.476.12 கோடியில் செயல்படுத்துவதற்கும், சணப்பிரட்டி, தாந்தோணி பகுதியில் ரூ.113.20 கோடியில் குடிநீர் அபிவிருத்தி பணிகளை செயல்படுத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | 589.32 |

## XX. சிவகாசி மாநகராட்சி

சிவகாசி மாநகராட்சி 21.10.2021 அன்று தோற்றுவிக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 19.89 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 1,26,402 மற்றும்

தற்போதைய தோராய மக்கள் தொகை 2,70,006. மாநகராட்சியில் 48 வார்டுகள் உள்ளன. நிர்வாக நலனுக்காக மாநகராட்சி 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம், வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய / மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.40.00 கோடி ஆகும்.

**குடிநீர் வழங்கல்**

மாநகரின் முக்கிய குடிநீர் ஆதாரமான வெம்பக்கோட்டை, மானூர் கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்து 10.10 மில்லியன் லிட்டர் குடிநீர் தினந்தோறும் எடுக்கப்படுகிறது. மாநகரின் தினசரி மொத்த குடிநீர்த் தேவை 12.66 மில்லியன் லிட்டர். ஒரு நாளைக்கான மொத்த குடிநீர் விநியோக அளவு 12.75 மில்லியன் லிட்டர் ஆகும். மொத்தமுள்ள 53,778 வீடுகளில் 19,691 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**பாதாள சாக்கடை திட்டம்**

மாநகரில் புதிய பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது.

**திடக்கழிவு மேலாண்மை**

மாநகரில் உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 52.70 முதல் 55.00 மெட்ரிக் டன் வரை ஆகும். இதில் 29.50 மெட்ரிக் டன் ஈரக் கழிவுகள் மற்றும் மீதமுள்ளவை உலர் கழிவுகள். ஈரமான கழிவுகளை இறுதியாக்கம் செய்ய 8 நுண்ணுர மையங்களும், உலர் கழிவுகளைக் கையாள 4 வளமீட்பு மையங்களும் உள்ளன.

**சாலைகள்**

மாநகரில் மொத்தம் 174.91 கி.மீ சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 34.52 கி.மீ சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும் 2023-24 ஆம் ஆண்டில்

எடுத்துக்கொள்ளப்பட்ட 19.35 கி.மீ சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளன.

**தெருவிளக்குகள்**

மாநகரில் மொத்தம் 4,876 தெருவிளக்குகள் உள்ளன. 2023-24 ஆம் ஆண்டில் மேலும் 638 புதிய LED விளக்குகள் அமைக்கப்படவுள்ளன.

**மாநகராட்சியின் பிரதான நிதி ஆதாரங்கள்**

மாநகராட்சியின் மொத்த சொந்த வருவாய் ரூ.26.35 கோடியில் வசூலிக்கத்தக்க இனங்களான சொத்து வரி - ரூ.17.38 கோடி, காலிமனை வரி ரூ.1.79 கோடி, தொழில் வரி - ரூ.2.32 கோடி, குடிநீர் கட்டணம் ரூ.2.11 கோடி, வரி அல்லாத வருமானம் ரூ.2.75 கோடி ஆகியவை பிரதான நிதி ஆதாரங்களாகும்.

# அட்டவணை 2.75

**நடைபெற்று வரும் முக்கிய பணிகள்** **( ரூபாய் கோடியில் )**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் 2023–24 | பெரியகுளம் கண்மாய் மேம்பாடு மற்றும் சீரமைப்புப் பணி | 1.87 |
| 2 | மூலதன மானிய நிதி 2021–22 | புதிய வணிக வளாகம் கட்டும் பணி | 5.00 |
| 3 | சிறப்பு நிதி 2022–23 | புதிய அலுவலக கட்டடம் கட்டும் பணி | 10.00 |
| 4 | நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி 2022-23 | 4423 எண்ணிக்கையிலான தெருவிளக்குகளை ஆற்றல் திறன் கொண்ட LED விளக்குகளாக மாற்றும் பணி | 5.36 |

## 3. பெருநகர சென்னை மாநகராட்சி

சென்னை மாநகராட்சி 1688ஆம் ஆண்டு செப்டம்பர் 29ஆம் தேதி உள்ளாட்சி அமைப்பாக நிறுவப்பட்டது. சென்னை மாநகராட்சி நாட்டின் பழமையான நகராட்சி அமைப்பாகவும், உலகின் 2வது பழமையான நகராட்சி அமைப்பாகவும் திகழ்கிறது. சென்னை மாநகரமானது 426 ச.கி.மீ. பரப்பளவு கொண்டது. சென்னை மாநகராட்சியின் 2023 ஆம் ஆண்டு மக்கள் தொகை 89.34 இலட்சமாக இருக்கும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. (2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 66.72 இலட்சம் மக்கள் தொகை). சென்னை மாநகராட்சி, நிருவாக நலனை கருத்திற்கொண்டு 200 கோட்டங்களை கொண்ட 15 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்த 15 மண்டலங்கள் 3 வட்டாரங்களாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. பெருநகர சென்னை மாநகராட்சியின் சிறப்பு அம்சங்கள் அட்டவணை 3.1ல் பின்வருமாறு.

## அட்டவணை – 3.1

| பரப்பளவு | மக்கள் தொகை | குடியிருப்புகள் | மண்டலம் | வார்டுகள் | பணியாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 426 ச.கி.மீ | 66.72 இலட்சம் (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி) 89.34 இலட்சம் * (2023) | 13,45,804 | 15 | 200 | 18,435 |
| **சாலைகள்** | **பாலங்கள்** | **மழைநீர் வடிகால்கள்** | **தெரு விளக்குகள்** | **பள்ளிகள்** | **பூங்காக்கள்** |
| 5,688 கி.மீ | 289 | 2,624 கி.மீ | 3.01 இலட்சம் | 417 | 863 |
| **விளையாட்டு திடல்கள் (ம) குழந்தைகள் விளையாட்டுத் திடல்** | **நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையம் / நல வாழ்வு மையங்கள்** | **நகர்ப்புர சமுதாய நல மருத்துவ மனை/ மகப்பேறு நிலையம்** | **ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் / பால்வாடிகள்/ அங்கன்வாடிகள்** | **பொதுக் கழிப்பிடங்கள்** | **தகன மேடைகள் / மயான பூமிகள்** |
| 490 | 140/140 | 16 /3 | 1,806 | 1,379 | 192 |
| *மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை | | | | | |

## 3.1. உட்கட்டமைப்பு

### 3.1.1 சாலைகள்

#### (i) பேருந்து தட சாலைகள் மற்றும் உட்புறச்சாலைகள்

பெருநகர சென்னை மாநகராட்சியால் 418.57 கி.மீ நீளமுடைய 488 பேருந்து தட சாலைகள் மற்றும் 5,270 கி.மீ நீளமுடைய 34,640 உட்புற சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேற்படி பேருந்து தட சாலைகள் மற்றும் உட்புற சாலைகள் மேம்படுத்தும் பணிகள் மாநகராட்சி மூலதன நிதி (GCC's Capital Funds), தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP), சிங்கார சென்னை 2.0 (Singara Chennai 2.0), நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்டம் (NSMT) மற்றும் மாநில நிதி ஆணையம் (SFC) மானியம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

2023 – 24 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP), சிங்கார சென்னை 2.0 (Singara Chennai 2.0), நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்டம் (NSMT) மற்றும் மாநில நிதி ஆணையம் (SFC) மானியம் ஆகியவற்றின் கீழ், 1,038.5 கி.மீ. நீளமுடைய 6,179 பேருந்து சாலைகள் மற்றும் உட்புற சாலைப்பணிகள் ரூ.674.62 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டன. அதில் 5,304 சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், 19 எண்ணிக்கையிலான 35.77 கி.மீ நீளமுடைய பேருந்து சாலைகள் நெடுஞ்சாலைகள் துறையிடமிருந்து பெறப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி சாலைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

மாநில நிதி ஆணையம் (SFC) மானியம் 2024-25ன் கீழ் 220.38 கி.மீ. நீளமுடைய 1,188 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகள் மற்றும் உட்புற சாலைப்பணிகள் ரூ.150 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டன. அதில் 392 சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் ரூ.254 கோடி மதிப்பீட்டில் 2,007 சாலைப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**(ii) பேருந்து நிழற்குடை மற்றும் பேருந்து நிலையங்கள்**

பெருநகர சென்னை மாநகராட்சியில் 1,416 எண்ணிக்கையிலான நவீன பேருந்து நிழற்குடைகள் பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் 637 எண்ணிக்கையிலான நவீன பேருந்து

நிழற்குடைகள் கட்டுதல், பராமரித்தல் மற்றும் ஒப்படைத்தல் (BOT) முறையில் அமைக்கப்பட்டுள்ளன. 2024–25 ஆம் ஆண்டில், 765 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகள் மேம்படுத்தப்பட்டு, பொதுத் தனியார் பங்களிப்பு (PPP) முறையில், 8 ஆண்டுகளுக்கு புதுப்பித்தல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் (ROT) அடிப்படையில் உருவாக்கப்படும். மேலும் ரூ.1.12 கோடி மதிப்பீட்டில் கிண்டி, வேளச்சேரி, மணலி மற்றும் அண்ணா சதுக்கம் பேருந்து நிலையங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் புதுப்பிக்கப்படும்.

**(iii) பல்நோக்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து பேருந்து நிலையம், பிராட்வே, சென்னை**

பிராட்வே பேருந்து நிலையத்தில் பல்நோக்கு வசதி வளாகம் (MMFC) அமைக்க முன்மொழியப்பட்டு, தற்போது உள்ள பேருந்து நிலையத்தில் ஒருங்கிணைந்த பல்வேறு போக்குவரத்து முனைகள்

மற்றும் வசதிகளை மேம்படுத்துதல், பல அடுக்கு வாகனநிறுத்தம், வணிக வளாகம் மற்றும் கடைநிலை இணைப்புகள் உள்ளிட்ட உட்கட்டமைப்புகளுடன் ரூ.822.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**3.1.2 பாலங்கள்**

பெருநகர சென்னை மாநகராட்சியால், 14 மேம்பாலங்கள், 13 இரயில்வே மேம்பாலங்கள், 17 வாகன சுரங்கப்பாதைகள், 5 பாதசாரிகள் சுரங்கப்பாதைகள், 5 நடைமேம்பாலங்கள், 1 ஆகாய நடைமேம்பாலம் மற்றும் 234 சிறுபாலங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

2023-2024ஆம் ஆண்டில் பெருநகர சென்னை மாநகராட்சியால், 5 மேம்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன. இதன் விவரம் பின்வரும் அட்டவணை 3.2 ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அட்டவணை – 3.2

| வ. எண் | பணியின் பெயர் | நிதி ஆதாரம் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடி) |
|---|---|---|---|
| 1 | கொளத்தூர்– வில்லிவாக்கம் எல்சி –1 இரயில்வேசந்திக்கடவின் குறுக்கே (மேயர் சிட்டிபாபு மேம்பாலம்) | மூலதன மானிய நிதி | 61.98 |
| 2 | மாம்பலம் இரயில் நிலையத்தில் இருந்து தி. நகர் பேருந்து நிலையம் வரை நகரும் படிகட்டுகளுடன் (Escalators) கூடிய ஆகாய நடைபாதை | சீர்மிகு நகர திட்ட நிதி | 28.45 |
| 3 | ஸ்டீபன்சன் சாலையில், ஓட்டேரி நல்லா கால்வாயின் குறுக்கே தற்போதுள்ள பாலத்தினை இடித்துவிட்டு புதியதாக பாலம் (செங்கை சிவம் பாலம்) | மூலதன மானிய நிதி | 52.90 |
| 4 | ஓட்டேரி நல்லாவின் குறுக்கே ஆஸ்பிரன் கார்டன் 2வது தெரு மற்றும் கீழ்ப்பாக்கம் தோட்டம் தெருவை இணைக்கும் இடத்தில் அமைந்துள்ள பாலத்திற்கு மாற்றாக புதியதாக பாலம் அமைக்கும் பணி | உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி | 6.20 |
| 5 | யானைகவுனி சாலையில் தற்போதுள்ள இரயில்வே மேம்பாலத்திற்கு மாற்றாக புதியதாக மேம்பாலம் அமைக்கும் பணி (தெற்கு பகுதி) | மூலதன மானிய நிதி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி | 30.78 |
| **மொத்தம்** | | | **180.31** |

தற்போது நடைபெற்று வரும் முக்கிய பாலப்பணிகளின் விவரம் பின்வரும் அட்டவணை 3.3ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை – 3.3**

| வ. எண் | பணியின்பெயர் | நிதி ஆதாரம் | திட்டமதிப்பீடு (ரூ.கோடி) |
|---|---|---|---|
| 1 | கணேசபுரம் சுரங்கப்பாதையின் மேல் மேம்பாலம் அமைக்கும் பணி. | உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி | 226.55 |
| 2 | தெற்கு உஸ்மான் சாலை மற்றும் சி.ஐ.டி. நகர் முதல் பிரதான சாலையில் மேம்பாலம் அமைக்கும் பணி. | உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி | 164.92 |
| 3 | மணலி சாலையில் ஏற்கனவே உள்ள இரயில்வே சந்திக்கடவு 2பிக்கு மாற்றாக மேம்பாலம் அமைக்கும் பணி. | உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி | 96.04 |
| 4 | கூவம் ஆற்றின் குறுக்கே சின்ன நொளம்பூரில் பூந்தமல்லி நெடுஞ்சாலை மற்றும் யூனியன் சாலையை இணைக்கும் உயர்மட்டபாலம் அமைக்கும் பணி | உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி | 42.71 |
| 5 | கூவம் ஆற்றின் குறுக்கே சன்னதி முதல் குறுக்கு தெருவில் பூந்தமல்லி நெடுஞ்சாலை மற்றும் யூனியன் சாலையை இணைக்கும் உயர்மட்டபாலம் அமைக்கும் பணி | உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி | 31.65 |
| 6 | யானைகவுனி சாலையில் தற்போதுள்ள இரயில்வே மேம்பாலத்திற்கு மாற்றாக புதியதாக மேம்பாலம் அமைக்கும் பணி (பாலத்தின் வடக்கு பகுதி) | மூலதன மானிய நிதி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி | 30.78 |

| வ. எண் | பணியின்பெயர் | நிதி ஆதாரம் | திட்டமதிப்பீடு (ரூ.கோடி) |
|---|---|---|---|
| 7 | புழல் உபரிநீர் கால்வாயின் குறுக்கே வடபெரும்பாக்கத்தில் புதிய பாலம். | சென்னை பெருநகர வளர்ச்சி திட்ட நிதி | 22.41 |
| 8 | போஜராஜாநகர், இரயில்வே சந்திக்கடவின் (LC No. 11A) குறுக்கே சிறு வாகனங்கள் சுரங்கப்பாதை அமைக்கும் பணி. | மூலதன மானிய நிதி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி | 30.13 |
| 9 | ஆதம்பாக்கம் ஏரியின் குறுக்கே ஜீவன் நகர் 2வது தெருவில் பாலம் அமைக்கும் பணி. | உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி | 5.00 |
| மொத்தம் | | | 650.19 |

தற்போதுள்ள வாகனப்போக்குவரத்து கட்டமைப்பை மேம்படுத்தவும், எதிர்வரும் காலங்களில் தங்கு தடையற்ற வாகனப்போக்குவரத்தை உறுதி செய்யவும், பெருநகர சென்னை மாநகராட்சியால், ரூ.27.42 கோடி மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி (I&A), சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை வைப்பு நிதி (CRRT Deposit fund), இரயில்வே வைப்பு நிதி (Railway Deposit fund) மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி மூலம் பின்வரும் 4 இடங்களில் மேம்பாலம் / நடைமேம்பாலம் / பெட்டக வடிவ பாலம் / இருசக்கர மற்றும்

பாதசாரிகள் சுரங்கப்பாதை கட்டப்படவுள்ளன. இதன் விவரங்கள் பின்வரும் அட்டவணை 3.4 ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை – 3.4**

| வ. எண் | பணியின் பெயர் | ஆண்டு / நிதிஆதாரம் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1 | தொல்காப்பிய பூங்காவின் பகுதி – I மற்றும் பகுதி IIஐ டாக்டர் D.G.S தினகரன் சாலை வழியாக இணைக்கும் ஆகாய தொங்கு நடைமேம்பாலம், பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமானம் (EPC) முறையில் அமைக்கும் பணி | சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை வைப்பு நிதி (CRRT Deposit fund) | 9.35 |
| 2 | டாக்டர் D.G.S தினகரன் சாலையின் குறுக்கே தற்போதுள்ள குழாய் வடிவ பாலத்திற்கு பதிலாக, முன் வார்ப்பு மூன்று கண் பெட்டக வடிவ பாலம், பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமானம் முறையில் (EPC ) அமைக்கும் பணி | சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை வைப்பு நிதி (CRRT Deposit fund) | 5.07 |
| 3 | அம்பத்தூர் இரயில்வே சந்திக்கடவு எண் 6ன் குறுக்கே இருசக்கர மற்றும் பாதசாரிகள் சுரங்கப்பாதை அமைக்கும் பணி | இரயில்வே வைப்புநிதி (Railway Deposit fund) | 11.40 |
| 4 | சூளைமேடு, விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே இரயில்வே காலனி 3வது தெருவையும், மாதா கோயில் தெருவையும் இணைக்கும் தற்போதுள்ள பழைய நடைபாலத்திற்கு மாற்றாக புதியதாக பாலம் அமைக்கும் பணி | பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி | 1.60 |
| **மொத்தம்** | | | **27.42** |

## பேரிடர் மேலாண்மை

### 3.1.3 மழைநீர் வடிகால்வாய்கள்

வடகிழக்கு பருவமழையின் போது சென்னை நகரம் வெள்ளப்பாதிப்பினை சந்தித்து வருகிறது. அதனை தடுக்கும் பொருட்டு பெருநகர சென்னை மாநகராட்சி, பல்வேறு திட்டங்களின் கீழ் மழைநீர் வடிகால் கட்டும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மாநில பேரிடர் நிவாரண நிதியில் (SDMF), மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) மற்றும் ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணியை மேற்கொண்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 2,624 கி.மீ நீளத்திற்கு 11,516 மழைநீர் வடிகால் கட்டமைப்புகள் பின்வரும் அட்டவணை 3.5ல் உள்ளவாறு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## அட்டவணை – 3.5

| வ. எண் | மண்டலம் எண் | மண்டத்தின் பெயர் | மழைநீர் வடிகால் எண்ணிக்கை | மழைநீர் வடிகால் நீளம் (கி.மீ) |
|---|---|---|---|---|
| 1 | I | திருவொற்றியூர் | 550 | 98.93 |
| 2 | II | மணலி | 421 | 108.16 |
| 3 | III | மாதவரம் | 531 | 168.57 |
| 4 | IV | தண்டையார்பேட்டை | 423 | 117.01 |
| 5 | V | இராயபுரம் | 377 | 119.71 |
| 6 | VI | திரு.வி.க.நகர் | 586 | 140.08 |
| 7 | VII | அம்பத்தூர் | 1299 | 326.04 |
| 8 | VIII | அண்ணாநகர் | 711 | 184.36 |
| 9 | IX | தேனாம்பேட்டை | 754 | 177.65 |
| 10 | X | கோடம்பாக்கம் | 763 | 214.23 |
| 11 | XI | வளசரவாக்கம் | 1483 | 282.00 |
| 12 | XII | ஆலந்தூர் | 1267 | 211.06 |
| 13 | XIII | அடையாறு | 784 | 210.50 |
| 14 | XIV | பெருங்குடி | 1255 | 204.83 |
| 15 | XV | சோழிங்கநல்லூர் | 312 | 60.43 |
| **மொத்தம்** | | | **11,156** | **2,623.56** |

மேலும், 33 நீர்வழிக்கால்வாய்கள் 53.42 கி.மீ நீளத்திற்கு பின்வரும் அட்டவணை 3.6ல் உள்ளவாறு பராமரிக்கப்படுகின்றன.

## அட்டவணை – 3.6

| வ. எண் | மண்டலம் எண் | கால்வாயின் பெயர் | நீளம் (மீ) |
|---|---|---|---|
| 1 | I | தாமரை குளம் கால்வாய் | 500 |
| 2 | II | பழைய நாபாளையம் கால்வாய் | 1299 |
| 3 | II | துளசி நகர் கால்வாய் | 2043 |

| வ. எண் | மண்டலம் எண் | கால்வாயின் பெயர் | நீளம் (மீ) |
|---|---|---|---|
| 4 | II | மணலி புதூர் TNHB கால்வாய் | 1121 |
| 5 | II | பெரிய ஏச்சன் குழி கால்வாய் | 257 |
| 6 | II | கடப்பாக்கம் ஏரி உபரி நீர் கால்வாய் | 952 |
| 7 | II | மாதவரம் – மணலி ஏரி கால்வாய் | 1266 |
| 8 | IV | கேப்டன் காட்டன் கால்வாய் | 3040 |
| 9 | VI | கொடுங்கையூர் கால்வாய் வடக்கு | 1150 |
| | | கொடுங்கையூர் கால்வாய் தெற்கு | 1675 |
| | | கொடுங்கையூர் கால்வாய் பிரதானம் | 2575 |
| 10 | IV | இணைப்பு கால்வாய் | 530 |
| 11 | IV | வியாசர்பாடி கால்வாய் | 1350 |
| 12 | IV | ஜவஹர் கால்வாய் | 750 |
| 13 | VI | ஏகாங்கிபுரம் கால்வாய் | 1530 |
| 14 | VII | வடக்கு அவென்யூ கால்வாய் | 2900 |
| 15 | VII | அம்பத்தூர் சிட்கோ கால்வாய் | 1320 |
| 16 | VII | பாடிக்குப்பம் கால்வாய் | 2120 |
| 17 | VIII | TVS கால்வாய் | 910 |
| 18 | VII & XI | நொளம்பூர் கால்வாய் | 2480 |
| 19 | IX | நுங்கம்பாக்கம் கால்வாய் | 900 |
| 20 | IX | நந்தனம் கால்வாய் | 1060 |
| 21 | IX | ட்ரஸ்ட்புரம் கால்வாய் | 1500 |
| 22 | IX & XIII | மாம்பலம் கால்வாய் | 5800 |
| 23 | X | ரெட்டிகுப்பம் கால்வாய் | 500 |
| 24 | X | எம்.ஜி.ஆர். கால்வாய் | 1800 |
| 25 | X | ஜாபர்கான் பேட்டை கால்வாய் | 600 |
| 26 | XI & XII | நந்தம்பாக்கம் கால்வாய் | 3240 |
| 27 | XII | ஆதம்பாக்கம் கால்வாய் | 927 |
| 28 | XIII | செல்லம்மாள் கல்லூரி கால்வாய் | 700 |
| 29 | XIII | கிண்டி தொழிற்பேட்டை கால்வாய் | 1600 |
| 30 | XIII | ராஜ்பவன் கால்வாய் | 1100 |
| 31 | XIV | பள்ளிக்கரணை கால்வாய் (மயிலை பாலாஜி கால்வாய் –1&2) | 342 |
| 32 | XV | தலைமை செயலகம் காலனி கால்வாய் | 1084 |
| 33 | XV | செம்மஞ்சேரி கால்வாய் | 2500 |
| **மொத்தம்** | | | **53,421** |

**கொசஸ்தலையார் வடிநிலப்பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் (ISWD) திட்டம்**

கொசஸ்தலையார் வடிநிலப்பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் (ISWD) திட்டப்பணிகள், ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் வடசென்னையின் நீண்ட கால தேவையை நிறைவு செய்யும் வகையில், மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ள அபாயத்தைக் தடுப்பதற்கு 769 கி.மீ., நீளத்திற்கு ரூ.3,220/- கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இதுவரை 72.08 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் செயலாக்கத்தில் உள்ளன. இதன் மூலம் அம்பத்தூர், மணலி, மாதவரம், மற்றும் திருவெற்றியூரில் வசிக்கும் சுமார் 30 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

**கோவளம் வடிநிலப்பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் திட்டம்**

கோவளம் வடிநிலப்பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் திட்டப்பணிகள் மூன்று கட்டங்களாக,

ரூ.1,714 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, முதற்கட்டமாக ரூ.150.45 கோடி மதிப்பீட்டில் 41.42 கி.மீ. நீளத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இதுவரை 94.50 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டத்தில் ரூ.447.03 கோடி மதிப்பீட்டில் 120.09 கி.மீ. நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, இதுவரை 70.6 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மூன்றாம் கட்டமாக, 140.10 கி.மீ. நீளத்திற்கு, ரூ.760.10 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இத்திட்டத்தின் மூலம் பெருங்குடி, சோழிங்கநல்லூர் மற்றும் ஆலந்தூர் மண்டலங்களில் வசிக்கும் சுமார் 20 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.9.62 கோடி மதிப்பீட்டில் 12 நீர்நிலைகளை புனரமைத்து புதுப்பிக்கும் பணியை சென்னை மாநகராட்சி மேற்கொண்டுள்ளது. இதுவரை, 7 நீர்நிலைகளில்

சீரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 5 நீர்நிலைகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், அம்ருத் 2.0 (AMRUT 2.0) திட்டத்தின் கீழ், 5 நீர்நிலைகள் ரூ.14.84 கோடி மதிப்பீட்டில் புனரமைக்க எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன மற்றும் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் (2023-24) கீழ் 24 நீர் நிலைகள் ரூ.13.56 கோடி மதிப்பீட்டில் புனரமைக்க எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**3.1.4 சிறப்புத் திட்டங்கள்**

**(i) சென்னைப் பெருநகர திறன்மிகு போக்குவரத்து திட்டம்**

சென்னை பெருநகர பகுதியில் அதிகரித்து வரும் போக்குவரத்து தேவைகளை நிறைவு செய்ய ரூ.904.88 கோடி மதிப்பீட்டில் ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (JICA) கடனுதவியுடன் சென்னைப் பெருநகர திறன்மிகு போக்குவரத்து திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய கூறுகள்:

1. தகவமைப்பு போக்குவரத்து சமிக்ஞை கட்டுப்பாடு அமைப்பு (Adaptive Traffic Signal Control System)
2. சென்னைப் போக்குவரத்து தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பு (Chennai Traffic Information and Management System)
3. சென்னைப் பெருநகர பேருந்து அமைப்பு முறை (City Bus System)

இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒப்பந்ததாரர் நியமிக்கப்பட்டுள்ளார். திட்டச் செயலாக்க காலம் 31 மாதங்கள் மற்றும் திட்டம் செயல்படுத்தப்பட்ட பிறகு 5 ஆண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்படும். தற்போது, முன்னோடி திட்டம் செயல்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**(ii) சென்னை நகரக் கூட்டாண்மை திட்டம்**

சென்னை நகரக் கூட்டாண்மை திட்டத்தின் முக்கிய நோக்கம், சென்னை பெருநகரத்தின் எதிர்கொள்ளும் தன்மையை அதிகரிப்பதும் மற்றும்

சென்னை மாநகரப் பகுதியில் வாழும் பொதுமக்களுக்கான சேவையை வழங்குவதில் முன்னேற்றம் ஏற்படுத்துவதே ஆகும். 1 பில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் ரூ.7,500 கோடி) மதிப்பிலான இத்திட்டம், 3 கட்டங்களாக நிறைவேற்றப்படவுள்ளது. இத்திட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி முக்கிய பங்குதாரராக விளங்குகிறது.

முதற்கட்டமாக, 300 மில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் ரூ.2,250 கோடி) 2021 முதல் ஐந்து வருடங்களுக்கு உலக வங்கி தமிழ்நாடு அரசிற்கு வழங்கும். பெருநகர சென்னை மாநகராட்சி 5 வருடங்களுக்கு உலக வங்கியால் நிர்ணயிக்கப்பட்டுள்ள 4 செயல்திறனுடன் இணைந்த குறியீடுகளை (Disbursement Linked Indicators) செயல்படுத்துவதன் மூலம் 90 மில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் ரூ.675 கோடி) நிதியைப் பெறும். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி உலக வங்கியிடம் ஒப்புக் கொண்டவாறு முடிவு கட்டமைப்பு

குறியீடுகளையும் (Result Frame work Indicators) செயல்படுத்த வேண்டும்.

செயல்திறனுடன் இணைந்த 4 குறியீடுகள் (Disbursement Linked Indicators) பின்வருவன: பெருநகர சென்னை மாநகராட்சியின் தொழில்முறை காலிப்பணியிட விகிதங்களைக் குறைத்தல்; பெருநகர சென்னை மாநகராட்சியில் பொது கொள்முதல் செயல்திறன் மற்றும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துதல்; பெருநகர சென்னை மாநகராட்சியின் சுகாதார அமைப்பை வலுப்படுத்துதல் மற்றும்; பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆண்டு சொந்த வருவாயை அதிகரித்தல். மேலும், முடிவு கட்டமைப்பு குறியீடுகள் (RAs) பின்வருவன: பொது இடங்கள் மற்றும் பேருந்து பயணங்களில் மகளிர் பாதுகாப்பினை உறுதி செய்தல்; பாதசாரிகளுக்கான நடைபாதையை அதிகரித்தல்; திடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்துதல்; குடிமக்கள் மற்றும் வாடிக்கையாளர்களிடம் மாநகராட்சி அளிக்கும்

சேவையின் மீது அவர்களின் கருத்தை அறிதல் ஆகியவை ஆகும்.

**(iii) பெருநகர சாலை திட்டம்**

சென்னை நகர கூட்டாண்மை திட்டத்தில் பெருநகர சாலை திட்டமானது முக்கியமான பகுதியாகும். இத்திட்டம், அனைவருக்கும் உயர்தரமான மற்றும் ஒரேமாதிரியான சாலைகளை உருவாக்குவதேயாகும். பெருநகர சென்னை மாநகராட்சியானது அனைத்து சாலைகளையும் இணைத்து "முழுமையான சாலைகள்" ஆக மாற்றுவதற்காக பெருநகர சாலை திட்டத்தை தொடங்கியுள்ளது. புதிய வடிவமைப்பின் தொடர்ச்சியாக நடைபாதைகள், ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட வாகனப்பாதைகள், தங்கு தடையில்லாத தொடர்ச்சியான ஒழுங்குபடுத்தப்பட்ட வாகன நிறுத்தங்கள் மற்றும் பிறசேவை துறைகளின் பயன்பாட்டிற்காக நிலத்தடி குழாய்கள் (Duct) அமைத்தல், பாதசாரிகளின் நடமாட்டத்திற்கு இடையூறு ஏற்படாத வகையில் பேருந்து நிறுத்தங்களை வடிவமைத்தல், நடைபாதை வியாபாரங்கள் மற்றும் இதர சாலையோர கட்டமைப்புகளை வடிவமைத்தல்.

இத்திட்டத்தின் முதல் கட்டத்தில், அதாவது, நீடித்த நகர்ப்புர சேவைகள் திட்டத்தில் (Sustainable Urban Services Programme), 11.6 கி.மீ. சாலை பணிகள் நிறைவேற்ற இலக்கிடப்பட்டு, தற்போது காதர் நவாஸ் கான் சாலை (KNK) மற்றும் மோனேகர் சௌல்ட்ரி (MC) சாலையில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், ரேஸ் கோர்ஸ் சாலை, திருவொற்றியூர் நெடுஞ்சாலை மற்றும் அருணாச்சலேஸ்வர் சாலை பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மீதமுள்ள சாலை பணிகளுக்கான (6.6 கி.மீ) விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

**(iv) பொது மற்றும் தனியார் பங்களிப்பு (PPP) முறையில் கழிப்பறைகள் இயக்குதல் மற்றும் பராமரித்தல்**

பெருநகர சென்னை மாநகராட்சி திறந்தமுறை ஒப்பங்கள் மூலமாக கழிப்பறைகளை வடிவமைத்தல், உருவாக்குதல், நிதி, இயக்குதல் மற்றும் பரிமாற்றம் (DBFOT) என்ற அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள தனியார் ஒப்பந்ததாரர்களை தேர்வு செய்துள்ளது. இப்பணிக்கான காலம் 9 வருடங்களில், 1 வருடம் வடிவமைத்தல், உருவாக்கம் மற்றும் செயல்படுத்தவும்

மீதமுள்ள 8 வருடங்கள் இயக்கம் மற்றும் பராமரிப்பிற்காகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டம் Hybrid Annuity Model முறையில் உருவாக்கப்பட்டு, பொது மற்றும் தனியார் பங்களிப்பு (PPP) மூலம் தனியார் ஒப்பந்ததாரர்களுக்கு பிரதான செயல்பாட்டின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. சலுகையாளர் தேர்ந்தெடுக்கப்பட்டு, நியமிக்கப்பட்ட தேதி 01.09.2023. மண்டலம் 5, 6 & 9 (மெரினா மட்டும்) எடுத்துக்கொள்ளப்பட்ட கழிப்பறைகளின் விவரங்கள் பின்வரும் அட்டவணை 3.7ல் உள்ளன.

**அட்டவணை – 3.7**

| விவரம் | மண்டலம்–5 | | மண்டலம்–6 | | மண்டலம்–9 (மெரினா மட்டும்) | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | இடங்கள் | இருக்கைகள் | இடங்கள் | இருக்கைகள் | இடங்கள் | இருக்கைகள் | இடங்கள் | இருக்கைகள் |
| புதிய கட்டுமானம் | 51 | 365 | 36 | 281 | 3 | 16 | 90 | 662 |
| முக்கிய சீரமைப்பு | 71 | 396 | 17 | 46 | – | – | 88 | 442 |
| சிறு சீரமைப்பு | 105 | 1,398 | 81 | 661 | 8 | 107 | 194 | 2166 |
| **மொத்தம்** | 227 | 2,159 | 134 | 988 | 11 | 123 | 372 | 3,270 |

அடுத்த கட்டங்களில், மீதமுள்ள மண்டலங்களில் உள்ள பொதுக் கழிப்பறைகள், Hybrid Annuity Model

முறையில், விரிவான செயல்பாடு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு எடுத்துக் கொள்ளப்படும். இதன் ஆரம்ப கட்ட பணிகள் முடிந்து, டெண்டர் ஆவணம் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**(v) விக்டோரியா பொது கூடம்**

விக்டோரியா பொதுக்கூடம் 1890 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஒரு பாரம்பரிய மற்றும் வரலாற்று சிறப்பு மிக்க கட்டடம் ஆகும். பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் விக்டோரியா பொதுக் கூடத்தின் பாதுகாப்பு, புத்துயிர் மற்றும் நில அதிர்வு மறு சீரமைப்பு பணிகள் ரூ.32.62 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் அனைத்தும் முடிவுற்ற பிறகு, இது அருங்காட்சியகம் மற்றும் கலாச்சார இடமாக மாறும்.

**(vi) சீர்மிகு நகர திட்டம் (SCM)**

சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ரூ.985.24 கோடி மதிப்பீட்டில் 46 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதில், பாதசாரிகள் வளாகம், பலஅடுக்கு வாகனநிறுத்தம்,

நவீனகுடிநீர் அளவுமாணிகள், நீர்நிலைகளை புனரமைத்தல் மற்றும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் போன்ற முக்கியப்பணிகள் அடங்கும். மேலும், ரூ.59.42 கோடி மதிப்பீட்டில் 2 பணிகளான மாம்பலம் கால்வாய் பகுதி 1 மற்றும் 2 (Reach 1 & 2) நடைபெற்று வருகிறது. மேலும், வில்லிவாக்கத்தில் தற்போதுள்ள ஏரியை ஒட்டி, 8.5 ஏக்கர் பரப்பளவில் சுமார் 50,000 கன மீட்டர் நீர்தேக்கம் திறன் கொண்ட கூடுதல் குளம் உருவாக்கும் பணிகள் ரூ.7.90 கோடி மதிப்பீட்டில் சென்னை சீர்மிகு நகர திட்ட நிதியின் கீழ் நடைபெற்று வருகின்றன.

**3.1.5 கட்டடங்கள்**

பெருநகர சென்னை மாநகராட்சியானது, பள்ளிகள் (418 எண்ணிக்கை), பொது கழிப்பிடங்கள் (1379 எண்ணிக்கை), பேறுகால அவசர சிகிக்சை மையங்கள் (EoC) (3 எண்ணிக்கை), மயான பூமி (192 எண்ணிக்கை), (நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள்) UPHC (140 எண்ணிக்கை), சுகாதாரம் மற்றும்

ஆரோக்கிய மையம் (140 எண்ணிக்கை) நகர்ப்புற சமுதாய நல மையங்கள்(UCHC), மருத்துவமனைகள், இரவு தங்குமிடங்கள், மண்டலம் / பகுதி / வார்டு /மின்சார அலுவலக கட்டடங்கள், சமுதாய கூடங்கள், வணிக வளாகங்கள், அங்கன்வாடிகள், சலவைக்கூடம், உடற்பயிற்சிக் கட்டடங்கள், மன்றக் கூடம் போன்ற 3,910 கட்டடங்களை பராமரிக்கிறது.

சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் 2021–22 ஆம் ஆண்டில், ரூ.50.66 கோடி மதிப்பீட்டில் 23 புதிய பள்ளிக் கட்டடங்களும், ரூ.6.13 கோடி மதிப்பீட்டில் 10 எரிவாயு தகன மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

2022–23 ஆம் ஆண்டில், சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.69.27 கோடி மதிப்பீட்டில் 19 புதிய பள்ளிக் கட்டடங்களும், ரூ.23.86 கோடி மதிப்பீட்டில் 28 எரிவாயு தகன மேடைகள் / மயான பூமிகளின் புதிய / மேம்படுத்தும் பணிகளும் எடுக்கப்பட்டுள்ளன. இதில் 75 சதவீத பணிகள்

நிறைவடைந்துள்ளன, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் 2023 – 24 ஆம் ஆண்டில், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி ரூ.49.30 கோடி மதிப்பீட்டில், 33 எண்ணிக்கையில் புதிய பள்ளிக் கட்டடங்கள், ரூ.22.56 கோடி மதிப்பீட்டில், 15 புதிய மயானங்கள், ரூ.46.61 கோடி மதிப்பீட்டில் 6 எண்ணிக்கையிலான புதிய சமுதாயக் கூடம் கட்டுவதற்கு முன்மொழியப்பட்டு, இதில் அனைத்துப் பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

ரூ.105.50 கோடி மதிப்பீட்டில் 2,020 ஆஸ்பிரேஷனல் கழிப்பிட இருக்கைகள் மற்றும் 600 சிறுநீர் கழிப்பறைகள் கட்டுவதற்கு முன்மொழியப்பட்டது. தூய்மை இந்தியா இயக்க நிதி ரூ.21.485 கோடி மற்றும் நிர்பயா நிதி ரூ.32.98 கோடி ஆகியவற்றின் கீழ் 844 கழிப்பறைகள் மற்றும்

942 சிறுநீர் கழிப்பறைகள் அமைக்கும் பணிகள் 449 இடங்களில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

2024-25 ஆம் ஆண்டில், CITIIS திட்டத்தின் கீழ், ரூ.35 கோடி மதிப்பீட்டில் 11 பள்ளிக் கட்டடங்களை புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் மற்றும் மாநில நிதி ஆணையம் மானியம் மற்றும் மாநில நிதித் திட்டத்தின் கீழ், 13 புதிய பள்ளி கட்டடங்கள் கட்டுவதற்கு முன்மொழியப்பட்டது. மதிப்பிடப்பட்ட செலவு ரூ.18.28 கோடி.

சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.15 கோடி மதிப்பீட்டில் 10 எண்ணிக்கையில் புகை இல்லாத தகனமேடை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**3.1.6 மின்சாரம்**

**தெருவிளக்குகள்**

பெருநகர சென்னை மாநகராட்சி அனைத்து பேருந்து வழித்தட சாலைகள் மற்றும் உட்புற சாலைகளில் ஒரே மாதிரியான தெரு விளக்குகளை

அமைத்துள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி 3.01 லட்சம் தெரு விளக்குகளை பராமரித்து வருகிறது. இவையனைத்தும் மின்சாரம் சேமிக்கும் எல்.இ.டி விளக்குகளாகும். முக்கிய சாலை சந்திப்புகள், கடற்கரை பகுதிகள் மற்றும் பூங்காக்களில் 450 எண்ணிக்கையில் உயர்கோபுர மின்விளக்குகள் பின்வரும் அட்டவணை 3.8ல் உள்ளவாறு அமைக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை– 3.8**

| வ. எண் | மண்டலம் | மண்டலத்தின் பெயர் | தெரு விளக்குகளின் எண்ணிக்கை | உயர்கோபுர மின் விளக்கு கம்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | I | திருவொற்றியூர் | 13,910 | 23 |
| 2 | II | மணலி | 12,619 | 15 |
| 3 | III | மாதவரம் | 19,019 | 36 |
| 4 | IV | தண்டையார் பேட்டை | 19,515 | 30 |
| 5 | V | ராயபுரம் | 15,692 | 38 |
| 6 | VI | திரு.வி.க நகர் | 18,819 | 35 |
| 7 | VII | அம்பத்தூர் | 27,723 | 48 |
| 8 | VIII | அண்ணா நகர் | 21,371 | 28 |
| 9 | IX | தேனாம்பேட்டை | 23,271 | 52 |
| 10 | X | கோடம்பாக்கம் | 24,435 | 33 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | XI | வளசரவாக்கம் | 20,730 | 16 |
| 12 | XII | ஆலந்தூர் | 15,756 | 21 |
| 13 | XIII | அடையாறு | 24,548 | 48 |
| 14 | XIV | பெருங்குடி | 23,964 | 18 |
| 15 | XV | சோழிங்கநல்லூர் | 19,862 | 9 |
| மொத்தம் | | | 3,01,234 | 450 |

பொது இடங்களில் பெண்களின் பாதுகாப்பிற்கான நோக்கில் உருவாக்கப்பட்ட நிர்பயா திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சியில் காவல்துறையால் பரிந்துரைக்கப்பட்ட இடங்கள் மற்றும் போதிய வெளிச்சம் இல்லாத இடங்களில் ரூ.68.99 கோடி மதிப்பீட்டில் 13,579 புதிய தெரு விளக்கு கம்பங்கள் மற்றும் 12,213 எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

### 3.1.7 மின்ஆளுமை

பெருநகர சென்னை மாநகராட்சி, இணையதள சேவைகள் மூலம் சொத்து வரி, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு, நகர திட்டமிடல், பொதுமக்கள் குறைகள் தீர்வு, நம்ம சென்னை செயலி, வாட்ஸ் அப் செயலி

சேவைகள் மற்றும் 1913 அழைப்பு மையம் ஆகிய சேவைகளை பொதுமக்களுக்கு வழங்கி வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நிறுவன வள திட்டமிடல் (Enterprise Resource Planning) மூலம் பணிகள் மேலாண்மை, சட்ட வழக்கு மேலாண்மை அமைப்பு, பொது மேலாண்மை அமைப்பு, ஓய்வூதிய மேலாண்மை போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன.

**நிறுவன வள திட்டமிடல் அமைப்பு (ERP 2.0)**

பெருநகர சென்னை மாநகராட்சி, 2008 ஆம் ஆண்டு முதல் இருபதிற்கும் கூடுதலான நேரடி செயல்பாட்டு தொகுதிகள் கொண்ட முழு அளவிலான நிறுவன வள திட்டமிடல் (ERP) மென்பொருள் அமைப்பைப் பயன்படுத்துகிறது. இந்த அமைப்பில் உள்ள அனைத்து தொகுதிகளும் நிதித் தொகுதியுடன் ஒருங்கிணைக்கப்பட்டு, நகராட்சி நிதியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. தொலைபேசி (Mobile) செயலிகள், தகவல் தொடர்பு போன்ற வசதிகள்,

நிறுவன வள திட்டமிடல் அமைப்புடன் (ERP 2.0) ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன. இது பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் கிடைக்கும் தரவு ஆதாரங்களை தடையின்றி பயன்படுத்த அனுமதிக்கிறது. BBPS, UPI போன்ற இணையதள கட்டணச் சேனல்கள், குடிமக்கள் சேவை வழங்கலை மேம்படுத்துவதற்காக இணைக்கப்பட்டுள்ளன. 2023–24 ஆம் ஆண்டு வரை 10க்கும் மேற்பட்ட வங்கிகளின் இணையதளம் மூலம் பணம் செலுத்தும் சேவைகளை பெறலாம். பெருநகர சென்னை மாநகராட்சியின் தரவுகள், தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலின்படி (ஒற்றை சாளர முறையில்), சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் உள்ளிட்ட பல்வேறு அரசு நிறுவனங்களால் பயன்படுத்தப்படுகிறது. மற்றும் நில உரிமையாளர் பெயர் பரிமாற்றம் போன்ற சேவைகளுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

சொத்து வரி, தொழில் வரி, வர்த்தக உரிமம், நிறுவன வரி போன்ற பெருநகர சென்னை மாநகராட்சியின் பெரும்பாலான வருவாய் தொடர்பான நடவடிக்கைகள் தற்போதுள்ள ERP தளத்தில் மேற்கொள்ளப்படுவதால், ERP 2.0 திட்டம் முன்மொழியப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் தொழில்நுட்ப அடிப்படை கட்டமைப்பில் மேற்கொள்ளப்படும் மேம்பாடுகள், வரிவிதிப்பு மற்றும் வசூல் செயல்முறைகளை எளிதாக்குவதன் மூலம் வரிவாய் வசூலை அதிகரிக்கும். ERP 2.0 இன் கீழ், மேம்பட்ட பயனீட்டாளர் அனுபவம் மற்றும் செயல்பாட்டிற்காக முக்கிய வணிக செயல்முறை மறு–பொறியியல் முன்மொழியப்பட்டது. ERP 2.0 இன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

- சிறிய சேவைகளுக்கான தொழில் நுட்பம் (Micro Service) தற்போதைய டிஜிட்டல் தொழில்நுட்பத் தரத்திற்கேற்ப இருக்க வேண்டும்.

- பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் களப்பணியை மேற்கொள்வது உட்பட பயனீட்டாளர் தளத்திற்கான அணுகலை மேம்படுத்த கைபேசி வடிவமைத்தல் (Mobile first).
- பெருநகர சென்னை மாநகராட்சி இணையவழி சேவைகளின் வழிசெலுத்துதல் மற்றும் பயன்பாட்டிற்கு உதவும் வகையில் பயனீட்டாளர் நட்பு இடைமுகம் ஏற்படுத்துதல் (User friendly interface).
- மேம்படுத்தப்பட்ட வருவாய் சேகரிப்புக்காக வருவாய் கசிவுகளைக் கண்டறிந்து அதைத் தடுக்க, புவியியல் தகவல் அமைப்புடன் (GIS) கூடிய ERP செயலி உருவாக்குதல்.
- பாதுகாப்பு, செயல்திறன், அணுகுதல் போன்றவற்றை உறுதி செய்வதற்கான தற்போதைய தொழில்துறை தரநிலைகளுடன் இணங்குதல் (Compliance).

- செயல்திறன் – அவசர மற்றும் சாதாரண நேரங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி சேவைகளை வழங்குதல்.
- ஒருங்கிணைப்புகள் துறைகளுக்கு இடையேயான மற்றும் வெளிப்புற தரவுப் பகிர்வுக்கான ஒருங்கிணைப்புகளை எளிதாக்குதல்.
- இணையவழி பரிவர்த்தனைகள் – தொடர்ந்து அதிகரித்து வரும் இணையவழி பரிவர்த்தனைகளை திறம்பட நிர்வகித்தல் (பெருநகர சென்னை மாநகராட்சியில் கடந்த சில ஆண்டுகளில் வருவாய் தொடர்பான சேவைகளுக்காக இணையவழி பரிவர்த்தனைகள் 5% முதல் 80% வரை அதிகரித்துள்ளது).
- பெருநகர சென்னை மாநகராட்சியில் சேவைகள் மற்றும் செயல்பாடுகளின் தொடர்ச்சியான வளர்ச்சியை எளிதாக்க அளவிடுதல்.
- அதிகரித்த பயனீட்டாளர் சமூகம் – குடிமக்கள், வணிகங்கள், பெருநகர சென்னை மாநகராட்சி

பணியாளர்கள், ஓய்வூதியம் பெறுவோர், வெளி அரசுத் துறைகள் போன்ற பெருமளவு பயனீட்டாளர் சமூகத்திற்கான சேவைகளை நிறைவு செய்தல்.

- நிகழ்நேரம்/நிகழ்நேர விசைப்பலகைகள் – AI/ML இயல்விக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையிலான பகுப்பாய்வு விசைப்பலகைகள் கிடைக்கச் செய்தல்.
- தரவு பகிர்வு – G2G சேவைகளுக்கான பிரத்தியேக தரவு பகிர்வு தளத்தை வழங்குதல்.
- பேரிடர் மீட்பு வசதி – DR வசதியை நிறுவுதல்.

**3.1.8 பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத்திடல்கள்**

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது 863 பூங்காக்கள் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன. இவற்றில் ஒப்பந்தமுறையில் 585 பூங்காக்களும், 189 பூங்காக்கள் பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காபணியாளர்கள் மூலமும், 89 பூங்காக்கள் தன்னார்வ மக்கள் குழுக்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியால் 490 விளையாட்டு மைதானங்கள்

மற்றும் சிறுவர் விளையாட்டு திடல்கள், 3 நீச்சல் குளம், 163 உடற்பயிற்சிக் கூடங்கள் மற்றும் இதர விளையாட்டு வசதிகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் 112 சாலை மையத்தடுப்புகள், மற்றும் 113 போக்குவரத்து தீவுத்திட்டுகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**அட்டவணை 3.9**

| மண்டலம் | மண்டலத்தின் பெயர் | பூங்காக்களின் எண்ணிக்கை | விளையாட்டு திடல்கள் & சிறுவர் விளையாட்டு திடல்களின் எண்ணிக்கை | உடற்பயிற்சி கூடங்களின் எண்ணிக்கை | நீச்சல் குளங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| I | திருவொற்றியூர் | 9 | 5 | 2 | 1 |
| II | மணலி | 32 | 35 | 5 | |
| III | மாதவரம் | 63 | 23 | 1 | |
| IV | தண்டையார் பேட்டை | 56 | 66 | 13 | |
| V | ராயபுரம் | 27 | 12 | 15 | 1 |
| VI | திரு.வி.க நகர் | 47 | 38 | 11 | |
| VII | அம்பத்தூர் | 90 | 8 | 6 | |
| VIII | அண்ணா நகர் | 42 | 73 | 21 | |
| IX | தேனாம் பேட்டை | 42 | 22 | 24 | 1 |
| X | கோடம்பாக்கம் | 58 | 70 | 6 | |

| மண்டலம் | மண்டலத்தின் பெயர் | பூங்காக்களின் எண்ணிக்கை | விளையாட்டு திடல்கள் & சிறுவர் விளையாட்டு திடல்களின் எண்ணிக்கை | உடற்பயிற்சி கூடங்களின் எண்ணிக்கை | நீச்சல் குளங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| XI | வளசரவாக்கம் | 83 | 17 | 7 | |
| XII | ஆலந்தூர் | 70 | 10 | 11 | |
| XIII | அடையாறு | 82 | 63 | 31 | |
| XIV | பெருங்குடி | 71 | 20 | 4 | |
| XV | சோழிங்கநல்லூர் | 91 | 28 | 6 | |
| மொத்தம் | | 863 | 490 | 163 | 3 |

**பூங்கா மற்றும் விளையாட்டு திடல்கள் புதியதாக அமைத்தல் (திறந்த வெளி நிலங்களில்)**

2024–25 ஆம் நிதியாண்டில், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட காலியாக உள்ள திறந்த வெளிநிலங்களில் புதிய பூங்காக்கள் அமைக்கும் பணி உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதிதாக அமைக்கப்படும் சில பூங்காக்களில் திறந்தவெளி உடற்பயிற்சிக்கான உபகரணங்கள் அமைக்கப்படுகின்றன. புதியதாக அமைக்கப்படும் பூங்காக்கள் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும்

வகையில் வடிவமைக்கப்படுகிறது. மேலும், புதிய பூங்காக்கள் மழைக்காலத்தில் நீர்தங்கும் பூங்காக்களாக (sponge parks) செயல்படும் வகையில் குறைந்தபட்ச கான்கிரீட் மற்றும் ஏராளமான பசுமையைக் கொண்டிருக்கும் வகையில் உருவாக்கப்படும்.

சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் (2021–22 & 2022–23) திறந்தவெளி நிலங்களில் ரூ.60.59 கோடி மற்றும் ரூ.27.92 கோடி மதிப்பீட்டில் முறையே 170 பூங்காக்கள் மற்றும் 67 விளையாட்டுத் திடல்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதில் 153 பூங்காக்கள் மற்றும் 59 விளையாட்டுத்திடல் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

சிங்காரச் சென்னை 2.0 (2023–24) திட்டத்தின்கீழ் ரூ.6.99 கோடி மற்றும் ரூ.14.30 கோடி மதிப்பீட்டில், முறையே, 19 பூங்காக்கள் மற்றும் 37 விளையாட்டுத்திடல்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதில் 3 பூங்காக்கள் மற்றும் 1 விளையாட்டுத்திடல்

பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. 14 பூங்காக்கள் மற்றும் 35 விளையாட்டுத்திடல்களுக்கான பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் 2 பூங்கா மற்றும் 1 விளையாட்டுத்திடல் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

2024-25 ஆம் ஆண்டிற்கு 35 பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களை சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் 50 பூங்காக்கள் மழைக்காலத்தில் நீர்தங்கும் பூங்காக்களாக (sponge parks) மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(i) பசுமைப்படுத்துதல்**

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் சென்னை மாநகரின் பசுமை பரப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, பாரம்பரிய மரவகைகள் பல்வேறு பகுதிகளில் நடப்பட்டுள்ளன. இத்துடன், சென்னை நகரில் உள்ள குடியிருப்பு நலச்சங்கங்களை ஒருங்கிணைத்து மரக்கன்றுகளை வளர்க்க பெருநகர

சென்னை மாநகராட்சி முயற்சி எடுத்துள்ளது 2022 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை 3.00 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. மேலும், குடியிருப்பு நலச்சங்கங்களை ஒருங்கிணைத்து 1 இலட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**3.2. சுகாதாரம் மற்றும் தூய்மை**

**3.2.1 திடக்கழிவு மேலாண்மை**

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் நாளொன்றுக்கு உருவாகும் குப்பையின் அளவு சராசரியாக 5,500 மெட்ரிக் டன் ஆகும். அனைத்து வீடுகளில் இருந்து குப்பை சேகரிக்கப்படுகிறது. தரம் பிரிக்கப்பட்ட ஈரமான மற்றும் உலர் கழிவுகள், பரவலாக்கப்பட்ட பதனிடுதல் மையங்களுக்கு அனுப்பப்படுகிறது, மீதமுள்ள கழிவுகள் பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களில் கொட்டப்பட்டு வருகிறது.

தற்போது, பெருநகர சென்னை மாநகராட்சியிலுள்ள 15 மண்டலங்களில், 5 மண்டலங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியாலும், மீதமுள்ள 10 மண்டலங்களில் தனியார் நிறுவனங்கள் மூலமாகவும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

**(i) உட்கட்டமைப்பு**

திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், கழிவுகள் உருவாகும் இடத்திலேயே அவற்றை சேகரித்தல், அந்தந்த பதனிடுதல் மையங்களுக்கு கொண்டு செல்வது மற்றும் செயலாக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியது.

பெருநகர சென்னை மாநகராட்சி, இப்பணிகளை மேற்கொள்வதற்கு, 2,457 பேட்டரி மூலம் இயக்கப்படும் வாகனங்கள், 101 பேட்டரி மூலம் இயக்கப்படும் மூன்றுசக்கர மிதிவண்டிகள், 671 மூன்று சக்கர மிதிவண்டிகள், 172 கனரக / இலகுரக காம்பாக்டர்கள், 106 கனரக / இலகுரக டிப்பர்கள், 14 சாலை துப்புரவு

இயந்திரங்கள் போன்றவை பயன்பாட்டில் உள்ளன. இதே போன்று 3,509 பேட்டரி மூலம் இயக்கப்படும் வாகனங்கள், 136 கனரக / இலகுரக காம்பாக்டர்கள், 102 கனரக / இலகுரக டிப்பர்கள் மற்றும் 45 சாலை துப்புரவு இயந்திரங்கள் ஆகியவை தனியார் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும் மண்டலங்களில் பயன்பாட்டில் உள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது 4,615 எண்ணிக்கையில் நிரந்தரத் தூய்மைப் பணியாளர்கள், 448 எண்ணிக்கையிலான தற்காலிக தினக்கூலிப் பணியாளர்கள் மற்றும் 4,676 எண்ணிக்கையிலான ஒப்பந்த பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். தனியார் நிறுவனங்கள் மூலமாக 12,249 பணியாளர்கள் தூய்மைப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

**(ii) ஈரமான மற்றும் உலர் கழிவு பதனிடுதல்**

பெருநகர சென்னை மாநகராட்சியில், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன்படி, தரம்

பிரிக்கப்பட்ட ஈர மற்றும் உலர் கழிவுகள் பதனிட பல்வேறு இடங்களில் பரவலாக்கப்பட்ட பதனிடும் மையங்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

தற்போது நாளொன்றுக்கு 1,020 மெட்ரிக்டன் அளவிற்கு ஈர கழிவுகளை பதப்படுத்தும் வசதிகளான நுண்ணுயிர் மூலம் உரம் தயாரிக்கும் கிடங்குகள், காற்று புகும் முறையில் உரம் தயாரிக்கும் கூடங்கள் (Windrow Composting), இயற்கை உயிரி எரிவாயு ஆலைகள் (Bio–CNG) மற்றும் தோட்டக்கழிவுகள் மறுசுழற்சி நிலையங்கள் என மொத்தம் 200 எண்ணிக்கையிலான பதனிடும் மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. ஈரக்கழிவுகளை பதப்படுத்தும் நிலையங்களிலிருந்து தற்போது மாதம் ஒன்றிற்கு சுமார் 720 டன் உரம் மற்றும் இயற்கை உயிரி எரிவாயு (Bio–CNG) 562 மெட்ரிக் டன் அளவிற்கு உற்பத்தி செய்யப்படுகிறது.

ஈரக்கழிவுகளைப் பதப்படுத்த, 100 மெட்ரிக்டன் திறன் கொண்ட இரண்டு ஆலைகள் சேத்துப்பட்டு

மற்றும் மாதவரத்தில் இயங்கி வருகிறது. மேலும், கூடுதலாக 5 இடங்களில் நாளொன்றுக்கு மொத்தம் 500 மெட்ரிக் டன் திறன் கொண்ட உயிரி எரிவாயு ஆலைகள் நிறுவ திட்டமிடப்பட்டு கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலையில் உள்ளது.

**அட்டவணை 3.10**

| வ. எண் | செயல் முறை வகைகள் | மொத்த எண்ணிக்கைகள் | திறன் (மெட்ரிக் டன்) |
|---|---|---|---|
| 1 | இயற்கை உரம் தயாரிக்கும் கூடம் | 194 | 560 |
| 2 | காற்று புகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் கூடம் | 2 | 100 |
| 3 | தோட்ட கழிவுகள் மற்றும் இளநீர் குடுவைகளை மறுசுழற்சி செய்யும் நிலையம் | 2 | 160 |
| 4 | இயற்கை உயிரி எரிவாயு நிலையம் | 2 | 200 |
| | **மொத்தம்** | **200** | **1,020** |

நாளொன்றுக்கு 560 மெட்ரிக் டன் உலர் கழிவுகளை கையாள, 143 எண்ணிக்கையிலான பொருள் மீட்புவசதிகள், வள மீட்பு மையங்கள், நவீன

எரியூட்டிகள் மற்றும் இதர மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

இது தவிர, மறுசுழற்சி செய்யமுடியாத எரியக்கூடிய உலர்கழிவுகள் இணை எரியூட்டியாக சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு வாரந்தோறும் 50 மெட்ரிக் டன் நான்கு எண்ணிக்கையிலான பேலிங் மையங்களிலிருந்து (மாதவரம், தங்கசாலை, ஓட்டேரி மற்றும் பள்ளிக்கரணை) அனுப்பப்படுகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் உலர் கழிவுகளை கையாளுவதற்கான வசதிகள் பின்வரும் அட்டவணை 3.11ல் உள்ளன.

**அட்டவணை 3.11**

| வ. எண் | செயல் முறை வகைகள் | மொத்த எண்ணிக்கை | திறன் (மெட்ரிக் டன்) |
|---|---|---|---|
| 1 | பொருள் மீட்பு வசதிகள் / வள மீட்பு மையங்கள் | 136 | 415 |
| 2 | நவீன எரியூட்டு நிலையங்கள் | 3 | 65 |
| 3 | பேலிங் மையங்கள் | 4 | 80 |
| | **மொத்தம்** | **143** | **560** |

**(iii) பதனிடுதல் மற்றும் களைதல் மையங்கள்**

**அ) பெருங்குடி**

பெருங்குடி குப்பை கொட்டும் வளாகம் நகரின் தெற்கு பகுதியில் 225.16 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இவ்வளாகம் கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்பாட்டில் உள்ளது, இதில் 9 முதல் 15 மண்டலங்களில் சேகரிக்கப்படும் கழிவுகள் கொட்டப்படுகிறது.

இதில் தரைமட்டத்திற்கு மேலே உள்ள பழைய குப்பை கழிவுகளின் அளவு சுமார் 30.61 இலட்சம் கன மீட்டர் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி பெருங்குடி குப்பை கொட்டும் வளாக நிலப்பரப்பை, உயிரியல் அகழ்ந்தெடுத்தல் (Bio–mining) முறையில் மீட்டெடுக்க ரூ.350.65 கோடி திட்ட மதிப்பீட்டிற்குத் தூய்மை இந்தியா திட்டத்தின் (SBM) கீழ் 6 சிப்பங்களாக ஒப்புதல் வழங்கப்பட்டது. குப்பை கொட்டும் வளாகத்தில் குவிந்துள்ள திடக்கழிவுகளை அகழ்ந்தெடுத்து பொருட்களை

பிரித்தெடுத்தல் மற்றும் சீரமைத்தல் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை 23.86 இலட்சம் கன மீட்டர் திடக்கழிவுகள் அகழ்ந்தெடுத்து சீரமைக்கப்பட்டுள்ளது. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கூடுதலாக 2.5 இலட்சம் கன மீட்டர் திடக்கழிவுகள் அகழ்ந்தெடுக்கப்படும். இத்திட்டம் முடிவுறும் போது 200 ஏக்கர் பரப்பளவு நிலம் மீட்டெடுக்கப்படும். மீட்டெடுக்கப்பட்ட நிலத்தின் ஒரு பகுதியில் பூங்கா அமைக்கப்படும்.

**ஆ) கொடுங்கையூர்**

மாநகரத்தின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம் 342.93 ஏக்கர் பரப்பளவில் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்பாட்டில் உள்ளது. இதில் 1 முதல் 8 மண்டலங்களில் சேகரிக்கப்படும் கழிவுகள் கொட்டப்படுகிறது.

இதில் தரைமட்டத்திற்கு மேலே உள்ள பழைய குப்பை கழிவுகளின் அளவு சுமார் 66.52 இலட்சம்

மெட்ரிக்டன் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. கொடுங்கையூர் குப்பை கிடங்கில் உயிரியில் அகழ்ந்துத்தெடுத்தல் பணிகள் ரூ.648.38 கோடி மதிப்பீட்டில் தூய்மை இந்தியா திட்ட நிதி மற்றும் ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி (KfW) நிதி உதவியின் கீழ் நடைபெற்று வருகின்றன.

**(iv) கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகள் மேலாண்மை**

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போதைய கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக்கழிவுகளின் சேகரிப்பு தினந்தோறும் சுமார் 800 மெட்ரிக் டன் ஆகும். இச்சேவை வழங்கலை மேம்படுத்துவதற்காக கட்டுமானம் மற்றும் இடிப்பாட்டுக் கழிவுகளை சேகரித்தல் மற்றும் கொண்டு செல்வது தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு அவற்றின் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

மேலும், கொடுங்கையூர் மற்றும் பெருங்குடியில் உள்ள இரண்டு குப்பை கொட்டும் வளாகங்களிலும்

கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை மறுசுழற்சி செய்யும் ஆலைகள் பொதுமக்கள் தனியார் பங்களிப்பு மூலம் நிறுவப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையங்களில் தற்போது ஒருநாளைக்கு சராசரியாக தலா 250 மெட்ரிக் டன் கட்டுமான மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் பெறப்பட்டு மறுசுழற்சி செய்யப்பட்டு வருகிறது. இதுநாள் வரையில் சுமார் 4,00,206 மெட்ரிக் டன் அளவிலான கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் மறுசுழற்சி செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து பெறப்படும் பெரிய மற்றும் சிறிய சரளைக்கற்கள் மற்றும் மணல், கட்டுமான பணிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

**(v) இயந்திர உட்கட்டமைப்பு**

பெருநகர சென்னை மாநகராட்சியில் இயந்திரப் பொறியியல் துறையின் கீழ் தூய்மை பணி, குப்பைகள், கட்டிட கழிவுகளை அகற்றும் பணி மற்றும் இதர துறை பணிக்காக பேட்டரி மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள், கனரக மற்றும் இலகுரக காம்ப்பாக்டர்,

டிப்பர் வாகனங்கள், முன்–பின் பளு தூக்கிகள், புல்டோசர்கள், ஹைட்ராலிக் எஸ்கவேட்டர்கள் உள்ளிட்ட 3,366 வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியின் வசம் உள்ள சிறப்பு உபகரணங்களான 2 ஆம்பிபியன் வாகனங்கள், 4 ரோபாடிக் பல்நோக்கு இயந்திரங்கள் (எஸ்கவேட்டர்கள்), 3 மினி ஆம்பிபியன் வாகனங்கள் ஆகியவை கால்வாய்களில் மிதக்கும் கழிவுகள் மற்றும் தாவரங்களை அகற்றவும், வாகனங்களின் மீது பொருத்தப்பட்ட உயர்திறன் கொண்ட கழிவுகளை உறிஞ்சி நீரை மறுசுழற்சி செய்து பயன்படுத்தும் 7 ரீசைக்லர் இயந்திரங்கள், 9 ஹைட்ராலிக் மூலம் இயங்கும் மரக்கிளை நீக்கும் இயந்திரங்கள், மெரீனா கடற்கரை, பெசன்ட் நகர் கடற்கரை, பாலவாக்கம் கடற்கரை உள்ளிட்ட பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட கடற்கரை மணற்பரப்பில் உள்ள குப்பைகள், காகிதக் கழிவுகள்,

பிளாஸ்டிக் கழிவுகள், உடைந்த பாட்டில்கள், ஓடுகள் ஆகியவற்றை கடற்கரை மணலை சலித்து அகற்றி கடற்கரையை தூய்மை செய்திட 8 எண்ணிக்கையிலான டிராக்டர் மூலம் இயக்கப்படும் மணல் சலிக்கும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

மேலும், 59 எண்ணிக்கையிலான இயந்திரப் பெருக்கி வாகனங்கள் (தனியார் ஒப்பந்ததாரரது வாகனங்கள் உட்பட) சாலையில் உள்ள மண் குவியலை அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்படுகின்றன. மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள பகுதிகளில் வீடு தோறும் சென்று தரம்பிரிக்கப்பட்ட குப்பை சேகரிக்கும் பணியினை துரிதமாகவும், முழுமையாகவும் மேற்கொள்ள 5,966 பேட்டரி மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள் (தனியார் ஒப்பந்ததாரரது வாகனங்கள் உட்பட) ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

மேலும், 3,850 எண்ணிக்கையிலான காம்பாக்டர் தொட்டிகள் புதியதாக கொள்முதல் செய்யப்பட்டு

மண்டலங்கள் 4,5,6,7 மற்றும் 8 பகுதிகளில் பயன்படுத்தப்பட்டு சாலையில் குப்பை சிதறுவது தவிர்க்கப்பட்டு வருகிறது. இந்த தொட்டிகள் அவ்வப்பொழுது சுத்தம் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வரப்படுகின்றன.

**(vi) தகவல் மற்றும் கல்வி**

சுத்தமான மற்றும் குப்பையில்லா நகரத்தை உருவாக்குவதற்கு மக்களுக்கு திடக்கழிவு மேலாண்மை மற்றும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை உருவாக்குவது மிகவும் முக்கியமானதாகும்.

எனவே தூய்மையான நகரத்தை உருவாக்கவும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ளும் முயற்சிகளில் மக்கள் தீவிர பங்களிக்கும் பொருட்டு 03.06.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஒரு மக்கள் இயக்கம் தொடங்கப்பட்டது. இதன் ஒருபகுதியாக ஒவ்வொரு மாதமும் 2ம் மற்றும் 4ம் சனிக்கிழமைகளில் ஒரு சிறப்பு பிரச்சாரம் பெருநகர

சென்னை மாநகராட்சியால் செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலம் பொது இடங்களில் தீவிர சுத்தம் செய்தல், நீர்நிலைகள் தூய்மைப்படுத்துதல், பழுதடைந்த சாலைக்கலன்களை அகற்றுதல், சாலையோரம் உள்ள சேதமடைந்த வாகனங்கள் மற்றும் இதர கழிவுப்பொருள்களை அகற்றுதல், குடியிருப்போர் நலசங்கங்கள் மற்றும் மாணவர்கள் பார்வையிடச் செல்ல தகுந்த ஏற்பாடுகள் செய்தல், திடக்கழிவுகள் கையாளுதல் முறைகள், குப்பைகள் உருவாகும் இடத்திலேயே தரம் பிரித்தல் போன்ற செயல்பாடுகள் நடைபெறுகின்றன. தூய்மை இந்தியா திட்டத்தில் பணியாளர்கள் வீடு வீடாகச் சென்று திடக்கழிவு மேலாண்மை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனர்.

### 3.2.2 பொது சுகாதாரம்

#### பொது சுகாதார சேவைகள்

பெருநகர சென்னை மாநகராட்சியின் பொது சுகாதார துறையானது நோய் தடுப்பு சிகிச்சை வசதிகள்

மற்றும் பொது மக்களை மையப்படுத்திய பல்வேறு சேவைகள் –பூச்சி தடுப்பு நடவடிக்கைகைள், பல்வேறு தேசிய நலத்திட்டங்கள், பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் வழங்குதல் மற்றும் வீடற்றோர்களுக்கான காப்பகங்கள் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை வழங்கி வருகிறது. பொது சுகாதார துறையானது, 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் மற்றும் தமிழ்நாடு பொதுசுகாதார சட்ட விதிமுறைகளை பின்பற்றி நோய் தடுப்பு மற்றும் சுகாதார சேவைகளை வழங்கி வருகின்றது.

**ஆரம்ப சுகாதார சேவைகள்**

பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறந்த சுகாதார உள்கட்டமைப்பின் மூலம், தொற்று மற்றும் தொற்றா நோய்களுக்கு சிகிச்சை, கர்ப்பகால முந்தைய மற்றும் பிந்தைய கவனிப்புகள், குழந்தைகள் மருத்துவம் மற்றும் அடிப்படை பகுப்பாய்வு சோதனைகள் ஆகியவற்றை முழுமையாக அளித்து வருகிறது.

140 நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையங்கள் (UPHC), 16 நகர்ப்புர சமுதாய நல மையங்கள் (UCHC) மற்றும் 3 அவசரகால மகப்பேறு மருத்துவமனைகளின் (Maternity Hospital) மூலம் சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

**நகர்ப்புர சுகாதார மற்றும் நலவாழ்வு மையங்கள்**

நகர்ப்புர சுகாதார மற்றும் நலவாழ்வு மையங்களுக்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பதினைந்தாவது நிதி ஆணைய மானியத்தின் கீழ் ரூ.88.30 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக, 140 நகர்ப்புர சுகாதார மற்றும் நல்வாழ்வு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த மையங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 06.06.2023 அன்று துவக்கி வைக்கப்பட்டன. இந்த மையங்கள் காலை 8.00 மணி முதல் 12.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் 8.00 மணி வரையிலும் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் ஜூன் 2023

முதல் இது நாள் வரையில் 12,37,300 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**தேசிய தர உறுதி தரநிலை:**

நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களில் வழங்கப்படும் சேவைகளின் தரத்தை வலுப்படுத்தும் வகையில், இந்திய அரசின் தேசிய தர அங்கீகாரச் சான்றிதழைப் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் 12 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தரச்சான்றுகள் பெறப்பட்டுள்ளன.

**இரத்த சுத்திகரிப்பு நிலையங்கள்**

பெருநகர சென்னை மாநகராட்சியில் தமிழக முதலமைச்சரின் சுகாதார காப்பீட்டு திட்டத்தின் கீழ் 9 இரத்த சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது, 124 இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் செயல்பட்டு வருகின்றன. சுழற்சி முறையில் 47,980 இரத்த சுத்திகரிப்பு சுழற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**சிறப்பு சேவைகளுடன் கூடிய பல்நோக்கு மருத்துவமனை**

பெருநகர சென்னை மாநகராட்சியில் 40 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் நோக்கு மருத்துவமனை (Polyclinic வெளிநோயாளிகள் சிறப்பு மருத்துவமனை) செயல்பட்டு வருகின்றது. இங்கு குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படுகிறது. இந்த சேவையில் ஆலோசனை மற்றும் ஆய்வக பரிசோதனைகள் அளிக்கப்படுகின்றன. இந்த மருத்துவ சேவைகள் மாலை 4.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை வழங்கப்படுகின்றன. இதன் மூலம் 1,35,032 நபர்கள் ஏப்ரல் 2023 முதல் மார்ச் 2024 வரை பயனடைந்துள்ளனர்.

**தொற்றுநோய் மருத்துவமனை**

பெருநகர சென்னை மாநகராட்சியின் பொது சுகாதாரத் துறையின் கீழ் தொற்றுநோய் மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. கடந்த 1914ம்

ஆண்டு முதல், தற்போது 360 படுக்கை வசதியுடன் 24 மணி நேரமும் இயங்கும் வகையில் செயல்பட்டு வருகின்றன.

**உள்நோயாளிகள் மற்றும் புற நோயாளிகள் சிகிச்சை பெற்ற விவரம்**

| வ எண். | ஆண்டு | உள்நோயாளிகளின் எண்ணிக்கை | புறநோயாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 2021 | 7,043 | 68,797 |
| 2 | 2022 | 5,829 | 84,719 |
| 3 | 2023 | 6,935 | 99,302 |

இங்கு மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அவசர சிகிச்சை வழங்க, மனநல மருத்துவருடன் ஒரு அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையம் 50 படுக்கை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

தொற்றுநோய் மருத்துவமனையில் சிறப்பு மறுவாழ்வு மையம் 50 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தில் குடிநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மறுவாழ்வு மையத்திற்கு பிற மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களிலிருந்தும் சிகிச்சைக்காக வருகின்றனர்.

தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையில் பின்வரும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன:

- மருத்துவ ஆய்வுக்கூட பட்டய பயிற்சி (இரண்டாண்டு)
- உதவி செவிலியர் பயிற்சி (மாணவியர்களுக்கு மட்டும்) (இரண்டாண்டு)

கோவிட் 19 நோயினை கண்டறிய இம்மருத்துவமனையில் நன்கு மேம்படுத்தப்பட்ட RTPCR பரிசோதனை கூடம் செயல்பட்டு வருகிறது. 2021 முதல் 2022 வரை 8,160 நோயாளிகள் இந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இறப்பு நிகழாவண்ணம் சிகிச்சை அளிக்கப்பட்டது.

**சென்னை மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம்**

42 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களில் கண்புரை, கண்பார்வை குறைபாடு, கண் நீரழுத்த நோய் மற்றும் நீரிழிவு நோய் காரணமாக கண் பாதிப்புகள் போன்றவை பரிசோதனை செய்யப்படுகிறது.

**கண் மருத்துவ சேவைகள் விவரம்**

| வ. எண். | ஆண்டு | கண் புரை அறுவை சிகிக்சை | கண் பார்வை குறைபாடு அறுவை சிகிச்சை | நீரிழிவு நோய் காரணமாக கண் பாதிப்புகள் | கண்கள் சேகரிப்பு | இலவச கண்ணாடிகள் வழங்கப்பட்டது |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2021–22 | 10,961 | 371 | 333 | 1,594 | 1,170 |
| 2 | 2022–23 | 15,963 | 303 | 1358 | 2,090 | 7,461 |
| 3 | 2023–24 | 18,432 | 356 | 1856 | 1,841 | 8,243 |

ஒரு தொலைதூர விழியியல் பாதுகாப்பு மையம் செம்மஞ்சேரி ஆரம்ப சுகாதார நிலையத்தில் செயல்பட்டு வருகிறது. 2021–22ல் 426, 2022–23ல் 148, 2023–24ல் 43 கண்புரைகள் கண்டறியப்பட்டு அரசு மருத்துவமனைக்கு அறுவை சிகிச்சைக்கு அனுப்பட்டுள்ளனர்.

2022–2023 ஆம் ஆண்டில், ஐந்து விழிஒளி பரிசோதகர்கள் தேசிய நகர்ப்புர சுகாதாரத் திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டு, நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் பள்ளிகளில் பரிசோதனைகள் மேற்கொண்டு வருகின்றனர். இந்த விழிஒளி பரிசோதகர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களும் இணைந்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் 2022–23 மற்றும் 2023–24 ஆம் ஆண்டில், முறையே 4,526 மற்றும் 4,921 கண்புரைகள் கண்டறியப்பட்டு, அறுவை சிகிச்சைக்கு அரசு மருத்துவமனைக்கு அனுப்பட்டுள்ளனர்.

**தேசிய காசநோய் ஒழிப்பு திட்டம்**

பெருநகர மாநகராட்சியின் கீழ் தற்போது காசநோய் அலகுகள் 36 எண்ணிக்கையிலும், நியமிக்கப்பட்ட நுண்ணோக்கி மையங்கள் 163 எண்ணிக்கையிலும், மேலும் 17 CBNAAT மையங்கள் மற்றும் 14 Truenat மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மருந்து உணர்வுதிறன் காசநோய்

(DS–TB) மற்றும் பன்மருந்து எதிர்ப்பு தன்மை காசநோய் (DR–TB) ஆகிய இரண்டிற்கும் அனைத்து மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிகிச்சை அளிக்கும் வசதிகள் உள்ளன.

காசநோயினை கண்டறிதல் மற்றும் அறிவிப்பு

| வஎண் | ஆண்டு | பரிசோதனைகளின் எண்ணிக்கை | கண்டறியப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 2021 | 60,898 | 10,093 |
| 2 | 2022 | 2,70,561 | 14,658 |
| 3 | 2023 | 3,25,240 | 14,805 |

**காசநோய் தடுப்பு சிகிச்சை**

காசநோய் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் உடன் வசிக்கும் நபர்களுக்கு காசநோய் தடுப்பு சிகிச்சை மருந்து ஜனவரி 2022 முதல் வழங்கப்பட்டு வருகிறது. 2022 ம் ஆண்டில் 4,437 நபர்களில் 3,239 (73%) நபர்களுக்கு காசநோய் தடுப்பு சிகிச்சை மருந்து வழங்கப்பட்டுள்ளது.

**ஊடுகதிர் நடமாடும் வாகனங்கள்**

பெருநகர சென்னை மாநகராட்சியில், நவீன டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி பொருந்திய 7 நடமாடும்

வாகனங்கள் (Mobile X–Ray vehicle) (MDUs) உள்ளன. இந்த வாகனங்களின் மூலம் மக்கள் இருப்பிடத்திற்கே சென்று ஊடுகதிர் (X–Ray) எடுக்கப்படுகிறது. 2022 ம் ஆண்டில் 54,863 நபர்கள் பரிசோதனை செய்யப்பட்டனர். 19,133 நபர்களுக்கு ஊடுகதிர் பரிசோதனை செய்யப்பட்டது. இதில் 91 நபர்களுக்கு காசநோய் கண்டறியப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் 1,57,309 நபர்கள் பரிசோதனை செய்யப்பட்டனர். 33,185 பேர்களுக்கு ஊடுகதிர் பரிசோதனை செய்யப்பட்டது. இதில் 165 பேர்களுக்கு காசநோய் கண்டறியப்பட்டது.

**ஆயுஷ் மருந்தகங்கள்**

மண்டலம் 4,10 மற்றும் 13ல் மூன்று ஆயுஷ் மருத்துவமனைகள் (ஆயுர்வேதா, யோகா, இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி) மற்றும் 9 தனித்து செயல்படும் ஆயுஷ் மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. இங்கு ஏப்ரல் 2023 முதல்

மார்ச் 2024 வரையில் 78,000 நோயாளிகள் பயனடைந்துள்ளனர்.

**பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள்**

பெருநகர சென்னை மாநகராட்சி, பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களை பொது மக்கள் இலவசமாக இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதியை 07.09.2008 முதல் ஏற்படுத்தியுள்ளது. பிறப்பு /இறப்பு சான்றிதழ்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் அதிகாரப்பூர்வமான இணையதளத்தில் இருந்து (www.chennaicorporation.gov.in) இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இச்சேவை தொடங்கப்பட்டதிலிருந்து, 01.04.2023 முதல் 31.03.2024 வரையில் 22,94,317 பிறப்பு சான்றிதழ்களும் 53,01,893 இறப்பு சான்றிதழ்களும் சென்னை மாநகராட்சி இணையதளத்திலிருந்து பொது மக்களால் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மொத்தம் 208 தகன மேடைகள் பராமரிக்கப்படுகின்றன.

அவற்றில் Gasifier – 24, LPG – 14, Electrical – 4, Burial/Cremation – 166 உள்ளன. இந்த மயானபூமியில் செய்யப்படும் அடக்கம் மற்றும் தகனம் சேவைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

**பூச்சித்தடுப்பு பிரிவு**

பூச்சி தடுப்பு பிரிவின் கீழ் 937 நிரந்தர சுகாதார பணியாளர்களும், 2,382 தற்காலிக ஒப்பந்த சுகாதார பணியாளர்களும் மொத்தம் 3,319 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். சென்னையில் உள்ள சுமார் 17 இலட்சம் வீடுகளின் பகுதிகளை சிறுவட்டங்களாக (Sectors) பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வட்டத்திற்கும் சுமார் 500 வீடுகளாக பிரிக்கப்பட்டு வாரந்தோறும் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சி, கொசுக்களின் மூலம் பரவும் நோய்களை தடுப்பதற்கு வாகனத்தில் எடுத்துச் செல்லும் 65 புகைப்பரப்பும் இயந்திரங்கள், கையினால் எடுத்துச்செல்லும் 238 புகைப்பரப்பும்

இயந்திரங்கள் ஆகியவற்றினை கொண்டு புகைமருந்து அடிக்கப்பட்டு முதிர் கொசுக்கள் கட்டுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனுடன் 362 கைத்தெளிப்பான்கள், 202 பேட்டரியினால் இயங்கும் கைத்தெளிப்பான்கள், 2 சிறிய புகைபரப்பும் இயந்திரங்கள் மற்றும் 69 அதிவேகத் திறன் கொண்ட கைத்தெளிப்பான்களைக் கொண்டு மழைநீர் வடிகால்களிலும், திறந்த வெளிகால்வாய்களிலும், நீர்தேங்கி கொசுப்புழுக்கள் உள்ள இடங்களில் கொசுப்புழு கொல்லி மருந்துகள் தெளிக்கப்பட்டு, கொசுப்புழுக்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. நீர்வழிகளில் 6 ட்ரோன்களை கொண்டு கொசுப்புழு நாசினி தெளிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

Mega Amphibian, Mini Amphibian, Robotic Excavator ஆகியவற்றைப் பயன்படுத்தி ஆறு மற்றும் கால்வாய்களில் ஆகாயத்தாமரை செடிகளை அகற்றி,

கொசுப்புழு உற்பத்தி கட்டுப்படுத்தப்படுகிறது. பைபர் படகுகள் மூலம் கால்வாய்கள் மற்றும் நீர்வழிப் பாதைகளில் வளரும் ஆகாயத்தாமரை செடிகளை அகற்றி கொசுக்கொல்லி மருந்துகள் தெளிக்கப்படுகிறது.

**நகர்ப்புர வீடற்றோருக்கான காப்பகங்கள்**

நகர்ப்புர வீடற்றோர்களுக்கு சிறப்பு பராமரிப்பு சேவைகள் வழங்க பெருநகர சென்னை மாநகராட்சியில் 51 இரவுக்காப்பகங்கள் நடத்தப்பட்டு வருகிறது. அவை அரசு சாரா நிறுவனங்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. அவற்றில் 38 வீடற்றோருக்கான காப்பகங்களும், 13 மருத்துவமனை உள்நோயாளிகளின் உடனிருப்பவர்கள் தங்கும் சிறப்பு காப்பகங்களும் அடங்கும்.

## வீடற்றோர் காப்பகங்கள் மூலம் பயனடைந்தவர்கள் விவரம்

## அட்டவணை – 3.12

| இனங்கள் | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|
| வீடற்ற பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை (மீட்கப்பட்டு தங்குமிடங்களில் தங்க வைக்கப்பட்டவர்கள்) | 3,720 | 3,679 | 3,297 |
| சிறப்பு தங்குமிட பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை (2021 முதல்) | 11,425 | 11,215 | 9,495 |
| முதியோர் ஓய்வூதியம் | 81 | 63 | 30 |
| வாக்காளர் அடையாள அட்டை | 9 | 21 | 15 |
| ஆதார் அட்டை | 127 | 60 | 47 |
| ஓட்டுனர் உரிமம் | 8 | 38 | 12 |
| மாற்று திறனாளி ஓய்வூதியம் | 16 | 11 | 4 |
| மாற்று திறனாளி அடையாள அட்டை | 21 | 10 | 12 |
| பள்ளியில் சேர்க்கப்பட்டவர்கள் | 174 | 194 | 100 |
| மீண்டும் ஒருங்கிணைக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை | 341 | 346 | 262 |
| மறுவாழ்வு பெற்றவர்களின் எண்ணிக்கை | 678 | 653 | 498 |
| வங்கி புத்தகம் | 16 | 30 | 10 |

**கால்நடை மருத்துவப்பணிகள்**

பெருநகர சென்னை மாநகராட்சியில் தெரு நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த, இந்திய விலங்குகள் நல வாரியம் வகுத்துள்ள நாய் இனக்கட்டுப்பாடு விதி, 2023 பின்பற்றப்படுகிறது, பொதுமக்களிடமிருந்து தெருநாய்கள் குறித்து பெறப்படும் புகார்களின் அடிப்படையில், தெரு நாய்கள் பிடிக்கப்பட்டு புளியந்தோப்பு, லாயிட்ஸ் காலனி, கண்ணம்மாபேட்டை, மீனம்பாக்கம், சோழிங்கநல்லூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் நாய் இனக்கட்டுப்பாடு மையங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது. அம்மையங்களில் தெருநாய்கள் இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகின்றன பின்னர் மீண்டும் பிடிக்கப்பட்ட பகுதியில் விடுவிக்கப்படுகின்றன. கடந்த 2023 ஆம் ஆண்டில், 19,640 தெருநாய்கள் பிடிக்கப்பட்டு, 14,855 தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சையும்,

வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் செல்லப்பிராணிகள் சிகிச்சை மையங்கள் திரு.வி.க.நகர், நுங்கம்பாக்கம், கண்ணம்மாபேட்டை மற்றும் மீனம்பாக்கம் ஆகிய இடங்களில் செல்லப்பராணிகளுக்கு இலவச சிகிச்சை, வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி மற்றும் செல்லப்பிராணிகளுக்கு உரிமம் வழங்க செயல்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு இம்மையங்களில் 37,341 எண்ணிக்கையிலான செல்லப்பிராணிகளுக்கு சிகிச்சையும் 1,497 செல்லப்பிராணிகளுக்கு உரிமமும் வழங்கப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட சாலைகளில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக சுற்றித்திரியும் மாடுகளை கட்டுப்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள மாடு பிடிக்கும்

பணியாளர்கள் மற்றும் வாகனங்களை கொண்டு தெருக்களில் சுற்றித்திரியும் மாடுகள் பிடிக்கப்பட்டு மாடு பிடிக்கும் வண்டிகளில் ஏற்றப்பட்டு புதுப்பேட்டை மற்றும் பெரம்பூரில் செயல்படும் D மற்றும் G மாட்டுத் தொழுவங்களில் அடைக்கப்பட்டு வருகின்றன. கால்நடை மருத்துவப் பிரிவின் கட்டுப்பாட்டில் இயங்கும் இந்த மாட்டுத் தொழுவங்களில் அடைக்கப்படும் மாடுகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கும் வரை பராமரிக்கப்பட்டு, அவற்றின் உரிமையாளர்களிடம் மீண்டும் தெருக்களில் மாடுகளை திரியவிட மாட்டேன் என்ற உறுதிமொழியுடன் அபராதத் தொகை வசூலிக்கப்பட்ட பின்னர் மாடுகள் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. மாடு ஒன்றிற்கு அபராத தொகையாக முதல் இரண்டு நாட்களுக்கு ரூ.5,000/-மும் பின்னர் நாள் ஒன்றிற்கு கூடுதலாக ரூ.1000/- வசூலிக்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் கடந்த ஆண்டு 4,237 மாடுகள் பிடிக்கப்பட்டு ரூ.92,04,700/- அபராத தொகையாக

வசூலிக்கப்பட்டு சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

**மக்களை தேடி மருத்துவம்**

மக்களை தேடி மருத்துவம் திட்டம் தமிழ்நாடு அரசாங்கத்தால் 5 ஆகஸ்ட் 2021 அன்று மண்டலம் 6இல் தொடங்கப்பட்டு அதன் பிறகு மீதமுள்ள 14 மண்டலங்களிலும் தொடங்கப்பட்டது. பராமரிப்பின் தொடர்ச்சியை உறுதி செய்வதற்கும் பயனாளிகளின் சுகாதாரத் தேவைகளை நிறைவு செய்வதற்கும் விரிவான "வீட்டு அடிப்படையிலான சுகாதார சேவைகள்" வழங்கப்பட்டு வருகின்றது.

மகளிர் சுகாதார தன்னார்வலர்கள், நோய்த்தடுப்பு மற்றும் முதியோர்களை கவனிக்கும் செவிலியர்கள் மற்றும் பிசியோதெரபிஸ்டுகள் அடங்கிய குழுவானது இதற்கான முழுமையான சேவைகளை வழங்குகிறது. இந்த குழுவானது மருந்துப் பெட்டி அளித்தல், பரிந்துரைகள் மற்றும் சமூக சுகாதார கூட்டங்கள் போன்றவற்றினை மேற்கொள்கின்றன. மேற்கண்ட

குழுவானது முதியவர்கள், புற்றுநோயாளிகள் மற்றும் இறுதி நிலை சிறுநீரக நோய் போன்ற நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீட்டிற்கே சென்று சேவைகளை வழங்குகிறார்கள் .

உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய் ஆகிய நோய்கள் அதிக விகிதத்தில் கண்டறியப்படுதல் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய் ஆகிய நோய்களுக்காக பரிசோதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை மார்ச் 2022இல் 22,39,024 லிருந்து தற்போது மார்ச் 2024இல் 68,18,054 ஆக அதிகரித்துள்ளது. வாய்ப்புற்று நோய், மார்பக புற்று நோய், கர்ப்பப்பை புற்று நோய்கள் கண்டறிப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை மார்ச் 2024இல் முறையே 68 நபர்கள், 193 நபர்கள் மற்றும் 68 நபர்கள் கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. தொடர்ச்சியான ஆம்புலேட்டரி பெரிட்டோனியல் டயாலிசிஸ் (CAPD) உட்பட பிசியோதெரபி மற்றும்

பேலியேட்டிவ் சேவைகள் (Palliative Care) கணிசமான எண்ணிக்கையிலான பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மார்ச் 2024 வரை, 23,887 நோயாளிகள் பிசியோதெரபி சிகிச்சையைப் பெற்றுள்ளனர். 33,344 நோயாளிகள் நோய்த்தடுப்பு சிகிச்சை பெற்றுள்ளனர் மற்றும் 43 நோயாளிகள் CAPD பைகளைப் பெற்றுள்ளனர் .

## 3.3. வருவாய்

குடிமக்களின் வாழ்வாதாரத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதற்கு போதுமான வளங்கள் இருந்தால் தான் திட்டங்களை செயல்படுத்த முடியும்,

பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆண்டு வரவு செலவு ரூ.7,800கோடி ஆகும். 2022-23 ஆம் நிதியாண்டின் வரவு செலவு கணக்குகள் அட்டவணை - 3.13ல் பின்வருமாறு:

**அட்டவணை - 3.13**

| வ.எண் | கணக்கு தலைப்பு | 2022 - 2023 (ரூ. கோடியில்) |
|---|---|---|
| **வருவாய் கணக்கு** | | |
| 1 | வரவு | 3,779.02 |
| | செலவு | 3,790.08 |
| **மூலதன கணக்கு** | | |
| 2 | வரவு | 3,151.26 |
| | செலவு | 2,829.57 |

பெருநகர சென்னை மாநகராட்சிக்கான பல்வேறு வருவாய் ஆதாரங்கள்/ வரவினங்கள் விவரம் படம்-1 பெருநகர சென்னை மாநகராட்சிக்கான பல்வேறு வருவாய் செலவினங்கள் விவரம் படம்-2.

**வருவாய் வரவினம்**



**வருவாய் செலவினம்**



# மூலதன வரவினம்




# மூலதன செலவினம்



### 3.3.1 வருவாய் துறை

சொத்துவரி, தொழில் வரி, நிறுவன வரி, கேளிக்கை வரி, தொழில் உரிமம் கட்டணம் மற்றும் வணிக வளாகங்களில் வாடகை ஆகியவற்றை வசூலிக்கும் பொறுப்பு வருவாய் துறையை சார்ந்தது. அட்டவணை 3.14–ல் மேற்கண்ட இனங்களின் கேட்பு வகைப்படுத்தப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியானது, வருவாய் வசூலினை மேம்படுத்துவதற்கு, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து, புதுமைகளையும், தொழில்நுட்ப யுக்திகளையும் கையாண்டு வருகிறது.

**அட்டவணை – 3.14**

| வ.எண் | இனங்கள் | நிதி ஆண்டு 2023–24 திருத்திய மதிப்பீடு (ரூ. கோடியில்) | 2024–25 மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | சொத்துவரி | 1,680.00 | 1,750.00 |
| 2 | தொழில்வரி | 500.00 | 550.00 |
| 3 | கேளிக்கைவரி | 50.00 | 50.00 |
| 4 | தொழில்உரிமம்கட்டணம் (ம) நிறுவனவரி | 26.80 | 29.00 |
| 5 | வணிகவளாகவாடகை | 25.00 | 25.00 |

### 3.3.2. தொழில்நுட்பம் மூலம் வசூல் மேம்படுத்துதல்

பெருநகர சென்னை மாநகராட்சி நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வரிவசூலை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியானது புவிசார் தகவல் தொழில்நுட்ப (GIS) அமைப்பை செயல்படுத்தி, வரி இனங்களில் விடுபடாமல் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதை உறுதிசெய்வதற்காக பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்டுள்ள அனைத்து சொத்துக்களையும் வரைப்படமாக்கியுள்ளது. அதாவது சொத்துவரி மற்றும் பிறவரி இனங்கள் முறையாக விதிப்பதை உறுதி செய்ய இயலும். இதன் மூலம் குறைந்த மற்றும் வரிமதிப்பீடு செய்யப்படாத இனங்கள், வணிக நிறுவனங்கள் செலுத்த வேண்டிய தொழில்வரி மற்றும் உரிமம் கட்டணம் போன்றவற்றில் இதுவரை ரூ.100/- கோடி கூடுதலாக ஆண்டு கேட்பு உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியானது தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் சென்னை பெருநகர குடிநீர்வழுங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், நிறுவனங்களின் பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள் போன்ற அரசுத்துறைகளின் தரவுத்தளங்களுடன் (Database) விரிவான ஒத்திசைவு மேற்கொண்டு வருகிறது.

வரிசெலுத்துவோர் வரி இனங்களை எளிதாக செலுத்த ஏதுவாக கள அலுவலர்களுக்கு கையடக்க கருவி (POS) வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம், காசோலைகள்/வரைவோலைகள்/ பற்று மற்றும் கடன் அட்டைகள் கொண்டு வரிசெலுத்தி உடனடியாக ரசீதுகள் பெற்றுக் கொள்ள இயலும்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி வலைதளம், நம்ம சென்னை கைபேசிசெயலி, பாரத் பில் கட்டணமுறை (BBPS) போன்றவற்றின் வாயிலாக இணையதளம் மூலம் வரிஇனங்களை செலுத்தவழி வகைசெய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், UPI,

நெட்பேங்கிங், பற்று / கடன்அட்டைகள், பேமெண்ட் வாலட்கள் ஆகியவற்றின் மூலம் வரி இனங்களை செலுத்தலாம். இந்தத் தொழில்நுட்ப வசதி மேற்கொள்ளப்பட்டுள்ளதால், 65 சதவீத சொத்து உரிமையாளர்கள் சொத்துவரியினை இணையதளம் வாயிலாக செலுத்துகின்றனர்.

**3. 4. கல்வி**

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் செயல்படும் அனைத்து சென்னைப் பள்ளிகளின் வாயிலாக அனைத்து மாணவ/ மாணவியர்களுக்கு தரமான கல்வி மற்றும் வாழ்க்கைத் திறன்களை மேம்படுத்தும் விதமான கல்வி வழங்கப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையில், தற்போது மொத்தமாக 417 பள்ளிகளில், 3,690 ஆசிரியர்கள் மற்றும் 142 நிரந்தர ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் பணிபுரிகின்றனர். இப்பள்ளியில் 1,20,175 மாணவ / மாணவியர்கள் கல்வி பயில்கின்றனர். மேலும் 210 தொடக்க மற்றும் நடுநிலை

பள்ளிகளில் உள்ள மழலையர் பிரிவுகளில் சுமார் 11,000 மாணவர்கள் பயின்று வருகின்றனர் (அட்டவணை 3.15)

**அட்டவணை – 3.15**

| பள்ளிகளின் வகைகள் | பள்ளிகளின் எண்ணிக்கை 2022-23 | பள்ளிகளின் எண்ணிக்கை 2023-24 |
|---|---|---|
| தொடக்கப்பள்ளிகள் | 119 | 206 |
| நடுநிலைப்பள்ளிகள் | 92 | 130 |
| உயர்நிலைப்பள்ளிகள் | 38 | 46 |
| மேல்நிலைப்பள்ளிகள் | 32 | 35 |
| **மொத்தம்** | **281** | **417** |

### 3.4.1 மாணவர்களின் சேர்க்கை மற்றும் வருகைப் பதிவு விவரம்

2023-24 ஆம் கல்வியாண்டில் சென்னை பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை 1,20,175 ஆக உள்ளது. பள்ளிகளில் மாணவர்களின் வருகையை மேம்படுத்த, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மற்றும் மகிழ்ச்சியான வகுப்பறைகள், மாணவர்களின் வருகையை ஊக்குவிக்க பள்ளி அளவில் சிறந்த மாணவர்களின் பெயர்களை அறிவிப்பு பலகையில்

தெரியப்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**3.4.2 சிறப்பு கவனம் செலுத்தும் பகுதிகளின் விவரங்கள்:**

தமிழகத்தில் ஆரம்ப வகுப்புகளில் கற்பித்தல் மற்றும் கற்றல் தரத்தை மேம்படுத்தும் வகையில் திட்டமிடப்பட்டுள்ள, தமிழக அரசின் முதன்மைத் திட்டமான, எண்ணும் எழுத்தும் திட்டத்தை செயல்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2025 ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் 1,2 மற்றும் 3 ஆம் வகுப்பு படிக்கும் அனைத்து மாணவர்களும் பொருள் புரிந்து வாசிக்கவும், அடிப்படை எண்கணிதத் திறன்களை 2023–24 ஆம் கல்வியாண்டில் பெற வேண்டும் என்பதே எண்ணும் எழுத்தும் திட்டத்தின் குறிக்கோள் ஆகும். மேலும்,

4 மற்றும் 5 ஆம் வகுப்புகளும் எண்ணும் எழுத்தும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

இது தவிர, கோடை விடுமுறையில் மாணவர்களுக்கு ஏற்படும் கற்றலில் உள்ள இடைவெளியைக் குறைக்க உதவும் வகையில் அடுத்த கல்வியாண்டின் முதல் இரண்டு மாதங்களில் தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களுக்கான பிரிட்ஜிங் வகுப்புகளை நடத்தவும் பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித் துறையால் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் ஆங்கிலத்தில் பேசும் திறனை வளர்ப்பதற்காக, பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பல்வேறு அரசு சாரா அமைப்புகள் மற்றும் நிறுவன சமூக பொறுப்பாண்மை மூலம் பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது.

அனைத்து பள்ளிகளும் நூலக புத்தகங்களை திறம்பட பயன்படுத்துகின்றன மற்றும் மாணவர்கள்

புத்தகங்களை வீட்டிற்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். மாணவர்கள் நூலகப் புத்தகங்களில் தாங்கள் படித்த தலைப்புகளை வரையவோ, விரிவாகப் பேசவோ அல்லது எழுதவோ ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**3.4.3 CITIIS நிதியின்கீழ் "மாதிரி மற்றும் சீர்மிகு சென்னை பள்ளிகள்"**

சென்னை ஸ்மார்ட் சிட்டி லிமிடெட் (CSCL) மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, CITIIS நிறுவனத்துடன் இணைந்து சென்னைப் பள்ளிகளில் நவீன மற்றும் வளவகுப்பறைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டமானது, தேர்ந்தெடுக்கப்பட்ட சென்னைப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு, மின்னணு உட்கட்டமைப்பு, கற்பித்தல், ஆசிரியர் பயிற்சி, விளையாட்டு மற்றும் கூடுதல் பாடத்திட்டங்கள் போன்ற பல்வேறு கூறுகளில் ஒரு முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தும்.

CITIIS திட்டத்தின் கட்டம்–Iஇல் மொத்தத் திட்டச் செலவு ரூ.95.25 கோடி, இதில் ரூ.19.05 கோடியை (20%) சென்னை சீர்மிகு நகரத்திட்ட சிறப்பு நோக்கு நிறுவனம் ஏற்றுக்கொண்டது. மீதமுள்ள ரூ.76.2 கோடி (80%) இத்திட்ட நோக்கத்திற்காக சென்னை சீர்மிகு நகரத்திட்ட சிறப்பு நோக்கு நிறுவனத்தால் மானியமாக பெறப்பட்ட AFDஆல் நிதியளிக்கப்பட்ட கடனாகும், அரசால் 50% திருப்பிச் செலுத்தும் உறுதியுடன் தமிழ்நாடு மற்றும் இந்திய அரசு முறையே இந்தியாவின் 18 பள்ளி வளாகங்களில் உள்ள 28 பள்ளிகள், ஆசிரியர் மேம்பாடு, ஸ்மார்ட் பள்ளி மேலாண்மை அமைப்பு போன்ற பல பான்–சிட்டி தலையீடுகளைத் தவிர, உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்டன. ரூ.80 கோடி அனைத்து உட்கட்டமைப்பு மேம்பாடுகள் உட்பட முதலாவது கட்டத்தில் முடிக்கப்பட்டுள்ளன.

CITIIS திட்டத்தில் சென்னையை சிறப்பாகச் செயல்படும் நகரமாக அங்கீகரித்து, சீர்மிகு நகரத்

திட்டம், ஒன்றிய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர விவகாரங்கள் துறை மற்றும் AFD ஆகியவற்றின் மூலம் சென்னைக்கு கூடுதல் நிதியாக ரூ.35.68 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு 6 வளாகங்களில் உள்ள 11 பள்ளிகளுக்கு நகர முழுமை (Pan City) மென்கூறுகளைத் தவிர, உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான முன்மொழிவு வழங்கப்பட்டுள்ளது. எனவே, கட்டம்–I மற்றும் கட்டம்– II ஆகிய இரண்டிற்கும் மொத்த திட்டச் செலவு ரூ.156.58 கோடி. அதன் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை – 3.16**

| | திட்ட செலவு மற்றும் சிறப்பு நோக்கு நிறுவன பங்கு | | கடன் | |
|---|---|---|---|---|
| | | | | (ரூபாய் கோடியில்) |
| **கட்டம்** | **மொத்த திட்டச் செலவு** | **சிறப்பு நோக்கு நிறுவன பகிர்வு** | **மாநில அரசு பகிர்வு** | **ஒன்றிய அரசின் பகிர்வு** |
| கட்டம் –I | 95.25 | 19.05 | 38.10 | 38.10 |
| கட்டம்– II | 61.33 | 25.65 | 17.84 | 17.84 |
| **மொத்தம்** | **156.58** | **44.70** | **55.94** | **55.94** |

### 3.4.4 நிர்பயா நிதியின் கீழ் பொது இடங்களில் பெண்களின் பாதுகாப்பு

"பொது இடங்களில் பெண்கள் பாதுகாப்பு", நிர்பயா நிதியின் திட்ட மதிப்பீடு ரூ.425.06 கோடி. இதில் 60% செலவில் (ரூ.255.03 கோடி) இந்திய அரசாங்கத்தாலும் மற்றும் மீதமுள்ள 40% (ரூ.170.03 கோடி) தமிழக அரசாங்கத்தாலும் நிதி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் பெருநகர சென்னை மாநகராட்சி, பெருநகர சென்னை காவல்துறை, சமூக நலம் மற்றும் பெண்கள் நலத்துறை மற்றும் பெருநகர போக்குவரத்து கழகம் ஆகியவை முக்கிய பங்குதாரர்களாகும். நிர்பயா திட்டத்தின் கீழ் சென்னைப் பள்ளிகளில் எடுக்கப்படும் திட்டங்கள் பின்வருமாறு:

**அட்டவணை 3.17**

| வ. எண். | பொருள் | மதிப்பீடு (ரூ– கோடியில்) | நிலை |
|---|---|---|---|
| 1 | தெரு விளக்குகளின் தொலைநிலை கண்காணிப்பு | 14.07 | பணிகள் முடிவுற்றன |

| வ. எண். | பொருள் | மதிப்பீடு (ரூ–கோடியில்) | நிலை |
|---|---|---|---|
| 2 | GCC பள்ளிகளில் சிறுமிகளுடன் பாதுகாப்பு கண்காணிப்பு | 5.47 | முடிக்கப்பட்டது – (159 பள்ளிகளில் 636 கேமராக்கள் பொருத்தப்பட்டன). இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் (5 ஆண்டுகள்) முன்னேற்றத்தில் உள்ளது. |
| 3 | GCC பள்ளிகளில் சிறுமிகளை மேம்படுத்த பாதுகாப்பான மற்றும் புத்திசாலித்தனமான தற்காப்பு | 6.91 | விளையாட்டு பயிற்சி மைதானங்களை மேம்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது ரூ.4.06 கோடி/தற்காப்பு டெண்டர் (ரூ.2.85கோடி) |
| 4 | GCC பள்ளிகளில் மாதவிடாய் சுகாதார மேலாண்மை | 4.79 | பணிகள் நிறைவடைந்தன. இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது. |
| 5 | பெண்களின் பாதுகாப்பிற்காக பொது இடங்களில் விளக்கு வசதிகளை மேம்படுத்துதல் | 68.99 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 6 | மாற்றுத்திறனாளி பெண்களுக்கான தங்குமிடம் கட்டுதல் | 3.08 | பணிகள் முடிவுற்றன |
| 7 | PMC விரிவாக்கம் மற்றும் வடிவமைப்பு ஆலோசகர் | 8.50 | பணிகள் முடிவுற்றன |
| 8 | பாலின ஆய்வகம் | 4.03 | 3 ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் |
| 9 | மூன்றாம் தரப்பு சுயாதீன மதிப்பீடு | 0.50 | அனைத்து திட்டங்களும் நிறைவடைந்த பிறகு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| வ. எண். | பொருள் | மதிப்பீடு (ரூ– கோடியில்) | நிலை |
|---|---|---|---|
| 10 | சுகாதாரம்– ரூ.57.25 கோடி | | |
| | A. நடமாடும் கழிப்பறைகள் | 5.40 | பணிகள் முடிவுற்றன |
| | B. மகளிர் கழிப்பறைகளை புதுப்பித்தல் | 32.98 | பணிகள் முடிவுற்றன |
| | C. GCC பள்ளிகளில் சிறுமிகளுடன் பாதுகாப்பான கழிப்பறைகள் | 18.87 | பணிகள் முடிவுற்றன |
| | **மொத்தம்–GCC திட்டங்கள்** | **173.59** | |

### 3.4.5 சமுதாய கல்லூரிகள் மற்றும் தமிழ்நாடு அரசு தொழிற்பயிற்சி நிறுவனம் (ITI)

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–9 இல் ஒரு தொழில் பயிற்சி நிறுவனம் (ITI) நடத்தப்படுகிறது. இது தேசிய தொழிற்பயிற்சி கவுன்சிலுடன் (NCVT) இணைக்கப்பட்டுள்ளது. இதில் பிளம்பர்கள், ஃபிட்டர்கள், மெக்கானிக்ஸ், எலக்ட்ரீஷியன்கள், மோட்டார் மெக்கானிக்ஸ் மற்றும் கணினி ஆபரேட்டர்கள் போன்ற பல்வேறு பயிற்சிகள் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இந்த பயிற்சிகளை முடித்த பிறகு, பயிற்சி பெறுபவர்களுக்கு

பல்வேறு நிறுவனம் மூலம் வேலை வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியால் இரண்டு சமுதாயக் கல்லூரிகள் நடத்தப்படுகின்றன, அதில் பள்ளிப்படிப்பிற்கு பிறகு கல்வியைத் தொடர முடியாத மாணவர்களுக்காக கணினி மென்பொருள், பாராமெடிக்கல் படிப்புகள், பேக்கிங் மற்றும் மிட்டாய் தயாரித்தல் மற்றும் சணல் பை தயாரித்தல் போன்ற பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் இந்த சமுதாய கல்லூரிகளில் கற்பிக்கப்படுகின்றன.

### 3.4.6 அரசு சாரா அமைப்புகளின் (NGO) முயற்சிகள்

அரசு சாரா அமைப்புகளின் பணிகளானவை, ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு சம்பந்தமான தொடர்ச்சியான செயல்முறையாகும், இதில் சென்னை பள்ளிகளுக்கான தேவைகள் அரசு சாரா அமைப்புகள் / நிறுவன சமூக பொறுப்பாண்மை மூலம் கோரிக்கைகளாக அளிக்கப்படுகிறது. சென்னைப் பள்ளிகளின் தேவைகள் குறித்து பேச்சுவார்த்தை

நடத்தவும், உரிய முறையில் நிதி திரட்டவும், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் நிறுவன சமூக பொறுப்பாண்மை பங்குதாரர்களுடன் வழக்கமான கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. முறையான புரிந்துணர்வு ஒப்பந்தம் அல்லது அனுமதி மூலம் தற்போது சென்னை பள்ளிகளுடன் சுமார் 45 அரசு சாரா அமைப்புகள் ஈடுபட்டுள்ளன. அடிப்படை கற்றல் திறன்கள், விளையாட்டு முயற்சிகள், STEM பயிற்சி, பல்லுயிர் கல்வி, மாண்டிசோரி பயிற்சி மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு, கலை மற்றும் கைவினை அடிப்படையிலான வாழ்க்கைத் திறன், ஆங்கில பேச்சுத்திறன் மற்றும் மென்திறன்கள், தொழில் வழிகாட்டுதல், உளவியல் ஆலோசனை, ரோபாட்டிக்ஸ் போன்றவற்றை கற்பிப்பதில் அரசு சாரா அமைப்புகள் பெரும் பங்கு வகிக்கின்றன.

அடுத்த கல்வியாண்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் மேம்பாட்டிற்கான பகுதிகள், திட்டமிடல் ஆகியவற்றை அறிவதற்கு அரசு சாரா

நிறுவனங்களுடன் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. பல்வேறு தவிர்க்க முடியாத காரணங்களால் அடிக்கடி விடுபடும் வடசென்னை பள்ளிகள் மீது அதிக கவனம் செலுத்தப்படுகிறது. இந்த ஆண்டு நடுநிலை மற்றும் தொடக்கப் பள்ளிகள் / வகுப்புகளில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

### 3.4.7 உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்கள்

143 பள்ளிகள் பயன்பெறும் வகையில் மொத்தம் 152 உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்டு, பல்வேறு கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதன் விவரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை 3.18**

| திட்டம் | முடிவுற்றது | திட்டத்திற்கு முன்மொழிய ப்பட்டது | ஒப்பம் நடந்து வருகிறது | வேலை நடந்து கொண்டிருக் கிறது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **நமக்கு நாமே திட்டம்** | 0 | 7 | 6 | 16 | 29 |
| **CITIIS** | 26 | 0 | 0 | 0 | 26 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| CITIIS 2.0 | 0 | 7 | 0 | 0 | 7 |
| சிங்கார சென்னை | 0 | 65 | 0 | 0 | 65 |
| வடசென்னை வளர்ச்சி திட்டம் | 0 | 14 | 0 | 0 | 14 |
| SFC (TUFIDCO) நிதியுதவி | 0 | 11 | 0 | 0 | 11 |
| **மொத்தம்** | **26** | **104** | **6** | **16** | **152** |

## அட்டவணை 3.19

| பள்ளி வகை | திட்டங்கள் கொண்ட பள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| மேல்நிலைப்பள்ளி | 31 |
| உயர்நிலைப்பள்ளி | 16 |
| நடுநிலைப்பள்ளி | 32 |
| தொடக்கப்பள்ளி | 64 |
| மொத்தம் | 143* |

*9 பள்ளிகளில் தலா 2 திட்டங்கள் உள்ளன.

அனைத்து பள்ளிகளுக்கும் வகுப்பறைகளில் அதிநவீன இரட்டை மேசைகள் வழங்கப்படுகின்றன. இது, தற்போது படிப்படியாக செயல்படுத்தப்படுகிறது.

## 3.4.8 ஆசிரியர்களுக்கான திறன் மேம்பாட்டு முயற்சிகள்

### 3.4.8.1 பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான தலைமைத்துவ மேம்பாட்டு பயிற்சி (SLDT)

இப்பயிற்சி தலைமையாசிரியர்கள் மற்றும் உதவி தலைமையாசிரியர்கள் மற்றும் சில ஆர்வமுள்ள தலைவர்களை உள்ளடக்கிய 600 பள்ளித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டது. பயிற்சி பட்டறை மற்றும் பள்ளியின் செயல்பாட்டிற்கான வழிகாட்டுதல் ஆகிய இரண்டு கட்டங்களைக் கொண்டிருந்தது.

இப்பயிற்சியில், தன் ஆளுமைத்திறன் (Personal Development), கல்வி தலைமை (Academic Leadership), கல்வி நிர்வாகத் தலைமை (Administrative Leadership), ரிலேஷனல் தலைமை (Relational Leadership) மற்றும் நிறுவனத் தலைமை (Organizational Leadership) ஆகியவை தலைமையின் ஐந்து பகுதிகளாகும். பயிற்சியில் முக்கிய செயல்பாட்டு குறியீடுகள் (KPI) இருந்தன மற்றும் செயல்படுத்தலின் முன்னேற்றம்

அவ்வப்போது பதிவு செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டது.

சென்னை பள்ளிகளில் 279 நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில், அனைத்து முக்கிய தேவைகளையும் உள்ளடக்கிய ஒரு SDP தயார் செய்ய வசதி செய்யப்பட்டுள்ளன. SLDT கட்டம் 2 ல் விரிவாக்கப்பட்ட பகுதி பள்ளிகளை சேர்ந்த 278 ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**3.4.8.2 மாண்டிசோரி பயிற்சி**

25 பள்ளிகளைச் சேர்ந்த 44 மழலையர் பிரிவு ஆசிரியர்களுக்கு 10 மாத கால மாண்டிசோரி பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி மற்றும் மதிப்பீடு நிறைவடைந்து, 2024–25 கல்வியாண்டில் இந்த 25 பள்ளிகளில் மாண்டிசோரி கற்பித்தல் தொடங்கப்படும்.

### 3.4.8.3 நான் முதல்வன்

நான் முதல்வன் திட்டம் மாணவர்களுக்கு படிப்புகள் மற்றும் தொழில் சார்ந்த திறன் சலுகைகள் பற்றிய தொடர்புடைய தகவல்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் மூலம் சென்னை பள்ளிகளில் மாணவர்கள், ஆர்வமுள்ள துறையை தேர்ந்தெடுத்து பயிற்சி பெற்று தொழில் இலக்கை எளிதில் அடைய உதவும்.

இந்தத் திட்டத்தின் நோக்கம், தற்போதைய தொழில்துறை இடைவெளிகளின் அடிப்படையில் பல்வேறு திறன் பயிற்சிகளை வழங்க, சாத்தியமான பயிற்சி வழங்குநர்களை அடையாளம் காண்பதாகும்.

இந்த முதன்மைத் திட்டத்தின் மூலம், மாணவர்கள் பயிற்சி பெறவும், அவர்களின் திறமைக்கு ஏற்ப வேலை கிடைப்பதை உறுதி செய்யவும் முடியும். மாநில கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கு தொழில் மற்றும் கல்வி வழிகாட்டுதல் வழங்கப்படுகிறது. 35 சென்னைப் பள்ளிகளின் சுமார் 70 ஆசிரியர்கள் இந்த திட்டத்தை

அந்தந்த பள்ளிகளில் செயல்படுத்த பயிற்சி பெற்றுள்ளனர்.

### 3.4.9 விளையாட்டு வசதிகள்

சென்னை பள்ளிகள், மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை எளிதாக்கும் வகையில் நன்கு மேம்பட்ட விளையாட்டு மைதானங்கள் மற்றும் உட்புற விளையாட்டு அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது 310 பள்ளிகளில் விளையாட்டு மைதானங்களும், 242 பள்ளிகளில் உள்ளரங்க விளையாட்டுப் பகுதியும் உள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி ஆனது மாணவர்களின் விளையாட்டில் தங்கள் திறமையை மேம்படுத்துவதற்காக நவீன கால்பந்து மைதானம்உருவாக்கியுள்ளது.

### 3.4.10 ஆய்வக வசதிகள்

பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் உள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளும் பள்ளியின் தேவைக்கேற்ப பாடம் சார்ந்த

ஆய்வக வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. இது தவிர, மாணவர்களின் புதுமையான சிந்தனையை ஊக்குவிக்கும் வகையில் 6 பள்ளிகளில் STEM ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### 3.4.11 பாலின சமத்துவக் குழு

பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகம் (GPL) என்பது பெருநகர சென்னை மாநகராட்சியின் முன்முயற்சியாகும், இது சுற்றுச்சூழலை பெண்களுக்கு பாதுகாப்பானதாக மாற்றுவதையும், பாலின முக்கியத்துவத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. GPL இன் குறிக்கோள், பொது இடங்கள் மற்றும் போக்குவரத்தில் பாதுகாப்பு மற்றும் பாலினப் பொறுப்புணர்வை அதிகரிப்பதன் மூலம் பெண்கள் தங்களுக்கான வாய்ப்புகளை எளிதாக அணுக உதவுவதாகும். Gender Clubs என்பது GPL இன் முன்முயற்சியானது, பாலின பாகுபாடு, இளமைப் பருவம், ஆரோக்கியமான உறவுகள், பாலின சமத்துவம், பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் பிற

தலைப்புகளில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அனைத்து நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் 30 மாணவர்களைக் கொண்ட குழு அமைத்து இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.

### 3.4.12 சமூக நலன் மற்றும் மாணவர் ஆலோசனை

தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து சென்னைப் பள்ளிகளின் மாணவர்கள் மற்றும் பெற்றோருக்குரிய விழிப்புணர்வு, உளவியல் மற்றும் தொழில் சார்ந்த ஆலோசனைகளை வழங்குவதற்கான சமூக நலன் சார்ந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2024–25 ஆம் ஆண்டு முதல் மாணவ / மனைவியர்களின் உளவியல் சார்ந்த பிரச்சனைகளை எதிர்கொள்ளத் தேவையான ஆலோசனைகளை வழங்க அர்ப்பணிப்புள்ள உளவியல் ஆலோசகர்களை நியமிக்க, நிபுணத்துவ நிறுவனங்களுடன்

கூட்டுசேர்ந்து செயல்படுத்த பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித் துறை திட்டமிட்டுள்ளது.

**3.5 நமக்கு நாமே திட்டம்**

பெருநகர சென்னை மாநகராட்சியில் "நமக்கு நாமே திட்டம்" பொதுச்சொத்துக்களை மேம்படுத்தவும், நீர்நிலைகள், சாலைகள், வடிகால்கள், மயானங்கள், பூங்காக்கள், CCTV கேமரா, அழகுபடுத்தல், பள்ளிகள், மருத்துவ மனைகள் உள்ளிட்ட கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் பராமரிப்பதில் பொது மக்களின் பங்களிப்பை அதிகரிக்க செயல்படுத்தப்படுகிறது. நமக்கு நாமே திட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சுமார் ரூ.99.47. கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 600 எண்ணிக்கையிலான பணிகளுக்கு ரூ.95 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் பங்களிப்பாளர்களின் தொகையாக ரூ.48 கோடியே 25 இலட்சமும்,

அரசாங்கத்தின் தொகையாக ரூ.47 கோடியே 25 லட்சமும் பங்களிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

தற்போது நமக்கு நாமே திட்டத்தின் வழிகாட்டுதலின்படி, 9 எண்ணிக்கையில் குளங்களை மேம்படுத்தும் பணிகளும், 121 எண்ணிக்கையில் பூங்கா மற்றும் விளையாட்டு திடல்களை மேம்படுத்தும் பணிகளும் மற்றும் மரக்கன்றுகள் நடும்பணிகளும், 172 எண்ணிக்கையில் சென்னை பள்ளிகளை மேம்படுத்தும் பணிகளும், 140 எண்ணிக்கையில் அழகுபடுத்தும் பணிகளும், 33 எண்ணிக்கையில் பொது கழிப்பிடங்களை மேம்படுத்தும் பணிகளும் மற்றும் 8 எண்ணிக்கையில் மயான பூமி மற்றும் தகன மேடையினை மேம்படுத்தும் பணிகளும், 117 எண்ணிக்கையில் மைய தடுப்புச்சுவர், மழைநீர் வடிகால் மேம்படுத்துதல், மருத்துவமனைகளை மேம்படுத்தும் பணி, மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துதல், போன்ற பிற பணிகளும் நடைபெற்றுவருகிறது.

**3.6 நகர்ப்புர வேலைவாய்ப்பு திட்டம்**

நகர்ப்புர வேலைவாய்ப்புத்திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியில் பொருளாதாரத்தில் பின் தங்கிய மக்களைக் கொண்ட மண்டலம் – 4 (தண்டையார்பேட்டை) மற்றும் மண்டலம்–6 (திரு.வி.க.நகர்) ஆகிய இரண்டு மண்டலங்கள் முன்மாதிரியாக இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புர வேலைவாய்ப்புத்திட்டத்தில் மண்டலம் மொத்தமாக ரூ.10.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், பெருநகர சென்னை மாநகராட்சியில் மழைநீர் கால்வாய் தூர்வாரும் பணிக்காக தினக்கூலியாக ரூ.382/– நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் இருமண்டலங்களிலும் சேர்ந்து இதுவரை 3,00,000 வீடுகள் ஆய்வு செய்து 54,072 எண்ணிக்கையிலான

நபர்களை தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதில் 47,464 பயனாளிகளுக்கான வேலை அட்டை(Job Card) வழங்கப்படஉள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மண்டலம்–4 மற்றும் மண்டலம் – 6ல் இதுவரை 38 பணிகளுக்கு ரூ.3.07 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, இதில் 37 பணிகள் முடிவுற்றது. இதுவரை 88,428 நபர்களை கொண்டு 48,932 கனமீட்டர் வண்டல் மண் பல்வேறு சாலைகளில் உள்ள மழைநீர் வடிகால்களில் தூர்வாரப்பட்டுள்ளது.

**3.7 சிங்கார சென்னை 2.0**

தமிழ்நாடு அரசு 2021–22ம் ஆண்டில் பெருநகர சென்னை மாநகராட்சியில் நவீன, உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளை வழங்குவதற்காக "சிங்கார சென்னை 2.0" திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்திற்காக 2021–22,

2022–23 மற்றும் 2023–24 நிதியாண்டுகளில் ரூ.500 கோடி ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இம்மூன்று நிதியாண்டுகளிலும் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் எடுக்கப்பட்ட பணிகளின் சுருக்க விவரம் அட்டவணை 3.20, 3.21 மற்றும் 3.22 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

**சிங்கார சென்னை 2.0 – 2021–22**

**அட்டவணை 3.20**

| வ. எண். | திட்டம் | அனுமதிக்கப்பட்டவை | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை (ரூ.கோடியில்) |
| 1 | செயற்கை நீருற்று | 26 | 1.29 |
| 2 | பூங்கா மேம்படுத்தும் பணி | 27 | 23.25 |
| 3 | விளையாட்டு திடல் மேம்படுத்தும் பணி | 17 | 12.49 |
| 4 | மாறும் வண்ண மின் விளக்குகள் | 1 | 1.81 |
| 5 | பேருந்துதட சாலைகள் | 59 | 37.57 |
| 6 | மயான பூமி | 10 | 6.14 |
| 7 | சாலை பெயர் பலகை | 1 | 8.43 |
| 8 | மழைநீர் வடிகால் (கட்டம் –I – 10, | 19 | 260.87 |

| வ. எண். | திட்டம் | அனுமதிக்கப்பட்டவை | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை (ரூ.கோடியில்) |
| | கட்டம் –II–9) | | |
| 9 | பள்ளிகள் | 23 | 49.83 |
| 10 | நீர் நிலைகள் | 12 | 9.08 |
| 11 | மாற்றுத்திறனாளிகளுக்கான நடைபாதை | 1 | 1.14 |
| 12 | நாய்கள் இன கட்டுப்பாட்டு மையம் | 2 | 0.81 |
| 13 | பாலங்களின் கீழ்பகுதியில் அழகுப்படுத்தும் பணி | 2 | 0.55 |
| **மொத்தம்** | | **200** | **413.26** |

## சிங்கார சென்னை 2.0 – 2022–23

## அட்டவணை 3.21

| வ. எண். | திட்டம் | அனுமதிக்கப்பட்டவை | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை (ரூ.கோடியில்) |
| 1 | பேருந்துதட சாலைகள் | 38 | 25.91 |
| 2 | உட்புற சாலைகள் | 414 | 29.69 |
| 3 | நாய்கள் இன கட்டுப்பாட்டு மையம் | 3 | 19.72 |
| 4 | பூங்கா | 92 | 33.07 |
| 5 | நீர் உறிஞ்சும் பூங்கா (Sponge Parks) | 57 | 7.67 |
| 6 | விளையாட்டு திடல் | 51 | 16.33 |
| 7 | பாலங்களின் கீழ்பகுதியில் | 9 | 9.47 |

| வ. எண். | திட்டம் | அனுமதிக்கப்பட்டவை | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை (ரூ.கோடியில்) |
| | அழகுப்படுத்தும் பணி | | |
| 8 | மழைநீர் வடிகால் | 2 | 103.88 |
| 9 | மயான பூமி | 28 | 23.86 |
| 10 | மாற்றுத்திறனாளிகளுக்கான நடைபாதை | 1 | 0.99 |
| 11 | பள்ளி மேசைகள் | 1 | 4.15 |
| 12 | பள்ளி கட்டடங்கள் | 19 | 69.27 |
| 13 | விக்டோரியா பொது கூடம் | 1 | 32.62 |
| 14 | நீர் நிலைகள் | 1 | 2.99 |
| 15 | மீன் அங்காடி | 1 | 1.35 |
| 16 | இறைச்சிக்கூடம் | 1 | 1.43 |
| மொத்தம் | | 719 | 383.03 |

## சிங்கார சென்னை 2.0 – 2023–24

## அட்டவணை 3.22

| வ. எண். | திட்டம் | அனுமதிக்கப்பட்டவை | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை (ரூ.கோடியில்) |
| 1 | ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள் – கொசஸ்தலையாறு | 1 | 181.00 |
| 2 | சாலைகள் | 109 | 19.90 |
| 3 | பள்ளிக்கட்டடங்கள் | 33 | 49.30 |
| 4 | மயான பூமிகள் | 15 | 22.56 |

| வ. எண். | திட்டம் | அனுமதிக்கப்பட்டவை | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை (ரூ.கோடியில்) |
| 5 | பூங்காக்கள் | 19 | 6.99 |
| 6 | விளையாட்டுத்திடல்கள் | 37 | 14.30 |
| 7 | நீர் நிலைகள் | 24 | 13.56 |
| 8 | சமுதாய நலக்கூடம் | 6 | 46.61 |
| **மொத்தம்** | | **247** | **356.26** |

## 4. பேரூராட்சிகளின் இயக்குநரகம்

இந்திய அரசமைப்பு சட்டத்தின் 243Q பிரிவின் கீழ் பேரூராட்சிகள் என்ற அமைப்பை நிறுவிய மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். வளர்ந்து வரும் நகர்ப்புரங்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு அவற்றை நிறைவு செய்வது அரசின் தார்மீக கடமையாகும். பேரூராட்சிகள் என்பவை தமிழ்நாடு முழுவதும் உள்ள நடுத்தர மற்றும் சிறு நகரங்கள் ஆகும். இந்த நகரங்கள் பெரிய நகரங்களின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாக விளங்குகின்றன. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பணி செய்வது பெரிய நகரங்களின் வளர்ச்சிக்கும், செழிப்புக்கும் உறுதுணையாக இருக்கும், எனவே, பேரூராட்சிகளின் வளர்ச்சி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. பல பேரூராட்சிகள், கோவில்கள் மற்றும் பாரம்பரிய இடங்களைக் கொண்ட சுற்றுலா மையங்களாகப் பல ஆண்டுகளாக விளங்கி வருகின்றன.

பேரூராட்சிகளின் இயக்குநரகம் 1981ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தற்போது, மாநிலத்தில் 490 பேரூராட்சிகள் உள்ளன. அவை, 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் மற்றும் 2023 ஆம் ஆண்டு விதிகள் மூலம் நிர்வகிக்கப்படுகின்றன.

மொத்த பரப்பளவு 5,983.50 சதுர கி.மீ. கொண்ட 490 பேரூராட்சிகளின் தற்போதைய மக்கள் தொகை 78,87,523 ஆகும்.

பேரூராட்சிகள் நிர்வாகம், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, வேலை வாய்ப்புகளை உருவாக்கும் முனைப்புடனும் செயல்பட்டு வருகிறது. அதிகரித்து வரும் நகர்ப்புர மக்கள் தொகைக்கு இந்த முயற்சிகள் முக்கியமானவையாக கருதப்படுகின்றன.

**4.1 நிருவாகம்**

தமிழகத்தில் உள்ள 490 பேரூராட்சிகளுக்கு நிருவாகத் தலைமையிடமாகப் பேரூராட்சிகளின்

இயக்குநரகம் செயல்படுகிறது. சென்னையைத் தவிர மற்ற 37 மாவட்டங்கள் நிர்வாக வசதிக்காக 17 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த மண்டலங்கள் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்களின் மேற்பார்வையில் செயல்படுகின்றன. மாவட்ட அளவில், அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் பேரூராட்சிகளைக் கண்காணிப்பதோடு, தேவையான வழிகாட்டுதல்களையும் வழங்குகிறார்கள். 17 மண்டலங்களின் விவரங்கள் கீழே உள்ள அட்டவணை 4.1–இல் வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.1**

| வரிசை எண். | மண்டல;த்தின் பெயர் | மாவட்டத்தின் பெயர் | பேரூராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம்<br>செங்கல்பட்டு | 9 |
| 2 | திருவள்ளூர் | திருவள்ளூர் | 8 |
| 3 | வேலூர் | வேலூர்<br>திருப்பத்தூர்<br>இராணிப்பேட்டை<br>திருவண்ணாமலை | 25 |
| 4 | தருமபுரி | தருமபுரி<br>கிருஷ்ணகிரி | 16 |
| 5 | சேலம் | சேலம்<br>நாமக்கல் | 50 |

| | | | |
|---|---|---|---|
| 6 | ஈரோடு | ஈரோடு<br>திருப்பூர் | 57 |
| 7 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 33 |
| 8 | உதகை | நீலகிரி | 11 |
| 9 | கடலூர் | கடலூர்<br>விழுப்புரம்<br>கள்ளக்குறிச்சி | 26 |
| 10 | தஞ்சாவூர் | தஞ்சாவூர்<br>நாகப்பட்டினம்<br>மயிலாடுதுறை<br>திருவாரூர் | 35 |
| 11 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி<br>பெரம்பலூர்<br>அரியலூர்<br>புதுக்கோட்டை | 28 |
| 12 | திண்டுக்கல் | திண்டுக்கல்<br>கரூர் | 31 |
| 13 | மதுரை | மதுரை<br>விருதுநகர் | 18 |
| 14 | தேனி | தேனி | 22 |
| 15 | சிவகங்கை | சிவகங்கை<br>இராமநாதபுரம் | 18 |
| 16 | திருநெல்வேலி | திருநெல்வேலி<br>தென்காசி<br>தூத்துக்குடி | 52 |
| 17 | நாகர்கோவில் | கன்னியாகுமரி | 51 |
| | | **மொத்தம்** | **490** |

**அரசாணை (நிலை) எண்.142, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,**

நாள் 21.11.2014–ன்படி, பேரூராட்சிகளின் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் பேரூராட்சிகள் 4 வகைகளாக பிரிக்கப்பட்டுள்ள விவரங்கள் கீழே உள்ள அட்டவணை 4.2–இல் வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.2**

| வகைப்பாடு | ஆண்டு வருமானம் | பேரூராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| சிறப்பு நிலை | ரூ.200 லட்சத்திற்கு மேல் | 62 |
| தேர்வு நிலை | ரூ.100 லட்சத்திற்கும் மேல் மற்றும் ரூ.200 லட்சம் வரை | 179 |
| முதல் நிலை | ரூ.50 லட்சத்திற்கும் மேல் மற்றும் ரூ.100 லட்சம் வரை | 190 |
| இரண்டாம் நிலை | ரூ. 50 லட்சத்திற்கும் கீழ் | 59 |
| மொத்தம் | | 490 |

### 4.1.1 பேரூராட்சிகளில் பணியிடங்கள் தோற்றுவிக்க அளவு கோல் நிர்ணயம் செய்தல் மற்றும் பணியிடங்கள் தோற்றுவித்தல்

பேரூராட்சிகள் துறையானது அரசாணை (நிலை) எண்.828 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிருவாகத் துறை நாள் 07.05.1981–ன்படி தனித்துறையாகச் செயல்பட்டு வந்தது. மேலும், அரசாணை (நிலை) எண்.92 ஊரக வளர்ச்சித் துறை, நாள் 22.04.1993–ன்படி பேரூராட்சிகளில்

பணியிடங்கள் தோற்றுவிக்க அளவுகோல் நிர்ணயம் செய்யப்பட்டது. எனினும் பேரூராட்சிகளின் தரத்தின் அடிப்படையில் ஒரே சீரான பணியிடங்கள் தோற்றுவிக்கப்படவில்லை.

மேலும், நகரமயமாக்கல் காரணமாகப் பேரூராட்சிகளில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, பணிச்சுமை மற்றும் பணிப்பொறுப்புகள் பலமடங்காக அதிகரித்துள்ளது. எனவே, பேரூராட்சிகளில் தற்போதைய தேவையின் அடிப்படையிலும் மற்றும் தரத்தின் அடிப்படையிலும் ஒரே சீராகப் பணியிடங்கள் தோற்றுவித்து முறைப்படுத்துவதற்கான அளவுகோல் அரசாணை (நிலை) எண்.23 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 21.02.2024-ல் கீழ்கண்ட அட்டவணை 4.3-ல் உள்ளபடி நிர்ணயம் செய்யப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

## அட்டவணை 4.3

| பிரிவு | பணியிடத்தின் பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட அளவுகோல் | | | |
|---|---|---|---|---|---|
| | | சிறப்பு நிலை பேரூராட்சி (62) | தேர்வு நிலை பேரூராட்சி (179) | முதல் நிலை பேரூராட்சி (190) | இரண்டாம் நிலை பேரூராட்சி (59) |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| பொது நிர்வாகப் பிரிவு | தலைமை எழுத்தர் | 1 | 1 | 0 | 0 |
| | இளநிலை உதவியாளர் | 2 | 1 | 2 | 2 |
| | வரித்தண்டலர் | 2 | 2 | 2 | 1 |
| | தட்டச்சர் மற்றும் புள்ளி விவர தொகுப்பாளர் | 1 | 1 | 1 | 1 |
| | பதிவறை எழுத்தர் | 1 | 1 | 0 | 0 |
| | அலுவலக உதவியாளர் | 1 | 1 | 1 | 1 |
| | **மொத்தம்** | **8** | **7** | **6** | **5** |
| பொது சுகாதாரப் பிரிவு | துப்புரவு அலுவலர் | 1 | 0 | 0 | 0 |
| | துப்புரவு ஆய்வாளர் | 0 | 1 | 0 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உதவி துப்புரவு ஆய்வாளர் | 0 | 0 | 1 | 0 |
| | துப்புரவு மேற்பார்வை யாளர் | 2 | 1 | 1 | 1 |
| | மொத்தம் | 3 | 2 | 2 | 1 |
| பொறியியல் பிரிவு | உதவிப் பொறியாளர் * | 0.5 | 0 | 0 | 0 |
| | இளநிலைப் பொறியாளர் * | 0 | 0.5 | 0.5 | 0.5 |
| | மேற்பார்வை யாளர் * | 0 | 0.5 | 0.5 | 0.5 |
| | பணி ஆய்வாளர் | 1 | 0 | 0 | 1 |
| | மொத்தம் | 1.5 | 1 | 1 | 2 |
| நகரமைப்புப் பிரிவு | இளநிலைப் பொறியாளர் (திட்டம்)* | 1 | 0.5 | 0.25 | 0.25 |
| | **மொத்தம்** | **1** | **0.5** | **0.25** | **0.25** |
| | **பெரு மொத்தம்** | **13.5** | **10.5** | **9.25** | **8.25** |

* தொகுப்பு அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டது

**மேற்கண்டவாறு புதிய அளவுகோல் நிர்ணயம் செய்யப்பட்டதின் காரணமாக 1,891 புதிய மற்றும்**

கூடுதல் பணியிடங்கள் 490 பேரூராட்சிகளில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

## 4.2 பேரூராட்சிகளின் செயல்பாடுகள்

74வது அரசமைப்பு சட்டத்திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல செயல்பாடுகளை நிறைவேற்றுவது பேரூராட்சிகளின் பொறுப்பாகும். நகர்ப்புர உள்ளாட்சிகளால் செயல்படுத்தப்படும் சில பணிகள் பின்வருமாறு:

1. குடியிருப்பு, தொழில் மற்றும் வணிக நோக்கங்களுக்காகக் குடிநீர் விநியோகம்
2. சாலை அமைத்தல் மற்றும் பாலங்கள் கட்டுதல்
3. தெரு விளக்குகள் அமைத்தல், வாகன நிறுத்துமிடங்கள், பேருந்து நிறுத்தங்கள் போன்ற பொது வசதிகள்
4. பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை
5. மயானம் மற்றும் மின் தகன மேடை அமைத்தல்
6. நீர்நிலைகளைப் பராமரித்தல்

7. பூங்காக்கள், தோட்டங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் போன்ற நகர்ப்புர வசதிகளை வழங்குதல்
8. இறைச்சி கூடங்களை ஒழுங்குபடுத்துதல்

**4.2.1. வருவாய் ஆதாரங்கள்**

சொத்துவரி, தொழில்வரி, வரியில்லாத இனங்கள், குடிநீர் கட்டணங்கள் மற்றும் முத்திரை வரி மீதான கூடுதல் கட்டணம், மாநில அரசின் பகிர்வு நிதி மற்றும் மத்திய நிதி ஆணையத்தின் மானியங்கள் போன்ற பல்வேறு ஆதாரங்கள் மூலம் பேரூராட்சிகள் வருவாயினைப் பெறுகின்றன.

**4.2.2 குடிநீர் விநியோகம்**

தற்போதுள்ள குடிநீர் விநியோக முறைகளை புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்துதல் பணிகளைப் பேரூராட்சிகள் திறன்பட செய்து வருகின்றன. மேலும், பேரூராட்சிகளில் உள்ள அனைத்து வீடுகள் மற்றும் வணிக கட்டடங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோக இணைப்புகளை

வழங்கிட ஏதுவாக புதிய குடிநீர் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. அனைத்து பேரூராட்சிகளிலும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் தண்ணீர் என்ற வீதத்தில் (LPCD) பொதுமக்களுக்கு வழங்குகின்றன, அதே நேரத்தில், பாதாளச் சாக்கடை திட்டம் (UGSS) உள்ள பேரூராட்சிகளில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மொத்தமுள்ள 490 பேரூராட்சிகளில் 376 பேரூராட்சிகளுக்கு கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. எஞ்சியுள்ள பேரூராட்சிகளுக்கு உள்ளூர் குடிநீர் ஆதாரங்களின் மூலம் குடிநீரை விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது, 40% குடியிருப்புகள் வீட்டுக் குடிநீர் இணைப்புகளைப் பெற்றுள்ளன. அனைத்து வீடுகளுக்கும் செயல்பாட்டுக் குடிநீர் குழாய் இணைப்புகளை

(Functional house hold tap connection) வழங்குவதன் மூலம் அனைவரும் குடிநீர் பயன்பாட்டை அடைய வேண்டும் என்பதே இதன் குறிக்கோள் ஆகும். குடிநீர் ஆதாரங்களை பாதுகாத்தல், நீர்நிலைகள் மற்றும் கிணறுகளை புனரமைப்பு செய்தல், சுத்திகரிக்கப்பட்ட நீரை மறுசுழற்சி செய்தல்/மீண்டும் பயன்படுத்துதல் மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பினை உருவாக்குதல் போன்றவற்றின் மூலமும், சமூக பங்களிப்போடும் நீரியல் பொருளாதாரத்தை நிறைவேற்றுவது மிக முக்கியமானதாகும். இந்நிலையில் பேரூராட்சிகளின் தண்ணீர் தேவையில் 20% மறுசுழற்சி செய்யப்பட்ட நீர் மூலம் பெறுவது, வருவாய் இன்றி வழங்கப்படும் தண்ணீரை 20%க்கும் கீழாகக் குறைப்பது மற்றும் நீர்நிலைகளைப் புனரமைப்பது ஆகியவை பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படும் முக்கிய நீர் தொடர்பான சீர்திருத்தங்கள் ஆகும்.

அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ், 130 குடிநீர் திட்டங்கள் ரூ.2,214.56 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்திட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் நிறைவடைந்த பிறகு பேரூராட்சிகளில் வீட்டு இணைப்புகள் எண்ணிக்கை மேலும் உயர்ந்திடும்.

**4.2.3. சாலைகள்**

பேரூராட்சிகளை அருகிலுள்ள கிராமங்கள் மற்றும் நகரங்களுடன் இணைப்பதற்கும், இந்தப் பகுதிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் சாலைகள் முக்கிய பங்காற்றுகின்றன.

தற்போது, 20,306 கி.மீ நீளமுள்ள பல்வேறு வகையான சாலைகள் 490 பேரூராட்சிகளால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சாலைகளின் வகைகள் அட்டவணை 4.4–ல் வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.4**

| வ. எண் | சாலைகளின் வகைகள் | நீளம் (கி.மீ) |
|---|---|---|
| 1. | தார்ச் சாலைகள் | 11,156.31 |
| 2. | சிமெண்ட் சாலைகள் | 5,121.16 |
| 3. | பேவர் பிளாக் சாலைகள் | 1,037.27 |
| 4. | மண்சாலைகள் | 2,807.05 |
| 5. | ஜல்லி சாலைகள் | 127.26 |
| 6. | சரளை சாலைகள் | 57.09 |
| | மொத்தம் | 20,306.14 |

2021-22 ஆம் ஆண்டு பல்வேறு திட்டங்களின் கீழ் 998.78 கி.மீ சாலைகள் ரூ.658.06 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன. 2022-23ஆம் ஆண்டு 1261.391 கி.மீ சாலைகள் ரூ.819.21 கோடி மதிப்பீட்டிலும் 2023-24 ஆம் ஆண்டு 1,463.837 கி.மீ சாலைகள் ரூ.859.68 கோடி மதிப்பீட்டிலும்

எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள சாலைகள் படிப்படியாக மேம்படுத்தப்படும்.

கடந்த மூன்றாண்டுகளில் 1,526.773 கி.மீ நீளமுள்ள மண்சாலைகள் ரூ.1,106.46 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்வதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேலும், பழுதடைந்த சாலைகள் சீரமைக்க ரூ.1,230.49 கோடி மதிப்பீட்டில் 2,197.235 கி.மீ நீளத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அட்டவணை 4.5–ல் விவரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.5**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | 2021–22 | | | 2022–23 | | | 2023–24 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எடுக்கப்பட்ட பணிகள் | | மதிப்பீடு (ரூ கோடியில்) | எடுக்கப்பட்ட பணிகள் | | மதிப்பீடு (ரூ கோடியில்) | எடுக்கப்பட்ட பணிகள் | | மதிப்பீடு (ரூ கோடியில்) |
| | | எண்ணிக்கை | நீளம் (கிமீ) | | எண்ணிக்கை | நீளம் (கிமீ) | | எண்ணிக்கை | நீளம் (கிமீ) | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 1 | கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் | 656 | 360.43 | 251.79 | 223 | 173.234 | 151.51 | 208 | 219.93 | 174.11 |
| 2 | மூலதன மானிய நிதி | 84 | 115.57 | 79.78 | 72 | 61.843 | 49.76 | 60 | 72.407 | 50.7 |
| 3 | நபார்டு | 191 | 292.66 | 181.3 | 159 | 257.023 | 200.7 | 164 | 284.89 | 200.7 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | தமிழ்நாடு நகர்ப்புர சாலை உட்கட்ட மைப்புத் திட்டம் | 175 | 122.74 | 83 | 144 | 154.991 | 105.48 | 168 | 218.37 | 105.48 |
| 5 | தமிழ்நாடு நகர்ப்புர சாலை உட்கட்ட மைப்புத் திட்டம் – சேமிப்பு நிதி | 0 | 0 | 0 | 107 | 110.021 | 74.26 | 0 | 0 | 0 |
| 6 | 15வது நிதி ஆணையம் | 304 | 68.09 | 36.65 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 7 | நமக்கு நாமே திட்டம் | 163 | 39.29 | 25.54 | 125 | 24.418 | 17.50 | 0 | 0 | 0 |
| 8 | நகர்ப்புர சாலை மேம்பாட்டு திட்டம் | 0 | 0 | 0 | 196 | 378.201 | 154 | 223 | 375.84 | 152 |
| 9 | மாநில நிதி ஆணைய நகர்ப்புர சாலை மேம்பாட்டு நிதி | 0 | 0 | 0 | 60 | 101.660 | 66 | 105 | 154.83 | 72 |
| 10 | செயலற்ற நிதி | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 97 | 137.57 | 104.69 |
| | மொத்தம் | 1573 | 998.78 | 658.06 | 1086 | 1261.391 | 819.21 | 1025 | 1463.837 | 859.68 |

### 4.2.4 தெருவிளக்குகள்

இரவு நேரங்களில் தெருவிளக்குகள் ஒளிர்வதால் பொதுமக்கள் அச்சமின்றி நடமாட முடிகிறது. மேலும், இரவு நேரங்களில் விபத்துகள் ஏற்படுவதை பெருமளவு குறைக்கின்றன. தற்போது, 490 பேரூராட்சிகளில், 2,975 உயர் கோபுர மின்விளக்குகள், 656 மெர்குரி விளக்குகள், 13,867 சோடியம் ஆவி விளக்குகள், 1,79,583 குழல் விளக்குகள், 77,563 சிஎப்எல் விளக்குகள், 1,28,203 எல்இடி விளக்குகள், 3,448 சூரிய சக்தி விளக்குகளுடன் மொத்தம் 4,06,295 தெருவிளக்குகள் பராமரிக்கப்படுகின்றன.

அதிகப்படியான மின் நுகர்வு, மின்னாற்றல் உற்பத்திக்கான அதிக செலவினம், கரியமில வாயு உமிழ்வு, ஒளிமாசு மற்றும் புவி வெப்பமடைதலைத் தடுத்தல் போன்ற இனங்களை எதிர்கொள்ள தற்போதுள்ள தெரு விளக்குகளை ஆற்றல்–மிகு LED

விளக்குகளாக மாற்ற வேண்டியது அவசியமாகிறது. ஏற்கனவே உள்ள விளக்குகளில் LED விளக்குகளாக மாற்றப்பட்டவை மற்றும் சூரியசக்தி விளக்குகள் நீங்கலாக உள்ள பெரும்பாலான விளக்குகளை LED விளக்குகளாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. 2,66,953 விளக்குகளை மாநில நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.155.56 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. நாளது வரை 1,57,810 விளக்குகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய விளக்குகளை மாற்றி அமைக்கும் பணி விரைவாக நடைபெற்று வருகிறது.

**4.2.5 பேருந்து நிலையங்கள்**

490 பேரூராட்சிகளில், 203 பேருந்து நிலையங்கள் உள்ளன. 2021–22ஆம் ஆண்டிற்கான கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின் (KNMT) ஒரு பகுதியாக, ரூ.44.69 கோடி மதிப்பீட்டில் 10 புதிய

பேருந்து நிலையங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றில் 7 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன மற்றும் மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும், அதே ஆண்டில் இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதியின் கீழ் 21 பேருந்து நிலையங்கள் ரூ.5.44 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. 2022–23ஆம் நிதியாண்டில், கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் (KNMT) மற்றும் மூலதன மானிய நிதியின் கீழ் 13 புதிய பேருந்து நிலையங்கள் ரூ.22.13 கோடி மதிப்பீட்டில் பேரூராட்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு, தற்போது இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதியின் கீழ் 15 பேருந்து நிலையங்கள் ரூ.6.79 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றுள் 10 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 5 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. கூடுதலாக, 2023–24ஆம் ஆண்டில், கலைஞர்

நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 7 புதிய பேருந்து நிலையங்கள் ரூ.12.28 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு அப்பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.91.33 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 66 எண்ணிக்கையிலான புதிய பேருந்து நிலையம் மற்றும் பேருந்து நிலைய மேம்பாடு பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**4.2.6 சந்தைகள்**

பேரூராட்சிகளில் உள்ள சந்தைகள் அருகிலுள்ள கிராமங்களில் விளையும் விவசாய பொருட்கள், கால்நடைகள் மற்றும் விவசாயம் அல்லாத பொருட்களை வாங்குவது மற்றும் விற்பது தொடர்பான வணிக நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதன் மூலம் நகரம் மற்றும் சுற்றியுள்ள கிராமப்புறங்களின் பொருளாதாரம் மேம்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் புதிய சந்தைகள் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம்

மற்றும் மூலதன மானிய திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வருகிறது. அதே போல இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதியின் கீழ் ஏற்கனவே உள்ள சந்தைகள் புனரமைக்கப்பட்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.110.32 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 51 சந்தை மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**4.3 சுகாதாரம்**

குடிமக்களுக்கு உயர்தர சுகாதாரத்தை உறுதி செய்வதும், சுத்தமான கழிவறைகளைப் பராமரிப்பதும் பேரூராட்சிகளின் முதன்மைப் பொறுப்புகளாகும். இந்த இலட்சியத்தினை அடையவும், திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத நிலையை உருவாக்கவும், தேவைப்படுபவர்களுக்குத் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் அமைத்துத் தர வேண்டியுள்ளது. தூய்மை இந்தியா திட்டத்தின் 2.0–ன் கீழ் அனைத்து பேரூராட்சிகளுக்கும் மாநில அளவிலான தொழில்நுட்பக் குழுவால் நகரச் சுகாதாரத் திட்டங்கள்

(City Sanitation plan) தயாரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு இத்திட்டங்களின் அடிப்படையில் இடைவெளிகள் கண்டறியப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. அதன்படி, தனிநபர் இல்லக் கழிப்பறைகள், சமுதாய கழிப்பறைகள், பொது கழிப்பறைகள் மற்றும் சிறுநீர் கழிப்பறைகள் ஆகியவற்றிற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை 36,581 தனிநபர் இல்லக் கழிப்பறைகள் அமைத்திடத் தூய்மை இந்தியா திட்டம் 2.0 இன் கீழ் நடைபெற்ற மாநில அளவிலான நிலைக்குழுவின் பல்வேறு கூட்டங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதில் 28,540 தனிநபர் இல்லக் கழிப்பறைகள் (IHHL) கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. எந்தெந்த வீட்டில் தனிநபர் இல்லக் கழிப்பறை (IHHL) கட்ட இடம் இல்லாத நிலையில் அப்பகுதிகளில் சமுதாயக் கழிப்பறைகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதுவரை 3,179 இருக்கைகள் கொண்ட 357 சமுதாயக் கழிப்பறைகள்

அனுமதிக்கப்பட்டு, அவற்றில் 187 சமுதாயக் கழிப்பறைகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள சமுதாயக் கழிப்பறை பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. கூடுதலாக 385 இருக்கைகள் கொண்ட 50 பொதுக் கழிப்பிடங்கள், 2022-23-ம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டு, அவற்றுள் 45 பணிகள் முடிக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள 5 பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. 15வது நிதிக்குழு மானியத்தின் கீழ் சமுதாய கழிப்பறைகளைப் புதுப்பிக்கும் பணிக்காக அனுமதி அளிக்கப்பட்டது. மொத்தம் 160 பேரூராட்சிகளில் 204 சமுதாய கழிப்பறைகளை புதுப்பிக்கும் பணிகள் ரூ.9.27 கோடியில் மேற்கொள்ளப்பட்டு, 97% பணிகள் நிறைவடைந்துள்ளது. சமுதாய/பொது கழிப்பறைகளை பராமரிப்பதில் சிறப்பு கவனம் செலுத்தப்படுவதுடன், பொதுமக்களின் கருத்துக்களைத் திறம்படக் கையாளுவதற்கு QR குறியீடுகள் நிறுவப்பட்டுள்ளன.

**4.3.1 மின்கல வாகனங்கள்**

தள்ளுவண்டிகள் மற்றும் மூன்று சக்கர தள்ளுவண்டிகள் கைமுறையாக இயக்குவதில் தூய்மைப் பணியாளர்களுக்குச் சிரமமாக உள்ளது. முதன்மை சேகரிப்பில் உள்ள பற்றாக்குறையைப் போக்க, சில நேரங்களில் கூடுதல் நடைகள் தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டு, அவர்களின் பணிச்சுமையை அதிகரிக்கிறது. திடக்கழிவு மேலாண்மை (SWM) செயல்பாடுகளில் செயல்திறனை அதிகரிக்கவும், தூய்மை பணியாளர்களின் நம்பிக்கையை அதிகரிக்கவும், பேரூராட்சிகளில் அதிக சுமை தாங்கும் சக்தி கொண்ட மற்றும் கொள் திறன் கொண்ட மின்கலம் மூலம் இயக்கப்படும் வாகனங்களை (BOVs) கொள்முதல் செய்ய முடிவு செய்யப்பட்டது. மேலும், தள்ளு வண்டிகள் மற்றும் மூன்று சக்கர வண்டிகளின் பயன்பாட்டு ஆயுட்காலம் குறைவாக இருப்பதால், அடிக்கடி பழுது நீக்கம் செய்ய வேண்டியுள்ளதால் அதற்கு மாற்றாக நீடித்து

உழைக்கும் தன்மையுள்ள பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்களாக மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாளது வரை மொத்தம் 3,069 மின்கல வாகனங்கள் வாங்க அனுமதிக்கப்பட்டு, 2,301 மின்கல வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

### 4.3.2 திடக்கழிவு மேலாண்மை

சுத்தமான சுற்றுச்சூழலைப் பேணவும், சுகாதாரமான உடல் நலத்தை பெறவும் திடக்கழிவு மேலாண்மையின் செயல்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016-ன் படி திடக்கழிவு மேலாண்மையை அனைத்து பேரூராட்சிகளும் திறம்பட செயல்படுத்தி வருகின்றன. திடக்கழிவு மேலாண்மையை செயல்படுத்திட தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் உருவாக்கிக் கொடுப்பதில் அரசு முழு கவனம் செலுத்தி வருகிறது. 490 பேரூராட்சிகளில் நாளொன்றுக்கு

சுமார் 1840 மெட்ரிக் டன் குப்பைகள் உருவாவதில் மக்கும் கழிவுகள் 998 மெட்ரிக் டன்களும், மக்காத கழிவுகள் 709 மெட்ரிக் டன்களும், மீதமுள்ள 133 மெட்ரிக் டன்கள் வண்டல் கழிவுகளும் ஆகும். நாளொன்றுக்கு 5 மெட்ரிக் டன் கழிவுகளுக்கு மேல் உற்பத்தி செய்யும் 59 பேரூராட்சிகள் தங்களின் திடக்கழிவு மேலாண்மை செயல்படுத்தும் இடங்களுக்கு தமிழ்நாடு மாசுக் கட்டுபாட்டு வாரியத்தின் (TNPCB) அனுமதியைப் பெற்றுள்ளன.

வீடு வீடாகக் கழிவுகளை சேகரம் செய்ய தற்போது பெரும்பாலான பேரூராட்சிகள் மின்கல வாகனங்களை (BOV) பயன்படுத்தி வருகிறது. தள்ளுவண்டிகள் மற்றும் மின்கல வாகனங்கள் (BOV) செல்லும் வழித்தடங்கள் முறைப்படுத்தப்பட்டு கழிவுகள் சேகரம் செய்யப்படுகிறது. தற்போது, பேரூராட்சிகளில் உள்ள 96% குடியிருப்புகளில் வீடு வீடாக குப்பைகள் சேகரிக்கப்படுகின்றன. தற்போதுள்ள இடைவெளிகளைக் குறைக்க வீட்டு

உரம் தயாரிப்பதை அதிகரிப்பதில் கவனம் செலுத்தப்படுகிறது. மறுசுழற்சி செய்யக்கூடிய உலர் கழிவுகள் விற்பனையாளர்களுக்கு விற்கப்படுகின்றன. மறுசுழற்சி செய்ய முடியாத கழிவுகள் சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு இணை செயலாக்கத்திற்காக அனுப்பப்படுகின்றன. தெருக்களை சுத்தம் செய்யவும் மற்றும் திடக்கழிவு சேகரிப்பு பணிகளிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ள 6,845 துப்புரவு பணியாளர்களுடன் மொத்தம் 13,808 சுயஉதவி குழு (SHG) உறுப்பினர்கள் கழிவுகளை சேகரிப்பதிலும் மற்றும் பிரித்தெடுப்பதிலும் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டு திடக்கழிவு மேலாண்மை நடைமுறைகளை திறம்பட செயல்படுத்துவதை அரசு உறுதி செய்கிறது.

2022-23ஆம் நிதியாண்டில் தூய்மை இந்தியா திட்டம் 2.0-ன் கீழ் 354 பேரூராட்சிகளிலுள்ள 642 மெட்ரிக் டன் ஈரக்

கழிவுகளை மேலாண்மை செய்ய உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிட ரூ.73.83 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 445 மெட்ரிக் டன் உலர் கழிவுகளை கையாள 313 பேரூராட்சிகளுக்கு ரூ.22.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் 283 உரக்கல படுகைகள் அமைக்கும் பணிகள் (மொத்தம் 478 மெட்ரிக் டன்) நிறைவடைந்து, 71 பணிகள் (164 மெட்ரிக் டன்) தற்போது பல்வேறு கட்டங்களில் நடைபெற்று வருகின்றன. கூடுதலாக, 246 வள மீட்பு மையப் பணிகள் (மொத்தம் 336 மெட்ரிக் டன்) முடிவடைந்து 67 பணிகள் (109 மெட்ரிக் டன்) தற்போது பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**4.3.3 சமுதாய தோட்டம்:**

தூய்மையான சுற்றுச்சூழல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளை மேம்படுத்தும் பணிகளில் சமூகங்களை ஈடுபடுத்தும்

வகையில், 10 பேரூராட்சிகள் சமுதாயத் தோட்டங்களை மேம்படுத்துவதற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இந்த முயற்சியானது பேரூராட்சிகளின் பசுமையை மேம்படுத்துவதையும், சுகாதாரமான இயற்கை சூழலை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தப் பேரூராட்சிகள் சமுதாயத் தோட்டங்களை அமைப்பதற்கும் பராமரிப்பதற்கும் தேர்ந்து எடுக்கப்பட்ட சமுதாயத் தோட்டக் குழுக்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை இறுதி செய்துள்ளது.

**4.3.4 இயற்கை / மண்புழு உரம்**

பேரூராட்சிகளில் சேகரம் செய்யப்படும் கழிவுகள், வள மீட்பு பூங்காவிற்குக் கொண்டு செல்லப்பட்டு, மேலும் பிரிக்கப்படுகிறது. பிரிக்கப்பட்ட கழிவுகளில் உள்ள காய்கறி, இலைகள் போன்ற மக்கும் கழிவுகள் இயற்கை உரமாகவும் மண்புழு உரமாகவும் மாற்றப்படுகிறது. தினசரி, பேரூராட்சிகளில் சராசரியாக

100 முதல் 150 மெட்ரிக் டன் இயற்கை உரம் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும், 249 பேரூராட்சிகளில் நாளொன்றுக்கு 15 முதல் 20 மெட்ரிக் டன் மண்புழு உரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இயற்கை உரம் மற்றும் மண்புழு உரத்தினை விற்பனை செய்வதன் மூலமாகப் பேரூராட்சிகளுக்கு சராசரியாக ஆண்டொன்றிற்கு ரூ.40 லட்சம் ரூபாய் வருவாய் கிடைக்கிறது.

**4.3.5 பயன்படுத்திய நீர் மேலாண்மை (UWM)**

பேரூராட்சிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (STPs) மற்றும் கசடுகழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் (FSTPs) போன்ற சுத்திகரிப்பு வசதிகள் தற்போது ஒரு சில பேரூராட்சிகளில் மட்டுமே உள்ளன. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் கசடுகழிவு சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்பாட்டை மாநிலம் முழுவதும் உள்ள பேரூராட்சிகளில் செயல்படுத்த, நிலம் கண்டறிதல் மற்றும் விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**4.3.6 பாதாள சாக்கடைத் திட்டம்**

பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட 12 பேரூராட்சிகளில் ஒரத்தநாடு, வல்லம், மாமல்லபுரம், S.கண்ணனூர், வேளாங்கண்ணி, பெருந்துறை, பழனிசெட்டிபட்டி, திருமழிசை, மணச்சநல்லூர், மேலச்சொக்கநாதபுரம் ஆகிய 10 பேரூராட்சிகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 2 பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் (ஸ்ரீபெரும்புதூர் மற்றும் திருப்போரூர்) முன்னேற்றத்தில் உள்ளன. தற்போது இப்பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு பாதாளச் சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**4.3.7 கசடுகழிவு மேலாண்மை:**

தற்போது பேரூராட்சிகளில் ஆரம்பிக்கப்பட்ட 10 கசடு கழிவு மேலாண்மைத் திட்டங்களில் 6 திட்டங்கள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன. மீதமுள்ள பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. கருங்குழி மற்றும்

பெரியநாயக்கன்பாளையத்தில் உள்ள கசடுகழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் வெற்றிகரமாகச் செயல்பட்டு ஏனைய நகர்ப்புர உள்ளாட்சிகளுக்கு முன்மாதிரியாக உள்ளன. இந்தக் கசடுகழிவு மேலாண்மை மையங்களை ஏராளமான அதிகாரிகள், பல்வேறு கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் இத்துறை சார்ந்த அறிவையும் அனுபவத்தினையும் தேடும் பொதுமக்கள் என பலரும் பார்வையிட்டுச் செல்கின்றனர்.

மாநிலம் முழுவதும் கசடுகழிவு மேலாண்மை திட்டத்தினை விரிவுபடுத்தும் வகையில் பேரூராட்சிகள் அடையாளம் காணப்பட்டு, ஒருங்கிணைந்த கசடுகழிவு மேலாண்மை சுத்திகரிப்பு மையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நாளது வரை தூய்மை இந்தியா திட்டம் 2.0–ன் கீழ் 47 கசடுகழிவு மேலாண்மைத் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. கசடுகழிவு சுத்திகரிப்பு மையத்தின் முழுமையான செயல்பாட்டிற்காக நகர்ப்புர உள்ளாட்சிகளுக்கு

அருகிலுள்ள ஊரக உள்ளாட்சிகளையும் ஒருங்கிணைத்து, இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை மாநிலம் முழுவதும் செயல்படுத்திட ஏதுவாக பேரூராட்சி பகுதிகளில் நிலங்கள் அடையாளம் காண முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. கூடுதலாக, நச்சுத் தொட்டியிலிருந்து நேரிடையாகக் கழிவுநீர் அகற்றுவதைத் தடுத்திடும் வகையில் 185 பேரூராட்சிகளில் 185 கழிவுநீர் டேங்கர் லாரிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

### 4.3.8 கட்டணமில்லா தொலைபேசி எண் 14420

தமிழ்நாடு முழுமையும் 14420 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் மூலம் சுகாதாரம் தொடர்பான புகார்கள் குறித்தும், அதன் சேவை குறித்தும் பொதுமக்கள் தெரிவித்துத் தீர்வு பெறலாம். நச்சுத் தொட்டி மற்றும் பாதாளச் சாக்கடை வடிகால்களைச் சுத்தம் செய்தல், மனிதர்களைக் கொண்டு நச்சுக் கழிவுகளைச் சுத்தம் செய்தல் போன்ற

பிரச்சனைகளை இந்த எண்ணிற்குத் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

**4.4 எரிவாயு / மின்தகன கூடங்கள்**

பேரூராட்சிப் பகுதிகளில், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், பாரம்பரிய எரிபொருள் முறையான மர எரிப்பு முறையைப் படிப்படியாக எரிவாயு தகனங்கள் மூலம் மாற்றவும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது 25 நவீன மின் தகன கூடங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும், 2021–22-ம் ஆண்டில், ரூ.50.35 கோடி மதிப்பீட்டில் 34 மின் தகனக் கூடங்கள் தொடங்கப்பட்டன. இதில், 28 மின் தகனக் கூடங்கள் முடிக்கப்பட்டுள்ளன, மீதமுள்ளவை பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. 2022–23-ம் ஆண்டில், 37 மின் தகனக் கூடங்கள் ரூ.51.94 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதில் 13 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 2023–24-ம் ஆண்டிற்கு ரூ. 44.70 கோடி மதிப்பீட்டில்

28 மின் தகனக் கூடங்கள் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளன. இப்பணிகள் அனைத்தும் பல்வேறு நிலைகளில் உள்ளன. இந்த மின்தகனக் கூடங்களைப் பராமரிக்கத் தகுதியுடைய அறக்கட்டளைகள்/தொண்டு நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டு, ஒப்படைக்கப்படுகின்றது.

**4.5 சுற்றுச்சூழல் மேம்பாடு**

காலநிலை மாற்றம் என்பது இன்று உலக அளவில் பேசப்படும் பொருளாகிவிட்டது என்பதோடு, அதன் தாக்கம் அனைத்து பிரிவினரையும் பாதித்துள்ளது. எனவே, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் மாற்றங்களைக் கவனத்தில் கொண்டும், சுற்றுச்சூழலை மேம்படுத்தவும், பாதுகாக்கவும் பேரூராட்சிகளில் மரங்கள் வளர்த்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

மா, பலா, கொய்யா மற்றும் பொதுமக்களுக்குப் பயன்படும் பாரம்பரிய மரங்கள் நடவு செய்ய ஊக்குவிக்கப்படுகிறது. பேரூராட்சிப் பகுதிகளில்

தேக்கு, வேங்கை, வேம்பு போன்ற மதிப்புமிக்க மரங்களை நடவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏரிகள், குளங்கள் போன்ற நீர்நிலைகளின் கரைகளைப் பலப்படுத்திடக் கரைகளைச் சுற்றிலும் பனை மரங்களை நடவு செய்ய ஊக்குவிக்கப்படுகிறது. இதுவரை 490 பேரூராட்சிகளில் 4,09,413 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

**4.5.1 நீர்நிலைகளை புனரமைத்தல்**

490 பேரூராட்சிகளில் உள்ள 2,212 நீர்நிலைகளில், 1,182 நீர்நிலைகள் ஏற்கனவே புனரமைக்கப்பட்டுள்ளன. தற்போது, நிலத்தடி நீர்மட்டத்தினை உயர்த்துதல், குளங்களை ஆக்கிரமிப்பில் இருந்தும் சீர்கேட்டில் இருந்தும் தடுப்பது, சுற்றுச்சூழலை மேம்படுத்துவது மற்றும் உள்ளூர் மக்களின் நலனையும் குடிநீர் பயன்பாட்டினையும் உறுதி செய்தல் ஆகிய நோக்கங்களுக்காக மீதமுள்ள 1030 நீர் நிலைகளில்,

696 நீர்நிலைகளைப் புனரமைப்பு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 483 நீர் நிலைகளைப் புனரமைக்கும் பணிகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 213 நீர்நிலைகளைப் புனரமைக்கும் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. எஞ்சியுள்ள 334 நீர்நிலைகளும் படிப்படியாகச் சீரமைக்கப்படும். அட்டவணை 4.6–ல் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.6** **(ரூ. கோடியில்)**

| வ. எண். | ஆண்டு | திட்டத்தின் பெயர் | வேலைகளின் எண்ணிக்கை | மதிப்பிடப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1 | 2021–22 | கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் (KNMT) | 11 | 14.83 |
| 2 | | நமக்கு நாமே திட்டம் (NNT) | 6 | 0.37 |
| 3 | | 15வது நிதி ஆணையம் | 302 | 38.56 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | | தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம் (TNUES) | 124 | 20.53 |
| 5 | | மூலதன மானிய நிதி (CGF) | 5 | 17.05 |
| 6 | 2022–23 | கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் (KNMT) + அம்ருத் 2.0 | 116 | 77.27 |
| 7 | | கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் | 3 | 3.94 |
| 8 | | நமக்கு நாமே திட்டம் | 4 | 1.91 |
| 9 | | மூலதன மானிய நிதி | 1 | 1.06 |
| 10 | 2023–24 | கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் | 50 | 15.83 |
| | | அம்ருத் 2.0 | 74 | 25.12 |
| | | மொத்தம் | 696 | 216.47 |

### 4.5.2 பூங்காக்கள்

ஆரோக்கியமான சுற்றுச்சூழலை பராமரிப்பதில் பூங்காக்கள் முக்கிய பங்காற்றுகின்றன. 490 பேரூராட்சிகளில் உள்ள 536 பூங்காக்களில், 160 பூங்கா மேம்பாட்டுப் பணிகள் 2022–23 ஆம் ஆண்டில்

மேற்கொள்ளப்பட்டன, அவற்றில் 138 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ளவை செயல்பாட்டில் உள்ளன. 2023–24 ஆம் ஆண்டில், 133 பூங்கா மேம்பாட்டுப் பணிகள் தொடங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 10வது மாநில உயர்மட்டக் குழுக் கூட்டத்தில் 68 பூங்கா மேம்பாட்டுப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**4.5.3. மழைநீர் சேகரிப்பு:**

1998ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் மற்றும் கட்டட விதிகளின்படி மேற்கொள்ளப்பட்ட சட்டத்திருத்தின்படி ஒவ்வொரு கட்டடத்திலும் மழைநீர் சேகரிப்பு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாநிலம் முழுவதும் நிலத்தடி நீர்மட்டத்தைப் புதுப்பித்து நீர்மட்டத்தை உயரச் செய்வதில் குறிப்பிடத்தக்கத் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அரசு மற்றும் தனியார் கட்டடங்களில் ஏற்கனவே உள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளைப் புதுப்பித்தல் மற்றும் புதிய

கட்டமைப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படுகிறது. மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளைப் பேரூராட்சிகள் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன.

**4.6 ஒன்றிய அரசின் திட்டங்கள்**

**4.6.1 தூய்மை இந்தியா திட்டம் 2.0**

2021-22 நிதியாண்டிற்கான தூய்மை இந்தியா திட்டத்தின் 2.0 கீழ் (SBM 2.0), மொத்தம் 7,295 தனிநபர் இல்லக் கழிப்பறைகள் (IHHLs), 847 இருக்கைகள் கொண்ட 100 சமுதாய கழிப்பறைகள் மற்றும் 450 இருக்கைகள் கொண்ட 75 சிறுநீர் கழிப்பறைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. கூடுதலாக 2022-23 நிதியாண்டில், மொத்தம் 27,900 தனிநபர் இல்லக் கழிப்பறைகள் (IHHL), 90 சமுதாய கழிப்பறைகள், 50 பொது கழிப்பறைகள் மற்றும் 38 சிறுநீர் கழிப்பறைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இவற்றில், 20,844 தனிநபர் இல்லக் கழிப்பறைகள்

87 சமுதாயக் கழிப்பறைகள், 45 பொதுக் கழிப்பறைகள், 38 சிறுநீர் கழிப்பறைகள் முடிவடைந்துள்ளன, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 4.6.2 மரபுக் கழிவுகள் கொட்டும் இடத்தினை மீட்டெடுத்தல்

ஏற்கனவே இருந்த பழைய மரபு கழிவுகளால் நிரப்பப்பட்ட குப்பைக் கிடங்குகளை மீட்கும் பணி தற்போது உயிரி அகழ்வு செயல்முறையின் மூலம் நடைபெற்று வருகிறது. 131 பேரூராட்சிகளில், பழைய மற்றும் கைவிடப்பட்ட குப்பை கொட்டும் இடங்களை உயிரி அகழ்வு முறை மூலம் மீட்க மொத்தம் 147 பணிகள் அனுமதிக்கப்பட்டது. இந்த இடங்களில் 257 ஏக்கர் பரப்பளவில் சுமார் 11.40 லட்சம் கன மீட்டர் மரபு கழிவுகள் உள்ளன எனக் கணக்கிடப்பட்டு, மேற்படி நிலங்களை மீட்டெடுக்க ரூ.76.32 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 54 பேரூராட்சிகளில் உயிரி அகழ்வு செயல்பாடுகள் மூலம் 61 பணிகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக

5.20 லட்சம் கன மீட்டர் மரபு கழிவுகள் அகற்றப்பட்டு 108 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டது. மீதமுள்ள 86 உயிரி அகழ்வு பணிகள் தற்போது பல்வேறு கட்டங்களில் நடைபெற்று வருகின்றன. சென்னை அண்ணா பல்கலைக் கழகம் கிண்டி வளாகத்தில் உள்ள சுற்றுச்சூழல் ஆய்வு மையம், உயிரி அகழ்வு பணிகளுக்கான தொழில்நுட்ப வழிகாட்டுதலை வழங்கி வருகிறது.

**4.6.3. பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டம் (நகர்ப்புரம்) – PMAY (U)**

பிரதம மந்திரி வீட்டு வசதி (நகர்ப்புரம்) திட்டத்திற்கு மாநில அளவில் ஒருங்கிணைப்பு முகமையாக (Nodal Agency) தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் செயல்படுகிறது. பேரூராட்சிகளில், PMAY–ன் நான்காவது கூறான பயனாளிகளே தங்களது வீடுகளைக் கட்டிக்கொள்ளும் திட்டம் (BLC) மட்டுமே செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மானியமாக ரூ.2.10 லட்சம் ஒவ்வொரு பயனாளிக்கும்

வழங்கப்படுகிறது. இதில், ரூ.1.50 லட்சம் ஒன்றிய அரசும் மற்றும் ரூ.0.60 இலட்சம் மாநில அரசும் வழங்குகிறது. வீட்டின் கட்டுமானத்திற்கு ஏற்படும் கூடுதல் செலவினம் பயனாளியின் பொறுப்பாகும்.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 91,944 வீடுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன, அதில் 66,323 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 20,449 வீடுகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் அனைத்தும் விரைவில் முடிக்கப்படும்.

**4.6.4. தேசிய நகர்ப்புர வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம் (NULM)**

தேசிய நகர்ப்புர வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உள்ள ஏழு கூறுகளில், நகர்ப்புர பகுதியில் உள்ள வீடற்றவர்களுக்கான தங்குமிடம் (SUH), நகர்ப்புர சாலை வியாபாரிகளுக்கான மேம்பாடு (SUSV) ஆகியவை மட்டுமே பேரூராட்சிகளின் துறை மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

**(i) வீடற்ற நகர்ப்புர ஏழைகளுக்கான தங்குமிடம்**

தேசிய நகர்ப்புர வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம் (NULM) கீழ், பேரூராட்சிகளில் 38 தங்குமிடங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டது. அவற்றில் 3 சாதாரண தங்குமிடங்கள் மற்றும் 35 அரசு மருத்துவமனைகளில் உள்ள உள்நோயாளிகளின் உதவியாளர்களுக்கான சிறப்புத் தங்குமிடங்கள் அடங்கும். இவற்றில் 37 தங்குமிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள ஒரு தங்குமிடத்திற்கான கட்டுமான பணி நடைபெற்று வருகிறது.

**(ii) நகர்ப்புர சாலையோர வியாபாரிகள் மேம்பாடு (SUSV)**

வணிகம் சீராக இயங்குவதற்கான சூழலை உருவாக்க நகர்ப்புர சாலையோர வியாபாரிகள் தொடர்பான புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது.

கணக்கெடுப்பு செய்தல், அடையாள அட்டை வழங்குதல், சாலையோர வியாபாரக் குழுக்கள்

அமைத்தல் போன்றவற்றுக்கான நிதி ரூ.2,57,18,340/- பேரூராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

கூடுதலாக, வேளாங்கண்ணி பேரூராட்சிக்கு 228 நடமாடும் வண்டிகள் ரூ.188.34 லட்சம் மதிப்பீட்டில் சாலையோர வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**(iii) பிரதம மந்திரி சாலையோர வியாபாரிகளுக்கான கடன் உதவி (PMSVANidhi)**

பிரதம மந்திரி சாலையோர வியாபாரிகளுக்கான கடன் உதவி திட்டத்தின் கீழ், ரூ.10,000 மானிய வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1,34,170 சாலையோர வியாபாரிகளுக்குக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாளதுவரை, 1,08,447 எண்ணிக்கையிலான கடன் விண்ணப்பங்கள் இத்திட்டத்திற்கான வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 70,977 கடன் விண்ணப்பங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன, மேலும், 67,834 விண்ணப்பங்களுக்குக் கடன்கள்

வழங்கப்பட்டுள்ளன. மேலும் அதிக எண்ணிக்கையிலான கடன் உதவிகள் வழங்கும் பொருட்டு வங்கிகளுடன் பேரூராட்சிகள் இணைந்து அவ்வப்போது மண்டல அளவில் கூட்டங்கள் நடத்தப்பட்டு பயனாளிகள் பயன் பெற உதவுகின்றன.

**4.6.5 15 வது நிதி ஆணையம் – தேசிய சுகாதார பணி மானியத் திட்டம்**

15வது நிதிக்குழு பரிந்துரையின்படி, நகர்ப்புர உள்ளாட்சிகளால் சுகாதாரம் தொடர்பான மேம்பாடுகளைச் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டு, நடைமுறைப்படுத்தும் வகையில் மத்திய அரசால் 2021–22 முதல் 2025–26 வரை மூன்று வகையான தலைப்புகளின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதன்படி நகர்ப்புரம் மற்றும் ஊரக பகுதிகளிலுள்ள ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், வட்டார அளவிலான பொது சுகாதார கட்டடங்கள் மற்றும் துணை சுகாதார கட்டடங்கள் ஆகியவற்றிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2021–22ஆம் நிதியாண்டில் ரூ.21.00 கோடியில் 42 பணிகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு, அதில் 39 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 3 பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

2022–23ஆம் நிதியாண்டில் ரூ.11.10 கோடியில் 24 பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, பணிகள் அனைத்தும் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

2023–24ஆம் நிதியாண்டில் ரூ.36.45 கோடியில் 69 பணிகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

**4.7 மாநில அரசின் திட்டங்கள்:**

**4.7.1. கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் (KNMT)**

பேரூராட்சிப் பகுதிகளிலுள்ள மண்சாலைகளை தார், சிமெண்ட் மற்றும் பேவர்பிளாக் சாலைகளாக மாற்றுதல், பேருந்து நிலையங்கள், சந்தைகள், அறிவுசார் மையம் போன்ற 800 பணிகள்

ரூ.473.42 கோடி மதிப்பீட்டில் 2021–22 ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின் (KNMT) கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது. இவற்றில் 789 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 11 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

2022–23 ஆம் ஆண்டில் 15 சந்தைகள், 11 பேருந்து நிலையங்கள், 37 மின் தகன கூடங்கள், 3 நீர்நிலைகள், 1 பூங்கா மேம்பாட்டுப் பணி, 1 சமுதாயக் கூடம் மற்றும் 223 சாலைப் பணிகள் மற்றும் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட குடிநீர் திட்டப்பணிகளுக்கான பங்களிப்புத் தொகை என பல்வேறு பணிகளுக்கு ரூ.495.77 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 220 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 71 பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

2023–24ஆம் ஆண்டில் 9 சந்தைகள், 7 பேருந்து நிலையங்கள், 25 மின்தகன கூடங்கள், 50 நீர்நிலைகள், 63 பூங்கா மேம்பாட்டுப் பணிகள்,

74 மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலங்கள், 208 சாலைப் பணிகள், 2 அறிவுசார் மையங்கள், மின்கல வாகனங்கள் மற்றும் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட குடிநீர் திட்டப்பணிகளுக்கான பங்களிப்புத் தொகை என பல்வேறு பணிகளுக்கு ரூ.495.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் 157 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 282 பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. வரும் நிதி ஆண்டுகளில் அவசியமான உட்கட்டமைப்பு பணிகள் அனைத்தும் படிப்படியாக எடுத்துக் கொள்ளப்படும்.

**4.7.2. நமக்கு நாமே திட்டம் (நகர்ப்புரம்)**

சமூக உட்கட்டமைப்பை உருவாக்குவதிலும், பராமரிப்பதிலும் பொதுமக்களின் பங்களிப்பை ஊக்குவிக்கவும், சுய சார்பு சிந்தனையை மேம்படுத்தவும் அரசால் நமக்கு நாமே திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 2021-2022 ஆம் ஆண்டில் பேரூராட்சிகளில் 522 பணிகள் ரூ.57.28 கோடி

மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டன, இதில் பொது மக்கள் பங்களிப்பு ரூ.20.03 கோடி மற்றும் அரசு பங்களிப்பு ரூ.37.25 கோடி ஆகும். மேற்படி பணிகளில் 518 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 4 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. 2022-2023 ஆம் ஆண்டில், 429 பணிகள் ரூ.49.58 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டன. இதில், பொதுமக்களின் பங்களிப்பு ரூ.16.34 கோடி மற்றும் அரசின் பங்களிப்பு ரூ.33.24 கோடி ஆகும். மேற்படி பணிகளில் 325 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 104 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

2023-2024 ஆம் ஆண்டில், ரூ.41.44 கோடி மதிப்பீட்டில் 337 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில், பொதுமக்களின் பங்களிப்பு ரூ. 11.98 கோடி மற்றும் அரசு பங்களிப்பு ரூ.29.46 கோடி ஆகும். மொத்த பணிகளில் 73 பணிகள் முடிக்கப்பட்டு,

மீதமுள்ள 264 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

### 4.7.3. தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம்

நகர்ப்புர பகுதியில் உள்ளவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், சமூகப் பாதுகாப்பினை வழங்கும் வகையிலும், வேலைவாய்ப்பினை வழங்கி பேரூராட்சிப் பகுதிகளில் பொது சொத்துக்களை உருவாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாட்டில் உள்ள 37 பேரூராட்சிகளில் இத்திட்டம் முன்னோடித் திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மேற்படி 37 பேரூராட்சிகளில் உள்ள ஒவ்வொரு வீடும் கணக்கெடுக்கப்பட்டு தகுதி வாய்ந்த பயனாளிகள் கண்டறியப்பட்டனர். கண்டறியப்பட்ட பயனாளிகளுக்கு சம்மந்தப்பட்ட பேரூராட்சிகளின் சார்பாக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் குளங்களை புனரமைத்தல், மரக்கன்றுகள் நடுதல், வடிகால்

அமைத்தல், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் உருவாக்குதல் போன்ற 192 பணிகள் எடுக்கப்பட்டன. நாளது வரை இத்திட்டத்தின் கீழ் 7,68,708 மனித பணி நாட்கள் உருவாக்கப்பட்டு, 66,312 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். மேலும், பல்வேறு சொத்து உருவாக்கம் இதன்மூலம் பேரூராட்சிகளில் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் படி 50 சதவீதத்திற்கும் குறையாதவர்கள் பெண்கள் ஆவார்கள். மேலும் ஆண், பெண் என்ற பாலின வேறுபாடின்றி அனைவருக்கும் சமமான ஊதியம் வழங்கப்படுகிறது.

பேரூராட்சிகளில் இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டதால், 2023–2024 ஆம் ஆண்டில் கூடுதலாக 50 பேரூராட்சிகளுக்கு இத்திட்டம் அரசால் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தற்போது, இத்திட்டம் 87 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு, ரூ.35.75 கோடி மதிப்பீட்டில் 299 பணிகளுக்கு நிர்வாக அனுமதி

வழங்கப்பட்டுள்ளது. பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**4.7.4 தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு)**

பேரூராட்சிகளுக்கு அருகில் உள்ள கிராமங்களில் இருந்து விளையும் விளைபொருட்கள் மற்றும் கால்நடைகளைச் சந்தைப்படுத்துதல் மூலம் கிராமங்களில் உள்ள விவசாயிகளின் பொருளாதாரம் மேம்படுவதோடு பேரூராட்சிகளில் உள்ளவர்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்குகிறது. எனவே, விவசாயிகளின் விளைபொருட்களை விரைந்தும் சிரமமின்றியும் நகர்ப்புர பகுதிகளில் சந்தைப்படுத்திடத் தரமான சாலைகளும் பாலங்களும் அவசியமாகும். நபார்டு திட்டத்தின் கீழ் சாலைகள் மற்றும் பாலங்கள் அமைத்திட நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2021–22–ம் நிதியாண்டில் 191 சாலை மற்றும் 11 பாலங்கள் ரூ.200.70 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அனைத்து பணிகளும்

முடிவடைந்துள்ளன. 2022-23-ம் ஆண்டில், 150 பேரூராட்சிகளில் ரூ.200.70 கோடி மதிப்பீட்டில் 159 சாலைப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் 146 பணிகள் முடிவடைந்த நிலையில், மீதமுள்ள 13 பணிகள் நடைபெற்று வருகின்றன. 2023-24-ம் ஆண்டிற்கு, 134 பேரூராட்சிகளில் 164 பணிகள் ரூ.200.70 கோடி மதிப்பீட்டில் சாலைப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பல்வேறு நிலைகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**4.7.5 மூலதன மானிய நிதி**

பாலங்கள், சிறுபாலங்கள், மழைநீர் வடிகால், பேருந்து நிலையங்களை நவீனமயமாக்கல், பூங்காக்கள் போன்ற கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி பேரூராட்சிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். எனவே, மூலதன மானிய நிதியின் கீழ் மேற்காணும் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேலும் பேரூராட்சியின் வளர்ச்சியை அடிப்படை நோக்கமாகக்

கொண்ட பிற அத்தியாவசியத் திட்டங்களுக்கும் மூலதன மானிய நிதியின் கீழ் (CGF) பேரூராட்சிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2021-22ஆம் ஆண்டில் 172 பணிகளுக்கு ரூ.223.16 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 162 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 10 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. 2022-23ஆம் ஆண்டில் 156 பணிகள் ரூ.178.87 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு 126 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 30 பணிகள் நடைபெற்று வருகின்றன. 2023-24 ஆம் ஆண்டிற்கு 133 பணிகள் ரூ.182.88 கோடியில் தொடங்கப்பட்டு 45 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 88 பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

**4.7.6. இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் நிதி**

பேரூராட்சிகளில் உள்ள மூலதன உட்கட்டமைப்புகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு

குறைபாடுகள் கண்டறியப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் அவற்றை சரிசெய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2021-22ஆம் நிதியாண்டில், 366 பணிகள் ரூ.74.39 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. 2022-23ல், 153 பணிகள் ரூ.66.16 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, 119 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 34 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. 2023-24ஆம் ஆண்டில், 151 பணிகள் ரூ.72.60 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, 6 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 145 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் செயல்பாட்டில் உள்ளன. மேலும், தேவையுள்ள பேரூராட்சிகளுக்குத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் செலுத்த வேண்டிய கட்டணங்களைச் செலுத்திட இந்நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**4.7.7 தமிழ்நாடு நகர்ப்புர சாலை உட்கட்டமைப்புத் திட்டம் (TURIP)**

இத்திட்டத்தின் நோக்கம், இயற்கை சீற்றங்கள் மற்றும் நீர் வழங்கல் திட்டங்களைச் செயல்படுத்துதல் போன்ற பல்வேறு காரணங்களால் சேதமடைந்த சாலைகளை சீரமைத்து மேம்படுத்துவது ஆகும்.

2021–22ஆம் ஆண்டில், 122.72 கிமீ நீளத்திற்கு ரூ.82.99 கோடி மதிப்பீட்டில் 175 சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன.

2022–23ஆம் ஆண்டில், 154.991 கிமீ நீளத்திற்கு ரூ.105.48 கோடி மதிப்பீட்டில் 144 சாலைப் பணிகள் தொடங்கப்பட்டன. இதில் 129 பணிகள் முடிவடைந்த நிலையில், மீதமுள்ள 15 பணிகள் நடைபெற்று வருகின்றன. கூடுதலாக, ஏற்கனவே இத்திட்டத்தின் கீழ் இருந்த சேமிப்பு மற்றும் வட்டியின் கீழ் 107 சாலைப் பணிகள் ரூ.74.26 கோடி மதிப்பீட்டில் 110.021 கிமீ நீளத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இதில், 96 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 11 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2023–24ஆம் ஆண்டில், 168 சாலைப் பணிகள் ரூ.105.48 கோடி மதிப்பீட்டில் 218.37 கிமீ நீளத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இதில், 132 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 36 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**4.7.8 நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (NSMT)**

பேரூராட்சிகளை அருகில் உள்ள கிராமங்களுடனும், பெருநகரங்களுடனும் இணைப்பதில் சாலைகள் முக்கிய பங்கு வகித்து பேரூராட்சியின் பொருளாதாரத்தை உயர்வடைய செய்கிறது. 490 பேரூராட்சிகளில் சுமார் 20,306 கிமீ நீளமுள்ள பல்வேறு வகையான சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

சாலைகள் தேய்மானம், சாலையின் வயது போன்ற பல்வேறு காரணங்களால் சாலைகள் சேதத்தை எதிர்கொள்கின்றன. மேலும், வெள்ளம், சூறாவளி

மற்றும் கனமழை போன்ற இயற்கை பேரழிவுகளும் சாலைகளுக்கு சேதத்தினை உண்டாக்குகின்றன, நகர்ப்புர உள்ளாட்சிகள் மூலமும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமும் செயல்படுத்தப்படும் குடிநீர் திட்டப்பணிகள், பாதாளச் சாக்கடை திட்டப்பணிகள் ஆகியவற்றாலும் சாலைகள் சேதமடைகின்றன. நகர்ப்புரங்களில் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு சாலைகள் இன்றியமையாததாக உள்ளது. எனவே, சாலை உட்கட்டமைப்பு வசதியை உறுதிசெய்ய சேதமடைந்த சாலைகளை உடனடியாக சரிசெய்வது அவசியம் ஆகும்.

இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண, அரசாணை எண்.423, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2022–ன்படி சிறப்பு நிதியாக பேரூராட்சிகள் உட்பட அனைத்து நகர்ப்புர உள்ளாட்சிகளுக்கும் ஒவ்வொரு ஆண்டும் ரூ.550 கோடி 2022–23 முதல் 2025–26 வரை ஒதுக்கீடு

செய்யப்படுகிறது. இப்பணிகளைச் செய்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை எண்.19, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.13.02.2023–ன்படி வெளியிடப்பட்டது.

2022–23 ஆம் ஆண்டில், 378.201 கிமீ நீளத்திற்கு ரூ. 154.00 கோடி மதிப்பீட்டில் 196 சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதில் 194 பணிகள் முடிவடைந்த நிலையில், மீதமுள்ள 2 பணிகள் நடைபெற்று வருகின்றன. 2023–24 ஆம் ஆண்டில், 375.84 கிமீ நீளத்திற்கு ரூ. 152.00 கோடி மதிப்பீட்டில் 223 சாலைப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன, இதில் 157 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 66 பணிகள் நடைபெற்று வருகின்றன.

**4.7.9 மாநில நிதி ஆணையம் – நகர்ப்புர சாலை மேம்பாட்டு நிதி**

2022–23ஆம் ஆண்டில், 101.660 கிமீ நீளத்திற்கு 60 சாலைப் பணிகள் தொடங்கப்பட்டன. அவற்றுள் ரூ.66.00 கோடி மதிப்பீட்டில் 58 பணிகள்

முடிக்கப்பட்டு, மீதமுள்ள 2 பணிகள் நடைபெற்று வருகின்றன.

2023-24ஆம் ஆண்டில், 154.83 கிமீ நீளத்திற்கு 105 சாலைப் பணிகள் ரூ.72.00 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதில் 52 பணிகள் முடிவடைந்த நிலையில், மீதமுள்ள 53 பணிகள் நடைபெற்று வருகின்றன.

**4.7.10 செயலற்ற நிதி**

2023-24ஆம் ஆண்டில், 137.57 கிமீ நீளத்திற்கு ரூ.104.69 கோடி மதிப்பீட்டில் 97 சாலைப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதில் 9 பணிகள் முடிவடைந்த நிலையில், மீதமுள்ள 88 பணிகள் நடைபெற்று வருகின்றன.

**4.7.11 அயோத்தி தாஸ் பண்டிதர் வாழ்விடங்கள் மற்றும் மேம்பாட்டுத் திட்டம்**

பேரூராட்சி பகுதிகளில் உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை உறுதி செய்ய அயோத்திதாஸ் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத்

திட்டத்தின் கீழ் 2023-24ஆம் ஆண்டிற்கு ரூ.51.81 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 336 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில் 177 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 159 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**4.7.12. சுற்றுலா மானியங்கள்**

ஆறாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி, பேரூராட்சிகளில் நடைபெறும் சிறப்புத் திருவிழாக்கள் அல்லது சிறப்பு நிகழ்ச்சிகளின் போது தேவையான கூடுதல் வசதிகளை செய்வதற்கு இத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதில் 12 பேரூராட்சிகளுக்கு நிலையான ஆண்டு மானியமாக ரூ.6.00 கோடியும், 28 பேரூராட்சிகளுக்கு பல்வேறு மானிய நிதியின்கீழ் ஆண்டுக்கு ரூ.1.50 கோடியும் பொது திட்ட அனுமதி மற்றும் கண்காணிப்புக் குழுவால் 2022-23 மற்றும் 2023-24 ஆண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.7.13 பேரூராட்சிகளில் பள்ளிக் கட்டமைப்புகளை மேம்படுத்துதல்**

ஆறாவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின் பேரில் நகர்ப்புர உள்ளாட்சிகளில் அமைந்துள்ள பள்ளிகளின் உட்கட்டமைப்புப் பணிகளை நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மூலம் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.60, நிதித் துறை, நாள்.28.02.2023-ன்படி வெளியிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய பரிந்துரை மற்றும் நிதி விகிதாச்சாரத்தின் அடிப்படையில் 2022-23 மற்றும் 2023-24-ம் ஆண்டுகளில் ரூ.6272.45 லட்சம் மதிப்பீட்டில் 214 மூலதனப் பணிகளும், ரூ.3951.20 லட்சம் மதிப்பீட்டில் 169 பராமரிப்புப் பணிகளும் பேரூராட்சிகளில் எடுக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய அனைத்துப் பணிகளும் தற்போது முன்னேற்றத்தில் உள்ளன.

**4.7.14 பேரூராட்சிப் பகுதிகளில் புதிய நூலகங்கள் அமைத்தல்**

பேரூராட்சிப் பகுதியிலுள்ள குழந்தைகள், வளர் இளம் பருவத்தினர், இளைஞர்கள் மற்றும் போட்டித் தேர்வுக்கு தயாராகி வருபவர்கள் உட்படப் பலரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பொது நூலக இயக்குநரின் மூலம் 148 நூலகங்கள் அமைக்க ஒரு நூலகத்திற்கு ரூ.22.00 இலட்சம் வீதம் ரூ.3256.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 148 பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, அனைத்து பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

**4.8 பேரூராட்சிகளில் மின் ஆளுமை**

**4.8.1 இணையவழியில் வரி செலுத்துதல்**

வரி மற்றும் வரியில்லாத இனங்கள் பேரூராட்சிகளின் அடிப்படை வருவாய் ஆகும். தற்போது இணையதளத்தின் வாயிலாக கணினிமயமாக்கப்பட்ட ரசீது செலுத்தும் முறை

பேரூராட்சிகளில் நடைமுறையில் உள்ளது. தேசிய தகவல் மையத்தின் (NIC) இணையதளத்தின் வழியாக டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு, நெட் பேங்கிங், யுபிஐ மற்றும் க்யூஆர் கோடு (QR code) போன்ற பல்வேறு கட்டண சேவைகளைப் பயன்படுத்தி பொதுமக்கள் செலுத்தலாம். மேலும் தங்கள் ரசீதினை எங்கிருந்தும் https://dtp.tn.gov.in என்ற இணையதளத்தைப் பயன்படுத்தி வரியினங்களை செலுத்த முடியும்.

**4.8.2 இணையவழி கட்டட உரிமம்**

பேரூராட்சிப் பகுதிகளில் கட்டட உரிமத்திற்கு அனுமதி வழங்குவது நேரடி முறையிலே செயல்படுத்தப்பட்டு வந்தது. மேலும் தற்போது மனைப்பிரிவு மற்றும் கட்டட உரிம அனுமதி பெறுவதற்கு இணையவழி சேவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்கள் மனைப்பிரிவு மற்றும் கட்டட உரிமத்திற்கான அனுமதி பெறும் சேவை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது,

இதனால் பொது மக்கள் இணையவழியிலேயே மனைப்பிரிவு மற்றும் கட்டட உரிம அனுமதி பெறுவதற்கு விண்ணப்பிப்பதும் அதற்கான அனுமதியைப் பெறுவதும் தற்போது மிகவும் எளிமைப்படுத்தப்பட்டது. 490 பேரூராட்சிகளிலும் இணையவழியில் மனைப்பிரிவு மற்றும் கட்டட உரிம அனுமதி வழங்கும் சேவை செயல்படுத்தப்பட்டுள்ளது. (இணைய முகவரி–https://onlineppa.tn.gov.in)

**4.8.3 இணையவழி குறைதீர்ப்பு**

தற்போது பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள பொதுமக்களின் குறைகள் "முதல்வரின் முகவரி" என்ற இணையதளத்தின் வாயிலாகப் பெறப்படுகின்றன. பொதுமக்கள் தங்கள் குறைகளை 1100 என்ற கட்டணமில்லா தொலைப்பேசி எண் மற்றும் இணையதளம் (மின்னஞ்சல்) வாயிலாகவும் பதிவுசெய்து நிவாரணம் கோரலாம். இணையதளத்தில் பதிவுசெய்யப்பட்ட மனுக்கள் மீது உரியத் தீர்வுகள் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் தீர்க்கப்படுகின்றன.

மேலும், அவர்கள் பதிவு செய்துள்ள மனுவின் மீதான ஒவ்வொரு நிலை குறித்தும் குறுஞ்செய்தி மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

### 4.8.4 இணையவழி திட்டப்பணி கண்காணிப்பு முதல்வரின் தகவல் பலகை

பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்படும் அனைத்து மூலதன மற்றும் பராமரிப்பு பணிகள் முதல்வரின் தகவல் பலகையில் பதிவேற்றம் செய்யப்பட்டு, பணியின் நிலை குறித்துக் கண்காணிக்கப்படுகிறது. இதன் வாயிலாக அனைத்து மூலதன மற்றும் பராமரிப்பு பணிகளின் தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம் குறித்துக் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் உயர் அலுவலர்களுக்கு மிகவும் உதவிகரமாக உள்ளது.

### 4.8.5 UTIS (Urban Tree Information System)

பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்படும் அனைத்து திட்ட மற்றும் பொது நிதி பணிகள் UTIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு பணியின் நிலை குறித்துக் கண்காணிக்கப்படுகிறது. இந்த

இணையதளத்தின் வாயிலாக மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகளுக்கும் தற்போதைய நிலையின் புகைப்படம் பதிவேற்றம் செய்வதன் மூலம் உயர் அதிகாரிகள் அவற்றை ஆய்வு மேற்கொள்ளவும் தங்களின் கீழ் உள்ள அலுவலர்களுக்கு உரிய அறிவுரை வழங்கவும் உதவுகிறது. மேலும், இவ்வாறான இணையதளத்தின் வாயிலாக பணிகள் பதிவேற்றம் செய்யப்பட்டுப் பராமரிக்கப்படுவதனால் பணிகள் குறித்த தரவுகளை ஒவ்வொரு முறையும் பதிவேற்றம் செய்யத் தேவைப்படும் மனித உழைப்பும் நேரமும் குறைக்கப்படுகிறது. நகராட்சி நிருவாக இயக்குநரகத்தில் நடைமுறையில் உள்ள UTIS இணையதள சேவைகளுக்கு இணையாகப் பேரூராட்சிகளிலும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4.9 நிதி மேலாண்மை

### 4.9.1. ஆறாவது மாநில நிதி ஆணையம்

ஆறாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையினை செயல்படுத்திட அரசாணை (நிலை) எண்.60, நிதித்துறை, நாள்.28.02.2023–ன்படி அரசால் ஆணை

வெளியிடப்பட்டதன் அடிப்படையில் 2022-23 முதல் 2026-27 வரை உரிய காலத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும். ஆறாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி 2023-24 நிதியாண்டிற்கு விடுவிக்கப்பட்ட விவரமும், 2024-25 நிதியாண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரமும் அட்டவணை 4.7-ல் பட்டியலிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.7**

| வ. எண் . | மானியத்தின் வகை | 2023-24 நிதியாண்டு (ரூ. கோடியில்) | | 2024-25 நிதியாண்டின் ஒதுக்கீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| | | ஒதுக்கீடு | விடுவிக்கப்பட்டது | |
| 1 | மாநில நிதிக் குழு மானியம் | 1298.23 | 1298.23 | 1868.34 |
| 2 | மூலதன மானிய நிதி | 181.50 | 181.50 | 198.00 |
| 3 | இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதி | 72.54 | 72.54 | 79.20 |
| | மொத்தம் | 1552.27 | 1552.27 | 2145.54 |

**4.9.2 15வது நிதிக்குழு மானியம்**

15வது நிதி ஆணையம், 'நிபந்தனையற்ற மானியம் மற்றும் நிபந்தனையுடன் கூடிய மானியம்' என இரண்டு பிரிவுகளாக மானியங்களை பரிந்துரைத்துள்ளது.

**நிபந்தனையற்ற மானியம்** நிபந்தனையற்ற மானியம், சம்பளம் மற்றும் நிறுவனச் செலவுகள் நீங்கலாக, இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 12வது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 18 பொருட்கள் தொடர்பான பணிகளில் தேவையென கருதப்படும் பணிகளுக்குப் பேரூராட்சிகள் பயன்படுத்திக் கொள்ளலாம். 2022–23ஆம் நிதியாண்டில் நிபந்தனையற்ற மானியத்தின் கீழ் 1119 பணிகள் ரூ.98.40 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 729 பணிகள் முடிவுற்று மீதமுள்ள 390 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும் 2023–24ஆம் நிதியாண்டில் நிபந்தனையற்ற மானியத்தின் கீழ் 1379 பணிகள்

ரூ.131.57 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளத் தெரிவிக்கப்பட்டு அனைத்து பணிகளும் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**நிபந்தனையுடன் கூடிய மானியம்**

நிபந்தனையுடன் கூடிய மானியத்தில் 50% சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை மற்றும் 50% குடிநீர், மழை நீர் சேகரிப்பு மற்றும் நீர் மறுசுழற்சி ஆகியவற்றுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2022-23ஆம் நிதியாண்டில் நிபந்தனையுடன் கூடிய மானியத்தின் கீழ் 2155 பணிகளுக்கு ரூ.141.05 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. அவற்றுள், 1299 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 856 பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 2023-24ஆம் நிதியாண்டில் நிபந்தனை மானியத்தின் கீழ் 2064 பணிகள் ரூ.167.70 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளத் தெரிவிக்கப்பட்டு அனைத்துப் பணிகளும் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**4.9.3 பேரூராட்சிகளின் வரவு மற்றும் செலவு விவரங்கள் அட்டவணை 4.8–ல் கொடுக்கப்பட்டுள்ளன.**

**அட்டவணை 4.8**

**வரவு** **(ரூ கோடியில்)**

| வ. எண். | விளக்கம் | 2022–23 | 2023–24 |
|---|---|---|---|
| 1 | வரி வருவாய் | 323.55 | 376.59 |
| 2 | வரியில்லா வருவாய் | 284.39 | 298.02 |
| 3 | ஒதுக்கப்பட்ட வருவாய் | 210.96 | 210.96 |
| 4 | SFC/CFC மானியங்கள் | 1805.98 | 2169.34 |
| 5 | மூலதன ரசீதுகள் | 431.70 | 784.17 |
| | மொத்தம் | 3056.58 | 3839.08 |

**செலவு** **(ரூ கோடியில்)**

| வ. எண். | விளக்கம் | 2022–23 | 2023–24 |
|---|---|---|---|
| 1 | நிறுவுதல் / நிர்வாகக் கட்டணங்கள் | 1152.83 | 1360.87 |
| 2 | மூலதன செலவு | 2203.36 | 858.67 |
| | மொத்த செலவு | 3356.19 | 2219.54 |

**4.9.4 கடன் மற்றும் நிலுவைக் கட்டணங்கள்**

31.03.2024 வரை செலுத்தப்பட வேண்டிய கடன்கள் மற்றும் கட்டணங்களின் நிலுவை விவரம் கீழே 4.9-ல் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.9**

| வ.எண் | விவரம் | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | எல்.ஐ.சி. கடன் மற்றும் வட்டியுடன் கூடிய நிலுவைத் தொகை | 41.84 |
| | மொத்தம் | 41.84 |

**4.10 விருதுகள்**

அ) தென் மண்டலத்தில் உள்ள 10,000-க்கும் குறைவான மக்கட்தொகை கொண்ட தூய்மை நகரங்களுக்கான பிரிவில் 2023 ஆம் ஆண்டிற்கான 'ஸ்வச் சர்வேக்ஷன்' விருதானது நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள கீழ்வேளூர் பேரூராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆ) 2023ஆம் ஆண்டில் திறம்படக் கழிவுகளைக் கையாளுதல், பிரித்தல், பதப்படுத்துதல் மற்றும் மறுசுழற்சி செய்தல் ஆகியவற்றிற்காக செங்கல்பட்டு மாவட்டம் கருங்குழி பேரூராட்சிக்கு ஹட்கோ விருது வழங்கப்பட்டது.

இ) கூடுதலாக, பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மையில் சிறப்பாக செயல்படுத்தியதற்காகப் பேரூராட்சிகளின் இயக்குநரகத்திற்கு 2023 ஆம் ஆண்டிற்கான 'ஸ்கோச் ஆளுமை விருது (தங்கம்)' வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## 5. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்

சென்னை மாநகரம் இந்தியாவின் நான்காவது அதிக மக்கள் தொகை கொண்ட மாநகரமாகவும், மக்கள் தொகை அடிப்படையில் உலகின் 36வது பெரிய பெருநகரப் பகுதியாகவும் விளங்குகிறது. 1974 ஆம் ஆண்டில் சென்னை நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் சென்னைப் பெருநகரப் பகுதி (CMA) என அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சென்னைப் பெருநகரப் பகுதிகளில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று அமைப்புகளை நகரின் வளர்ச்சிக்கேற்ப தேவைகளின் அடிப்படையில் திட்டமிட்டு, அபிவிருத்தி செய்து முறைப்படுத்தவும், குறிப்பாக, மக்களின் சுகாதாரத்தை பாதுகாக்கவும் மற்றும் அதனைச் சார்ந்த அனைத்துத் தேவைகளுக்காகவும், தமிழ்நாடு சட்டம் 28/1978ன்படி சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்

கழிவுநீரகற்று வாரியம் அரசுரிமையாக்கப்பட்ட நிறுவனமாக உருவாக்கப்பட்டது.

இவ்வாரியமானது, ஒரு முழு நேர மேலாண்மை இயக்குநரால் நிர்வகிக்கப்படுகிறது. சென்னை குடிநீர் வாரியமானது கீழ்கண்டவாறு கட்டமைக்கப்பட்டுள்ளது.

வாரிய இயக்குநர்கள்

| | |
|---|---|
| **வாரிய தலைவர்** | |
| 1 | மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் |
| **வாரிய இயக்குநர்கள்** | |
| 2 | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர்,<br>பெருநகர சென்னை மாநகராட்சி |
| 3 | அரசு முதன்மைச் செயலாளர்,<br>நிதித்துறை |
| 4 | அரசு முதன்மைச் செயலாளர்,<br>நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை |
| 5 | மேலாண்மை இயக்குநர்,<br>சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம். |

| | |
|---|---|
| 6 | உறுப்பினர் செயலர்,<br>சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் |
| 7 | மேலாண்மை இயக்குநர்,<br>தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் |
| 8 | செயல் இயக்குநர்,<br>சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம். |
| 9 | நிதி இயக்குநர்,<br>சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம். |
| 10 | பொறியியல் இயக்குநர்,<br>சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம். |

பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் பாதுகாப்பான முறையில் கழிவுகளை அகற்றுதல் ஆகியவை சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கும், மக்களின் நலனுக்கும் இன்றியமையாததாகும். சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் துவக்கப்பட்ட நாள் முதல் இந்த சேவைகளை சென்னைப் பெருநகர பகுதி மக்களுக்கு வழங்கி வருகிறது. தற்போது, சென்னைப் பெருநகர் குடிநீர்

வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், 426 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிலுள்ள சென்னைப் பெருநகரில் வசிக்கும் சுமார் 89.34 லட்சம் மக்களுக்கு, 15 பகுதி அலுவலகங்கள் மற்றும் 200 பணிமனைகள் மூலம் தனது சேவையை நேரடியாக வழங்கி வருகிறது. மேலும், சென்னைக்கு அருகிலுள்ள சில நகர்ப்புர அமைப்புகளுக்கும் மற்றும் தொழிற்சாலைகளுக்கும் இவ்வாரியத்தால் தேவையான நீர் வழங்கப்பட்டு வருகிறது.

**தொலைநோக்குப் பார்வை**

1. சென்னைப் பெருநகரில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் குழாய் மற்றும் கழிவுநீர் இணைப்பு வழங்கும் வசதிகளை ஏற்படுத்துதல்.
2. நீர் ஆதாரங்களை பெருக்குதல் மற்றும் குடிநீர் கட்டமைப்பை வலுப்படுத்துவதன் மூலம்,

தேவை–பற்றாக்குறை இடைவெளியை குறைத்தல்.

3. மழை நீரை சேமிப்பதற்காக, சென்னைப் பெருநகரின் ஒவ்வொரு வளாகத்திலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்தி கண்காணித்தல் மற்றும் நீர்ப்படுகை மேலாண்மை திட்டம் தயாரித்தல்.

4. நகர்ப்புர நீர்நிலைகளை புனரமைத்தல் மற்றும் மீட்டெடுத்தல்.

5. பயன்படுத்தப்பட்ட நீரினை குறைந்தபட்சம் 20 சதவீதம் மறு சுழற்சி செய்து மறு பயன்பாட்டிற்கு கொண்டு வருதல்.

6. வருவாய் அல்லாத நீரின் அளவை 15 சதவீதத்திற்கும் கீழ் குறைத்தல்.

7. சென்னை மாநகரில் உள்ள விடுபட்ட தெருக்களுக்கு குடிநீர் வழங்கல் மற்றும் பாதாள சாக்கடை வசதிகளை அளித்தல்.

8. போதிய அளவு சுத்திகரிப்புத் திறனை அடைவதற்கு, புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் மற்றும் தற்போதுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை புனரமைத்தல்.

9. மாநகரின் நீர் வழிப்பாதைகளான அடையாறு, கூவம் மற்றும் பக்கிங்காம் கால்வாய் வடிநிலப் பகுதிகள் மற்றும் அவற்றின் பிரதான நீரோடைகளில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கு, குறுகிய கால திட்டமாக இடைமறித்தல் மற்றும் மாற்று வழிகளை அமைத்தல் மற்றும் நீண்ட கால திட்டமாக கட்டமைப்பு பணிகளை வலுப்படுத்துதல்.

## 5.1 குடிநீர் வழங்கல் மேலாண்மை

### 5.1.1 குடிநீர் ஆதாரங்கள்

சென்னை மாநகர மக்களுக்கு தேவையான அளவு பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் தொழிற்சாலைகளுக்கு தேவையான நீரை

வழங்குவது சென்னைக் குடிநீர் வாரியத்தின் முதன்மையான மற்றும் உறுதியான பெரும் முயற்சியாகும். மேற்பரப்பு நீராதாரங்கள், நிலத்தடி நீர் ஆதாரங்கள், கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் மற்றும் எதிர்மறை சவ்வூடு பரவல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் நகரின் தண்ணீர் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

**(i) மேற்பரப்பு நீராதாரங்கள்**

சென்னை மாநகரின் முக்கிய நீராதாரமாக மேற்பரப்பு நீராதாரம் விளங்குகிறது. கிருஷ்ணா நதி நீர் திட்டத்தின் கீழ் கண்டலேறு அணையிலிருந்து பெறப்படும் நீர் மற்றும் சென்னைக்கு அருகிலுள்ள பூண்டி, புழல், சோழவரம், செம்பரம்பாக்கம், கண்ணன்கோட்டை – தேர்வாய் கண்டிகை மற்றும் கடலூர் மாவட்டத்திலுள்ள வீராணம் ஏரி ஆகியவற்றிலிருந்து தேவையான நீர் எடுக்கப்பட்டு வருகின்றது.

**(ii) நிலத்தடி நீராதாரங்கள்**

தாமரைப்பாக்கம் பகுதி நிலத்தடி நீராதாரங்களில் இருந்து நாளொன்றுக்கு சுமார் 5 மில்லியன் லிட்டர் மற்றும் மாநகருடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள நிலத்தடி நீராதாரங்களில் இருந்து 20 மில்லியன் லிட்டர் குடிநீர் எடுக்கப்பட்டு வருகின்றது.

**(iii) கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள்**

சென்னைக்கு அருகே வற்றாத நீராதாரங்கள் ஏதுமில்லை. சென்னைப் பெருநகரம், வடகிழக்கு பருவ மழையையே பெரிதும் சார்ந்திருக்கிறது. பருவ மழை பொய்க்கும் காலங்களில் சென்னைப் பெருநகரம் வறட்சி நிலையை எதிர்கொள்கிறது. மேலும், சென்னைக்கு அருகாமையிலுள்ள பகுதிகள் நகரமயமாதல் மற்றும் விரைவாக பெருகிவரும் தொழிற்சாலைகள் ஆகியவை நீர் தேவையை அதிகரித்து, நீராதாரங்களின் மீது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. வறட்சி கால அவசர நடவடிக்கையின் ஒரு பகுதியாக, நகரின் நீண்ட கால

குடிநீர் தேவை மற்றும் நகரை வறட்சியிலிருந்து பாதுகாத்தல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, அரசு, கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்களை அமைத்துள்ளது.

**அ) கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் – மீஞ்சூர்**

கடல் நீரை குடிநீராக்கும் நிலையங்கள் சென்னை பெருநகரின் குடிநீர் தேவையை ஈடு செய்வதில் பெரும்பங்கு வகிக்கின்றன.

நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட சென்னை நகரின் கடல் நீரைக் குடிநீராக்கும் முதலாவது நிலையம், மீஞ்சூரில், வடிவமைத்தல், நிறுவுதல், சொந்தமாக்கி, இயக்கி மற்றும் திருப்பித் தருதல் எனும் (DBOOT) ஒப்பந்த அடிப்படையில் நிறுவப்பட்டு, 31.07.2010 அன்று அன்றைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையத்திலிருந்து பெறப்படும் குடிநீர், வடசென்னை பகுதிகளான மணலி, மாதவரம்,

எண்ணூர், கத்திவாக்கம் மற்றும் திருவொற்றியூர் பகுதிகளில் வசிக்கும் சுமார் 9 இலட்சம் மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்கிறது.

**ஆ) கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் – நெம்மேலி**

நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் மற்றுமொரு நிலையம் ரூ.914.42 கோடி மதிப்பீட்டில் (ஒன்றிய அரசின் மானியம் ரூ.871.24 கோடி மற்றும் தமிழ்நாடு அரசிடமிருந்து ரூ.43.18 கோடி) நெம்மேலியில் நிறுவப்பட்டது. இந்நிலையம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், துணை முதலமைச்சராக மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராக பொறுப்பு வகித்தபோது, 23.02.2010 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு, 2013ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகின்றது. இந்நிலையத்திலிருந்து பெறப்படும் குடிநீர் தென் சென்னை பகுதிகளான அக்கரை, எழில் நகர்,

கண்ணகி நகர், சோழிங்கநல்லூர், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம், செம்மஞ்சேரி, துரைப்பாக்கம், பெருங்குடி, கொட்டிவாக்கம், பாலவாக்கம், திருவான்மியூர் மற்றும் பள்ளிப்பட்டு பகுதிகளில் வசிக்கும் சுமார் 10 இலட்சம் மக்களின் குடிநீர் தேவையை நிறைவு செய்கிறது.

**இ) நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்திலிருந்து பல்லாவரம் வரை குழாய் பதித்தல்**

வளர்ந்து வரும் சென்னை பெருநகரின் குடிநீர் தேவையை நிறைவு செய்வதற்காக, நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைக்கப்பட்டது. இத்திட்டத்தினை அம்ரூட் திட்டம் மற்றும் ஜெர்மானிய வளர்ச்சி வங்கி (KfW) நிதி

உதவியுடன் மேற்கொள்ள அரசு, ரூ.1,516.82 கோடி மதிப்பிற்கு திருத்தப்பட்ட நிருவாக ஒப்புதல் வழங்கியது.

இத்திட்ட பணிகள் அனைத்தும் முழுமையாக முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 24.02.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் குடிநீரினால், பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள வேளச்சேரி, உத்தண்டி, ஆலந்தூர், பள்ளிக்கரணை, ஜல்லடம்பேட்டை, மடிப்பாக்கம், பள்ளிப்பட்டு, உள்ளகரம்–புழுதிவாக்கம் மற்றும் எம்.ஆர்.சி நகர்–நந்தனம் ஆகிய பகுதிகளிலும் மற்றும் தாம்பரம் மாநகராட்சியின் கீழ் உள்ள பல்லாவரம் பகுதியிலும் வசிக்கும் 9 இலட்சம் மக்கள் பயனடைகிறார்கள்.

**(iv) மூன்றாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட நீர்**

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு செய்து (TTRO),

சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள தொழிற்சாலைகளில் நீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக, நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட இரண்டு நிலையங்களை கோயம்பேடு மற்றும் கொடுங்கையூரில் நிறுவியுள்ளது. இந்நிலையங்களிலிருந்து, இருங்காட்டுக்கோட்டை, ஸ்ரீபெரும்புதூர், ஒரகடம், மணலி–எண்ணூர் மற்றும் மணலி–மீஞ்சூர் வழித்தடங்களிலுள்ள தொழிற்சாலைகளுக்கு நீர் கொண்டு செல்லும் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. இரண்டு நிலையங்களும் தற்போது இயக்கத்தில் உள்ளன. கொடுங்கையூரிலிருந்து நாளொன்றுக்கு 23 மில்லியன் லிட்டரும், கோயம்பேடு நிலையத்திலிருந்து நாளொன்றுக்கு 15 மில்லியன் லிட்டரும் தொழிற்சாலைகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

### 5.1.2 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

சென்னை குடிநீர் வாரியத்தின் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் சுத்திகரிப்பு திறன் அட்டவணை 5.1 ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நாளொன்றுக்கு 1,670 மில்லியன் லிட்டர் ஆகும். கீழ்ப்பாக்கத்தில் இயங்கிவரும் நூற்றாண்டு பழமையான முதலாவது குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் தற்போது வரை தொடர்ந்து இயங்கி, மக்களின் குடிநீர் தேவையை நிறைவு செய்து வருகிறது.

**அட்டவணை 5.1**

| வ.எண் | நிலையம் அமைந்துள்ள இடம் | சுத்திகரிப்பு திறன் (MLD) | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 1 | கீழ்ப்பாக்கம் | 270 | 1914 |
| 2 | செங்குன்றம் | 300 | 1996 |
| 3 | வீராணம் | 180 | 2004 |
| 4 | செம்பரம்பாக்கம் | 530 | 2008 |
| 5 | சூரப்பட்டு | 14 | 1965 (2009 ம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து பெறப்பட்டது) |
| 6 | கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம், மீஞ்சூர் | 100 | 2010 |

| | | | |
|---|---|---|---|
| 7 | கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம், நெம்மேலி | 110 | 2013 |
| 8 | போரூர் | 6 | 2022 |
| 9 | கொளத்தூர் | 10 | 2023 |
| 10 | கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம், நெம்மேலி | 150 | 2024 |
| | **மொத்தம்** | **1,670** | |

### 5.1.3 குடிநீர் விநியோகம்

சென்னைப் பெருநகர மக்களுக்கு 16 பிரதான குடிநீர் விநியோக நிலையங்கள் மற்றும் 102 சிறிய நீரேற்று நிலையங்கள் மூலம் 6,196.13 கி.மீ. நீளமுள்ள குடிநீர் குழாய்கள் மூலமாக அட்டவணை 5.2ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

**அட்டவணை 5.2**

| வ. எண் | குடிநீர் விநியோக நிலையம் | வழங்கப்படும் நீரின் அளவு (MLD) |
|---|---|---|
| 1 | பட்டேல் நகர் | 30 |
| 2 | அண்ணா பூங்கா | 22 |
| 3 | கண்ணப்பர் திடல் | 25 |

| | | |
|---|---|---|
| 4 | வியாசர்பாடி | 35 |
| 5 | கொளத்தூர் | 25 |
| 6 | கீழ்ப்பாக்கம் | 105 |
| 7 | சூளைமேடு | 50 |
| 8 | திருவல்லிக்கேணி | 15 |
| 9 | தெற்கு நீரேற்று நிலையம் | 50 |
| 10 | வள்ளுவர் கோட்டம் | 20 |
| 11 | கே. கே. நகர் | 32 |
| 12 | ஈக்காட்டு தாங்கல் | 10 |
| 13 | மயிலாப்பூர் | 40 |
| 14 | நந்தனம் | 20 |
| 15 | பள்ளிப்பட்டு | 35 |
| 16 | வேளச்சேரி | 35 |
| 17 | நேரடி வழங்கல் மற்றும் சிறிய நீரேற்று நிலையங்கள் | 231 |
| | **பிரதான சென்னை பகுதிக்கு குழாய் மூலம் வழங்குதல்** | **780** |
| 18 | இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு குழாய் மூலம் | 195 |
| 19 | லாரிகள் மூலம் (பிரதான + இணைக்கப்பட்ட பகுதிகள்) | 30 |
| 20 | மொத்த நுகர்வோர் | 35 |
| 21 | தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் சுத்திகரிக்கப்பட்ட நீர் | 25 |
| | **வீட்டு உபயோகத்திற்காக வழங்கப்படும் நீர்** | **1065** |

| | | |
|---|---|---|
| 22 | **தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் சுத்திகரிக்கப்பட்ட பயன்படுத்தப்பட்ட நீர்** | |
| | (i) இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட பயன்படுத்தப்பட்ட நீர் | 23 |
| | (ii) எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட நீர் | 38 |
| | **தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் மொத்த நீர்** | **61** |
| | **வழங்கப்படும் நீரின் மொத்த அளவு** | **1,126** |

### 5.1.4 தரம் கண்காணித்தல்

பாதுகாப்பான குடிநீர் வழங்குதலை உறுதி செய்வதற்கு, தொடர் கண்காணிப்பு, மற்றும் நீரின் தரத்தை கண்காணித்தல் ஆகியவை இன்றியமையாததாகும். நுகர்வோருக்கு வழங்கப்படும் பாதுகாக்கப்பட்ட குடிநீரின் தரத்தினை உறுதி செய்வதற்கு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் தனியாக ஒரு தர உறுதி பிரிவு செயல்பட்டு வருகிறது. மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர் ஆதாரங்கள், குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், பிரதான குடிநீர் விநியோக நிலையங்கள்,

துணை குடிநீர் விநியோக நிலையங்கள், குடிநீர் விநியோக குழாய்கள் ஆகிவற்றிலிருந்து நீர் மாதிரிகள் தினசரி சேகரிக்கப்பட்டு, அவற்றின் இயற்பியல், வேதியியல் மற்றும் நுண்ணுயிரி காரணிகளை, இந்திய தர நிர்ணய குறியீடு 10500 – 2012 அடிப்படையில் பரிசோதித்து, குடிநீரின் தரம் உறுதி செய்யப்படுகிறது.

தற்போது, தினந்தோறும் 300 நீர் மாதிரிகள் தர உறுதி பிரிவில் சேகரிக்கப்பட்டு, நீரின் தரம் பரிசோதிக்கப்படுகிறது. சென்னை குடிநீர் வாரியம், 12,000 சதுர அடி பரப்பளவில் ரூ.7.05 கோடி மதிப்பீட்டில், புதிய குடிநீர் மற்றும் கழிவுநீர் பரிசோதனை நிலையத்தை அமைத்துள்ளது. இந்த ஆய்வுகூடமானது, பரிசோதனைக்கான நவீன உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட குடிநீர் மற்றும் கழிவுநீர் ஆய்வக பிரிவுகளை தனித்தனியாக கொண்டுள்ளது. இப்பிரிவுகள், இயற்பியல், வேதியியல் பகுப்பாய்வு மற்றும்

நுண்ணுயிரியியல் பகுப்பாய்வு ஆகிய வசதிகளை தனித்தனியாக கொண்டுள்ளன. இந்த பரிசோதனை நிலையம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22.11.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது. இந்த ஆய்வுகூடத்திற்கு தேசிய சான்று பெறுவதற்கான நடவடிக்கைகளை சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் எடுத்து வருகிறது.

## 5.2 குடிநீர் வழங்கல் திட்டங்கள்

### 5.2.1 நடைபெற்றுவரும் குடிநீர் திட்டப் பணிகள்

**(i) பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம்**

சென்னை பெருநகரின் தற்போதைய குடிநீர் தேவை நாளொன்றுக்கு 1,407 மில்லியன் லிட்டர் ஆகும். இதில், நாளொன்றுக்கு விநியோக அளவு சுமார் 1,126 மில்லியன் லிட்டர் மற்றும் பற்றாக்குறை 281 மில்லியன் லிட்டர் ஆகும். இந்த இடைவெளியை

நிறைவு செய்வதற்காக சென்னை நகருக்கு புதிய கூடுதல் குடிநீர் ஆதாரங்களை கண்டறிதல் மிக முக்கியமாகும்.

எனவே, சென்னை கிழக்கு கடற்கரை சாலையிலுள்ள பேரூரில், நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் மற்றும் கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்திலிருந்து பிரதான குடிநீர் குழாய் பதிக்கும் பணிகளை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA), தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியம் (TNIDF) மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் மேற்கொள்ள அரசு, ரூ.6,078.40 கோடி மதிப்பிற்கு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டமானது, நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் அமைத்தல், உந்து நிலையம் மற்றும் நீர்த்தேக்கங்களை அமைத்தல்,

உற்பத்தி செய்யப்படும் நீரினை கொண்டு செல்ல பிரதான பரிமாற்ற குழாய் பதித்தல், தற்போதுள்ள குடிநீர் விநியோக வலையமைப்பை மேம்படுத்துதல் மற்றும் மின்சார பரிமாற்ற பணி ஆகியவைகளை உள்ளடக்கியதாகும். இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 21.08.2023 அன்று அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இத்திட்டம் முழுவதும் மார்ச் 2026ல் முடிக்கப்பெற்று பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டம் முடிவுறும்போது, பெருநகர சென்னை மாநகராட்சி, தாம்பரம் மாநகராட்சி மற்றும் சென்னை மாநகராட்சியின் அருகாமையில் உள்ள 20 ஊராட்சிகளான குளத்தூர், மூவரசம்பேட்டை, நன்மங்கலம், பெருந்தவாக்கம், திரிசூலம், கோவிலஞ்சேரி, மதுரைப்பாக்கம், மெப்பேடு, முளச்சேரி, ஒட்டியம்பாக்கம், பெரும்பாக்கம், சித்தாலப்பாக்கம்,

திருவாஞ்சேரி, வேங்கைவாசல், வெங்கப்பாக்கம், நெடுங்குன்றம், புத்தூர், கிளாம்பாக்கம், வண்டலூர், கொளப்பாக்கம் ஆகிய பகுதிகளில் உள்ள 22.67 லட்சம் மக்களுக்கு தேவையான அளவு குடிநீர் விநியோகிக்கப்படும்.

**(ii) மாநகருடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் குடிநீர் திட்டப் பணிகள்**

உத்தண்டி, மணப்பாக்கம், இராமாபுரம், ஒக்கியம்–துரைப்பாக்கம், மாதவரம், நெற்குன்றம் மற்றும் மடிப்பாக்கம் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் **திட்டப்** பணிகள் சென்னை குடிநீர் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2023–24ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

மேலும், ரூ.158.22 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப் பணிகள் மணலி, சின்னசேக்காடு, செம்மஞ்சேரி மற்றும் நீலாங்கரை ஆகிய 4 இணைக்கப்பட்ட பகுதிகளில் நடைபெற்று வருகின்றன. இவற்றில்

மணலி, சின்னசேக்காடு குடிநீர் திட்டப்பணிகள் நடப்பாண்டில் (2024–25) முடிவுறும். செம்மஞ்சேரி மற்றும் நீலாங்கரை குடிநீர் திட்டப்பணிகள் 2025–26ஆம் ஆண்டில் முடிவுறும்.

**5.2.2 நீர் இழப்பை குறைப்பதற்காக தற்போது உள்ள குடிநீர் வழங்கல் அமைப்பை மேம்படுத்துதல்**

பேரூரில் திட்டமிடப்பட்டுள்ள நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தின் ஒரு பகுதி, சென்னை பெருநகரில் பிரதான பகுதிகளில் தற்போதுள்ள குடிநீர் வழங்கல் அமைப்புகளை மேம்படுத்துதல் ஆகும். சென்னைப் பெருநகரின் பிரதானப் பகுதிகளில் பதிக்கப்பட்டுள்ள பெரும்பான்மையான குடிநீர் வழங்கும் குழாய்கள், 30 ஆண்டுகளுக்கும் மேல் பழமையானவை. எனவே, சீரான குடிநீர் விநியோகம் வழங்குவதை உறுதி செய்வதற்காக, திட்ட மேலாண்மை ஆலோசகரால், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி

நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள்:

- சென்னைப் பெருநகரின் பிரதானப் பகுதிகளில் பழுதடைந்துள்ள பழைய குழாய்களை மாற்றியமைத்தல்
- விடுபட்ட தெருக்களுக்கு துணைக் குழாய்கள் பதித்தல்
- தற்போதுள்ள குடிநீர் விநியோக அமைப்பினை நீரியியல் கட்டமைப்பாக வலுவூட்டல்
- கீழ்நிலை நீர்தேக்கம் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கம் மூலம் நீர் சேமிப்பு கட்டமைப்பை வலுவூட்டல்
- தன்னிறைவு மண்டல துணை பகுதிகளை (DMA) உருவாக்குதல்
- குடிநீர் அளவுமானி பொருத்தப்பட்ட வீட்டு இணைப்பு வழங்குதல்

பகுதி–X மற்றும் XIII ல் உள்ள அனைத்து குடிநீர் பகிர்மான அமைப்புகளை மேம்படுத்தும் பணிக்கான

விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு ஒடிசா அரசின் நீர் நிறுவனத்தை (WATCO) சென்னை குடிநீர் வாரியம் நியமனம் செய்துள்ளது. பகுதி XIII மற்றும் பகுதி X–க்கான இறுதி வரைவு திட்ட அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், M/s SMEC பன்னாட்டு நிறுவனமானது, சென்னை மாநகரின் அனைத்து பிரதான பகுதிகளிலும் தற்போதுள்ள குடிநீர் விநியோக அமைப்புகளை மேம்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கைகளை (DPR) தயாரித்து வருகிறது. விரிவான திட்ட அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

**5.2.3 புழலில் 300 MLD திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் சூரப்பட்டில் 14 MLD திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் புனரமைப்பு**

புழலில் உள்ள 300 MLD திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் சூரப்பட்டில் உள்ள 14 MLD திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் பழமையானதால், சென்னை குடிநீர் வாரியம் இரண்டு

நிலையங்களையும் அதிகபட்ச சுத்திகரிப்பு திறனை அடைய அவற்றை புனரமைக்க திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக, புனரமைப்புக்கான விரிவான திட்ட அறிக்கை கலந்தாலோசகர் மூலம் தயாரிக்கப்பட்டு வருகிறது. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி விரைவில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**5.2.4 குழாய் வளைய அமைப்பு (Ring Main System)**

தற்போது, பெருநகர சென்னை மாநகராட்சியின் வெவ்வேறு மண்டலங்களுக்கு, 6 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் 3 கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்களிலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஒவ்வொரு நிலையத்தில் இருந்தும் மாநகரின் குறிப்பிட்ட பகுதிகளுக்கு பிரதான பரிமாற்று குழாய்கள் மூலம் தனித்தனியாக குடிநீர் வழங்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. பேரிடர் காலங்களில் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறையின்போது ஒரு ஆதாரத்திலிருந்து உபரி நீரை மற்றொரு ஆதாரத்திற்கு மாற்ற முடியாது. எனவே, சென்னை மாநகரில் உள்ள அனைத்து குடிநீர்

விநியோக நிலையங்களுக்கும் சமமான குடிநீர் விநியோகத்தை செயல்படுத்த, அனைத்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களையும் இணைக்க குழாய் வளைய அமைப்பு திட்டமிடப்பட்டுள்ளது.

**குழாய் வளைய அமைப்பு – 1**

குழாய் வளைய அமைப்பு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் (426 ச.கி.மீ.) உள்ள அனைத்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் குடிநீர் வழங்கல் நிலையங்களை, 1,000 மி.மீ முதல் 1,800 மி.மீ வரையிலான விட்டம் கொண்ட குழாய்கள் மூலம் சுமார் 100 கி.மீ. நீளத்திற்கு இணைப்பதை உள்ளடக்கியதாகும்.

**குழாய் வளைய அமைப்பு – 2**

குழாய் வளைய அமைப்பு, பிரதான நகரத்தைத் தவிர்த்த, சென்னை பெருநகரப் பகுதியினை (763 சதுர கிமீ), சுமார் 135 கி.மீ. நீளத்திற்கு 1,000 மி.மீ முதல் 2,000 மி.மீ வரையிலான விட்டம் கொண்ட குழாய்கள் மூலம் இணைப்பதை உள்ளடக்கியதாகும்.

அனைத்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் குடிநீர் வழங்கல் நிலையங்களை இணைக்கும் குழாய் வளைய அமைப்பை உருவாக்குவதற்கான விரிவான திட்ட அறிக்கை கலந்தாலோசகரால் தயாரிக்கப்பட்டு வருகிறது. குழாய் வளைய அமைப்பு 1–க்கான விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது மற்றும் குழாய் வளைய அமைப்பு 2–க்கு விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

### 5.2.5 மழைநீர் சேகரிப்பு

தமிழ்நாடு, மழைநீர் சேகரிப்பில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. மழைநீர் சேகரிப்பு அமைப்பினை, தற்போதுள்ள மற்றும் புதிய கட்டிடங்களில் நிறுவப்படுவதை கட்டாயமாக்கிய முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

புதிய குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பை பெறுவதற்கும், பழைய இணைப்பைப் புதுப்பிப்பதற்கும், அனைத்து கட்டிடங்களுக்கும் கட்டிடங்களின் அளவு மற்றும் பரப்பு வித்தியாசம் இல்லாமல் மழைநீர் சேகரிப்பு

அமைப்புகளை ஏற்படுத்துவது கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

மழை நீர் சேகரிப்பின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல் மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்கிட நுகர்வோரை ஊக்குவிக்கும் வகையில், தகவல் தொடர்பு உத்தியினை சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் வடிவமைத்துள்ளது. பல்வேறு தகவல் தொடர்பு முறைகள் மூலம் அனைத்து தரப்பினருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இதன் முக்கிய இலக்காகும். இதன் மூலம் பருவ மழையின்போது அதிகபட்ச பலன்களை பெறுவதற்காக, மழைநீர் சேகரிப்பு குறித்து சென்னை மாநகரவாசிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, ஒவ்வொரு ஆண்டும் பருவமழை தொடங்கும்முன் பரப்புரை மேற்கொள்ளப்படுகிறது.

**5.2.5.1 மழைநீர் சேகரிப்பு பரப்புரை மற்றும் நீர் பாதுகாப்பு சிறப்பு இயக்கம் 2023**

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் 2023ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் நாளன்று மழைநீர் சேகரிப்பு முறைகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு அமைப்பின் பராமரிப்பு மற்றும் நீரின் தரம் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார்கள். கீழ்கண்ட தகவல், கல்வி மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன:

1. சென்னை மாநகரில் தங்கள் கட்டுப்பாட்டில் வரும் கட்டிடங்களில் நிறுவப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை பராமரிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி அனைத்து அரசுத் துறைகளுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டன.
2. பண்பலை வானொலி மூலம் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.
3. மழைநீர் சேகரிப்பு முறைகள் மற்றும் அவற்றின் பராமரிப்பு பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வை

ஏற்படுத்த பின்வரும் பல்வேறு ஊடகங்கள் மூலம் காட்சிப்படுத்தப்பட்டன.–

அ) குடிநீர் வாரிய நீர் ஊர்திகள் – 30

ஆ) சென்னை குடிநீர் வாரிய பொலேரோ வாகனங்கள் – 20

இ) நீண்டதூர மாநகர பேருந்துகள் – 30

ஈ) மெட்ரோ ரயில்களின் உட்புறம் (விம்கோ நகர் முதல் விமான நிலையம் வரை) – 1

உ) பெரும் வணிக வளாகங்கள் (@ விஆர் மால், திருமங்கலம்) – 1

ஊ) பண்பலை வானொலியில் பொதுமக்களுக்கு வேண்டுகோள்– 5

எ) பொது இடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பதாகைகள் – 20

ஏ) பேருந்து நிறுத்தங்களில் விளம்பரங்கள் – 100

ஐ) எண்ம திரை மூலம் காட்சிப்படுத்தல் (காட்சி தொடர்பு)

@ சென்ட்ரல் & எழும்பூர் ரயில் நிலையங்கள்,
விமான நிலைய பொருள் வைப்பு அறை மற்றும்–100 இடங்கள்

பெருநகர சென்னை மாநகராட்சியின் பொது இடங்களில் LED திரைகள்

ஒ) ஆவின் பால் பாக்கெட்டுகளில் (சென்னை மாநகரம்) – 50 இலட்சம்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியமானது, நிலத்தடி நீர் மட்டத்தை அவ்வப்போது கண்காணிக்க அனைத்து 200 பணிமனைகளிலும் எண்ம நீர் அளவு பதிவு கருவிகளை (DWLR) நிறுவியுள்ளது. ஒவ்வொரு பருவமழைக்குப் பிறகும், நீர் நிலைகளிலும், நீரின் தரத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருப்பதை தகவல் குறிப்புகள் காட்டுகின்றன. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய இணையதளத்தில் அளவுகள் புதுப்பிக்கப்படுகின்றன. இதனால் பொதுமக்கள் நீர் அளவினை அறிந்து கொள்ள முடியும்.

அனைத்து 200 பணிமனைகளிலும் உள்ள எண்ம நீர் அளவு பதிவு கருவிகளின் (DWLR) தகவல் குறிப்புகள் வாயிலாக, 2023ஆம் ஆண்டில், சென்னை மாநகரின் சராசரி நீர்மட்டம் (பருவமழைக்கு முன்)

5.59 மீட்டரிலிருந்து, 2.95 மீட்டராக (பருவமழைக்கு பின்), அதாவது. 2.64 மீட்டர் அளவுக்கு உயர்ந்துள்ளது.

**5.3 கழிவுநீர் மேலாண்மை**

சென்னை நகரின் கழிவுநீரை சேகரித்து, சுத்திகரித்து, பாதுகாப்பான முறையில் வெளியேற்றுவது சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மற்றுமொரு முக்கிய கடமை ஆகும். பிரதான சென்னை மாநகரின் கழிவு நீர் கட்டமைப்பானது முதன் முதலாக 1917ல் நிறுவப்பட்டது. சென்னை மாநகரின் கழிவு நீர் கட்டமைப்பானது 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் தனிப்பட்ட கழிவு நீர் சேகரிப்பு அமைப்புகள், கழிவுநீரை கொண்டு செல்லும் அமைப்பு, சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. சேகரிக்கப்படும் கழிவு நீர் 4,154 கிலோ மீட்டர் நீளம் உள்ள கழிவுநீர் சேகரிப்பு கட்டமைப்பு வாயிலாக 342 கழிவு நீரிறைக்கும் நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது. இந்த கழிவு

நீரிறைக்கும் நிலையங்களிலிருந்து, கழிவுநீர், சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுப்பி சுத்திகரிக்கப்பட்டு, பாதுகாப்பாக வெளியேற்றப்படுகிறது.

### 5.3.1 கழிவுநீர் கட்டமைப்பின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு

மனித கழிவுகளை மனிதனே அகற்றும் அவல நிலையினை தவிர்க்க, வாரியம் சென்னைப் பெருநகரில் உள்ள கழிவுநீர் அகற்றும் கட்டமைப்புகளின் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை இயந்திரமயமாக்கியுள்ளது. கழிவுநீர் குழாய்களில் உள்ள அடைப்புகளை நீக்குவதற்கு ஜெட்ராடிங் இயந்திரங்களும், பராமரிப்பு நுழை வாயில்களில் உள்ள கசடுகளை அகற்றுவதற்கு அதிவேக உறிஞ்சும் மற்றும் தூர்வாரும் இயந்திரங்களும் உபயோகிக்கப்படுகின்றன. தற்சமயம், கழிவுநீர் கட்டமைப்பின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 539 இயந்திரங்கள் அட்டவணை 5.3ல் உள்ளவாறு பயன்பாட்டில் உள்ளன.

**அட்டவணை–5.3**

| வ. எண் | இயந்திரங்களின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தூர் வாரும் இயந்திரங்கள் | 300 |
| 2 | ஜெட்ராடிங் இயந்திரங்கள் (2KL, 6 KL & 9 KL) | 141 |
| 3 | ஜெட்டிங் மற்றும் உறிஞ்சும் இயந்திரங்கள் | 35 |
| 4 | அதிவேக உறிஞ்சும் இயந்திரங்கள் | 63 |
| | மொத்தம் | 539 |

கழிவுநீர் கட்டமைப்புகளின் பராமரிப்பை மேம்படுத்துவதற்காக, ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக இயந்திரங்கள் மற்றும் கருவிகள் தேவைக்கேற்ப கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

### 5.3.2 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

மாநகரில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் தற்போதைய சுத்திகரிப்பு திறன் நாளொன்றுக்கு 1,082.80 மில்லியன் லிட்டர் ஆகும். விவரங்கள் அட்டவணை 5.4ல் உள்ளன.

**அட்டவணை–5.4**

| **கழிவுநீர் மண்டலம்** | **கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்** | **தற்போதைய சுத்திகரிப்பு திறன் (MLD)** |
|---|---|---|
| I & II | கொடுங்கையூர் (120+120+110+80+80) | 510 |
| | திருவொற்றியூர் | 31 |
| III | கோயம்பேடு (34+60+120) | 214 |
| IV | நெசப்பாக்கம் (54+40+50+23) | 167 |
| | நெசப்பாக்கம் TTUF | 10 |
| V | பெருங்குடி (60+54+12) | 126 |
| | சோழிங்கநல்லூர் – I | 18 |
| | **நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்** | |
| | சேத்துபட்டு | 1 |
| | சூளைமேடு | 1.2 |
| | தாடண்டர் நகர் | 4 |
| | கோட்டூர்புரம் | 0.6 |
| | **மொத்தம்** | **1,082.80** |

**5.3.3 புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் மற்றும் பழைய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை மேம்படுத்தும் பணிகள்**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் தனது 30.05.2020 நாளிட்ட ஐந்தாவது திருத்தப்பட்ட தொகுப்புரையில் ஒன்றிய சட்டங்கள், விதிமுறைகள், அறிவிக்கைகள் மற்றும் ஆணைகளின் அடிப்படையில், சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் தரத்திற்கு திருத்திய அளவுகளை வரையறுத்துள்ளது. விவரங்கள் அட்டவணை எண் 5.5ல் உள்ளன. இவை 26.05.2026 முதல் அமலுக்கு வரும்.

**அட்டவணை–5.5**

| கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான தர அளவுகள் | | |
|---|---|---|
| | **தர அளவுகள்** | **மீமிகு மற்றும் பெருநகரங்கள் (சென்னை)** |
| 1 | அமில – கார குறியீடு (pH) | 5.5 – 9.0 |
| 2 | உயிர் வேதியியல் ஆக்ஸிஜன் தேவை (BOD) | 10 மி.கி/லி |
| 3 | மொத்த மிதக்கும் திடப் பொருட்கள் (TSS) | 20 மி.கி/லி |
| 4 | வேதியியல் ஆக்ஸிஜன் தேவை (COD) | 50 மி.கி/லி |
| 5 | மொத்த நைட்ரஜன் | 10 மி.கி/லி |
| 6 | மொத்த பாஸ்பரஸ் (குளங்கள், ஏரிகளில் வெளியேற்றுவதற்கான) | 1.0 மி.கி/லி |
| 7 | மல கோலிபார்ம் (FC) – (100 மிலி–க்கு தோராயமான எண்ணிக்கை MPN/100) | விரும்பத்தக்க அளவு –100 ; அனுமதிக்கப்பட்ட அளவு –230 |

அதற்கிணங்க, சென்னை குடிநீர் வாரியம், கொடுங்கையூர்–I, கொடுங்கையூர்–II, பெருங்குடி மற்றும் நெசப்பாக்கம் ஆகிய இடங்களில் 4 புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் மற்றும் சுத்திகரிப்பு திறனை மேம்படுத்த மற்றும் புதிய அகற்றல் தரத்தை அடைய, ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள 7 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை மேம்படுத்தும் பணிகளை ரூ.811.40 கோடி திட்ட மதிப்பீட்டில் அட்டவணை 5.6ல் உள்ளவாறு மேற்கொண்டுள்ளது.

**அட்டவணை–5.6**

| புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் | | செயல்பாட்டில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை மேம்படுத்துதல் | |
|---|---|---|---|
| **இடங்கள்** | **சுத்திகரிப்பு திறன் (MLD)** | **இடங்கள்** | **சுத்திகரிப்பு திறன் (MLD)** |
| கொடுங்கையூர்–I | 120 | கொடுங்கையூர் | 110 |
| கொடுங்கையூர்–II | 120 | கோயம்பேடு(120+60) | 180 |
| நெசப்பாக்கம் | 50 | | |
| பெருங்குடி | 60 | நெசப்பாக்கம்(40+54) | 94 |
| | | பெருங்குடி (60+54) | 114 |
| மொத்தம் | 350 | மொத்தம் | 498 |

சென்னை குடிநீர் வாரியத்தால், கொடுங்கையூர் I & II மற்றும் நெசப்பாக்கம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய பணிகள் முடிக்கப்பட்டு, 2023–24இல் மாண்புமிகு முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன. மீதமுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் 2024–25ல் முடிக்கப்படும்.

**5.3.4 சோழிங்கநல்லூரில் 54 MLD சுத்திகரிப்பு திறன் கொண்ட கூடுதல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்**

சோழிங்கநல்லூரில் ரூ.65.97 கோடி மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஏற்கெனவே, நாளொன்றுக்கு 18 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட அலகு முடிக்கப்பட்டு சோதனை ஓட்டத்தில் உள்ளது. தொடர் உலை தொழில்நுட்பத்தை (SBR Technology) பயன்படுத்தி, சென்னையின் தென் பகுதியில் உள்ள கிழக்கு

கடற்கரை சாலையை ஒட்டியுள்ள இணைக்கப்பட்ட பகுதிகள் மற்றும் பழைய மகாபலிபுரம் சாலை பகுதிகளில் சேகரமாகும் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்கிறது. நாளொன்றுக்கு 36 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட மற்றுமொரு அலகு நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் நடப்பாண்டில் செயல்பாட்டிற்கு வரும்.

**5.3.5 சிறிய வகை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்**

சென்னையின் நீர் வழித்தடங்களில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்காக சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை (CRRT) மேற்கொண்டுள்ள பணிகளின் ஒரு பகுதியாக, சேத்துப்பட்டு (1 MLD), சூளைமேடு (1.2 MLD), தாடண்டர் நகர் (4 MLD) மற்றும் கோட்டூர்புரம் (0.6 MLD) ஆகிய இடங்களில் சிறிய வகை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**5.3.6 வில்லிவாக்கம் மூன்றாம் நிலை நுண் வடிகட்டி நிலையம் (TTUF)**

வில்லிவாக்கம்–கொன்னூர் ஏரி வில்லிவாக்கம் பகுதியின் முக்கிய நீர்நிலைகளில் ஒன்றாகும், மேலும், இது மக்கள்தொகை அடர்த்தி கொண்ட சிட்கோ நகரை ஒட்டி அமைந்துள்ளது மற்றும் ஓட்டேரி கால்வாயில் வடிகிறது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், வில்லிவாக்கம்–கொன்னூர் ஏரியை ஒட்டிய பகுதியில், சுத்திகரிக்கப்பட்ட நீரினை கொண்டு, ஏரியை மறுசீரமைப்பு மற்றும் புத்துணர்வு செய்வதற்காக, சவ்வு படலம் உயிர் உலை (MBR) தொழில்நுட்பத்தின் அடிப்படையில், வடிவமைப்பு, பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான அடிப்படையில் 7 ஆண்டுகளுக்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பை உள்ளடக்கிய 5 MLD திறன் கொண்ட மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நுண் வடிகட்டி நிலையம் ஒன்றை அமைக்கிறது.

இந்நிலையம் அமைக்க தேவையான நிதி ஒப்புதல் மற்றும் நிருவாக அனுமதி சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் அரசாணை எண் 383, ந.நி.கு.வ.து (ந.நி–1) நாள் 20.10.2022ன் படி ரூ.17.97 கோடி மதிப்பிற்கு வழங்கப்பட்டது. நிலையம் அமைப்பதற்கான பணிகள் 15.03.2024 அன்று தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் மூலம் நிலத்தடி நீர் மீள் நிரப்பு செய்யப்படுவதோடு, நீரின் தரத்தை மேம்படுத்தி ஏரியை புதுப்பிக்க முடியும்.

### 5.4 கழிவுநீர் திட்டங்கள்

#### 5.4.1 மாநகருடன் இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் கழிவு நீர் திட்டப்பணிகள்

ராமாபுரம், மணப்பாக்கம் மற்றும் நெற்குன்றம்(பகுதி) ஆகிய பகுதிகளுக்கான பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2023–24ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

நெற்குன்றம்(பகுதி), பள்ளிக்கரணை, மணலி, சின்னசேக்காடு, காரம்பாக்கம், முகலிவாக்கம், மடிப்பாக்கம், நந்தம்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, உத்தண்டி, ஈஞ்சம்பாக்கம், ஜல்லடம்பேட்டை, புழல், மாத்தூர், வடபெரும்பாக்கம், தீயம்பாக்கம், இடையான்சாவடி, சடையான்குப்பம், கடப்பாக்கம், ஒக்கியம் தொரைப்பாக்கம், செம்மஞ்சேரி மற்றும் மாதவரத்தில் உள்ள விடுபட்ட தெருக்கள் ஆகிய 24 இணைக்கப்பட்ட பகுதிகளில் ரூ.3,161.32 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மேற்கண்ட பணிகள் வரும் ஆண்டுகளில் முடிக்கப்படும்.

**5.4.2 சென்னை பெருநகரின் பிரதான பகுதிகளில் தற்போதுள்ள கழிவுநீர் கட்டமைப்புகளை மேம்படுத்துதல்**

பகுதிகள்– IV (தண்டையார்பேட்டை), V (இராயபுரம்), VI (திரு.வி.க.நகர்), VIII (அண்ணா நகர்), IX (தேனாம்பேட்டை), X (கோடம்பாக்கம்) & XIII (அடையார்) ஆகிய பிரதான

பகுதிகளில் தற்போதுள்ள கழிவுநீர் கட்டமைப்புகள் 30 ஆண்டுகளுக்கும் மேலான பழமையானதாகும். இங்குள்ள பிரதான கழிவுநீர் குழாய்கள், கிணறுகள், பிரதான கழிவுநீர் உந்து குழாய்கள் மற்றும் உந்து உபகரணங்களின் திறன் தற்போதுள்ள மக்கள் தொகையின் தேவைகளை பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை. எனவே, கழிவுநீர் அமைப்பையும் முழு திறனுடன் இயக்க முடியவில்லை. எனவே, பிரதான பகுதிகளில் கழிவுநீரை திறம்பட அகற்றுவதற்கு தற்போதுள்ள கழிவுநீர் கட்டமைப்புகளை மேம்படுத்துவது அவசியமாகும்.

சென்னை குடிநீர் வாரியமானது, "சென்னை பெருநகரின் மையப் பகுதிகளில் (174 சதுர கிமீ) தற்போதுள்ள கழிவுநீர் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் சென்னை பெருநகரம் முழுவதையும் (426 சதுர கிலோ மீட்டர்) கணினி வாயிலாக கண்காணிக்கும் வசதி (SCADA)"

அளிப்பதற்கான பணிக்கு கலந்தாலோசகரை நியமித்துள்ளது. தற்போது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் வாரியாக விரிவான திட்ட அறிக்கைகள் பல்வேறு கட்டங்களாக கலந்தாலோசகரால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், இறுதி விரிவான திட்ட அறிக்கை ஆகஸ்ட் 2024க்குள் கலந்தாலோசகரால் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 5.4.3 சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மூலம் மேற்கொண்டுள்ள திட்டப்பணிகள்

அரசு, சென்னை மாநகரின் நீர்வழிப்பாதைகளின் சுற்று சூழல்களை மேம்படுத்தும் பணிகளை சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மூலம் மேற்கொண்டுள்ளது. சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையுடன், சென்னை குடிநீர் வாரியம் இணைந்து கூவம் மற்றும் அடையாறு ஆறுகள் மற்றும் பக்கிங்காம் கால்வாய் மற்றும் பிற சிறு கால்வாய்களின் சுற்றுச் சூழலை மேம்படுத்தும் நோக்கில் அதற்கு

தேவையான திட்டங்களை தயாரித்து செயல்படுத்தி வருகிறது. கூவம் மற்றும் அடையாறு நதிகளின் சுற்றுச் சூழலை மேம்படுத்துவதற்காக சென்னைக் குடிநீர் வாரியம், முறையே, ரூ. 186.19 கோடி மற்றும் ரூ. 123.19 கோடி மதிப்பில் திட்டப் பணிகளை மேற்கொண்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை மாநகருடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் மற்றும் மேற்கொள்ளப்படவுள்ள பாதாள சாக்கடை திட்டப்பணிகள் காரணமாக, அடையாறு சீரமைப்பு பணிகளில் சில பணிகள் (நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் & இடைமறித்தல் மற்றும் திருப்புதல் பணிகள்) கைவிடப்பட்டன. இதன் காரணமாக மொத்த திட்ட மதிப்பீடான ரூ.123.19 கோடியில், ரூ.64.89 கோடி சேமிப்பாக கிடைத்துள்ளது. இந்த சேமிப்பு தொகையை பயன்படுத்தி பகுதி X மற்றும் XIII ல் அடையாற்றில் கழிவுநீர் கலப்பதை தடுக்க,

9 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் மூலம் தற்போதுள்ள கழிவுநீர் கட்டமைப்புகள் வலுவூட்டப்படும்.

அரசு, சென்னை மாநகரின் நீர் வழித்தடங்களை மீட்டுருவாக்கத்திற்கு முன்னுரிமை அளித்துள்ளது. அதன்படி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், கூவம், அடையாறு ஆறுகள், பக்கிங்காம் கால்வாய் வடிநிலப் பகுதிகளைச் சார்ந்த நீரோடைகளில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கான திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தில் நேரடியாகக் கலக்கும் கழிவுநீரை இடைமறித்தல் மற்றும் மாற்றி அமைத்தல், கழிவுநீர் குழாய்கள் / கழிவுநீர் உந்து நிலையங்களை வலுவூட்டல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கழிவுநீர் கலப்பதை தடுக்கும் திட்டத்திற்கு, அரசு ரூ.2,371 கோடிக்கு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்து, முதற்கட்ட திட்டப்பணிகளை செயல்படுத்த

ரூ.1,001 கோடிக்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, ரூ.364.80 கோடி மதிப்பீட்டிலான 36 பணிகளுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. அவற்றில், 32 பணிகள் முடிவுற்று, எஞ்சிய 4 பணிகள் நடைபெற்று வருகின்றன. ஏற்கெனவே பணி ஆணை வழங்கப்பட்ட பணிகளை முடிப்பதற்கு, ரூ.385.38 கோடி மதிப்பீட்டிலான திருத்தப்பட்ட நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே, சென்னை குடிநீர் வாரியமானது கூவம் ஆற்றின் 23 இடங்களில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்காக ரூ.50 கோடி மதிப்பில் பணிகளை மேற்கொண்டு வருகிறது. பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**5.4.4 அடையாறு நதியை அரசு தனியார் பங்களிப்புடன் (PPP) சீரமைத்தல்**

தமிழ்நாட்டில் நகர்ப்புரங்களில் வசிக்கும் மக்களுக்கு தூய்மையான மற்றும் பசுமையான சுற்றுச்சூழலை உருவாக்கிட இந்த அரசு உறுதி

கொண்டுள்ளது. சென்னையில் உள்ள முக்கிய நீர் வழித்தடங்களான அடையாறு, கூவம், பக்கிங்காம் கால்வாய் மற்றும் கொசஸ்தலையாறு ஆகியவற்றை சீரமைத்திட இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது. அதன் முதற் கட்டமாக, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மூலம் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கூடுவாஞ்சேரி தொடங்கி தாம்பரம், திருநீர்மலை, மணப்பாக்கம், ஆலந்தூர், சைதாப்பேட்டை ஆகிய பகுதிகள் வழியாக பாய்ந்து வங்கக்கடலில் கலக்கும் அடையாறு நதியை மீட்டெடுத்து, அழகுறச் சீரமைக்கும் திட்டம் அரசு தனியார் பங்களிப்புடன் சுமார் ரூ.1,500 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். அடையாறு ஆற்றின் இரு கரைகளிலும் 70 கிலோ மீட்டர் தூரத்திற்கு கழிவுநீர் குழாய்கள் அமைத்து கழிவுநீர் வெளியேறுவதற்கு ஏற்ற மாற்று வழிகளை அமைப்பது நாள் ஒன்றிக்கு 110 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட 14 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் மற்றும் ஆற்றின்

கரையில் மக்களின் மனம் கவரும் வகையில் 4 பூங்காக்கள் அமைத்தல் மூலமாக நதிக்கரை நெடுக பசுமை பரப்புகளை அதிகரிப்பது போன்ற சிறப்பு அம்சங்கள் கொண்ட இத்திட்டம் விரைவில் தொடங்கப்பட்டு 30 மாத காலகட்டத்தில் பணிகள் நிறைவு செய்யப்படும். சைதாப்பேட்டை முதல் திரு.வி.க. பாலம் வரையிலான பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு 15 மாதங்களுக்குள்ளாகவே இப்பணிகள் முடிக்கப்படும். இத்திட்டத்திற்கு, அரசாணை (நிலை) எண் 50, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (செ.கு) துறை நாள் 14.03.2024ன்படி ரூ.4,778.26 கோடிக்கு நிருவாக மற்றும் நிதி ஒப்புதல் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

### 5.5 மறுசுழற்சி மற்றும் மறு உபயோகம்

சென்னை பெருநகரம், உபயோகப்படுத்தப்பட்ட நீர் மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாட்டில் முன்னோடியாக திகழ்கிறது. அடல் புத்துணர்வு மற்றும்

நகர்ப்புர மாற்றங்களுக்கான திட்டத்தின் (அம்ரூட் 2.0) வழிகாட்டுதல்களின்படி, பயன்படுத்தப்பட்ட நீரின் 20 சதவீதம் மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாடு செய்யப்பட வேண்டும். நீர் சேமிப்பின் முயற்சியாக நாளொன்றிற்கு 23 மில்லியன் லிட்டர் இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் மணலியிலுள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரானது, தொழிற்சாலைகளால் மீண்டும் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு செய்யப்பட்டு தொழிற்சாலை பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. மேலும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியமானது தொழிற்சாலை பயன்பாட்டிற்கான நீரினை உற்பத்தி செய்வதற்காக எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையிலான 2 சுத்திகரிப்பு நிலையங்களை (TTRO) அமைத்துள்ளது.

**5.5.1 எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்கள்**

சென்னை குடிநீர் வாரியத்தால் கோயம்பேடு மற்றும் கொடுங்கையூரில் நிறுவப்பட்ட நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட இரண்டு எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையிலான (TTRO) மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் தொழிற்சாலை பயன்பாட்டிற்கான நீர் தேவைகளை நிறைவு செய்வதுடன், தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு குறைக்கப்படுகிறது.

**5.5.2 மூன்றாம் நிலை நுண் வடிகட்டி நிலையங்கள்**

சென்னை மாநகரின் குடிநீர் தேவையை நீடித்த ஆதாரங்கள் மூலம் உறுதி செய்யும் விதமாக, தலா நாளொன்றுக்கு 10 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்ட மூன்றாம் நிலை நுண் வடிகட்டி நிலையங்கள் (TTUF) அமைக்கும் பணி பெருங்குடி,

நெசப்பாக்கம் மற்றும் லாங்ஸ் கார்டன் ஆகிய 3 இடங்களில் சென்னை குடிநீர் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில், நெசப்பாக்கம் நுண் வடிகட்டி நிலையம் (TTUF) அமைக்கும் பணி முடிவடைந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22.11.2022 அன்று திறந்து வைக்கப்பட்டு,

செயல்பாட்டில் உள்ளது. நெசப்பாக்கம் மற்றும் பெருங்குடி நிலையங்களிலிருந்து பெறப்படும் நீர், முறையே, போரூர் மற்றும் பெருங்குடி ஏரிகளின் சேமிப்பிற்கு பயன்படுத்தப்படும். மேலும், லாங்ஸ் கார்டன் நுண் வடிகட்டி நிலையத்திலிருந்து பெறப்படும் சுத்திகரிக்கப்பட்ட நீரானது, தென்னக இரயில்வேயின் இரயில் பெட்டிகளை சுத்தப்படுத்துவதற்கும், பெருநகர சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்கும் வழங்கப்படும்.

மேற்கூறிய பெருங்குடி TTUF ஆலை, பெருங்குடியில் 60 MLD சுத்திகரிப்பு திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும்

சோழிங்கநல்லூரில் 54 MLD சுத்திகரிப்பு திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையப் பணிகள் முடிவுறும்போது சென்னை குடிநீர் வாரியத்தின் மொத்த சுத்திகரிப்பு திறன் 1,206.80 MLD ஆக அதிகரிக்கும்.

நாளொன்றுக்கு 260 மில்லியன் லிட்டர் கழிவுநீரை மறு சுழற்சி செய்து, சென்னை மாநகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஏரிகளை மீள் நிரப்ப விரிவான திட்ட அறிக்கை இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (IIT) மற்றும் ஒன்றிய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப துறையுடன் (DST–GoI) இணைந்து தயாரிக்கப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக, பெருங்குடி மற்றும் நெசப்பாக்கம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் பெறப்படும் கழிவுநீரை மூன்றாம் நிலை சுத்திகரிப்பு செய்து, சுற்றியுள்ள ஏரிகளில் மீள் நிரப்புவதற்காக விரிவான வரைவு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

**5.5.3 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சென்னை பெருநகர பகுதிகளில் கழிவுநீரகற்றல் (ஒழுங்குபடுத்தல்) விதிமுறைகள்**

சிறு நகரங்கள், நகரங்கள் மற்றும் பெருநகரங்களின் வளர்ச்சிக்கு சாத்தியமான சுகாதார முறையாக, மலக்கசடு மற்றும் கழிவுநீரகற்றல் மேலாண்மையின் (FSSM) முக்கியத்துவத்தை தமிழ்நாடு அரசு அங்கீகரித்துள்ளது. மலக் கசடு மற்றும் கழிவுநீரகற்றல் மேலாண்மை குறித்த தேசியக் கொள்கையின்படி, கழிவுநீர் தொட்டிகளை அவ்வப்போது சுத்தம் செய்தல் மற்றும் மலக் கசடு மற்றும் கழிவுநீரை சுத்திகரித்து அகற்றுதல் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தும் ஒரு விரிவான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. மலக் கசடு அல்லது கழிவுநீரை எடுத்துச் செல்லக்கூடிய குறிப்பிட்ட வாகனங்களின் இயக்கம் மற்றும் அவற்றை தெளியவைத்து அகற்றுவதற்காக அடையாளம் காணப்பட்ட இடங்கள்

மற்றும் அதனுடன் தொடர்புடைய அம்சங்கள் ஆகியவை 1978 ஆம் ஆண்டு சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சட்டத்தின்படி தற்போது ஒழுங்குபடுத்தப்பட வேண்டியுள்ளது.

அதன்படி, மேற்கண்ட நோக்கத்திற்கு தகுந்தவாறு, 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் மற்றும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் (திருத்தம்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 34 / 2022) வாயிலாக 1978ஆம் ஆண்டு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. மேலும், 31.12.2022ஆம் நாளிட்ட நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண்.183ன்படி, தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சென்னை பெருநகரப் பகுதி கழிவு நீரகற்றல் மேலாண்மை

(ஒழுங்குமுறை) விதிகள், 2022 அரசால் வெளியிடப்பட்டுள்ளன.

பாதாள சாக்கடை வசதி இல்லாத பகுதிகளில் கழிவுநீரை அகற்றுதல், உள்ளாட்சி அமைப்புகளில் இயங்கும் கழிவுநீர் அகற்றல் ஊர்திகளை ஒழுங்குபடுத்துதல், முறைகேடாக கழிவுநீர் வெளியேறுவதை தடுத்தல் ஆகியவற்றின் மூலம் நீர்நிலைகளை பாதுகாக்கும் வகையில், புதிய கழிவு நீரகற்றல் மேலாண்மை விதிமுறைகள் மற்றும் செயல்பாட்டு வழிகாட்டுதல்களை ஒழுங்குபடுத்தி அரசு வெளியிட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு மலக்கசடு மற்றும் கழிவு நீரகற்றல் மேலாண்மை மற்றும் கழிவு நீரகற்றல் மேலாண்மை (ஒழுங்குமுறை) விதிகள் கழிவுநீர் சேகரிப்பு மற்றும் ஊர்தி சேவைகளை வழங்கும் கசடு அகற்றும் ஊர்தி இயக்குபவர்களை (Desludging Operators) பின்வருமாறு ஒழுங்குப் படுத்துகிறது; i) பாதுகாப்பற்ற கழிவு நீரகற்றலைத் தடுக்க போதுமான சட்ட விதிகளை அறிமுகப்படுத்தல்,

ii) கழிவுநீர் சேகரித்து, சுத்திகரித்து அதை அகற்றுவதற்கான வசதிகளை மேம்படுத்துதல்.

புதிய கழிவுநீர் அகற்றல் மேலாண்மை (ஒழுங்குமுறை) விதிகள், 2022 இல் சேர்க்கப்பட்டுள்ள சில முக்கிய அம்சங்கள்:

- மலக்கசடு மற்றும் கழிவுகளை சேகரித்து, ஊர்தி மூலம் அகற்றுவதற்கான உரிமம் (சட்டப்பிரிவு 69Bன் கீழ்) பெறுதல்.
- மலக்கசடு மற்றும் கழிவுகளை சேகரித்து, ஊர்தி மூலம் அகற்றுவது தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள்.
- கழிவுநீர் அகற்றும் ஊர்திகளில், செயல்பாட்டில் உள்ள வாகன கண்காணிப்பு அமைப்பிற்கான புவிசார் தடங்காட்டி (GPS) பொருத்தப்பட்டிருப்பதை வாரியம் உறுதி செய்தல்.
- கழிவுநீர் அகற்றும் ஊர்தி இயக்குபவர்கள், பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில், கழிவு நீரகற்றல் / மலக்கசடு அகற்றுவது தொடர்பான ஊர்தி நடமாட்ட

விவரங்கள் அடங்கிய பதிவு புத்தகத்தை பராமரிக்க வேண்டும் மற்றும் அதை அவ்வப்போது மதிப்பாய்வு செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

- கசடு அகற்றும் செயல்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் பாதுகாப்பற்ற முறையில் அகற்றுவதைத் தடை செய்தல்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உரிமம் பெற்றவர்கள், சட்ட விரோதமாக மலக் கசடுகளை வெளியேற்றுதலையும், கழிவுகளை அகற்றுவதற்காக அறிவித்துள்ள இடங்களைத் தவிர மற்ற இடங்களில் சட்டவிரோதமாக வெளியேற்றுதலை தடுப்பதை சென்னை குடிநீர் வாரியம் கண்காணிக்கும். கழிவு நீர் ஊர்திகளை இயக்குபவர்கள், கழிவுநீரை வெளியேற்றும் வசதியை பயன்படுத்தக்கூடிய 19 இடங்களை சென்னை குடிநீர் வாரியம் அறிவித்துள்ளது.

ஒரு நபரோ அல்லது கழிவு நீர் ஊர்தி இயக்குபவரோ, நகருக்குள் அமைந்திருக்கும் குடியிருப்பு அல்லது வணிக வளாகங்கள் அல்லது நிறுவனங்களில் இருந்து மலக் கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்து, ஊர்திகளின் மூலம் வெளியேற்றுவதற்கான உரிமம் பெறுவதற்கு, வரையறுக்கப்பட்ட ஒரு படிவத்தில் தேவையான ஆவணங்களுடன் உரிமக் கட்டணம் ரூ. 2,000 க்கான கேட்பு வரைவோலையுடன் உரிமம் வழங்கும் உரிய அலுவலரிடம் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

உரிமதாரர் குறிப்பிடப்பட்ட விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க வேண்டும், மேலும், தன்னிடம் பணிபுரியும் ஒவ்வொரு ஓட்டுநர் மற்றும் பணியாளரும், ஆண்டுதோறும் உடல்நல பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதை உறுதிசெய்து, உரிமம் வழங்கும் அதிகாரியிடம் அதற்கான பதிவைச் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், உரிமம் பெற்றவர், தன்னிடம் பணிபுரியும் ஒவ்வொரு ஓட்டுநர் மற்றும்

பணியாளருக்கு, ரூ.10 லட்சம் மதிப்புடைய தனிநபர் விபத்துக் காப்பீடு செய்ய வேண்டும்.

புதிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள், குறிப்பிட்ட வாகனங்களை பறிமுதல் செய்யவும் அதிகாரம் அளிக்கிறது. சட்டம், விதிகள், துணை விதிகள் அல்லது வேறு ஏதேனும் விதிமுறைகளின் கீழ் குற்றம் நடந்தால், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியாக இருப்பின், வாரியத்தின் பகுதி பொறியாளர், வாகனத்தை மற்றும் எந்த மேற்பார்வை பொறியாளரின் எல்லைக்குள் அத்தகைய வாகனம் மற்றும் பிற பொருட்கள், மோட்டார், பம்பு, ட்யூப், கருவி அல்லது பிற பொருள் உட்பட குற்றத்திற்காக பறிமுதல் செய்யப்பட்டதோ, அவற்றை, அவருக்கு முன்பாக 24 மணி நேரத்திற்கு உள்ளாக சமர்ப்பிக்க வேண்டும்.

எவரேனும், விதிகளை மீறினால் அல்லது விதிகளுக்கு இணங்கத் தவறினால், முதல் தடவை குற்றத்திற்கு ரூ.25,000/- வரையும், இரண்டாவது

அல்லது அடுத்தடுத்த குற்றங்களுக்கு ரூ.50,000/– வரையும் அபராதம் நீட்டிக்கப்படும். மேலும், தொடர்ச்சியாக விதிகளை மீறும் பட்சத்தில் கழிவுநீர் ஊர்திகள் மற்றும் தொடர்புடைய உபகரணங்கள் பறிமுதல் செய்யப்படும்.

**5.6 பணியாளர் திறன் மேம்படுத்துதல்**

சென்னை குடிநீர் வாரியம் 1982ம் ஆண்டு பயிற்சி மையத்தை நிறுவி, துறை சார்ந்த பல்வேறு பயிற்சி வகுப்புகள், மத்திய பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் (CPHEEO) அமைப்பின் ஆதரவில் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகள் மற்றும் சிறப்பு பயிற்சி வகுப்புகளை, வாரியத்தில் பணிபுரியும் பணியாளர்கள், பிற நிறுவனங்கள் மற்றும் மாநிலங்களிலிருந்து வரும் பணியாளர்களுக்கும் வழங்கி வருகிறது. வாரியத்தின் அன்றாட நடவடிக்கைகள் தொடர்பான சுமார் 42 பயிற்சி வகுப்புகள் மற்றும் CPHEEO ஆதரவில் 5 புத்தாக்க பயிற்சி வகுப்புகள் ஒவ்வொரு ஆண்டும்

நடத்தப்படுகிது. இது தவிர பல்வேறு சிறப்பு பயிற்சிகள் மற்றும் பிற அரசு நிறுவனங்களுக்கான பிரத்தியேக சிறப்பு பயிற்சிகளும் நடத்தப்படுகின்றன.

தொழில் முனைவோர்/புதிதாக தொழில் தொடங்குவோரை ஆதரிக்கும் விதமாக, தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்துடன் (EDII–TN) இணைந்து பயிற்சி அளிக்க வாரியம் தேவையான வசதியைப் பெற்றுள்ளது.

பயிற்சி மையத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் முழுமையான தகவல் தொழில்நுட்பம் மூலம் செயற்படுத்துதல் மற்றும் இணைய வழியிலான மின் கற்றல் முறையை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 5.7 தொழில் நுட்ப பயன்பாடு

### 5.7.1 புவியியல் தகவல் அமைப்பு (GIS)

சென்னை குடிநீர் வாரியத்தின் அனைத்து உட்கட்டமைப்புகள் மற்றும் சொத்துக்களின் புவிசார் வரைபடத்தை, புவிசார் தொழில்நுட்பங்களைப்

பயன்படுத்தி, தயாரிக்கும் பணி தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL) அமர்த்திய கலந்தாலோசகர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி ஆசிய வளர்ச்சி வங்கியின் (ADB) நிதியுதவியுடன், தமிழ்நாடு நகர்ப்புர முதன்மை முதலீட்டுத் திட்டத்தின் (TNUFIP) கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பணிகள் மூலம் நிலத்திற்கு அடியிலும், நிலத்தின் மேற்பரப்பிலும் உள்ள வாரியத்தின் அனைத்து உட்கட்டமைப்புகள் மற்றும் சொத்துகள் ஆகியவை புவியியல் தகவல் அமைப்புத்தளத்தில் வரைபடமாக்கப்படும். இப்பணி, உட்கட்டமைப்புகளின் சிறந்த பராமரிப்பிற்கும், அவற்றின் மேலாண்மைக்கும் உதவும். இவற்றின் வாயிலாக சென்னை மாநகர மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கிட முடியும். மேலும், இப்பணியானது, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய பொறியாளர்களுக்கு, புவியியல் தகவல்

அமைப்புதளத்தின் மூலம் எதிர்காலத்தில் உட்கட்டமைப்புகள் மற்றும் சொத்துகளை பராமரிக்க திறன் மேம்பாட்டு பயிற்சியளிக்கப்படுவதை உள்ளடக்கியதாகும்.

புவியியல் தகவல் அமைப்பு திட்டத்தின் மூலம், 599.6 கி.மீ நீளமுள்ள பிரதான கழிவுநீர் உந்து குழாய் அமைப்பு மற்றும் 1,60,174 எண்ணிக்கையுள்ள இயந்திர நுழைவாயில்களை உள்ளடக்கிய 4,154.84 கி.மீ நீளமுள்ள கழிவுநீர் குழாய் அமைப்பு வரைபடமாக்கப்பட்டுள்ளன. மேலும், 15 பகுதிகளில் உள்ள 1,159.92 கி.மீ நீளமுள்ள பிரதான குடிநீர் பரிமாற்று குழாய் மற்றும் 6,196.13 கி.மீ நீளமுள்ள பிரதான குடிநீர் விநியோக குழாய்களை கொண்டுள்ள ஏறக்குறைய 200 குடிநீர் பகிர்மான நிலையங்கள் வரைபடமாக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட திட்டத்திற்கு, சிந்தாதரிபேட்டையிலுள்ள வாரிய தலைமை அலுவலகத்தில், புவியியல் தகவல் அமைப்பு சிறப்பு

கட்டுப்பாட்டு அறையை, ரூ.17.80 கோடி மதிப்பீட்டில் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் அமைப்பதற்கு, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 20.01.2023 ஆம் நாளிட்ட அரசாணை எண் 8ன் படி, நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**5.7.2 புவியிடங்காட்டி (GPS) மூலம் குடிநீர் ஊர்திகளை கண்காணித்தல்**

குடிநீர் குழாய் இல்லாத தெருக்கள் மற்றும் குறைவான நீர் அழுத்தமுள்ள தெருக்கள் ஆகிய பகுதிகளுக்கு வழக்கமான குடிநீர் வழங்கலை உறுதி செய்யும் வகையில் லாரிகள் மூலம் வாரியம் நேரடியாகவும் அல்லது மேற்கண்ட பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள குடிநீர் தொட்டிகளில் (HDPE) நிரப்புதல் மூலமாகவும் குடிநீர் வழங்கி வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 3,600 லாரி நடைகள் மூலம் 30 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்படுவது, புவியிடங்காட்டி (GPS) கண்காணிப்பு அமைப்பு மூலம்

தொடர் கண்காணிப்பு செய்யப்படுவதால், சரியான நேரத்தில் உரிய மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

### 5.7.3. நிகழ்நிலை (Online) சேவைகள்

நுகர்வோர், https://chennaimetrowater.tn.gov.in என்ற சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் இணையதளம் மூலம் பின்வரும் நிகழ்நிலை சேவைகளைப் பெறலாம்.

1. பொது மக்களின் குறைகளை களைதல்
2. குடிநீர் வரி மற்றும் குடிநீர் / கழிவுநீர் கட்டணங்கள் செலுத்துதல்
3. குடியிருப்புக்கான புதிய குடிநீர் / கழிவுநீர் இணைப்பு (தரைத்தளம் + 2 தளங்கள் வரை)
4. தொழிற்சாலைகளுக்கான புதிய குடிநீர் இணைப்பு
5. அழைத்தால் இணைப்பு திட்டம் (கழிவுநீர் இணைப்புக்கு – தரைத்தளம் + 2 தளங்கள் வரை)
6. குடிநீர் ஊர்திக்கு பதிவு செய்தல்
7. கழிவுநீர் அகற்ற, ஊர்திக்கு பதிவு செய்தல்
8. நிலத்தடி நீர் உரிமம் பெறுதல்

### 5.7.4 தகவல் தொழில்நுட்ப முன் முயற்சிகள்

சென்னை குடிநீர் வாரியம், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன் (TNeGA) இணைந்து, வாரியத்தின் அனைத்து பணிகள் மற்றும் சேவைகளையும், முழுமையாக (End–to–End) தகவல் தொழில்நுட்பம் மூலம் செயல்படுத்தல் மற்றும் புதிய நிறுவன வள திட்டமிடல் (ERP) ஆகிய பணிகளை ரூ.3.49 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டமானது, ஜூன் 2024ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

#### 5.7.4.1 மின்–அலுவலக செயலாக்கம் (E–Office)

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில், மின்–அலுவலக செயலாக்கம் மேற்கொள்ளப்பட்டு, அனைத்து நிலைகளும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) வாயிலாக, சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் வெற்றிகரமாக பரிசோதனை

செய்யப்பட்டுள்ளது. சென்னை குடிநீர் வாரியத்தின் 250 பணியாளர்களுக்கு, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை வாயிலாக மின்–அலுவலகப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மின்–அலுவலகம் மூலமாக கோப்புகளை கையாளும் முறை சென்னை குடிநீர் வாரியத்தில் 01.05.2024 முதல் செயல்பாட்டில் உள்ளது.

**5.7.4.2 இல்லந்தேடி கழிவுநீர் அகற்றுவதற்கான செயலி**

நுகர்வோர்கள், கழிவுநீர் ஊர்தியை பதிவு செய்வதற்கும் மற்றும் உரிமம் பெற்ற கழிவுநீர் ஊர்தி இயக்குபவர்கள் பதிவு செய்து, தங்கள் சேவையை வழங்குவதற்கும், வலைதளம் மற்றும் கைப்பேசியில் எளிதில் பயன்படுத்தவதற்கு ஏற்ற செயலி ஒன்றை உருவாக்க சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியமானது, முன்மொழிந்துள்ளது. இந்த செயலியானது, ஊர்தி இயக்குபவர்களுக்கு வசதியாகவும், கழிவுநீர்

அகற்றலை நுகர்வோர் தடையின்றி பெறுவதற்கும் உருவாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது (TNeGA) வலைதளம் மற்றும் கைப்பேசியில் எளிதில் பயன்படுத்தவதற்கு ஏற்ற "Septic Clearance at door step" என்ற செயலி ஒன்றை உருவாக்கியுள்ளது.

இந்த செயலியின் முக்கிய அம்சங்களில் ஒன்று, சேகரிக்கப்பட்ட கழிவுநீர்/கசடு, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் அங்கீகரிக்கப்பட்ட கழிவுநீரை வெளியேற்றும் வசதியை கையாளக்கூடிய இடங்களில் முறையாக வெளியேற்றப்படுவதை உறுதி செய்வதாகும். இது, திறந்தவெளி நிலங்கள் மற்றும் நீர்நிலைகளில் சட்ட விரோதமாக கழிவுநீர் வெளியேற்றப்படாமல் இருப்பதை உறுதி செய்கிறது.

**5.8 சென்னை பெருநகர கூட்டாண்மை திட்டம்**

சென்னை நகர கூட்டாண்மை திட்டம் மற்றும் அதன் வழங்கலுடன் இணைக்கப்பட்ட குறிகாட்டிகளுக்கு (DLI), 16.09.2021 ஆம் நாளிட்ட, நிதித்துறையின் அரசாணை எண்(ப) 289ன் படி, அரசு கொள்கை ரீதியான ஒப்புதலை வழங்கியுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி, பெருநகரப் போக்குவரத்துக் கழகம், நீர்வளத் துறை, சென்னை குடிநீர் வாரியம் மற்றும் ஒருங்கிணைந்த சென்னை பெருநகரப் போக்குவரத்து ஆணையம் ஆகியவை இதில் பங்கேற்கும் முகமைகள் ஆகும். கூட்டாண்மையானது, உயர்தர, நீடித்த மற்றும் மீள்திறன்மிக்க சேவைகளுக்கு மாறுவதற்கு, கீழ்க்காணும் மூன்று பகுதிகளைக் கொண்ட கட்டமைப்பை ஏற்றுக்கொள்கிறது:

i. சேவைகளை வழங்கும் நிறுவனங்களை வலுப்படுத்துதல் மற்றும் தொழில்சார் மயமாக்குதல்

ii. பங்கேற்கும் முகமைகளின் செயல்பாட்டு திறன் மற்றும் சேவை வழங்கல் செயல்திறனை மேம்படுத்துதல் மற்றும்

iii. நிதி நிலைத்தன்மையை மேம்படுத்துதல்.

இது, இணைக்கப்பட்ட முடிவுகள் செயல்பாட்டிற்கான (PforR), முக்கிய முடிவுகள் மற்றும் குறிகாட்டிகளை அடைவதற்கான பல துறை திட்டமாகும். சேவை வழங்கல் செயல்திறனில் முன்னேற்றம் மற்றும் பயனர் கட்டணங்கள் மூலம் மீட்டெடுக்கப்படும் செயல்பாடு மற்றும் பராமரிப்பு செலவுகளின் பங்கு அதிகரிப்பு ஆகியவை சென்னை குடிநீர் வாரியத்திற்கான நிரல் மேம்பாட்டு நோக்கங்கள் (PDO) ஆகும். திட்ட காலத்தில், சென்னை குடிநீர் வாரியம் கீழ்க்காணும் 4 வழங்கலுடன் கூடிய குறிகாட்டிகளை (DLI) எய்த வேண்டும்.

i. வழங்கலுடன் கூடிய குறிகாட்டி 4 – பொதுக் கொள்முதலின் செயல்திறன் மற்றும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துதல்

ii. வழங்கலுடன் கூடிய குறிகாட்டி 7 – குடிநீர் விநியோகத்தில் மேம்பட்ட செயல்பாட்டு திறன்

iii. வழங்கலுடன் கூடிய குறிகாட்டி 8 – குடிநீர் வழங்கல் சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துதல்

iv. வழங்கலுடன் கூடிய குறிகாட்டி 10 – குடிநீர் வழங்கல் சேவைகளின் நிதி நிலைத்தன்மையை மேம்படுத்துதல்

**5.8.1 அளவீட்டு கொள்கை**

சென்னை நகர கூட்டாண்மை திட்டத்தின் வழங்கலுடன் கூடிய குறிகாட்டி (DLI) 7ன் ஒரு பகுதியாக, சென்னை குடிநீர் வாரியமானது அளவீடு செய்வதற்கான கொள்கையை ஏற்க வேண்டும். 23.11.2022 நாளன்று நடைபெற்ற வாரியக்கூட்டத்தில், அளவீட்டுக் கொள்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**கொள்கையின் முக்கிய நோக்கங்கள்:**

அ) திறமையான நீர் பயன்பாட்டை ஊக்குவிப்பதன் மூலம் நீர் சேமிப்பை மேம்படுத்துதல்.

ஆ) வருவாய் அல்லாத நீர் (NRW) குறைப்பதன் மூலம் செலவு மீட்பை அதிகரிக்க செய்தல்.

இ) அனைத்து நுகர்வோருக்கும் குடிநீர் சேவைகளுக்கு நியாயமான மற்றும் சரியான கட்டணம் வசூலிப்பதை உறுதிப்படுத்துதல்.

ஈ) 2023 ஆம் ஆண்டிற்குள் அனைத்து உயர் அடுக்கு மற்றும் வணிக இணைப்புகளுக்கு 100% அளவீடு செய்தல் மற்றும் 2027ஆம் ஆண்டிற்குள் 80% வீட்டு இணைப்புகளுக்கு (தரை தளம் + 2 மற்றும் அதற்குக் கீழே உள்ள கட்டிடங்கள்) அளவீடு செய்தல்.

உ) அளவீட்டு மானிகளுடன் கூடிய இணைப்புகளை நிறுவுதல், குடிநீர் அளவு மானிகளை பராமரித்தல் தொடர்பாக, சென்னை குடிநீர் வாரியம் மற்றும்

நுகர்வோர் ஆகிய இருவரின் பங்களிப்பினையும், பொறுப்புகளையும் நிர்ணயித்தல்.

இந்தக் கொள்கையானது, நுகர்வோர்களின் வகைப்பாட்டிற்கு ஏற்ப அளவீடு, அளவுமானி தேர்வு, அதன் விவரக்குறிப்பு மற்றும் நிறுவுவதற்கான வழிகாட்டுதல்களை உள்ளடக்கியது. இது, கட்டணம், பட்டியலிடல், வசூலித்தல் மற்றும் அளவீடு தொடர்பான குறைகளை நிவர்த்தி செய்யும் நடைமுறைகளை உள்ளடக்கியது. அளவீடு தொடர்பாக வாரியம் மற்றும் நுகர்வோரின் பொறுப்புகள் விவரிக்கப்பட்டுள்ளன. மேலும், அளவீட்டுக் கொள்கையானது, பெருமளவு நீர் நுகர்வு மற்றும் உயர் வருவாய் பிரிவுகள் தொடங்கி, குடியிருப்பு அல்லாத நுகர்வோர் மற்றும் புதிய நுகர்வோர்களுடன், குடிநீர் இணைப்புகளைக் கொண்ட அனைத்து நுகர்வோருக்கும், படிப்படியாக மற்றும் முன்னேற்றமான முறையில், குடிநீர் பயனீட்டளவு அளவுமானிகளை சென்னைக் குடிநீர் வாரியம் நிறுவ

வேண்டும் என இந்த கொள்கை மேலும் வரையறுத்துள்ளது.

வரைவு அளவீட்டுக் கொள்கை வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டு, உலக வங்கி மற்றும் தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்திடம் (TNIDB) சமர்ப்பிக்கப்பட்டது. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தால் கோரப்பட்ட திருத்தப்பட்ட நிதி மாதிரி சமர்பிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் அளவுமானிகளை நிறுவுவதற்கான மாதிரியை உருவாக்க கீழ்கண்டவாறு பரிந்துரைத்தது (i) பல்வேறு அளவுமானி தொழில்நுட்பங்களின் அடிப்படையில் ii) வெவ்வேறு வகைகளுக்கான நுகர்வு விகிதத்தின் அடிப்படையில். மேற்கூறிய வழிகாட்டுதல்களின் அடிப்படையில், பிரதான மாநகர பகுதிகள் மற்றும் இணைக்கப்பட்ட பகுதிகளிலுள்ள வணிகம், பகுதி வணிகம், தொழிற்சாலைகள், நிறுவனங்கள் மற்றும் பன்னடுக்கு குடியிருப்பு கட்டிடங்கள் (MSB) ஆகிய பகுதிகளில் சீர்மிகு

அளவுமானிகளை (Smart Meters) (1,00,000) பொருத்துவதற்கான திருத்தப்பட்ட நிதி மாதிரியானது கலந்தாலோசகரால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

### 5.8.2 பெருமளவு குடிநீர் அளவுமானி பொருத்துதல்

குடிநீர் தணிக்கை மற்றும் குடிநீர் விநியோகத்தின்போது ஏற்படும் பெருமளவு இழப்புகளை கண்டறிவதற்கு, பெருமளவு அளவுமானிகளை பொருத்துதல் உதவி புரிகிறது. குடிநீர் தணிக்கையானது, செயல்திறன் ஆய்வுகள், வசதிகளை திட்டமிடல் மற்றும் வளம் காக்கும் நடவடிக்கைகளின் மதிப்பீடு ஆகியவற்றிற்கான அத்தியாவசிய தரவுகளை வழங்குகிறது.

இதன் அடிப்படையில், சென்னை குடிநீர் வாரியத்தின் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், குடிநீர் பகிர்மான நிலையங்கள் மற்றும் குடிநீர் நிரப்பு நிலையங்களில், 'இணைய தொழில்நுட்பம் சார்ந்த கலப்பின மின்காந்த பாய்வுமானிகளை (IoT technology–based electromagnetic flow meters) வழங்கி, பொருத்துதல்

மற்றும் இயக்குதல் அடிப்படையில், ஐந்து ஆண்டுகளுக்கு விரிவான இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகள் உள்ளடங்கிய சென்னை குடிநீர் வாரியத்தின் செயற்குறிப்பிற்கு, அரசு, சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், 08.02.2023 ஆம் தேதியிட்ட, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண்(ப) 54ன் படி, ரூ.43.01 கோடிக்கு, நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது. பெருமளவு குடிநீர் அளவுமானி பொருத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

**5.8.3 சென்னைக் குடிநீர் வாரியத்தில் மின்னணு கொள்முதல் திட்டம் செயல்படுத்தல்**

மின்னணு கொள்முதல் வழிதடத்திற்கு 23.11.2022 அன்று நடைபெற்ற வாரியக் கூட்டத்தில், ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மின்னணு கொள்முதல் முறையில் கோரப்படும் அனைத்து வித ஒப்பந்தப்புள்ளிகள் குறித்தும் இந்த திட்டமானது விரித்துரைக்கிறது. மேலும், ஒப்பந்தப்புள்ளிகளை

நிகழ்நிலையில் மதிப்பாய்வு செய்வதற்காக, ஏப்ரல் 2023ல் இருந்து ஒரு பொதுவான தொழில்நுட்ப மதிப்பாய்வு கூறு ஏற்படுத்தப்பட்டுள்ளதையும் எடுத்துரைக்கிறது. இதுதொடர்பாக, வாரியத்தின் ஒப்பந்தம் மற்றும் கண்காணிப்பு பிரிவின் பணியாளர்களுக்கு, தேசிய தகவல் மையம் வாயிலாக, பொதுவான தொழில்நுட்ப மதிப்பாய்வு மற்றும் கலந்தாலோசக சேவைகளுக்கு தர மற்றும் செலவு அடிப்படையின்கீழ் ஒப்பந்தப் புள்ளிகளை மதிப்பாய்வு செய்தல் ஆகியவற்றிற்கான பயிற்சி ஆகஸ்டு 2022ல் அளிக்கப்பட்டது.

**5.8.4 சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில் சேவை நிலை அளவுகோலை ஏற்படுத்தல்**

அடிப்படை வீட்டு இணைப்புகள் மற்றும் விநியோக நேரங்கள் உள்ளடக்கிய கணக்கெடுப்பு மூலம், சேவை நிலை அளவுகோலை (SLB) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியமானது ஏற்படுத்த வேண்டியுள்ளது.

23.11.2022 அன்று நடைபெற்ற வாரியக் கூட்டத்தில், அடிப்படை கணக்கெடுப்பிற்கு வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

மேற்கண்ட வலுவான அடிப்படை கணக்கெடுப்பிற்கு கீழ்கண்ட ஐந்து வகையான முக்கிய செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

1. சென்னை குடிநீர் வாரிய நுகர்வோர் தரவுதளத்தை சரிபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்.
2. குடிநீர் விநியோகம் மற்றும் குடிநீரின் தரம் சார்ந்த சேவைகள் தொடர்பான குடியிருப்பு மாதிரி கணப்கெடுப்பை வடிவமைத்து செயல்படுத்துதல்.
3. குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகம் தொடர்பாக கள மாதிரி ஆய்வு மேற்கொள்ளல்.
4. அடிப்படை மதிப்பீடு, குடிநீர் விநியோகம் தொடர்பான கூட்டுக்குறியீடு மற்றும் அதுகுறித்த அறிக்கை உருவாக்குதல்.
5. சென்னை மாநகரின் பிரதான பகுதிகளில் குடிநீர் விநியோகிக்கப்படாத பகுதிகளின்

விவரணையாக்கம் (Mapping) மற்றும் தரவு அறிக்கையை உருவாக்குதல்.

மேலும், மாதிரி கணக்கெடுப்பு முடிவுற்றுள்ளது. வருவாய் இல்லா நீரினை (NRW) அளவிடும் முறைகளோடு சேர்த்து. 15,000 மாதிரிகளுக்கான வழக்கமான கணக்கெடுப்பினை கலந்தாலோசகர் மேற்கொண்டுள்ளார். முழு கணக்கெடுப்பு பணிகள் ஆகஸ்டு 2024ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**5.9 நுகர்வோர் குறைகளை கண்காணித்தல்**

**5.9.1 24 X 7 கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம்**

வாரத்தின் 7 நாட்கள் 24 மணி நேரமும் இயங்கும் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம் ரூ.1.13 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு, 13.03.2023 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்த கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையமானது, நுகர்வோர் குறை தீர்க்கும்

மையமாக இருப்பதோடு, குடிநீர் ஊர்திகள் மற்றும் கழிவுநீர் கட்டமைப்புகளின் பராமரிப்பு வாகனங்களின் புவியிடங்காட்டி (GPS) கண்காணிப்பு அமைப்பு மூலம் தொடர் கண்காணிப்பு, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், எதிர்மறை சவ்வூடு பரவல் முறையிலான மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் ஆகியவற்றை கணினி மூலம் கண்காணிக்கும் வசதிகளை கொண்ட காணொளி சுவரினையும் கொண்டுள்ளது மற்றும் கண்காணிப்பு படக்கருவியின் மூலம் குடிநீர் நிரப்பும் இடங்களையும் கண்காணிக்கிறது. நுகர்வோர் தங்களது குறைகளையும் / புகார்களையும் நேரடியாகவும் அல்லது தொலைபேசி எண் 044-4567 4567 (20 இணைப்புகள்) மற்றும் கட்டணமில்லா தொலை பேசி எண் 1916 மூலமாகவும் பதிவு செய்யலாம். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட குறைகளை களைந்திட உடனடியாக சம்பந்தப்பட்ட பணிமனைப் பொறியாளர்களுக்கு இணையதளம்

மற்றும் குறுஞ்செய்தி மூலமாக அனுப்பப்படுகிறது. அதன்படி நுகர்வோர்களின் குறைகள் உடனுக்குடன் சரி செய்யப்படுகின்றன.

மேலும், கழிவுநீர் அகற்றல்/கழிவுநீர் தொட்டி சுத்தப்படுத்துதலுக்கு, 24 மணி நேரமும் தொடர்பு கொள்ள 14420 என்ற உதவி தொலைபேசி எண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இயந்திர நுழைவாயில்களில் அனுமதி இல்லாமல் ஆட்கள் நுழைவதையும் புகார் செய்யலாம்.

### 5.9.2 "சென்னை குடிநீர்" செயலி

நுகர்வோர் தங்களது குடிநீர் மற்றும் கழிவுநீர் சம்பந்தப்பட்ட புகார்களை எந்த இடத்திலிருந்தும், எந்த நேரத்திலும் உரிய அதிகாரிகளுக்கு கைபேசி மூலம் பதிவு செய்து அனுப்புவதற்கு சென்னைக் குடிநீர் வாரியம் 'Metro water' என்ற கைபேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த செயலியை கூகுள் ப்ளேஸ்டோரில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேலும், பொதுமக்கள் தங்களது விவரங்களை அதாவது பெயர், கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரிகளை ஒருமுறை பதிவு செய்வதன் மூலம் குடிநீர்/கழிவுநீர் சம்பந்தமான புகார் குறித்த படங்கள்/புகைப்படங்கள் ஏதேனும் இருப்பின் அதனையும் கைபேசி மூலம் அனுப்பி அதன் நிலையை தெரிவிக்கலாம். பதிவு செய்யப்பட்ட புகார்களுக்கு தனிப்பட்ட புகார் எண் அளிக்கப்பட்டு, உடனடியாக குறுஞ்செய்தி மூலமாக சம்மந்தப்பட்ட பணிமனை பொறியாளர்களுக்கு குறைபாடுகளை சரிசெய்வதற்காக அனுப்பப்படுகிறது. குறைபாடுகளின் நிலையை இந்த செயலியின் மூலம் பார்த்துக் கொள்ளலாம்.

**5.9.3 உடன் விளைவுக் குறியீடு (QR Code) சுவரொட்டி**

குடிமக்கள் நலனை கவனத்தில் கொண்ட, சேவை பெறுதலை, ஒரு புதிய மாதிரி வடிவமாக கொண்ட, தரமான உடன் விளைவுக் குறியீடு (QR Code) வடிவமைப்பு சுவரொட்டி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்களின்

குறைகளை எளிதான முறையில் தீர்ப்பதற்காக, 15 பகுதி அலுவலகங்களிலும், 200 பணிமனைகள் மற்றும் சென்னை மாநகரின் 85 முக்கிய பகுதிகளிலும், சுமார் 300 உடன் விளைவுக் குறியீடு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

**5.9.4 குறை தீர்க்கும் கூட்டம்**

சென்னை மாநகர் வாழ் பொதுமக்களுக்கு/ நுகர்வோர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை மேம்படுத்தும் விதமாக அனைத்து பகுதி அலுவலகங்களிலும், மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமைகளில் காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை வாரியத்தால் குறை தீர்க்கும் கூட்டம் நடத்தப்படுகிறது. மேற்பார்வை பொறியாளர் நிலையில் உள்ள உயர் அலுவலர்கள் தலைமையில் இக்கூட்டங்கள் நடத்தப்படுகிறது. குறை தீர்க்கும் கூட்டங்களில் பெறப்படும் புகார்கள் / குறைகள் / ஆலோசனைகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

### 5.10 பணியாளர்களின் நலன்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், வாரியப் பணியாளர்களின் சேவைத்திறனை முக்கிய மூலதனமாக கருதுகிறது. எனவே வாரியம் அவர்களின் நலனுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

களப்பணியாளர்களின் சுகாதார நலனை மேம்படுத்த, தையற் கட்டணத்துடன் சீருடைகள், எண்ணெய், சோப்பு, மழை மேலங்கிகள், காலணிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் அனைத்தும் குறிப்பிட்ட கால இடைவெளியில் சென்னை குடிநீர் வாரியத்தால் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

வாரியப் பணியாளர்களுக்கு கீழ்க்காணும் நலன் சார்ந்த வசதிகளும் வழங்கப்படுகின்றன:

முழு நேரப் பணியில் இருக்கும் மருத்துவர், மருந்தாளுநர் மற்றும் ஆய்வக தொழில்நுட்ப உதவியாளர் அடங்கிய அத்தியாவசிய

உபகரணங்களுடன் முதலுதவி வசதியுடன் உள்ள மருந்தகம் ஒன்று நடத்தப்பட்டு வருகிறது.

· கண், காது, நுரையீரல், இதயம் ஆகியவைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம்கள் அனைத்து பணியாளர்களின் நலனுக்காக அவ்வப்போது நடத்தப்படுகின்றன.

அரசு விதிகளின்படி, வாரியத்தில் பணிபுரியும் அனைத்து மாற்றுத் திறனாளி ஊழியர்களுக்கும் பயணப்படி வழங்கப்பட்டு வருகிறது

அரசின் புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் பயன்கள் அனைத்தும் வாரிய பணியாளர்களுக்கும் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கும் வழங்கப்படுகிறது.

பணியாளர்கள் ஓய்வு பெறும் நாளில் ஓய்வூதியப்பலன்கள் வழங்கப்படுகின்றன.

இறந்த பணியாளரின் வாரிசுதாரர்களுக்கு கோரிக்கை மனு பெறப்பட்ட உடன் இறப்புக் கால பணப்பயன்கள் உடனடியாக வழங்கப்படுகின்றன.

தூய்மைப் பணியில் ஈடுபடும் அனைத்து பணியாளர்களுக்கும் பணியின் போது தேவையான அத்தியாவசிய பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படுகிறது. 12.10.2023 அன்று மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களால், ரூ.65.65 இலட்சம் மதிப்பிலான 2,149 பாதுகாப்பு உபகரணங்கள் முழுநேர மற்றும் ஒப்பந்த தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டன.

· கழிவுநீர் பணியின்போது விசவாயு தாக்கி இறப்புகள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு, வாரிய ஒப்பந்ததாரர்களுக்கும் மற்றும் ஒப்பந்த பணியாளர்களுக்கும் சிறப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

· நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் வெளியிடப்பட்டுள்ள 12.08.2022ஆம் தேதியிட்ட, 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு மனித கழிவுகளை அகற்றும் தொழில் புரிவோர் தடைசெய்தல் மற்றும் அவர்களது மறுவாழ்வு விதிகளில்

குறிப்பிடப்பட்ட கழிவுநீர் சார்ந்த பணிகளில் கடைபிடிக்க வேண்டிய அனைத்து பாதுகாப்பு வழிமுறைகளும் சென்னை குடிநீர் வாரியத்தில் பின்பற்றப்பட்டு வருகிறது.

மேற்கண்ட விதிகளை கருத்தில் கொண்டு, இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளின் ஒப்பந்ததாரர்களுக்கு, இந்த விதிகளில் உள்ள விதிகளை உள்ளடக்கி, ஒப்பந்த நிபந்தனைகள் மாற்றியமைக்கப்பட்டு, எந்தவொரு நபரும் மனித கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபடவில்லை என்பதையும், அவர்களுக்கு தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் (PPE) வழங்கப்படுகின்றன என்பதையும் உறுதிப்படுத்தப்படுகிறது.

**5.10.1 தூய்மை பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தூய்மைப் பணியாளர்களின் நலனுக்காக 09.12.2022 அன்று "தூய்மை பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டத்தை" தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் கீழ், முக்கிய

தூய்மை பணியாளர்கள் கள ஆய்வு மூலம் கண்டறியப்பட்டு, அவர்கள் நல வாரியத்துடன் இணைக்கப்பட்டு, அரசின் பல்வேறு நலத்திட்டங்களைப் பெற அடையாள அட்டை வழங்கப்படும்.

முக்கிய தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் சமூகப் பாதுகாப்பு திட்ட பலன்களை பெறுதலை இத்திட்டம் உறுதி செய்கிறது. 667 நிரந்தர பணியாளர்கள் உட்பட 3,019 முக்கிய தூய்மை பணியாளர்களுக்கு கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அதில் 1,289 தற்காலிக தூய்மை பணியாளர்களை தமிழ்நாடு தூய்மை தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்து, அரசின் பல்வேறு நலத்திட்டங்களை பெறுவதற்காக, அவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவர்களுக்கு பாதுகாப்பு அம்சங்கள் குறித்த இயந்திரமயமாக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளில் திறன் பயிற்சி அளிக்கப்படும்.

மேலும், உரிமம் பெற்ற கழிவுநீர் ஊர்தி உரிமையாளர்களின் ஓட்டுநர்கள் மற்றும் பணியாளர்கள் 879 பேருக்கு பாதுகாப்பான முறையில் கழிவுகளை அகற்றும் முறைகள் குறித்தும் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் (PPE), பாதுகாப்பு துணைக் கருவிகள், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் முதலுதவி பெட்டி ஆகியவற்றை சரியான முறையில் பயன்படுத்துவதற்கான பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

**5.11 நிதி நிலைமை**

2023–24 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டின்படி, மொத்த வருவாய் செலவு ரூ.1,526.86 கோடி மற்றும் மொத்த வருமானம் ரூ.1,619.68 கோடி ஆகும்.

2021–22 முதல் 2023–24 வரையுள்ள ஆண்டுகளுக்கான வருமானம், செலவினம், பற்றாக்குறை குறித்த விவரங்கள் அட்டவணை 5.7ல் உள்ளன.

**அட்டவணை 5.7** **(ரூ. கோடியில்)**

| வ எண் | விவரங்கள் | திருத்திய மதிப்பீடு | திருத்திய மதிப்பீடு | வரவு செலவு திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | | 2021-22 ஆம் நிதியாண்டு | 2022-23 ஆம் நிதியாண்டு | 2023-24 ஆம் நிதியாண்டு |
| I | வருவாய் வருமானம் | | | |
| 1 | குடிநீர் விற்பனை | 403 | 377 | 489 |
| 2 | குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி | 240 | 425 | 446 |
| 3 | சுத்திகரிக்கப்பட்ட நீர் மற்றும் கழிவுநீர் வெளியேற்றல் மூலமான வருமானம் | 164 | 166 | 198 |
| 4 | இதர வருமானங்கள் | 64 | 88 | 88 |
| 5 | மானியங்கள் | 236 | 258 | 399 |
| | மொத்தம் | 1,107 | 1,314 | 1,620 |
| II | வருவாய் செலவினம் | | | |
| 1 | மின்கட்டணம் (கடல்நீர் குடிநீராக்கும் செலவு நீங்கலாக) | 150 | 183 | 192 |
| 2 | தண்ணீர் சரக்குந்து வாடகை கட்டணம் | 69 | 74 | 74 |
| 3 | இயக்குதல் மற்றும் பராமரிப்பு (கடல்நீர் குடிநீராக்கும் செலவு நீங்கலாக) | 317 | 382 | 387 |
| 4 | கடல்நீரை குடிநீராக்குதல் (இயக்குதல் மற்றும் பராமரிப்பு & மின்கட்டணம்) | 298 | 221 | 369 |
| 5 | அலுவலகம் மற்றும் நிருவாகம் | 17 | 17 | 17 |
| 6 | ஊதியம் மற்றும் ஓய்வூதியம் | 241 | 259 | 289 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | வட்டி | 82 | 72 | 64 |
| 8 | தேய்மானம் | 200 | 135 | 135 |
| | மொத்தம் | 1,374 | 1,343 | 1,527 |
| | உபரி/பற்றாக்குறை | –(267) | –(29) | 93 |

31.03.2024 அன்று கொடுக்கப்படவேண்டிய, பெறப்படவேண்டிய மற்றும் கடன் நிலுவைத் தொகை விவரங்கள் அட்டவணை 5.8ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.8** **(ரூ. கோடியில்)**

| வ. எண் | விவரங்கள் | 31.03.2024 அன்று தொகை (தோராயமாக) |
|---|---|---|
| I | கொடுக்கப்படவேண்டியவை: | |
| 1 | சென்னைப்பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் – இயக்குதல் மற்றும் பராமரிப்பு ஒப்பந்ததாரர்கள் | 67 |
| 2 | திரும்ப கொடுக்க வேண்டிய வைப்புத் தொகைகள் | 221 |
| 3 | ஒப்பந்ததாரர்களுக்கு கொடுக்கவேண்டியவை (திட்ட நிதி) | 113 |
| | மொத்தம் | 401 |
| II | பெறப்படவேண்டியவை: (குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி மற்றும் கட்டணம்) | |
| 1 | உள்ளாட்சி அமைப்புகள் | 20 |
| 2 | அரசுத்துறைகள் | 55 |
| 3 | நுகர்வோர்கள் | 201 |
| | மொத்தம் | 276 |

| | | |
|---|---|---|
| III | கடன் நிலுவைத் தொகை | |
| | அ) அசல் (அரசுக்கடன் ரூ.1522 கோடி உட்பட) | 1,825 |
| | ஆ) வட்டி(அரசு நிலுவைத் தொகை ரூ. 358 கோடி TUFIDCO ரூ.7 கோடி) | 365 |
| | மொத்தம் | 2,190 |

2023-24ஆம் ஆண்டின் தற்காலிக வரவு செலவு திட்ட மதிப்பீட்டின்படி, மொத்த வருவாய் செலவினமானது ரூ.1,527 கோடி ஆகும். வாரியத்தின் மொத்த வருமானம் வரவு செலவு திட்ட மதிப்பீட்டின்படி ரூ. 1,620 கோடி ஆகும். இதில் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றல் வரிகளின் மூலம் ரூ.446 கோடியும், குடிநீர் கட்டணங்களின் மூலம் ரூ.489 கோடியும், சுத்திகரிக்கப்பட்ட நீர் மற்றும் கழிவுநீர் வெளியேற்றல் மூலமான வருமானம் ரூ.198 கோடியும் இதர வருவாய் ரூ.88 கோடியும் ஆகும்.

## 6. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

"நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்வான்
இன்று அமையாது ஒழுக்கு"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க, தமிழ்நாட்டு மக்களின் தாகம் தீர்க்க தொலைநோக்கு சிந்தனையுடன், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் 1971–ஆம் ஆண்டு ஏப்ரல் 14–ஆம் நாள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உருவாக்கப்பட்டது. இவ்வாரியம் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாட்டு மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கி வருகிறது. தமிழ்நாட்டின் ஊரக மற்றும் நகரகப் பகுதிகளில் (சென்னை பெருநகர் நீங்கலாக) கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்துவது மட்டுமல்லாமல் ஒன்றுக்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளை பயனாளிகளாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால்

வாரியம் பராமரித்தும் வருகிறது. நகர பகுதிகளில் மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, கழிவுநீரை சுத்திகரித்து பாதுகாப்பாக வெளியேற்றிட, பாதாள சாக்கடைத் திட்டங்களையும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுத்தி வருகிறது.

**வாரிய இயக்குநர்கள்**

| | |
|---|---|
| **தலைவர்** | |
| 1, | அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை |
| **இயக்குநர்கள்** | |
| 2. | மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் |
| 3. | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வளத்துறை |
| 4. | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை |
| 5. | அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை |

| | |
|---|---|
| 6. | அரசு சிறப்புச் செயலாளர், நிதித்துறை |
| 7. | மேலாண்மை இயக்குநர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் |
| 8. | பேரூராட்சிகளின் இயக்குநர் |
| 9. | இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை |
| 10. | நகராட்சி நிருவாக இயக்குநர் |
| 11. | இணை மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் |
| 12. | பொறியியல் இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் |
| 13. | நிதி இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் |

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு, வேலூர், தஞ்சாவூர், கோயம்புத்தூர், மதுரை ஆகிய நான்கு மண்டல அலுவலகங்களுடன் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு மண்டலமும் ஒரு தலைமைப்

பொறியாளரின் கீழ் செயல்பட்டு வருகிறது. இந்த நான்கு மண்டலங்களின் கீழ் செயல்படும் 16 வட்ட அலுவலகங்கள், 85 கோட்ட அலுவலகங்கள் மற்றும் 259 உபகோட்ட அலுவலகங்கள், கூட்டுக்குடிநீர் திட்டங்கள், நகர தனிக் குடிநீர் திட்டங்கள் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்தியும், கூட்டுக் குடிநீர் திட்டங்களை பராமரித்தும் வருகின்றன.

**6.1 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தொலைநோக்குப் பார்வை**

- தமிழ்நாட்டில் உள்ள ஊரக மற்றும் நகர பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மற்றும் தனி குடிநீர்த் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துவதுடன் நவீன தொழில் நுட்பங்கள் மூலம் குறித்த காலக்கெடுவுக்குள் திட்டங்களை முடித்தல்.

• நகரகப் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துதல்.

• ஒன்றுக்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளை பயனாளிகளாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை பராமரித்து, தேவையான குடிநீரை ஊரக மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்குதல்.

• தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் உள்ள அனைத்து கூட்டுக் குடிநீர் திட்டங்களிலும் திறன்மிகு குடிநீர் அளவு மானிகள் (Smart Water Meters) பொருத்தப்பட்டு, வழங்கப்படும் குடிநீரின் அளவை இணைய வழி செயல்திறன் மூலம் கண்காணித்து வீணாகும் வருவாய் அற்ற குடிநீர் (Non-Revenue Water) அளவை குறைப்பது மற்றும் வடிவமைக்கப்பட்ட அளவு குடிநீர் வழங்குவதை உறுதி செய்வது.

• பாதாள சாக்கடைத் திட்டங்களில் சுத்திகரிக்கப்படும் கழிவு நீரை மறு பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் உரிய நடவடிக்கை எடுத்தல்.

- நீராதாரங்களின் நீடித்த நிலைத்த தன்மையை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்.

**6.2 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் செயல்பாடுகள்**

- தமிழ்நாட்டில் உள்ள ஊரக மற்றும் நகர பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணிகளை திட்டமிடுதல், வடிவமைத்தல், மற்றும் செயல்படுத்துதல்.
- நகரகப் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டங்களை திட்டமிடுதல், வடிவமைத்தல் மற்றும் செயல்படுத்துதல்.
- கூட்டுக் குடிநீர் திட்டங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல்.
- வழங்கப்படும் குடிநீரின் தரத்தினை பரிசோதித்தல் மற்றும் கண்காணித்தல்.
- ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகள்.

**6.3 கூட்டுக்குடிநீர் திட்டங்களின் இயக்கம் மற்றும் பராமரிப்பு**

அரசாணை (நிலை) எண் 84, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 10.03.1994–ன்படி, ஒன்றுக்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது, 13 மாநகராட்சிகள், 70 நகராட்சிகள், 323 பேரூராட்சிகள், 51,048 ஊரக குடியிருப்புகள் மற்றும் 576 தொழிற்சாலைகள் / நிறுவனங்கள் உள்ளடக்கிய 5.02 கோடி மக்களை பயனாளிகளாகக் கொண்ட 544 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட 544 கூட்டுக் குடிநீர் திட்டங்களின் மூலம் சராசரியாக நாளொன்றுக்கு 2,286

மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அதன் விவரம் அட்டவணை–6.1ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை–6.1**

| வ. எண் | பயனாளிகளின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட வேண்டிய குடிநீரின் அளவு (எம்.எல்.டி) | சராசரியாக வழங்கப்படும் குடிநீரின் அளவு (எம்.எல்.டி) |
|---|---|---|---|---|
| 1 | மாநகராட்சிகள் | 13 | 533 | 452 |
| 2 | நகராட்சிகள் | 70 | 293 | 253 |
| 3 | பேரூராட்சிகள் | 323 | 390 | 345 |
| 4 | ஊரகக்குடியிருப்புகள் | 51,048 | 1,253 | 1,199 |
| 5 | தொழிற்சாலைகள்/ கல்வி நிறுவனங்கள் / வணிக நிறுவனங்கள் | 576 | 65 | 37 |
| | **மொத்தம்** | **52,030** | **2,534** | **2,286 (90%)** |


தமிழ்நாடு மாநிலம்
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
கூட்டுக் குடிநீர் திட்டங்கள்
N
W
E
S
120 திட்டங்கள்
115 திட்டங்கள்
102 திட்டங்கள்
207 திட்டங்கள்
மொத்தம் 544 திட்டங்கள்

**உயிர் நீர் இயக்க (Jal Jeevan Mission) நிதியின் கீழ் கூட்டுக் குடிநீர் திட்டங்களில் மறுசீரமைப்பு**

திருச்சி, அரியலூர், பெரம்பலூர், கோயம்புத்தூர், திருப்பூர், நாமக்கல், சேலம், நீலகிரி, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், ராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் உள்ள 56 கூட்டுக் குடிநீர் திட்டங்கள், உயிர் நீர் இயக்க திட்ட நிதியின் கீழ் மறுசீரமைப்பு செய்து, வீட்டிணைப்புகளின் மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் குடிநீர் வழங்கிட ரூ.1658.35 கோடி (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பணிகள் – ரூ 1299.85 கோடி, ஊரக வளர்ச்சித்துறை பணிகள் – ரூ 358.50 கோடி) மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில், 43 திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 13 பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

**மிக்ஜாம் புயல் (Michaung Cyclone)**

2023, டிசம்பர் 2 முதல் 4 வரை "மிக்ஜாம்" புயலினால், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் கடந்த 47 வருடங்களில் இல்லாத அளவிற்கு 73 செ.மீ. மழை பெய்தது. இதனால் கொசஸ்தலையாறு, பாலாறு மற்றும் ஆரணி ஆறுகளில் அதிக அளவு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 7 கூட்டுக் குடிநீர் திட்டங்கள், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள 4 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள 1 கூட்டுக் குடிநீர் திட்டம் போன்றவை கடுமையாக பாதிக்கப்பட்டன.

இக்கூட்டுக் குடிநீர் திட்டங்களில் இணைப்பு குழாய்கள் (Connecting Main) மின் கேபிள்கள், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. மின் விநியோகம் பாதிக்கப்பட்டது. ஜெனரேட்டர்கள் மூலம் மின் மோட்டார்கள் இயக்கப்பட்டு பொதுமக்களுக்கு

உடனடியாக குடிநீர் வழங்கப்பட்டது. பழுதடைந்த கேபிள்கள் மற்றும் குழாய்கள் போர்க்கால அடிப்படையில் தற்காலிகமாக ரூ.1.28 கோடி செலவில் சீரமைக்கப்பட்டு 12 பாதிக்கப்பட்ட கூட்டுக் குடிநீர் திட்டங்கள் உடனடியாக மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டன.

மேற்குறிப்பிட்ட 12 கூட்டுக் குடிநீர் திட்டங்களில் அனைத்து உட்கட்டமைப்புகளையும் நிரந்தரமாக சீரமைக்க ரூ.3.89 கோடிக்கு திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, உயிர் நீர் இயக்கத்தில் இயற்கை பேரழிவுகளை சீரமைக்க ஒதுக்கப்பட்டுள்ள நெகிழ்வு நிதியின் (Flexi fund) கீழ் அரசாணை (நிலை) எண் 52, ந.நி(ம)கு.வ துறை நாள் 14.03.2024–ன் படி அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இப்பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட்டு வடிவமைக்கப்பட்ட குடிநீர் அனைத்து பயனாளிகளுக்கும் வழங்கப்படும்.

**பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வழங்கிய ஒத்துழைப்பு**

மிக்ஜாம் புயல் மற்றும் பெருமழையால் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் உள்ள குடியிருப்புகள் மற்றும் தொழிற்சாலைகளுக்குள் வெள்ளம் புகுந்ததால், மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டது. தேசிய பேரிடர் மீட்புக் குழு மற்றும் பல்வேறு துறைகளுடன் இணைந்து சென்னை மாநகராட்சி அனைத்து சீரமைப்பு மற்றும் மறுவாழ்வு பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டது.

சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையை விரைவாக மீட்டெடுக்க தேவையான உபகரணங்களை ஏற்பாடு செய்து, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உரிய ஒத்துழைப்பு வழங்கிட இதர உள்ளாட்சி அமைப்புகள் /

அத்தியாவசிய சேவைத் துறைகளுக்கு அரசு அறிவுறுத்தியது.

அதன்படி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் 3 குதிரைத்திறன் முதல் 50 குதிரைத்திறன் வரையிலான 47 நீரகற்றும் பம்ப்செட்களை சோழிங்கநல்லூர், திருவொற்றியூர், பெருங்குடி, கொட்டிவாக்கம், மாதவரம் போன்ற கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏற்பாடு செய்து மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு விரைவாக திரும்பிட ஒத்துழைப்பு நல்கியது.

**வடகிழக்கு பருவமழை வெள்ளம்**

கடந்த 2023 டிசம்பர் மாதம் 16 முதல் 18 வரையிலான தேதிகளில் தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, விருதுநகர், கன்னியாகுமரி மற்றும் தேனி உள்ளிட்ட 6 தென் மாவட்டங்களில் கடந்த 100 வருடங்களில் இல்லாத வகையில் ஒரே நாளில் பெய்த 95 செ.மீ. பெருமழையால் தாமிரபரணி,

மூலவைகை, முல்லை பெரியாறு, கடனாநதி, கோதையாறு, குதிரையாறு மற்றும் வைகை, அதன் கிளை ஆறுகளிலும் பெருவெள்ளம் ஏற்பட்டது. இப்பெருவெள்ளத்தால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வரும் 70 கூட்டுக் குடிநீர் திட்டங்களில் உள்ள நீருறிஞ்சு கிணறுகள், நீர்சேகரிப்பு கிணறுகள், அவற்றில் அமைக்கப்பட்டுள்ள மின்மோட்டார்கள், இணைப்புக் குழாய்கள் மற்றும் மின்கேபிள்கள், நீர் செல்லும் குழாய்களைத் தாங்கும் பாலங்கள் போன்றவை கடுமையாக சேதமடைந்தன. இதனால், தூத்துக்குடி மாவட்டத்தில்–18, திருநெல்வேலி மாவட்டத்தில்–20, தென்காசி மாவட்டத்தில்–9, விருதுநகர் மாவட்டத்தில்–4, தேனி மாவட்டத்தில்–18 மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில்–1 ஆக மொத்தம் 70 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் செயலிழந்தன. இதன் காரணமாக 12 நகராட்சிகள், 61 பேரூராட்சிகள் மற்றும் 5,700 ஊரக குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கல் பாதிக்கப்பட்டது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட கூட்டுக் குடிநீர்திட்டங்களை போர்க்கால அடிப்படையில் சரிசெய்யும் வகையில் உடனடியாக பல்வேறு மாவட்டங்களிலிருந்து பொறியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் சுமார் 300 பேர் வரவழைக்கப்பட்டு இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டு தற்காலிக சீரமைப்பு பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டன.

- நீருறிஞ்சு கிணறுகள் மற்றும் மின்மோட்டார்களில் படிந்த சேறு மற்றும் சகதிகள் அகற்றப்பட்டன.
- சேதமடைந்த இணைப்பு குழாய்களுக்குப் பதிலாக தற்காலிகமாக உயர் அடர்த்தி பாலி எத்திலின் (HDPE) குழாய்கள் பொருத்தப்பட்டு சரிசெய்யப்பட்டன.
- சாலைகளில் சேதமடைந்த மற்றும் அடித்துச் செல்லப்பட்ட குழாய்கள் மாற்றி அமைக்கப்பட்டன.

- பழுதடைந்த மின்மாற்றிகள், மின்மோட்டார்கள், ஸ்டார்ட்டர்கள் சரிசெய்து அல்லது மாற்றி அமைக்கப்பட்டன.
- வெள்ளத்தில் சேதமடைந்த குடிநீர் குழாய் செல்லும் இணைப்பு பாலங்கள் தற்காலிகமாக சீரமைக்கப்பட்டன.

இவ்வாறாக சேதமடைந்த உட்கட்டமைப்புகள் தற்காலிகமாக ரூ.34.13 கோடி செலவில் 15 நாட்களில் சரி செய்யப்பட்டு, பொதுமக்களுக்கு விரைவாக குடிநீர் வழங்கப்பட்டது.

மேலும், கூட்டுக் குடிநீர் திட்டங்களின் அனைத்து உட்கட்டமைப்புகளையும் நிரந்தரமாக சீரமைக்க ரூ.145.48 கோடிக்கு திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, உயிர் நீர் இயக்கத்தில் இயற்கை பேரழிவுகளை சீரமைக்க ஒதுக்கப்பட்டுள்ள நெகிழ்வு நிதியின் (Flexi fund) கீழ் அரசாணை (நிலை) எண் 52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 14.03.2024–ன் படி அரசால் நிர்வாக அனுமதி

வழங்கப்பட்டு உள்ளது. இப்பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட்டு வடிவமைக்கப்பட்ட குடிநீர் அனைத்து பயனாளிகளுக்கும் வழங்கப்படும்.

**தூத்துக்குடி மாநகராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வழங்கிய ஒத்துழைப்பு**

தென் மாவட்டங்களில் பெய்த பெருமழையினால் ஆறுகளில் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகள், குடியிருப்புகள் மற்றும் தொழிற்சாலைகளுக்குள் வெள்ளம் புகுந்ததால், மக்களின் இயல்பு வாழ்க்கை, கடுமையாக பாதிக்கப்பட்டது. தூத்துக்குடி மாநகராட்சி மற்றும் மாவட்ட நிருவாகம் பல்வேறு நிவாரண மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டது.

அரசின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அருகில் உள்ள மாவட்டங்களிலிருந்து 53 டேங்கர் லாரிகள் மூலம்

16.47 லட்சம் லிட்டர் குடிநீரை பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாநகராட்சி பகுதி மக்களுக்கு வழங்கி உதவியது.

**6.4 2023–24 ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்**

**6.4.1 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் / தனிக் குடிநீர் திட்டங்கள்**

2023–24 ஆம் ஆண்டில், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், பெரம்பலூர், தென்காசி, விருதுநகர், தூத்துக்குடி, கன்னியாகுமரி, மதுரை, திருநெல்வேலி, தேனி, திருப்பத்தூர், திருவள்ளூர், கிருஷ்ணகிரி, இராணிப்பேட்டை, ஈரோடு, சேலம், கரூர், கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களைச் சார்ந்த 3 மாநகராட்சிகள், 9 நகராட்சிகள், 12 பேரூராட்சிகள் மற்றும் 5,296 ஊரக குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 36 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் / தனிக் குடிநீர் திட்டங்கள் ரூ.5,305.62 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு

497.99 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீரை 70.30 இலட்சம் மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இத்திட்டங்களின் விவரங்கள் கீழே அட்டவணை 6.2–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.2**

| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் | விரிவுபடுத்தப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்கான (புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளுடன்) பவானி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் – பில்லூர் – III (178.30 மில்லியன் லிட்டர்) | 779.86 | 24.87 |
| 2. | சேலம் | இளம்பிள்ளை, ஆட்டையாம்பட்டி, பனமரத்துப்பட்டி, மல்லூர் மற்றும் இடங்கணசாலை பேரூராட்சிகள், வீரபாண்டி, பனமரத்துப்பட்டி மற்றும் சேலம் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 778 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டம் (53.03 மில்லியன் லிட்டர்) | 652.84 | 5.24 |
| 3. | தென்காசி மற்றும் விருதுநகர் | சங்கரன்கோவில், புளியங்குடி நகராட்சிகள், திருவேங்கடம் பேரூராட்சி மற்றும் விருதுநகர் மாவட்டத்தைச் சார்ந்த இராஜபாளையம், சிவகாசி, திருத்தங்கல் நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த்திட்டம் (46.07 மில்லியன் லிட்டர்) | 543.20 | 5.17 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 8 பகுதிகளுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் (பகிர்மான குழாய் அமைப்பு மட்டும்) | 487.71 | -- |
| 5. | கரூர் | அரவக்குறிச்சி மற்றும் க.பரமத்தி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 756 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ( 14.93 மில்லியன் லிட்டர் ) | 440.63 | 1.86 |
| 6. | ஈரோடு | மொடக்குறிச்சி ஒன்றியத்தைச் சார்ந்த 442 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (18.41 மில்லியன் லிட்டர்) | 412.12 | 2.82 |
| 7. | கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் | திருப்பூர் ஒன்றியம் 165 ஊரக குடியிருப்புகளுக்கான மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய அன்னூர், அவிநாசி மற்றும் சூலூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 708 ஊரகக் குடியிருப்புகளுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் (26.34 மில்லியன் லிட்டர்) | 362.20 | 4.75 |
| 8. | கன்னியாகுமரி | நாகர்கோயில் மாநகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் (41.12 மில்லியன் லிட்டர்) | 296.08 | 3.20 |
| 9. | திருநெல்வேலி | 50 MLD திருநெல்வேலி மாநகராட்சிக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் (35.00 மில்லியன் லிட்டர்) | 295.00 | 5.91 |
| 10. | திருப்பத்தூர் | திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, நாட்றாம்பள்ளி மற்றும் கந்திலி, ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 759 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ( 12.76 மில்லியன் லிட்டர்) | 182.09 | 2.15 |
| 11. | தஞ்சாவூர் | கும்பகோணம், திருப்பனந்தாள் மற்றும் திருவிடைமருதூர் ஒன்றியங்களைச் சார்ந்த 67 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் வேப்பத்தூர், திருவிடைமருதூர் பேரூராட்சிகளில் உள்ள 2 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (5.37 மில்லியன் லிட்டர்) | 117.09 | 0.91 |

| | | | | |
|---|---|---|---|---|
| 12. | திருவள்ளூர் | திருத்தணி நகராட்சிக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் (7.39 மில்லியன் லிட்டர்) | 109.68 | 0.66 |
| 13. | தஞ்சாவூர் | கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 134 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (5.45 மில்லியன் லிட்டர்) | 91.13 | 0.97 |
| 14. | ஈரோடு | கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 144 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (2.84 மில்லியன் லிட்டர்) | 87.68 | 0.45 |
| 15. | மதுரை | உசிலம்பட்டி நகராட்சிக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் (7.95 மில்லியன் லிட்டர்) | 73.03 | 0.51 |
| 16. | திருப்பூர் | திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 10 ஊராட்சிகளிலுள்ள 165 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (3.37 மில்லியன் லிட்டர்) | 70.43 | 0.89 |
| 17. | நாகப்பட்டினம் | 893 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு கூடுதல் நீராதாரம் ஏற்படுத்துவதற்கான திட்டம் (14.93 மில்லியன் லிட்டர்) | 42.46 | 5.85 |
| 18. | இராணிப்பேட்டை | காவேரிப்பாக்கம், சோளிங்கர் மற்றும் அரக்கோணம் ஒன்றியங்களிலுள்ள செம்பேடு மற்றும் 88 குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர் திட்டம் (2.70 மில்லியன் லிட்டர்) | 41.98 | 0.65 |
| 19. | மயிலாடுதுறை | சீர்காழி ஒன்றியத்தைச் சார்ந்த 7 ஊராட்சிகளில் உள்ள (1.33 மில்லியன் லிட்டர்) | 36.14 | 0.18 |
| 20. | கிருஷ்ணகிரி | வேப்பனஹள்ளி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த என்னேகொள்ளு மற்றும் 122 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர் திட்டம் (2.31 மில்லியன் லிட்டர்) | 31.00 | 0.41 |
| 21. | கன்னியாகுமாரி | குழித்துறை நகராட்சிக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் (4.25 மில்லியன் லிட்டர்) | 30.94 | 0.27 |

| | | | | |
|---|---|---|---|---|
| 22. | பெரம்பலூர் | வேப்பூர் ஒன்றியத்தில் உள்ள 73 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (3.47 மில்லியன் லிட்டர்) | 22.84 | 0.75 |
| 23. | ஈரோடு | பவானி ஒன்றியத்தைச் சார்ந்த கவுந்தபாடி ஊராட்சியிலுள்ள 55 ஊரகக் குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டம் (1.43 மில்லியன் லிட்டர்) | 17.55 | 0.44 |
| 24. | தேனி | தென்கரை பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் (1.35 மில்லியன் லிட்டர்) | 13.31 | 0.22 |
| 25. | ஈரோடு | சிவகிரி பேரூராட்சிக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் (2.18 மில்லியன் லிட்டர்) | 13.12 | 0.23 |
| 26. | சேலம் | ஏற்காடு ஒன்றியம், ஏற்காடு ஊராட்சிக்குட்பட்ட 8 ஊரக குடியிருப்புகளுக்கான குடிநீர்த் திட்டம் (0.89 மில்லியன் லிட்டர்) | 12.70 | 0.13 |
| 27. | திருநெல்வேலி | அம்பாசமுத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்த வாகைக்குளம் மற்றும் 12 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர்த் திட்டம் (1.12 மில்லியன் லிட்டர்) | 12.05 | 0.14 |
| 28. | திருச்சிராப்பள்ளி | தாத்தையங்கார்பேட்டை ஒன்றியம் M. புதுப்பட்டி ஊராட்சியை சார்ந்த 13 ஊரக குடியிருப்புகளுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் (0.92 மில்லியன் லிட்டர்) | 7.24 | 0.14 |
| 29. | நீலகிரி | உதகமண்டலம் ஒன்றியத்தை சார்ந்த மேல்குந்தா ஊராட்சியில் உள்ள கிண்ணக்கோரை மற்றும் 8 குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டம் (0.096 மில்லியன் லிட்டர்) | 5.45 | 0.014 |
| 30. | திருவள்ளூர் | திருவாலங்காடு ஒன்றியத்தைச் சார்ந்த நல்லாத்தூர், என்.என்.கண்டிகை மற்றும் பூனிமாங்காடு ஊராட்சிகளில் உள்ள நல்லாத்தூர் மற்றும் 15 குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டம் (0.51 மில்லியன் லிட்டர்) | 4.04 | 0.10 |

| | | | | |
|---|---|---|---|---|
| 31. | திருச்சிராப்பள்ளி | அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில், பெட்டவாய்த்தலை ஊராட்சியில் உள்ள மூன்று குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டம் (0.37 மில்லியன் லிட்டர்) | 3.79 | 0.06 |
| 32. | கன்னியாகுமரி | குருந்தன்கோடு ஒன்றியம் முட்டம் ஊராட்சியிலுள்ள மூன்று குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டம் (0.20 மில்லியன் லிட்டர்) | 3.69 | 0.12 |
| 33. | கன்னியாகுமரி | முஞ்சிரை ஒன்றியம், தூத்தூர் கிராம பஞ்சாயத்தில் 5 குடியிருப்புகளுக்கு குடிநீர் திட்டம். (1.35 மில்லியன் லிட்டர் ) | 3.51 | 0.20 |
| 34. | நீலகிரி | குன்னூர் ஒன்றியத்தை சார்ந்த மேலூர் ஊராட்சியில் உள்ள அருகுச்சி மற்றும் 5 இதர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (0.16 மில்லியன் லிட்டர்) | 1.21 | 0.024 |
| 35. | தூத்துக்குடி | திருச்செந்தூர் ஒன்றியத்தைச் சார்ந்த பள்ளிபட்டு ஊராட்சியில் உள்ள 4 குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டம் (0.07 மில்லியன் லிட்டர்) | 1.08 | 0.01 |
| 36. | திருச்சிராப்பள்ளி | துறையூர் ஒன்றியத்தைச் சார்ந்த கோம்பை ஊராட்சியிலுள்ள முத்தி கிராமம் (ஒரு பழங்குடியின குடியிருப்பு) குடியிருப்புக்கான குடிநீர்த் திட்டம் (0.021 மில்லியன் லிட்டர்) | 0.75 | 0.0034 |
| | | **மொத்தம்** (497.99 மில்லியன் லிட்டர்) | **5305.62** | **70.30** |

## 6.4.2 பாதாள சாக்கடைத் திட்டங்கள்

2023–24 ஆம் ஆண்டில், விருதுநகர், திருப்பத்தூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களைச் சார்ந்த 2 நகராட்சிகள் மற்றும் 1 பேரூராட்சியில் உள்ள 3.78 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 3 பாதாள சாக்கடைத்திட்டங்கள் ரூ.468.33 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 42.58 மில்லியன் லிட்டர்

கழிவுநீரை சேகரித்து சுத்திகரிப்பு செய்யும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

முடிக்கப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.3ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.3**

| வ. எண். | மாவட்டம் | உள்ளாட்சி அமைப்பு | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | விருதுநகர் | இராஜபாளையம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் ( 21.85 மில்லியன் லிட்டர்) | 251.20 | 1.90 |
| 2 | திருப்பத்தூர் | ஆம்பூர் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் ( 16.71 மில்லியன் லிட்டர்) | 165.55 | 1.55 |
| 3 | செங்கல்பட்டு | திருப்போரூர் பேரூராட்சிக்கான பாதாளசாக்கடைத் திட்டம் (4.02 மில்லியன் லிட்டர்) | 51.58 | 0.33 |
| | | **மொத்தம் (42.58 மில்லியன் லிட்டர்)** | **468.33** | **3.78** |

## 6.5 செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள்

### 6.5.1 குடிநீர் திட்டங்கள்

உள்ளூர் நீராதாரங்கள் குறைந்த மற்றும் குடிநீர் தேவை உள்ள பகுதிகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து, ஆறுகள், அணைக்கட்டுகள் மற்றும் நீர்த்தேக்கங்களை

நீராதாரமாகக் கொண்டு நகரப்புர உள்ளாட்சி அமைப்புகளில் (மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள்) நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 135/90/70 லிட்டர் மற்றும் ஊரகக் குடியிருப்புகளில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திருச்சிராப்பள்ளி, திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், பெரம்பலூர், சிவகங்கை, விருதுநகர், மதுரை, தேனி, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், திண்டுக்கல், செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களைச் சார்ந்த 14 நகராட்சிகள், 41 பேரூராட்சிகள் மற்றும் 15,051 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.17,939.02 கோடி மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 868.62 மில்லியன் லிட்டர் பாதுகாப்பான குடிநீரை 133.01 இலட்சம் மக்களுக்கு வழங்கும் வகையில் 32 குடிநீர் திட்டங்கள் பல்வேறு நிதி

ஆதாரங்களைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 6.5.1.1 கூட்டுக் குடிநீர் திட்டங்கள்

மேற்கண்ட 32 கூட்டுக் குடிநீர் திட்டங்களில், 3 திட்டங்கள், தேசிய வேளாண் மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி ( National Bank for Agriculture and Rural Development) மற்றும் குறைந்தபட்ச தேவைகள் திட்ட (Minimum Needs Program) நிதி ஆதாரங்களின் கீழ் சிவகங்கை, கடலூர் மற்றும் தேனி மாவட்டங்களில் உள்ள 3 நகராட்சிகள், 14 பேரூராட்சிகள் மற்றும் 3,327 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.2,394.16 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் நாளொன்றுக்கு 136.55 மில்லியன் லிட்டர் பாதுகாப்பான குடிநீரை 25.82 இலட்சம் மக்களுக்கு வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.4–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.4**

| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | சிவ கங்கை | சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 8 பேரூராட்சிகள் மற்றும் 11 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 2,452 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 3 நகராட்சிகளுக்கு மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டுக் குடிநீர் திட்டம் (86.42 மில்லியன் லிட்டர்) | 1,752.73 | 16.12 |
| 2. | கடலூர் | திட்டக்குடி, பெண்ணாடம், மங்களம்பேட்டை, வடலூர், குறிஞ்சிப்பாடி, கங்கைகொண்டான் பேரூராட்சிகள் மற்றும் மங்களூர், நல்லூர், விருத்தாசலம் ஒன்றியங்களில் உள்ள 625 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (39.43 மில்லியன் லிட்டர்) | 479.00 | 7.92 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | தேனி | கடமலைக்குண்டு – மயிலாடும்பாறை, ஆண்டிபட்டி மற்றும் தேனி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 250 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர்த் திட்டம். (10.70 மில்லியன் லிட்டர்) | 162.43 | 1.78 |
| | | **மொத்தம்** (136.55 மில்லியன் லிட்டர்) | **2,394.16** | **25.82** |

இராமநாதபுரம், திண்டுக்கல், நாகப்பட்டினம், மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, திருவாரூர், நாமக்கல், திருநெல்வேலி, ஈரோடு, தஞ்சாவூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருவள்ளூர், பெரம்பலூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களைச் சார்ந்த 7 நகராட்சிகள், 27 பேரூராட்சிகள் மற்றும் 11,724 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ. 14,996.16 கோடி மதிப்பீட்டில் 27 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் உயிர் நீர் இயக்கம் (Jal Jeevan Mission) மற்றும் அடல் புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான திட்டம் (Atal

Mission for Rejuvenation and Urban Transformation) நிதியின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டங்கள் மூலம் 104.06 இலட்சம் மக்களுக்கு நாளொன்றுக்கு 644.76 மில்லியன் லிட்டர் குடிநீர், 12,60,230 வீட்டிணைப்புகளின் மூலம் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.5–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.5**

| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | இராமநாதபுரம் மற்றும் திண்டுக்கல் | இராமநாதபுரம் மாவட்டம், 2 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 11 ஒன்றியங்களில் உள்ள 2,306 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகராட்சி, 2 பேரூராட்சிகள் மற்றும் 7 ஒன்றியங்களில் உள்ள 1,366 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (128.25 மில்லியன் லிட்டர்) | 4187.84 | 30.42 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் நகராட்சி, 4 பேரூராட்சிகள் மற்றும் 6 ஒன்றியங்களைச் சார்ந்த 980 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (93.00 மில்லியன் லிட்டர்) | 1782.48 | 9.66 |
| 3. | மதுரை | அலங்காநல்லூர், செல்லம்பட்டி, கள்ளிக்குடி, திருமங்கலம், திருப்பரங்குன்றம், உசிலம்பட்டி மற்றும் வாடிபட்டி ஆகிய 7 ஒன்றியங்களைச் சார்ந்த 867 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (60.00 மில்லியன் லிட்டர்) | 1559.07 | 10.93 |
| 4. | மதுரை | டி.கல்லுப்பட்டி மற்றும் சேடப்பட்டி ஒன்றியங்களில் உள்ள 236 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத்திட்டம் (15.55 மில்லியன் லிட்டர்) | 240.45 | 2.09 |
| 5. | மதுரை | கொட்டாம்பட்டி மற்றும் மேலூர் ஒன்றியங்களில் உள்ள 88 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் (6.46 மில்லியன் லிட்டர்) | 127.18 | 1.77 |
| 6. | விருதுநகர் மற்றும் தூத்துக்குடி | விருதுநகர் மாவட்டம், 8 ஒன்றியங்களில் உள்ள 1,286 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் 2 ஒன்றியங்களில் உள்ள 45 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (43.70 மில்லியன் லிட்டர்) | 1387.73 | 9.51 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | திருவாரூர் | திருவாரூர், நன்னிலம், கொரடாச்சேரி, கோட்டூர், மன்னார்குடி மற்றும் திருத்துறைப்பூண்டி ஆகிய 6 ஒன்றியங்களில் உள்ள 667 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (32.55 மில்லியன் லிட்டர்) | 1127.20 | 5.23 |
| 8. | நாமக்கல் | இராசிபுரம் நகராட்சி, 8 பேரூராட்சிகள், இராசிபுரம், வெண்ணந்தூர், நாமகிரிப்பேட்டை மற்றும் புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 523 ஊரகக் குடியிருப்புகளுக்கான மற்றும் எலச்சிப்பாளையம், மல்லசமுத்திரம் மற்றும் பரமத்தி ஒன்றியங்களுக்குட்பட்ட 547 ஊரகக் குடியிருப்புகளுக்கு மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டுக் குடிநீர் திட்டம் (86.04 மில்லியன் லிட்டர்) | 854.37 | 5.83 |
| 9. | நாமக்கல் | பரமத்தி ஒன்றியத்தில் உள்ள 11 ஊராட்சிகள் மற்றும் மல்லசமுத்திரம், எலச்சிபாளையம் ஒன்றிங்களைச் சார்ந்த 547 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (இராசிபுரம் கூட்டுக் குடிநீர்திட்டத்திலிருந்து மொத்த ஒதுக்கீடு) | 284.04 | 2.41 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | திருநெல்வேலி | 6 ஒன்றியங்களை சார்ந்த 831 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (22.79 மில்லியன் லிட்டர்) | 605.75 | 3.66 |
| 11. | திருநெல்வேலி | திருநெல்வேலி மாவட்டம், களக்காடு நகராட்சி மற்றும் நாங்குநேரி, ஏர்வாடி, மூலக்கரைப்பட்டி, திருக்குறுங்குடி வடக்குவள்ளியூர், திசையன்விளை, பணகுடி ஆகிய 7 பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (30.16 மில்லியன் லிட்டர்) | 423.13 | 2.50 |
| 12. | திருநெல்வேலி | பாளையங்கோட்டை ஒன்றியத்தைச் சார்ந்த 41 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (4.06 மில்லியன் லிட்டர்) | 45.10 | 0.51 |
| 13. | திருநெல்வேலி | மானூர் ஒன்றியத்தில் உள்ள கங்கை கொண்டான் மற்றும் 21 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (1.93 மில்லியன் லிட்டர்) | 19.25 | 0.33 |
| 14. | தூத்துக்குடி | 6 ஒன்றியங்களை சார்ந்த 363 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர் திட்டம் (16.57 மில்லியன் லிட்டர்) | 515.72 | 3.96 |

| | | | | |
|---|---|---|---|---|
| 15. | தூத்துக்குடி | ஸ்ரீவைகுண்டம் ஒன்றியத்தைச் சார்ந்த 20 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (1.17 மில்லியன் லிட்டர்) | 15.48 | 0.19 |
| 16. | ஈரோடு | சென்னிமலை ஒன்றியம், 22 ஊராட்சிகளிலுள்ள 434 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (17.74 மில்லியன் லிட்டர்) | 482.36 | 2.26 |
| 17. | தஞ்சாவூர் | பாநாசம் மற்றும் அம்மாப்பேட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 252 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர் திட்டம் (15.20 மில்லியன் லிட்டர்) | 288.02 | 2.78 |
| 18. | தஞ்சாவூர் | பூதலூர், திருவையாறு, தஞ்சாவூர், ஒன்றியங்களைச் சார்ந்த 214 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் (16.78 மில்லியன் லிட்டர்) | 248.67 | 2.25 |
| 19. | கடலூர் | சிதம்பரம் நகராட்சி, அண்ணாமலை நகர் பேரூராட்சி மற்றும் 2 ஒன்றியங்களைச் சார்ந்த 10 ஊராட்சிகளில் உள்ள 36 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (17.17 மில்லியன் லிட்டர்) | 255.64 | 1.59 |

| | | | | |
|---|---|---|---|---|
| 20. | திருச்சிராப் பள்ளி | லால்குடி மற்றும் புள்ளம்பாடி ஒன்றியங்களை சார்ந்த 109 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (11.26 மில்லியன் லிட்டர்) | 248.59 | 1.90 |
| 21. | திருச்சிராப்பள்ளி | மணிகண்டம் ஒன்றியத்தைச் சார்ந்த 174 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் (11.71 மில்லியன் லிட்டர்) | 124.13 | 1.98 |
| 22. | திருச்சிராப்பள்ளி | மண்ணச்சநல்லூர் மற்றும் முசிறி ஒன்றிங்களைச் சார்ந்த கூடபள்ளி மற்றும் 97 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (6.80 மில்லியன் லிட்டர்) | 73.97 | 1.15 |
| 23. | திருவள்ளூர் | திருத்தணி மற்றும் ஆர்.கே.பேட்டை ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள செருக்கனூர் மற்றும் 114 குடியிருப்பு களுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (2.76 மில்லியன் லிட்டர்) | 44.58 | 0.54 |
| 24. | திருவள்ளூர் | பூண்டி ஊராட்சி ஒன்றியம் 2 ஊராட்சிகளைச் சார்ந்த அம்மம்பாக்கம் மற்றும் 10 ஊரகக் குடியிருப்பு களுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (0.23 மில்லியன் லிட்டர்) | 3.64 | 0.05 |
| 25. | திருவள்ளூர் | பூண்டி ஊராட்சி ஒன்றியம் 2 ஊராட்சிகளைச் சார்ந்த வேளகாபுரம் மற்றும் 10 ஊரகக் குடியிருப்பு | 3.18 | 0.05 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | களுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (0.25 மில்லியன் லிட்டர்) | | |
| 26. | பெரம்பலூர் | வேப்பந்தட்டை ஒன்றியத்தைச் சார்ந்த 15 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (1.81 மில்லியன் லிட்டர்) | 34.97 | 0.37 |
| 27. | செங்கல்பட்டு | திருப்போரூர் ஒன்றியத்தைச் சார்ந்த கோவளம் மற்றும் 10 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (0.82 மில்லியன் லிட்டர்) | 13.62 | 0.14 |
| | | **மொத்தம் (644.76 மில்லியன் லிட்டர்)** | **14996.16** | **104.06** |

இதர நிதி ஆதாரங்களின் கீழ், விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை, சாத்தூர், மற்றும் விருதுநகர் நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ. 444.71 கோடி மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 26.94 மில்லியன் லிட்டர் பாதுகாப்பான குடிநீர் வழங்கும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முதற்கட்ட பணிகள் முடிக்கப்பட்டு குடிநீர் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பகிர்மான குழாய்கள் பதிக்கும் பணிகள் மற்றும் வீட்டிணைப்புகள்

வழங்கும் பணிகள் நிறைவுறும் பொழுது 3 நகராட்சிகளில் உள்ள 2.60 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

**6.5.2 தனிக் குடிநீர் திட்டங்கள்**

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கான தனி குடிநீர் திட்டங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுத்தி வருகிறது. திட்டங்கள் முடிந்தவுடன் அவை இயக்கம் மற்றும் பராமரிப்புக்காக அந்தந்த நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சார்ந்த துறையூர் நகராட்சியிலுள்ள 0.54 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் ரூ.108.90 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 8.57 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டம் செயலாக்கத்தில் உள்ளது.

**6.6 சிறப்பு திட்டம்**

**ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் – இரண்டாவது கட்டம்.**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20.01.2022 அன்று, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவினை உயர்த்தி வழங்கும் வகையில் ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தின் இரண்டாவது கட்டப்பணிகளை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதமும், பேரூராட்சிகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதமும் மற்றும் ஊரகப் பகுதிகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதமும் 304.83 மில்லியன் லிட்டர் குடிநீர்

வழங்கும் பொருட்டு, காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்திற்கான (இரண்டாவது கட்டம்) விரிவான திட்ட மதிப்பீடு ரூ.7,890.00 கோடிக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. ஊரக பகுதிகளுக்கான ஒன்றிய அரசின் பங்களிப்புத் தொகை ரூ.2,283.41 கோடிக்கு 15.06.2023 அன்று நடைபெற்ற உயிர்நீர் இயக்க மாநில அளவிலான திட்ட ஒப்புதல் குழு (State Level Scheme Sanctioning Committee) கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டு உள்ளது. ஊரக, நகரப் பகுதிகளுக்கான மாநில அரசின் பங்களிப்புத் தொகை வெளிப்புற நிதி உதவி (Externally Aided Projects) மூலம் பெறுவதற்காக ஆரம்ப திட்ட முன்மொழிவு அறிக்கை, ஒன்றிய அரசின் பொருளாதார விவகாரங்களுக்கான துறையின் (Department of Economic Affairs) இணையதளத்தில் 20.04.2023 அன்று பதிவேற்றம் செய்யப்பட்டது.

ஒன்றிய அரசின் பொருளாதார விவகாரங்களுக்கான துறையால் (Department of

Economic Affairs), 03.11.2023 அன்று இத்திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 22.11.2023 அன்று ஜப்பான் பன்னாட்டு நிதி (Japan International Cooperation Agency – JICA) உதவி பெற JICA ரோலிங் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

மத்திய பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் அமைப்பின் (Central Public Health and Environmental Engineering Organisation) குறிப்புரைகளின்படி, திட்ட மதிப்பீடு ரூ.7,955.37 கோடிக்கு திருத்தியமைக்கப்பட்டு, ரூ.7386.18 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு ஜப்பான் பன்னாட்டு நிதியத்தின் (JICA) நிதியுதவிக்கு இத்திட்டம் ஒன்றிய அரசால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஜப்பான் பன்னாட்டு நிதியத்தின் (JICA) தொடர்புக் குழு, 11.03.2024 அன்று திட்டப் பகுதிக்கு சென்று பார்வையிட்டு 12.03.2024 அன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் மற்றும் 13.03.2024 அன்று நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர்

வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் அவர்களுடன் கலந்துரையாடியது.

கலந்துரையாடலின்போது கடன் ஒப்பந்தம் செய்வதற்கான காலவரையரையை குறைத்து இத்திட்டத்தினை விரைவாக செயல்படுத்த ஒப்புதல் அளிக்குமாறு ஜப்பான் பன்னாட்டு நிதியத்திடம் கோரப்பட்டது.

இத்திட்டம் ஜப்பான் பன்னாட்டு நிதி உதவி நிறுவனத்தின் தீவிர பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் நிறைவேற்றப்படும் போது தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களை சேர்ந்த ஒசூர் மாநகராட்சி, தருமபுரி, கிருஷ்ணகிரி நகராட்சிகள், 16 பேரூராட்சிகள் மற்றும் 20 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 6,802 ஊரக குடியிருப்புகளைச் சார்ந்த 38.82 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.

**6.7 புதிய கூட்டுக் குடிநீர் திட்டங்கள்**

**6.7.1 2023-2024ஆம் ஆண்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க எடுத்துக் கொள்ளப்பட்ட கூட்டுக் குடிநீர் திட்டங்கள்**

கள்ளக்குறிச்சி, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், பெரம்பலூர், திண்டுக்கல் மற்றும் நாமக்கல் மாவட்டங்களிலுள்ள திண்டுக்கல் மாநகராட்சி, பெரம்பலூர் நகராட்சி, சின்னாளப்பட்டி, சேவுகம்பட்டி பேரூராட்சிகள் மற்றும் 706 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 9.25 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலான 7 கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கு ரூ.1,395.77 கோடிக்கு விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிதி ஆதாரம் மற்றும் நிர்வாக ஒப்புதல் பெற நடவடிக்கையில் உள்ளது.

இதில், திண்டுக்கல் மாநகராட்சி, பெரம்பலூர் நகராட்சி, சின்னாளப்பட்டி, சேவுகம்பட்டி பேரூராட்சிகள் மற்றும் 641 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 8.80 இலட்சம் மக்கள்

பயன்பெறும் வகையிலான 3 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் ரூ.1,356.78 கோடிக்கு செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என அரசின் 2024-25 ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருவள்ளூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், திருநெல்வேலி, தென்காசி, மயிலாடுதுறை, ஈரோடு மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள 7 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 10,304 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 73.99 இலட்சம் மக்கள் பயனடையும் வகையிலான 10 கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கான விரிவான திட்ட மதிப்பீடு ரூ.14,940 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு வருகிறது.

## 6.8 செயலாக்கத்தில் உள்ள பாதாள சாக்கடைத் திட்டங்கள்

### 6.8.1 அடல் புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான திட்டம் (AMRUT)

அம்ரூத் திட்டத்தின் கீழ், கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சார்ந்த கோயம்புத்தூர் மாநகராட்சி (குறிச்சி மற்றும் குனியமுத்தூர்) மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த இராமேஸ்வரம் நகராட்சியில் உள்ள 5.60 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 2 பாதாள சாக்கடைத் திட்டங்கள் ரூ.643.74 கோடி மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 34.61 மில்லியன் லிட்டர் கழிவுநீரை சேகரித்து சுத்திகரிப்பு செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டு, பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.6 –ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.6**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் மாநகராட்சி, குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம் (30.53 மில்லியன் லிட்டர்) | 591.14 | 5.17 |
| 2 | இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் (4.08 மில்லியன் லிட்டர்) | 52.60 | 0.43 |
| | **மொத்தம் (34.61 மில்லியன் லிட்டர்)** | 643.74 | 5.60 |

**அடல் புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான திட்டம் 2.0 (AMRUT 2.0):**

அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ், கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சார்ந்த கோயம்புத்தூர் மாநகராட்சி (வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி) மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தைச் சார்ந்த தூத்துக்குடி மாநகராட்சியில், விடுபட்ட மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் பகுதி சார்ந்த

வளர்ச்சி அல்லாத பிற பகுதிகளில் (Non Area Based Development) உள்ள 1.32 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 2 பாதாள சாக்கடைத் திட்டங்கள் ரூ.471.04 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 15.33 மில்லியன் லிட்டர் கழிவுநீரை சேகரித்து சுத்திகரிப்பு செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டு, பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.7– ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.7**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம். (மண்டலம் –VI) (9.95 மில்லியன் லிட்டர்) | 318.90 | 0.85 |

| | | | |
|---|---|---|---|
| 2 | தூத்துக்குடி மாநகராட்சியின், விடுபட்ட மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் பகுதி சார்ந்த வளர்ச்சி அல்லாத பிற பகுதிகளுக்கான (Non Area Based Development) பாதாள சாக்கடைத் திட்டம் (5.38 மில்லியன் லிட்டர்) | 152.14 | 0.47 |
| | **மொத்தம் (15.33 மில்லியன் லிட்டர்)** | **471.04** | **1.32** |

## 6.8.2 இதர நிதி ஆதாரங்களின் மூலம் செயல்படுத்தப்படும் பாதாள சாக்கடைத் திட்டங்கள்:

கோயம்புத்தூர், விழுப்புரம், கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருவள்ளூர், விருதுநகர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களைச் சார்ந்த 2 மாநகராட்சிகள் மற்றும் 5 நகராட்சிகள் பயன்பெறும் வகையில் ரூ.2,292.71 கோடி மதிப்பீட்டில் 8 பாதாள சாக்கடைத் திட்டங்கள் இதர நிதி ஆதாரங்களின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டங்கள் முடிவுற்றபின், 8.67 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், நாளொன்றுக்கு 107.00 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கு சுத்திகரிப்பு செய்யப்படும்.

இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.8–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.8**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நிதி ஆதாரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் மாவட்டம் கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட கவுண்டம்பாளையம், வடவள்ளி, வீரகேரளம் மற்றும் துடியலூர் ஆகிய பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம் (34.92 மில்லியன் லிட்டர்) | ADB | 922.16 | 2.40 |
| 2. | விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் (11.44 மில்லியன் லிட்டர்) | IUDM / SBM 2.0 | 268.00 | 1.00 |
| 3. | விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம். (இணைக்கப்பட்ட பகுதிகள்) (6.91 மில்லியன் லிட்டர்) | IUDM / SBM 2.0 | 263.00 | 0.60 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | கன்னியாகுமரி மாவட்டம் நாகர் கோவில் மாநகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் (17.66 மில்லியன் லிட்டர்) | UIDSSMT | 129.95 | 1.54 |
| 5. | தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மாநகராட்சி வளர்ச்சி சார்ந்த பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம் (6.25 மில்லியன் லிட்டர்) | Smart Cities Mission | 120.53 | 0.54 |
| 6. | திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம். (6.52 மில்லியன் லிட்டர்) | IUDM | 62.82 | 0.57 |
| 7. | விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் (13.25 மில்லியன் லிட்டர்) | KfW & SBM | 297.25 | 1.15 |
| 8. | திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகராட்சிக்கான பாதாளச்சாக்கடை திட்டம் (10.05 மில்லியன் லிட்டர்) | KfW & SBM | 229.00 | 0.87 |
| | **மொத்தம் (107.00 மில்லியன் லிட்டர்)** | | **2292.71** | **8.67** |

## 6.9 புதிய பாதாள சாக்கடைத் திட்டங்கள்

கிருஷ்ணகிரி மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களைச் சார்ந்த ஓசூர் மாநகராட்சி மற்றும் செங்கல்பட்டு நகராட்சியிலுள்ள 3.15 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், 2 பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கு ரூ.770.79 கோடி மதிப்பீட்டில் அம்ரூத் 2.0, ஜெர்மானிய வங்கி மற்றும் தூய்மை இந்தியா திட்டம் 2.0 ஆகிய நிதி ஆதாரங்களுடன் அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.9–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.9**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாநகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டம். | 582.54 | 2.25 |
| 2 | செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு நகராட்சிக்கான பாதாளச் சாக்கடை திட்டம் | 188.25 | 0.90 |
| | **மொத்தம்** | **770.79** | **3.15** |

## 6.10 ஆராய்ச்சி, வடிவமைப்பு, பயிற்சி மற்றும் திட்ட மேலாண்மை மையம்

### 6.10.1 ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு பிரிவு

**1. குடிநீர் குழாய்களில் நீர்கசிவு/ அடைப்புகளை ரோபோ மூலம் கண்டறிதல்**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் வருவாய் அல்லாத குடிநீர் (Non–Revenue Water) அளவை குறைத்திட செயற்கை நுண்ணறிவு கொண்ட ரோபோக்களை (Artificial Intelligence enabled Robot) குடிநீர் குழாய்களில் செலுத்தி குழாய் கசிவுகள், குழாய் அடைப்புகள், முறையில்லாத இணைப்புகளை கண்டறிய சோதனை மேற்கொள்ளப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கயத்தாறு, கழுகுமலை மற்றும் எட்டயபுரம் பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தில் நாலாட்டின்புதூர் முதல் கழுகுமலை வரை உள்ள குடிநீர் குழாயில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது, குடிநீர் குழாயில் உள்ள வேரடைப்புகளை கண்டறிந்து சரி செய்யப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது.

வரும் நிதியாண்டில், இச்சோதனையின்போது உணரப்பட்ட சில திருத்தங்களை செய்து மேலும் சில சோதனைகளை மேற்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**2. சூரிய ஒளி மூலம் மின்சாரம் பெறும் சாத்தியக்கூறுகள் ஆராய்தல்**

தமிழ்நாட்டில் (சென்னை பெருநகரப் பகுதி தவிர) பல்வேறு ஊரக மற்றும் நகர்ப்புர பகுதிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பராமரித்து வருகிறது. குடிநீரை இறைப்பதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் ஏறத்தாழ 200 உயர் அழுத்த மின்னிணைப்புகள் உள்ளது. இம்மின்னிணைப்புகளின் மொத்த மின் சுமை மற்றும் சராசரி மாதாந்திர மின் நுகர்வு ஏறத்தாழ 97 MW மற்றும் 43,000 MW.hr ஆகும்.

கூட்டுக் குடிநீர் திட்டங்களின் நிலையான பராமரிப்பிற்கு இந்த மிகப்பெரிய செலவான மின்கட்டணத்தை குறைக்க வேண்டியுள்ளது. எனவே

மின் தேவையை பூர்த்தி செய்ய சூரிய ஒளி மின்சாரத்தை உபயோகிக்க விரிவான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக செங்கல்பட்டு மாவட்டத்தின் திருப்போரூரில் தமிழ்நாடு உப்பு நிறுவனமிடம் உள்ள 500 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டுள்ளது. இந்நிலப்பகுதியில் சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரித்து பயன்படுத்துவது குறித்து சாத்தியக்கூறுகள் ஆராயப்படும்.

**3. திறன்மிகு குடிநீர் அளவுமானி பொருத்துதல் மற்றும் மையப்படுத்தப்பட்ட இணையவழி கண்காணிப்பு**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் உள்ள கூட்டுக் குடிநீர் திட்டங்களின் மூலம் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்படும் குடிநீரின் அளவை உறுதி செய்யவும், வருவாய் அல்லாத குடிநீரின் அளவை குறைக்கவும், திறன்மிகு குடிநீர் அளவுமானிகளை (Smart Water Meters) பொருத்தி அவற்றை இணையவழி (Internet of Things) தொழில்நுட்பம்

கொண்டு மையப்படுத்தப்பட்ட கண்காணிப்பு அமைப்பு மூலம் கண்காணித்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை ரூ.668.05 கோடி மதிப்பீட்டில் கலந்தாலோசகர் (Consultant) மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. திறன்மிகு குடிநீர் அளவுமானிகளை (Smart Water Meters) படிப்படியாக பொருத்துவதற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஆதாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**4. மின்னிறைப்பான்களின் ஆற்றல் தணிக்கை**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் உள்ள கூட்டுக் குடிநீர் திட்டங்களின் பராமரிப்பில் மின் கட்டணத்தை குறைக்க 50 HP க்கு மேலாக உள்ள மற்றும் 15 வருடங்களுக்கு மேலாக பயன்பாட்டில் உள்ள மின்னிறைப்பான்களில் (Pumpsets) தணிக்கை மேற்கொண்டு அதன் அடிப்படையில், மின்னிறைப்பான்களின் செயல்திறனை மேம்படுத்தி ஆற்றல் செலவினை குறைக்க

மின்னிறைப்பான்களை சரிசெய்ய/மாற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கென கலந்தாலோசகர் (Consultant) நியமிக்கப்பட்டு, விரிவான சாத்தியக்கூறு அறிக்கை (Detailed Feasibility Report) தயாரிக்கப்பட்டு வருகிறது.

**5. திறன் மேம்பாடு – இந்தியா மற்றும் டென்மார்க்**

இந்தியா மற்றும் டென்மார்க் இடையேயான பசுமை திட்ட ஒத்துழைப்பின் (Green Strategic Partnership) கீழ், ஊரக பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வழங்கல் என்ற ஒன்றிய அரசின் கொள்கைக்கு உறுதுணையாக இருந்து, இணை செயல்திட்டத்தினை (Joint work plan) நடைமுறைப்படுத்தும் மாநிலமாக தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, நீர் வழங்கல் குறித்த மின்னாற்றல் திறன் மற்றும் அளவீட்டு தரவு சேகரிப்பு தொர்பான திறன் மேம்பாட்டின் சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்வதற்காக டென்மார்க் நிபுணர்கள்

கோயம்புத்தூரில் உள்ள CLPRA (Coimbatore Local Planning and Rural Area) கூட்டுக் குடிநீர் திட்டத்தை பார்வையிட்டனர். வரும் நிதியாண்டில் இது போன்ற திறன் மேம்பாடு திட்டங்கள் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும்.

அண்ணா பல்கலைக்கழகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு பிரிவினை "ஆராய்ச்சி மையமாக" அங்கீகரித்து 19.03.2020 முதல் ஜூன் 2025 வரை ஐந்து ஆண்டுகளுக்கு வாரியத்துடன் இணைந்து முனைவர் பட்டப்படிப்பு (Ph.D.) படிப்பதற்கும் ஆராய்ச்சி மேற்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 6.10.2 பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு நடவடிக்கைகள்

· தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் தலைமை பயிற்சி மையம் சென்னையிலும் துணை பயிற்சி மையங்கள் திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலும் உள்ளன. இந்த மையங்களின் மூலம் வாரியத்தில் உள்ள தொழில்நுட்ப மற்றும் இதர

பிரிவு அலுவலர்களுக்கும் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

· 2023-24 ஆம் ஆண்டில் 12 பயிற்சி வகுப்புகள் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் உள்ள களப்பொறியாளர்கள், நீர் புவியியலாளர்கள், வரைவு அலுவலர்கள், கணக்கு மற்றும் நிர்வாக அலுவலர்கள் உட்பட 1,101 நபர்களுக்கு ரூ. 1.13 கோடி மதிப்பீட்டில் உயிர் நீர் இயக்கத்தின் (Support fund) நிதியுதவியுடன் பயிற்சிகள் நடத்தப்பட்டன.

இது தவிர, 150 புதிதாக பணியமர்த்தப்பட்ட/ பணிமாற்றம் மூலம் பதவி உயர்வு பெற்ற இளநிலை வரைவு அலுவலர்கள், இளநிலை உதவியாளர்கள், பதிவு எழுத்தர்கள், இளநிலை நீர் பகுப்பாளர்கள் மற்றும் இதர ஆய்வக பொறுப்பாளர்களுக்கு வழிகாட்டுதல் பயிற்சி வழங்கப்பட்டது.

· மேலும், அரசால் பரிந்துரைக்கப்பட்ட 165 அலுவலர்களுக்கு அதாவது தகுதிகாண் இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள், சார்பு துணை ஆட்சியர்கள்,

அரசு சார்புச் செயலாளர்கள் மற்றும் பிரிவு அலுவலர்களுக்கு "துறைகளின் தலைவர்களுக்கு கட்டாய பயிற்சி மற்றும் மாவட்ட பயிற்சி திட்டங்கள்", தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நடத்தப்பட்டது.

· மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைச் சேர்ந்த 353 அலுவலர்கள், பல்வேறு பயிற்சி நிறுவனங்களான தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, இன்ஜினியரிங் ஸ்டாஃப் காலேஜ் ஆப் இந்தியா, அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம், மத்திய நிலத்தடிநீர் வாரியம், மத்திய பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் அமைப்பு, அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில், அண்ணா பல்கலைக்கழகம், அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி ஆகியவை நடத்தும் திறன்மேம்பாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பல்வேறு செயல்பாடுகள் குறித்து வாரிய பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கவும் மேலும் திறன் மேம்பாட்டை வளர்க்கும் விதமாகவும் 2024-25 ஆம் நிதியாண்டில், கீழ்க்கண்ட தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

- குடிநீர் திட்டங்களுக்கான நீருந்து குழாய்களின் தகுந்த அளவினை கணக்கிடுதல் (ECP), பகிர்மான குழாய்களை மென்பொருள்கள் (LOOP மற்றும் WaterGeM) மூலம் வடிவமைத்தல் மற்றும் கட்டிடங்களுக்கான வடிவமைப்புகளை மென்பொருள் (STAAD Pro) மூலம் வடிவமைத்தல்
- பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கான கழிவு நீர் குழாய்கள் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவற்றை மென்பொருள் (Sewer Gem) மூலம் வடிவமைத்தல்

- பாதாள சாக்கடைத் திட்டங்களின் செயலாக்கத்தில் புதுமையான தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல் (களஆய்வு உட்பட).
- கூட்டுக் குடிநீர் திட்டங்களின் குடிநீர் குழாய்களில் உயர் மற்றும் தாழ்வு அழுத்தத்தினால் ஏற்படும் பாதிப்புகளை (Water Hammer) ஆராய புதுமையான தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல் (களஆய்வு உட்பட).
- பராமரிப்பில் உள்ள குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களில் மின் பயன்பாட்டினை தணிக்கை செய்தல் மற்றும் குடிநீர் விநியோகத்தை தணிக்கை செய்தல் மற்றும் நவீன குடிநீர் அளவுமானிகள் உட்பட குடிநீர் அளவுமானிகளின் பயன்பாடு (களஆய்வு உட்பட).

- களஆய்வில் சமீபத்திய தொழில்நுட்பங்களைப் (Drone Survey) பயன்படுத்தி புவியியல் தகவல் அமைப்பு
- பெரிய கூட்டுக் குடிநீர் திட்டங்களை பார்வையிட்டு அதன் இயக்கங்களை அறிதல்.
- நிலத்தடி நீர் நிலை உருவவியல் வரைபடங்கள் மற்றும் புவி பௌதிக ஆய்வுகள் (கள ஆய்வு உட்பட)
- ஒப்பந்தப்புள்ளி நடைமுறை மற்றும் ஒப்பந்த மேலாண்மை, இணைய வழி மின் கொள்முதல்.
- குடிநீரின் தரம் கண்காணிப்பு மற்றும் மேலாண்மை (பரிசோதனை மைய கள ஆய்வு உட்பட)
- ஆட்சிப் பணியாளர்களுக்கான அலுவலக நடைமுறைகள்
- ஓட்டுநர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்களுக்கான உந்துதல் மற்றும் நடத்தை அம்சங்களை மேம்படுத்துதல்.

## 6.11 கட்டுமான பொருட்கள் சோதனை மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் நான்கு தரக்கட்டுப்பாட்டு சோதனை ஆய்வகங்கள் கோயம்புத்தூர், மதுரை, திருச்சி மற்றும் திண்டிவனம் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. இவற்றில் கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் உள்ள சோதனை ஆய்வகங்கள் NABL தர சான்று பெற்றவை.

இந்த சோதனை ஆய்வகங்களில், கீழ்க்கண்ட கட்டுமானப் பொருட்கள் பரிசோதனை செய்யப்படுகின்றன.

சிமெண்ட், கம்பி, ஆற்று மணல், தூளாக்கப்பட்ட கல் மணல் (M Sand), ஜல்லி, செங்கல், கனசதுர வடிவ கான்கிரீட் மாதிரிகள் (Concrete Cubes), கான்கிரீட் கலவை வடிவமைப்பு (Mix Design) வடிகட்டி மணல், PVC குழாய், UPVC குழாய், O–PVC குழாய், HDPE குழாய், DWC குழாய், GI குழாய், சுடுமண் (Stoneware) குழாய்,

நெகிழ் இரும்பு குழாய் (DI)மின் கடத்திகள் (Electric Cables)

2023–24ஆம் நிதியாண்டில் 2023 ஏப்ரல் முதல் மார்ச் 2024 வரை 15,189 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன. 2024–25ஆம் நிதியாண்டில், சுமார் 15,000 மாதிரிகள் பரிசோதிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**6.12 குடிநீரின் தரப்பரிசோதனை மற்றும் கண்காணிப்பு**

பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதலை உறுதிசெய்யும் பொருட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னையில் மாநில அளவிலான ஒரு குடிநீர் பரிசோதனைக் கூடம், 31 மாவட்ட குடிநீர் பரிசோதனைக் கூடங்கள், 56 துணை மாவட்ட குடிநீர் பரிசோதனைக் கூடங்கள் மற்றும் 25 ஒன்றிய அளவிலான குடிநீர் பரிசோதனைக் கூடங்களை அமைத்துள்ளது. வழங்கப்படும் குடிநீரில் இரசாயனம் மற்றும் நுண்கிருமிகள் குறித்த பரிசோதனைகள் இந்த ஆய்வகங்களில்

மேற்கொள்ளப்பட்டு அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கீழ் சென்னையில் உள்ள மாநில அளவிலான குடிநீர் தரப்பரிசோதனைக் கூடம் சோதனை மற்றும் அளவு திருத்த ஆய்வகத்திற்கான தேசிய அங்கீகார வாரியத்தின் (NABL) தரச்சான்றிதழ் பெற்று, 2016 முதல் மாநில அளவிலான வழிகாட்டி பரிசோதனைக் கூடமாக இந்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. உயிர் நீர் இயக்கத்தின் கீழ் 31 மாவட்ட (புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்கள் தவிர) அளவிலான குடிநீர் பரிசோதனைக் கூடங்களுக்கு NABL தரச்சான்றிதழ், 56 துணை மாவட்ட அளவிலான குடிநீர் பரிசோதனைக் கூடங்களுக்கும் மற்றும் 25 ஒன்றிய அளவிலான குடிநீர் பரிசோதனைக் கூடங்களுக்கும் NABL அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

2023–24 ஆம் நிதி ஆண்டில் உயிர் நீர் இயக்க நிதி மற்றும் மாநில நிதி உதவியுடன் சுமார் 8.45 இலட்சம் குடிநீர் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன.

நடப்பு நிதி ஆண்டில் (2024–25), தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் குடிநீர் பரிசோதனை ஆய்வு கூடங்கள் மூலமாக அனைத்து குடிநீர் ஆதாரங்கள், பள்ளிக்கூடங்கள், அங்கன்வாடிகள் மற்றும் உயிர் நீர் இயக்கம் மூலம் வழங்கப்படும் வீட்டு குடிநீர் இணைப்புகளின் நீர் மாதிரிகளை பரிசோதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**6.13 நிலநீர் புவியியல் (Hydro geology) பிரிவின் செயல்பாடுகள்**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் குடிநீர்திட்டங்களுக்கு, பாதுகாக்கப்பட்ட மற்றும் குடிப்பதற்கு உகந்த நீரை வழங்க, ஆய்வு, மதிப்பீடு செய்தல், பாதுகாத்தல் மற்றும் நீர் மேலாண்மை வாயிலாக அறிவியல் முறைப்படி

நீராதாரங்களை கண்டறிதல், நிலநீர் பிரிவின் பொறுப்பாகும்.

நிலத்தடிநீரை கண்டறிவதற்கான சாத்தியக்கூறுகள் கொண்ட நிலத்தடிநீர் வளங்கள் குறித்த வரைபடங்களை (Hydro Geo Morphological Maps– HGM) தயாரிக்க தொலை உணர்வு மற்றும் புவி தகவல் தொழில்நுட்பம் (GIS) ஆகியவை பயன்படுத்தப்படுகிறது. புவி அமைப்பு சார்ந்த பல்வேறு வளங்கள் மற்றும் களப்பணி தரவுகள், புவி தகவல் தொழிற்நுட்ப தளத்தில் ஒருங்கிணைக்கப்பட்டு தயாரிக்கப்படும் இந்த வரைபடங்கள், நீராதாரங்களின் இருப்பிடத்தை துல்லியமாகவும் மற்றும் நிலநீர் நீடித்த தன்மைக்காக, நீர் செறிவூட்டும் கட்டமைப்புகளுக்கான இடங்களை தேர்வு செய்வதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. இவ்வரைபடம், ஒன்றியங்கள் வாரியாக தயார் செய்யப்பட்டு களப்பணி வல்லுநர்களால் சிறப்பாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

நிலத்தடி நீராதாரங்களின் அளவு மற்றும் தன்மையைப் பொறுத்து, நீர்வளத்துறையால் வருவாய் குறு வட்டங்கள் (Firkas) வகைப்படுத்தப்படுகிறது. இடப் பரவலை காட்சிப்படுத்துவதற்காக, புவி தகவல் தொழில் நுட்பம் (GIS) மூலம் மாவட்ட வாரியாக வருவாய் குறு வட்டங்களின் வரைபடம் தயாரிக்கப்பட்டு, களப்பணியாற்றும் வல்லுநர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், மாவட்ட வாரியான செறிவூட்டல் வரைபடங்கள், குடிநீர் திட்டத்திற்கான குறியீட்டு வரைபடங்கள், பெரிய அளவிலான குடிநீர் திட்ட (ரூ.100.00 கோடிக்கு மேல் செயல்படுத்தப்படும் கூட்டுக் குடிநீர் திட்டம்) செயலாக்கத்திற்கான வரைபடங்கள் ஆகியவை புவித்தகவல் தொழில்நுட்ப (GIS) தளத்தில் தயாரிக்கப்பட்டு, ஒன்றிய (PM Gatishakti Portal) மற்றும் தமிழ்நாடு இ–ஆளுகை நிறுவனத்தின் (TNeGA) இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

38 கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கு நீராதாரங்கள் கண்டறிந்து மண்டல அறிவியல் நீராதாரம் கண்டறியும் குழு (Regional Scientific Source Finding Committee) முன் வைக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் பிற துறைகள் சார்ந்த குடிநீர் திட்டங்களுக்கான 830 நீர் ஆதாரங்கள், புவி பௌதீக மற்றும் நிலநீரியல் ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

**மழைநீர் சேகரிப்பு**

**நீர் பாதுகாப்பு**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நீடித்த நிலையான குடிநீர் பாதுகாப்பு திட்ட இயக்கத்தின் கீழ் (Sustainable Water Security Mission–SuWaSeM) மழை நீர் சேகரிப்புக்கான தொழில்நுட்ப உத்திகளை வழங்கும் முதன்மை நிறுவனமாக செயல்படுகிறது. இதன் நோக்கம், பல்வகை மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துவதன் மூலம் நகர்ப்புர உள்ளாட்சி

அமைப்புகளுக்கு நீடித்த நிலையான குடிநீர் பாதுகாப்பை உறுதி செய்வது ஆகும்.

மேற்கண்ட நீடித்த நிலையான குடிநீர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் (Sustainable Water Security Mission–SuWaSeM) இதுவரை ரூ.8.13 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு (Rainwater Harvesting Awareness)**

மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை (RWH) செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக உள்ளது. தமிழ்நாடு முழுவதும் மழைநீர் சேகரிப்பு குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

2023 அக்டோபரில் பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பொது இடங்களில் காணொளி காட்சி வாயிலாக, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மழை நீர்

சேகரிப்பின் முக்கியத்துவம் குறித்த பிரச்சாரங்கள்/ பேரணிகள் நடத்தப்பட்டன. மேலும் மழை நீர் சேகரிப்பின் அவசியம் குறித்த துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

ஒவ்வொரு ஆண்டும் பருவ மழைக்கு முன்னும் மற்றும் பின்னும் மாவட்டங்களில் நிலவும் சராசரி நிலத்தடி நீர்மட்ட விவரங்கள் 1286 கண்காணிப்பு கிணறுகள் மூலம் அளவிடப்படுகின்றன.

மே-2023 (பருவ மழைக்கு முன்) மற்றும் ஜனவரி-2024 (பருவ மழைக்கு பின்) காலகட்டத்தின் மாவட்ட வாரியாக சராசரி நிலத்தடி நீர் மட்ட விவரங்கள் அட்டவணை 6.10-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.10**

**கண்காணிப்பு கிணறுகள் – நீர் மட்டம் ( மீட்டர்)**

| மாவட்டங்கள் | கண்காணிப்பு கிணறுகளின் எண்ணிக்கை (ஆழ்துளை / திறந்தவெளிக் கிணறுகள்) | நீர் மட்டம் (மீ) மே-2023 | நீர் மட்டம் (மீ) ஜனவரி-2024 | நீர் மட்டம் உயர்வு (+) / குறைவு |
|---|---|---|---|---|
| அரியலூர் | **27** | 21.96 | 13.90 | +8.06 |
| செங்கல்பட்டு | **29** | 5.00 | 4.01 | +0.99 |

| | | | | |
|---|---|---|---|---|
| கோவை | **38** | 11.70 | 9.48 | +2.22 |
| கடலூர் | **42** | 21.80 | 17.67 | +4.13 |
| தர்மபுரி | **37** | 7.30 | 8.80 | −1.5 |
| திண்டுக்கல் | **51** | 10.91 | 21.70 | −10.79 |
| ஈரோடு | **42** | 6.46 | 6.08 | +0.38 |
| கள்ளக்குறிச்சி | **42** | 6.56 | 4.29 | +2.27 |
| காஞ்சிபுரம் | **17** | 6.50 | 4.40 | +2.1 |
| கன்னியாகுமாரி | **16** | 7.21 | 4.76 | +2.45 |
| கரூர் | **34** | 9.22 | 8.66 | +0.56 |
| கிருஷ்ணகிரி | **44** | 4.22 | 5.36 | −1.14 |
| மதுரை | **31** | 4.34 | 3.11 | +1.23 |
| மயிலாடுதுறை | **13** | 7.34 | 5.71 | +1.63 |
| நாகப்பட்டினம் | **13** | 2.45 | 1.50 | +0.95 |
| நாமக்கல் | **37** | 6.19 | 5.46 | +0.73 |
| பெரம்பலூர் | **16** | 4.91 | 4.97 | −0.06 |
| புதுக்கோட்டை | **24** | 10.73 | 9.10 | +1.63 |
| ராமநாதபுரம் | **91** | 6.77 | 5.02 | +1.75 |
| ராணிப்பேட்டை | **20** | 4.97 | 3.94 | +1.03 |
| சேலம் | **41** | 6.70 | 4.14 | +2.56 |
| சிவகங்கை | **79** | 10.68 | 7.11 | +3.57 |
| தென்காசி | **27** | 7.13 | 2.77 | +4.36 |
| தஞ்சாவூர் | **35** | 13.11 | 11.12 | +1.99 |
| தேனி | **20** | 12.93 | 9.17 | +3.76 |
| தூத்துக்குடி | **49** | 5.44 | 2.64 | +2.8 |
| திருப்பத்தூர் | **17** | 5.70 | 4.54 | +1.16 |

| | | | | |
|---|---|---|---|---|
| திருச்சிராப்பள்ளி | **45** | 18.10 | 13.62 | +4.48 |
| திருநெல்வேலி | **36** | 5.91 | 2.65 | +3.26 |
| திருப்பூர் | **39** | 7.41 | 7.82 | −0.41 |
| திருவண்ணாமலை | **58** | 3.84 | 4.27 | −0.43 |
| திருவாரூர் | **19** | 7.39 | 5.24 | +2.15 |
| திருவள்ளூர் | **35** | 5.77 | 5.50 | +0.27 |
| வேலூர் | **15** | 5.51 | 4.18 | +1.33 |
| விழுப்புரம் | **47** | 9.50 | 6.47 | +3.03 |
| விருதுநகர் | **60** | 5.51 | 2.17 | +3.34 |
| **மாநில சராசரி** | **1286** | 8.25 | 6.70 | +1.55 |

மேற்கண்ட புள்ளி விவரங்களின் உதவியுடன் நிலத்தடி நீர்மட்ட மாறுபாடுகளை அறிந்து கொள்வதுடன், கடந்த ஆண்டுகளில் நிலத்தடி நீர்மட்டம் எவ்வாறு வேறுபடுகிறது என்பதனையும் அறிந்து கொண்டு அதற்கேற்றவாறு குடிநீர் திட்டங்களை திட்டமிடவும், செயல்படுத்தவும் இயலும்.

**6.14 மின்னணு தரவு செயலாக்கப் பிரிவு (EDP Wing)**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் திட்ட மேலாண்மை, நிதி கணக்கீடு, மனித வள மேலாண்மை, சம்பள பட்டியல், ஒய்வூதியம் மற்றும் குடிநீர் கட்டண

வசூல் உள்ளீட்டவைகளுக்கு மின் ஆளுமை அமைப்பு (e–Governance system – TWADNEST) செயல்படுத்தப்பட்டுள்ளது. தற்போது பயன்பாட்டில் உள்ள TWADNEST எனப்படும் மின் ஆளுமை இணையத்தை, வளர்ந்து வரும் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கு தக்கவாறு மறு கட்டமைப்பு செய்ய தமிழ்நாடு இ–ஆளுகை நிறுவனத்தின் (TNeGA) மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழக அரசின் "அரசு சார் வணிக சீர்திருத்த செயல் திட்டம்" (Business Reform Action Plan) செயல்பாட்டின் ஒரு அங்கமாக தொழில் முனைவோரின் அடிப்படை கட்டமைப்புக்கான தேவைகளை எளிமைபடுத்தும் (Ease of Doing Business–EoDB) விதமாக, தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் புதிய குடிநீர் இணைப்பு பெறுவதற்கு மின் ஆளுமை இணையம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வலைதளம் தொழில் வழிகாட்டி நிறுவனத்தில்

(Guidence Bureau) உள்ள ஒற்றைச் சாளர வலைதளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் மின்–அலுவலகம் (e–office) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போதைய கூட்டுக்குடிநீர் திட்டங்கள் மற்றும் கழிவுநீர் அகற்றும் திட்டப் பணிகளின் முன்னேற்றத்தை கண்காணிக்க, திட்ட கண்காணிப்பு மென்பொருள் (Project Monitoring Software) உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பராமரிப்பில் உள்ள கூட்டுக்குடிநீர்திட்டங்களை கண்காணித்திட புதிய மென்பொருள் உருவாக்கப்பட்டு (O&M Software) பயன்பாட்டில் உள்ளது.

**6.15 நிதி நிலை**

2023–24 ஆம் ஆண்டுக்கான ஆண்டு கணக்குகளின்படி, 31.03.2024 வரை மொத்த வருவாய்

செலவு (தோராயமாக) ரூ.1822.13 கோடி, மொத்த வருமானம் ரூ.1898.93 கோடி.

2021–22 முதல் 2023–24 (31.03.2024 வரை தோராயமாக) வரையிலான வருமானம், செலவு, பற்றாக்குறை/உபரி மற்றும் ஒட்டுமொத்த பற்றாக்குறை விவரங்கள் அட்டவணை 6.11ல் கொடுக்கப்பட்டுள்ளன:

**அட்டவணை 6.11** **(ரூ.கோடியில்)**

| வ. எண் | விவரங்கள் | நிதி ஆண்டு 2021–22 | நிதி ஆண்டு 2022–23 | நிதி ஆண்டு 2023–24 31.03.2024 வரை (தோராயமாக) |
|---|---|---|---|---|
| I | **வருவாய் வருமானம்** | | | |
| 1. | வீத கட்டணம் (Centage) | 314.54 | 307.20 | 620.25 |
| 2. | குடிநீர் கட்டணம் | 729.75 | 770.92 | 956.57 |
| 3. | இதர வருமானம் (ஆய்வு கட்டணம் உட்பட) | 128.79 | 227.02 | 76.95 |
| 4. | மானியங்கள் | 217.13 | 286.77 | 245.16 |
| | **வருவாய் – மொத்தம்** | **1,390.21** | **1,591.91** | **1898.93** |
| II | **வருவாய் செலவு** | | | |
| 1. | சம்பளம் | 110.40 | 110.59 | 112.66 |
| 2. | ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய பயன்கள் | 371.42 | 397.58 | 400.48 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | கூட்டுக் குடிநீர் திட்டம் பராமரிப்பு செலவுகள் | 1,034.89 | 1,115.44 | 1,277.85 |
| 4. | இதர செலவுகள் | 30.04 | 30.09 | 31.14 |
| | **செலவுகள்– மொத்தம்** | **1,546.75** | **1,653.70** | **1,822.13** |
| | **பற்றாக்குறை/ உபரி** | **–156.54** | **–61.79** | **76.80** |
| | **ஒட்டு மொத்த பற்றாக்குறை** | **2,800.32** | **2862.11** | **2785.31** |

## 6.16 உயிர் நீர் இயக்கம் (Jal Jeevan Mission)

தமிழ்நாட்டின் ஊரக பகுதிகளிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர், வீட்டுக் குழாய் இணைப்பு மூலம் வழங்குவது உயிர் நீர் இயக்கத்தின் நோக்கமாகும்.

**உயிர் நீர் இயக்கத்தின் கூறுகள்**

i. நீடித்த நிலைத் தன்மை உடைய நீராதாரங்களை (source sustainability) உருவாக்குதல் மற்றும் ஏற்கனவே உள்ள நீராதாரங்களின் நீடித்த நிலைத் தன்மையை (Long term sustainability) உறுதி செய்தல்.

ii. தேவைப்படும் இடங்களில், அதிக அளவு நீரினை குழாய்கள் மூலம் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லுதல் (bulk water transfer), நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் மற்றும் பகிர்மான குழாய் அமைப்பினை உறுதிபடுத்துதல்.

iii. அனைத்து ஊரக வீடுகளுக்கும் குழாய் இணைப்பு வழங்க தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை (in–village infrastructure) உருவாக்குதல்.

iv. பராமரிப்பிலுள்ள குடிநீர் திட்டங்களின் மறுசீரமைப்பு (retrofitting) மற்றும் நடைபெற்று வரும் குடிநீர் திட்டங்கள் வாயிலாக ஊரக பகுதிகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு வீட்டுக் குழாய் இணைப்புகள் மூலம் 55 லிட்டர் அளவு குடிநீர் வழங்குதல்.

v. தகவல், கல்வி மற்றும் தொடர்பு (IEC), மனிதவள மேம்பாடு (HRD), பயிற்சி, நீர் தர பரிசோதனை மற்றும் கண்காணிப்பு ஆகியவை மேற்கொள்ளல்.

**செயல்படுத்தும் துறை மற்றும் மாநில பொறுப்பு அலுவலர்**

தமிழ்நாட்டில் உயிர் நீர் இயக்கத்தினை செயல்படுத்த நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினை பொறுப்பு துறையாகவும், இத்துறையின் அரசு முதன்மை செயலாளரை மாநில பொறுப்பு அலுவலராகவும் (State Nodal Officer) தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது.

தமிழ் நாட்டில், உயிர் நீர் இயக்கத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், திட்ட மேலாண்மை இயக்குநராக உள்ளார்.

உயிர் நீர் இயக்க செயல்பாட்டில், திட்ட மேலாண்மை இயக்குநருக்கு உதவிட மாநில திட்ட மேலாண்மை பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

**குழுக்கள்**

அரசாணை (நிலை) எண்.33, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

நாள் 15.02.2022–இன்படி பின்வரும் குழுக்கள் மறுநியமனம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

**i. உயர் நிலைக் குழு (Apex Committee)**

அரசு தலைமைச் செயலாளர் இக்குழுவின் தலைவராகவும், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் உறுப்பினர் – செயலராகவும், மற்றும் 7 துறைகளின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / முதன்மை செயலாளர் / செயலாளர், உயிர் நீர் இயக்க மாநில திட்ட இயக்குநர், ஒன்றிய அரசின் பிரதிநிதி, 3 பிற அலுவலர்கள் உறுப்பினர்களாகவும் உள்ளனர். இக்குழு கொள்கை முடிவுகள், மாநில செயல் திட்டத்தை இறுதி செய்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்கிறது.

**ii. மாநில அளவிலான திட்ட ஒப்புதல் குழு (State Level Scheme Sanctioning Committee)**

உயர்நிலைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு, மாநில அளவிலான திட்ட ஒப்புதல்

வழங்கும் குழு தேவையான தொழில்நுட்ப அனுமதியை வழங்கும். இக்குழுவில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு முதன்மை செயலாளர் தலைவராகவும் மற்றும் ஒன்றிய அரசின் பிரதிநிதி உட்பட 13 உறுப்பினர்களும் உள்ளனர்.

**iii. செயற்குழு (Executive Committee)**

உயிர் நீர் இயக்கத்தின் திட்ட இயக்குநர் தலைவராகவும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் இயக்குநர், நிதித்துறையின் பிரதிநிதி மற்றும் மாநில அரசின் 4 அதிகாரிகளை உறுப்பினர்களாக கொண்டு, திட்ட செயலாக்கத்தை கண்காணிக்க, செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது.

**நிதியுதவி**

உயிர் நீர் இயக்கத்தின் கீழ் ஊரக வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குவதற்கான பணிகளை செயல்படுத்த 50 சதவிகித நிதியினை ஒன்றிய அரசும் 50 சதவிகித நிதியினை மாநில அரசும் வழங்குகிறது. துணை நடவடிக்கைகள்

(support activities) மற்றும் நீர் தர கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு ஒன்றிய அரசு 60 சதவிகிதமும் மாநில அரசு 40 சதவிகிதமும் வழங்குகிறது.

**சமூக பங்களிப்பு (Community Contribution)**

மக்களின் ஈடுபாட்டை ஊக்குவிக்க, கிராம ஊராட்சியில் உட்கட்டமைப்பு செலவினத்தில் மலை மற்றும் வனப்பகுதி, ஆதி திராவிடர், பழங்குடியினர் குடியிருப்புகளில் 5 சதவிகிதமும், இதர கிராம ஊராட்சிகளில் 10 சதவிகிதமும், பணம் / பொருள் / உடல் உழைப்பு மூலம் பொது மக்கள் பங்களிப்பாக பெறப்படுகிறது.

**செயல்படுத்துதல்**

உயிர் நீர் இயக்கம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையால் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**

i. ஒன்றுக்கும் மேற்பட்ட கிராம ஊராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டங்கள் (Combined water supply schemes / multi village schemes), தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வடிவமைத்து செயல்படுத்தப்படுகிறது.

ii. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கூட்டுக் குடிநீர் திட்டங்களில் நீர் ஆதாரத்தை பெருக்குதல், மின்சாதனங்களின் திறன்களை கூட்டுதல் மற்றும் குழாய்களை மாற்றியமைத்தல் ஆகிய மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கூடுதல் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

i. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையானது, ஒற்றை கிராம திட்டங்களை (Single Village Schemes) வடிவமைத்து செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டங்களில், நீர் ஆதாரத்தை உருவாக்குதல், கிராம உட்கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுதல் மற்றும் வீட்டு குழாய் இணைப்புகள் வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ii. மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படும் கூட்டுக்குடிநீர் திட்டங்களில், கிராம உட்கட்டமைப்புகளை வடிவமைத்தல், செயல்படுத்துதல் ஆகிய பணிகளுடன் வீட்டு குழாய் இணைப்புகள் வழங்கும் பணிகளையும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மேற்கொள்கிறது.

**உயிர் நீர் இயக்கத்தின் இதர முக்கிய அம்சங்கள்**

i. பணிகளின் தரத்தினை உறுதி செய்ய மூன்றாம் தரப்பு மூலம் ஆய்வு மேற்கொள்ளுதல்.

ii. குடிநீரின் அளவு, தரம், மற்றும் சீரான விநியோகம் ஆகியவற்றுக்கான செயல்பாட்டு மதிப்பீடு மேற்கொள்ளுதல்.

iii. ஒருங்கிணைந்த தகவல் மேலாண்மை அமைப்பின் (Integrated Management Information System – IMIS) மூலம் திட்ட செயல்பாட்டை கண்காணித்தல்.

iv. கள ஆய்வு உபகரணங்களின் (Field Test Kit – FTK) மூலம் நீரின் தரத்தினை பரிசோதித்தல்.

v. நீரினை சிக்கனமாக பயன்படுத்துதல், மழைநீர் சேகரிப்பு, நீர் பாதுகாப்பு மற்றும் இதர நீர் விநியோகம் தொடர்பான தகவல் கல்வி மற்றும் தொடர்பு (IEC Activities) செயல்பாடுகளை மேற்கொள்ளுதல்.

**இதர திட்ட நிதிகளை ஒருங்கிணைத்தல் (Convergence of Funds)**

ஆண்டு செயல் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட உயிர் நீர் இயக்க திட்ட பணிகளை செயல்படுத்த, 15வது நிதிக் குழு மானியம், மாநில நிதிக் குழு மானியம் (SFC), மாவட்ட கனிம அறக்கட்டளை நிதி (DMFT) மற்றும் இதர நிதிகள் ஒருங்கிணைக்கப்படுகிறது.

**இயக்கம் மற்றும் பராமரிப்பு கொள்கை**

தமிழ்நாடு அரசு, பொதுமக்களுக்கு தடையில்லா குடிநீர் வழங்குவதை உறுதி செய்வதற்காக, கிராமக் குடிநீர் திட்டங்களின் இயக்கம் மற்றும் பராமரிப்பு கொள்கைக்கு, (O&M Policy) அரசாணை எண்.26, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 27.02.2024–ல் ஒப்புதல் அளித்து வெளியிட்டுள்ளது.

**உயிர் நீர் இயக்கத்தின் தற்போதைய நிலை**

தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் உள்ள 125.26 இலட்சம் வீடுகளில், இதுவரை 104.04 இலட்சம் (83.05%) வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 2023–24ஆம் ஆண்டில் 23.05 இலட்சம் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.



மாவட்டம் வாரியாக குடிநீர் குழாய் இணைப்புகளின் விவரங்கள் கீழே அட்டவணை 6.12ல் உள்ளன.

**அட்டவணை 6.12**

| வ. எண் | மாவட்டம் | மொத்த வீடுகள் | வீட்டுக் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டவை | வழங்கப்பட்ட சதவீதம்% | வீட்டுக் குழாய் இணைப்புகள் வழங்கப்பட வேண்டியவை | மொத்த கிராம ஊராட்சிகள் | 100%வீட்டிணைப்பு உள்ள கிராம ஊராட்சிகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 2,07,503 | 2,07,503 | 100.00 | 0 | 201 | 174 |
| 2 | செங்கல்பட்டு | 4,16,458 | 3,96,937 | 95.31 | 19,521 | 359 | 247 |
| 3 | கோயம்புத்தூர் | 3,72,578 | 3,72,578 | 100.00 | 0 | 228 | 222 |
| 4 | கடலூர் | 5,21,124 | 5,14,343 | 98.70 | 6,781 | 683 | 551 |
| 5 | தருமபுரி | 3,42,902 | 1,71,056 | 49.88 | 1,71,846 | 251 | 4 |
| 6 | திண்டுக்கல் | 4,55,187 | 3,59,158 | 78.90 | 96,029 | 306 | 40 |
| 7 | ஈரோடு | 4,19,003 | 3,77,867 | 90.18 | 41,136 | 225 | 149 |
| 8 | கள்ளக்குறிச்சி | 3,03,411 | 1,68,101 | 55.40 | 1,35,310 | 412 | 52 |
| 9 | காஞ்சிபுரம் | 2,16,311 | 2,16,311 | 100.00 | 0 | 274 | 267 |
| 10 | கன்னியாகுமரி | 2,16,738 | 2,16,738 | 100.00 | 0 | 95 | 79 |
| 11 | கரூர் | 2,04,464 | 1,74,715 | 85.45 | 29,749 | 157 | 56 |
| 12 | கிருஷ்ணகிரி | 4,09,438 | 2,82,712 | 69.05 | 1,26,726 | 333 | 38 |
| 13 | மதுரை | 4,50,815 | 3,70,849 | 82.26 | 79,966 | 420 | 85 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 14 | மயிலாடுதுறை | 2,02,565 | 1,85,933 | 91.79 | 16,632 | 241 | 77 |
| 15 | நாகப்பட்டினம் | 1,57,427 | 67,513 | 42.89 | 89,914 | 193 | 29 |
| 16 | நாமக்கல் | 3,52,086 | 3,47,727 | 98.76 | 4,359 | 322 | 231 |
| 17 | நீலகிரி | 96,916 | 96,916 | 100.00 | 0 | 35 | 34 |
| 18 | பெரம்பலூர் | 1,48,124 | 1,10,891 | 74.86 | 37,233 | 121 | 39 |
| 19 | புதுக்கோட்டை | 3,70,681 | 2,03,409 | 54.87 | 1,67,272 | 497 | 36 |
| 20 | இராமநாதபுரம் | 3,33,314 | 1,01,236 | 30.37 | 2,32,078 | 429 | 6 |
| 21 | இராணிபேட்டை | 1,89,334 | 1,89,334 | 100.00 | 0 | 288 | 275 |
| 22 | சேலம் | 6,47,476 | 5,36,890 | 82.92 | 1,10,586 | 385 | 114 |
| 23 | சிவகங்கை | 3,31,483 | 1,89,661 | 57.22 | 1,41,822 | 445 | 29 |
| 24 | தென்காசி | 3,39,932 | 2,26,337 | 66.58 | 1,13,595 | 221 | 68 |
| 25 | தஞ்சாவூர் | 4,21,955 | 4,21,708 | 99.94 | 247 | 589 | 556 |
| 26 | தேனி | 1,85,013 | 1,85,013 | 100.00 | 0 | 130 | 79 |
| 27 | தூத்துக்குடி | 3,58,973 | 2,79,158 | 77.77 | 79,815 | 403 | 178 |
| 28 | திருச்சிராப்பள்ளி | 4,73,334 | 4,32,923 | 91.46 | 40,411 | 404 | 270 |
| 29 | திருநெல்வேலி | 2,82,103 | 2,11,871 | 75.10 | 70,232 | 204 | 68 |
| 30 | திருப்பத்தூர் | 2,14,808 | 1,92,742 | 89.73 | 22,066 | 208 | 66 |
| 31 | திருப்பூர் | 4,56,552 | 3,95,382 | 86.60 | 61,170 | 265 | 98 |
| 32 | திருவள்ளூர் | 4,75,915 | 4,75,915 | 100.00 | 0 | 526 | 443 |
| 33 | திருவண்ணாமலை | 5,30,692 | 5,13,482 | 96.76 | 17,210 | 860 | 656 |
| 34 | திருவாரூர் | 3,05,169 | 2,37,796 | 77.92 | 67,373 | 430 | 136 |
| 35 | வேலூர் | 2,12,528 | 2,12,528 | 100.00 | 0 | 247 | 240 |
| 36 | விழுப்புரம் | 4,40,041 | 3,61,885 | 82.24 | 78,156 | 688 | 204 |
| 37 | விருதுநகர் | 4,64,075 | 3,98,644 | 85.90 | 65,431 | 450 | 214 |
| | **மொத்தம்** | **1,25,26,428** | **1,04,03,762** | **83.05** | **21,22,666** | **12,525** | **6,110** |

**100 சதவீத குடிநீர் குழாய் (வீடுதோறும் குடிநீர் Har Ghar Jal) இணைப்பு மாவட்டங்கள் மற்றும் கிராமங்கள்**

தமிழ்நாட்டில், 9 மாவட்டங்களில் அதாவது காஞ்சிபுரம், இராணிப்பேட்டை, வேலூர், கன்னியாகுமரி,

தேனி, திருவள்ளூர், கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் அரியலூர் மாவட்டங்களில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் 100 சதவீத குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் தமிழ் நாட்டில் 6,110 கிராம ஊராட்சிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் 100 சதவீத குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம்**

தமிழ்நாடு அரசு, மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு கிராம ஊராட்சியையும், நிலையான ஆற்று நீரை ஆதாரமாக கொண்ட கூட்டுக்குடிநீர் திட்டம் மூலமாக இணைப்பதை தொலை நோக்காக கொண்டுள்ளது.

உயிர் நீர் இயக்கத்தின் கீழ், ரூ.18,228.40 கோடி மதிப்பீட்டில், 45 புதிய கூட்டுக் குடிநீர் திட்டங்கள், 56 கூட்டுக் குடிநீர் திட்டங்களை மறுசீரமைப்பு செய்தல் மற்றும் நீடித்த நிலைத்தன்மை கொண்ட நீராதாரங்களை உடைய கிராமங்களில் ஒற்றை கிராமத்

திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை, 19 புதிய கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மற்றும் 43 மறுசீரமைப்பு கூட்டுக் குடிநீர் திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன.

**குடிநீர் குழாய் நண்பன் திட்டம் (Nal Jal Mitra– Multi Skilling Programme)**

குடிநீர் குழாய் நண்பன் (Nal Jal Mitra– Multi Skilling Programme) திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளில் இருந்து 12,525 நபர்களுக்கு பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டு, இதுவரை 3,671 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகம் மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகம் ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து,

குடிநீர் குழாய் நண்பன் (Nal Jal Mitra– Multi Skilling Programme) திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மேற்படி பயிற்சிகளுக்கான செலவினத் தொகையானது, உயிர் நீர் இயக்கம் மற்றும் 15–வது நிதிக் குழு மானிய தொகையில் இருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**பிரதான் மந்திரி ஜன்ஜாதி ஆதிவாசி நியாய மகா அபியான் (PM–JANMAN) திட்டம்**

பிரதான் மந்திரி ஜன்ஜாதி ஆதிவாசி நியாய மகா அபியான் (PM–JANMAN) திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள காரமடை ஊராட்சி ஒன்றியத்தின் வெள்ளியங்காடு மற்றும் தோலம்பாளையம் கிராம ஊராட்சிகளில் மற்றும் பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தின் வீரபாண்டி கிராம ஊராட்சியில் உள்ள பழங்குடியின குடியிருப்புகளில் வசிக்கும் 3,949 மலைவாழ் மக்களுக்கு, பவானி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு ரூ.11.75 கோடி மதிப்பீட்டில்

கூட்டுக் குடிநீர் திட்டம் உயிர் நீர் இயக்கத்தின் கீழ் செயல்படுத்திட மாநில அளவிலான திட்ட அனுமதிக் குழுவால் 01.02.2024 அன்று நடந்த 14வது கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

**புவியியல் குறியீடு**

உயிர் நீர் இயக்க குடிநீர் திட்டங்களின் செயல்பாட்டினை திறம்பட கண்காணிக்கும் பொருட்டு தமிழ்நாட்டில் உள்ள 22,564 குடிநீர் நீராதாரங்களில் இதுவரை 19,051 குடிநீர் நீராதாரங்கள் உயிர் நீர் இயக்க களப் பயனர் மென்பொருளில் களப்பொறியாளர்கள் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், 15,559 குடிநீர் திட்டங்களின் தகவல் பலகைகள் புவியியல் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

## 7. தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL)

தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம், தனியார் துறை பங்களிப்புடன், ஒரு பொது வரையறுக்கப்பட்ட நிறுவனமாக 1996–ஆம் ஆண்டு நவம்பரில் தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது. ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி (ICICI), எச்.டி.எப்.சி வங்கி (HDFC) மற்றும் ஐ.எல்&எப்.எஸ் நிதி சேவைகள் நிறுவனம் (IL&FS) ஆகிய நிறுவனங்கள் இதன் மற்ற பங்குதாரர்களாக உள்ளன. இதன் அனுமதிக்கப்பட்ட பங்குத் தொகை ரூ.2.00 கோடி. இதில் செலுத்தப்பட்ட பங்குத் தொகையான ரூ.1.00 கோடியில், தமிழ்நாடு அரசின் பங்கு ரூ.49.00 லட்சம் ஆகும். தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனமானது, தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம், குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் மற்றும் இதர அரசு மானிய நிதிகளை நிருவகித்து வருகிறது. மேலும் இந்நிறுவனம், நகர்ப்புர உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கான,

ஆரம்பம் முதல் திட்டச் செயலாக்கம் வரை அனைத்திற்குமான முழு தீர்வையும் அளித்து வருகிறது. இதன் பிரதான பணிகளில், திட்ட உருவாக்கம், திட்ட மதிப்பீடு, திட்ட வடிவமைப்பு, மூலதன திரட்டு மற்றும் நிதி மேலாண்மை ஆகியவை அடங்கும். இந்நிறுவனம், தொடங்கப்பட்டது முதல் ஆதாயம் ஈட்டி வருவதோடு, ஆதாயப் பங்குத் தொகையையும் தொடர்ந்து செலுத்தி வருகிறது.

**7.1. தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம் (TNUDF)**

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம், தமிழ்நாடு அரசால், தனியார் துறை பங்களிப்புடன் 1996ஆம் ஆண்டு நவம்பரில் ஒரு பொறுப்பாட்சியாக தோற்றுவிக்கப்பட்டது. ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி, எச்.டி.எப்.சி வங்கி மற்றும் ஐ.எல்&எப்.எஸ் நிதி சேவைகள் நிறுவனம் ஆகியவை இதில் நிதிப் பங்களிப்பு செய்துள்ள தனியார் துறை நிறுவனங்கள் ஆகும்.

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம், நகர்ப்புரத் துறையில் தனியார் முதலீடுகளை அதிகரிக்கும் நிதி

இடையீட்டாளராக செயல்படுவது மற்றும் தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் மிகத் தரமான நகர்ப்புர சேவைகளை வழங்குவதற்கு ஏதுவாக உள்ளாட்சி அமைப்புகள் திறம்பட்ட மற்றும் நிலைத்தன்மையுடைய அமைப்புகளாக திகழ உதவுதல் ஆகிய பணிகளை செய்து வருகிறது.

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம், நகர்ப்புர உட்கட்டமைப்பு சொத்துக்களை உருவாக்குதல் மற்றும் புதுமையான திட்டங்களை உருவாக்குதல், தற்சார்பற்ற மதிப்பீடுகள் மற்றும் நீடித்த நிதி உதவி வழங்குதல் ஆகியவற்றின் மூலம் இம்மாநிலத்தின் நகர்ப்புர மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டிற்கு பங்களிப்பதை குறிக்கோளாக கொண்டுள்ளது.

### 7.1.1. தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தின் நோக்கங்கள்

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

- நகர்ப்புர மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நகர்ப்புர உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியளிப்பது.
- பொது மற்றும் தனியார் பங்கேற்பு மற்றும் கூட்டு முயற்சிகள் மூலமாக, உட்கட்டமைப்புகளில் தனியார் பங்கேற்க உதவுதல்.
- நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிர்வாகத்தை மேம்படுத்துதல் மற்றும் அவற்றை மூலதன சந்தையில் நிதி திரட்ட ஏதுவாக்குதல்.

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு சாலைகள், பாலங்கள், மழை நீர் வடிகால்கள், கழிவுநீர் அகற்றுதல் மற்றும் சுகாதாரத் திட்டங்கள், குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை போன்ற

அடிப்படை வசதி திட்டங்கள் மற்றும் பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள் போன்ற வணிக நோக்குடைய திட்டங்களை செயல்படுத்த நிதியுதவி அளிக்கிறது.

தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு பொறுப்பாட்சி நிறுவனம் (TNUITCL), தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தை நிருவகித்து வருகிறது. இந்நிதியம், தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் மூலம் இயக்கப்படுகிறது.

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தின் மொத்த மூலதனமான ரூ.199.60 கோடியில், தமிழ்நாடு அரசு ரூ.142.91 கோடியும், ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி, எச்.டி.எப்.சி வங்கி மற்றும் ஐ.எல்.& எப்.எஸ் ஆகிய நிறுவனங்கள் ரூ.56.69 கோடியும் பங்களிப்பு செய்துள்ளன.

**7.2.வெளி ஆதாரத் திட்டங்கள்**

தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் மூலம் பின்வரும் ஐந்து வெளி ஆதாரக்கடன்கள் நிருவகிக்கப்படுகின்றன:

1. ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) நிதியுதவியுடன் கூடிய தமிழ்நாடு நகர்ப்புர முன்னணி முதலீட்டு திட்டம் (TNUFIP) (நிலை I, நிலை II மற்றும் நிலை III)
2. ஜெர்மன் மேம்பாட்டு வங்கியின் நிதியுதவியுடன் கூடிய நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதியுதவி–தமிழ்நாடு–நிலை–II–பகுதி–2 திட்டம் (SMIF–TN–II–2)
3. ஜெர்மன் மேம்பாட்டு வங்கியின் நிதியுதவியுடன் கூடிய தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு வளர்ச்சி மானியத் திட்டம் (MID–TN)
4. ஜெர்மன் மேம்பாட்டு வங்கியின் நிதியுதவியுடன் கூடிய நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதியுதவி–தமிழ்நாடு–நிலை–III திட்டம் (SMIF–TN–III)
5. உலக வங்கியின் நிதியுதவியுடன் கூடிய தமிழ்நாடு காலநிலை நெகிழ்வு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNCRUDP).

மேற்குறிப்பிடப்பட்ட திட்டங்களின் மொத்த நிதி ரூ.17,319.53 கோடி ஆகும். இதில், வெளி ஆதாரக்கடன்களின் அளவு ரூ.10,713.78 கோடி ஆகும். அவற்றின் விவரம் அட்டவணை 7.1ல் உள்ளது:

**அட்டவணை 7.1: வெளி ஆதாரக்கடன்களின் அளவு**

(ரூ. கோடியில்)

| வ. எண் | உட்கூறுகள் | தமிழ்நாடு நகர்ப்புர முன்னணி முதலீட்டு திட்டம் | | | SMIF–TN–II–2 | தமிழ் நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு வளர்ச்சி மானியத் திட்டம் | SMIF–TN––III | தமிழ்நாடு காலநிலை நெகிழ்வு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நிலை I | நிலை II | நிலை III | | | | | |
| 1 | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான கடன் | 356.43 | 487.01 | 294.45 | 0.00 | 0.00 | 2,132.75 | 637.98 | 3,908.62 |
| 2 | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான மூலதன மானியம் | 774.60 | 834.10 | 634.57 | 0.00 | 151.43 | 2,132.75 | 1,004.88 | 5,532.33 |
| 3 | தொழில்நுட்ப உதவி மானியம்/ செயல் திறன் சார்ந்த ஊக்கத் தொகை | 179.83 | 120.89 | 25.98 | 22.39 | 7.97 | 68.25 | 847.52 | 1,272.83 |
| | **மொத்த வெளி ஆதாரக் கடன்களின் அளவு** | **1,310.86** | **1,442.00** | **955.00** | **22.39** | **159.40** | **4,333.75** | **2,490.38** | **10,713.78** |
| 4 | அரசு மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு | 2,007.44 | 2,709.00 | 523.34 | 0.00 | 17.70 | 0.00 | 1,348.27 | 6,605.75 |
| | **மொத்தம்** | **3,318.30** | **4,151.00** | **1,478.34** | **22.39** | **177.10** | **4,333.75** | **3,838.65** | **17,319.53** |

**7.2.1. ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நகர்ப்புர முன்னணி முதலீட்டு திட்டம் (TNUFIP)**

தமிழ்நாடு நகர்ப்புர முன்னணி முதலீட்டு திட்டம் (TNUFIP), ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) நிதியுதவியுடன் 2018 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள முக்கிய தொழில் பெருவழித்தடங்களில், முன்னுரிமை அடிப்படையில், குடிநீர் வழங்கல், கழிவுநீர் மற்றும் வடிகால் ஆகிய உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், புதுமையான முன்னோடித் திட்டங்களை ஊக்குவித்தல், நகர்ப்புர ஆளுகை, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, காலநிலை நெகிழ்ச்சி மற்றும் நகர்ப்புர வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் திறனை மேம்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும்.

இத்திட்டம் மூன்று நிலைகளை கொண்டதாகும் (நிலை–I, நிலை–II, நிலை–III). இந்த மூன்று

நிலைகளுக்கும் ஆசிய மேம்பாட்டு வங்கியின் நிதியுதவி 502.00 மில்லியன் அமெரிக்க டாலர் ஆகும். இத்திட்டத்தின் முதல் நிலைக்கான மொத்த திட்டமதிப்பீடு ரூ.3,070.33 கோடியாக (477.50 மில்லியன் அமெரிக்க டாலர்) இருந்தது. இதில், ஆசிய மேம்பாட்டு வங்கியின் நிதியுதவி ரூ.1,099.53 கோடி (171.00 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கால அளவு நவம்பர் 2018 முதல் ஜுன் 2023 வரை ஆகும்.

செலாவணி வீத மாறுபாடுகள் காரணமாக கிடைக்கும் நிதியைக் கருத்தில் கொண்டு, இத்திட்டத்தின் முதல் நிலைக்கான செயலாக்கக் காலம், ரூ.3,318.30 கோடியாக (477.50 மில்லியன் அமெரிக்க டாலர்) திருத்தப்பட்ட திட்டமதிப்பீட்டுடன் டிசம்பர் 2024 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதில் ஆசிய மேம்பாட்டு வங்கியின் நிதியுதவி ரூ.1,310.86 கோடி (171.00 மில்லியன் அமெரிக்க டாலர்) மற்றும் மாநில அரசு மற்றும் இதர ஆதாரங்களின் பங்களிப்பு ரூ.2,007.44

கோடி (306.50 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். தமிழ்நாடு நகர்ப்புர முன்னணி முதலீட்டு திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ், 9 துணைத் திட்டங்களுக்கு ரூ.1,131.03 கோடி ரூபாய் நிதியுதவி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 1 துணைத் திட்டம் (கோயம்புத்தூர் மாநகராட்சி சூரிய மின்னாற்றல் வளர்ச்சித் திட்டம்) முடிக்கப்பட்டுள்ளது மற்றும் மீதமுள்ள 8 துணைத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதற்கான பல்வேறு கட்டங்களில் உள்ளன. விவரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன:

- கோயம்புத்தூர் மாநகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- திருச்சி மாநகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்–கட்டம்–II
- திருநெல்வேலி மாநகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்–கட்டம்–II
- திருநெல்வேலி மாநகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்–கட்டம்–III

- வேலூர் மாநகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்–கட்டம்–II
- ராஜபாளையம் நகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்,
- சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் – மாநகரத்துடன் இணைக்கப்பட்ட 4 கூடுதல் பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம்
- சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் – மாநகரத்துடன் இணைக்கப்பட்ட 4 கூடுதல் பகுதிகளில் குடிநீர் வழங்கல் திட்டம்

இத்திட்டத்தின், இரண்டாம் நிலைக்கான மொத்த திட்ட மதிப்பீடு ரூ.4,151.00 கோடி (593.00 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இதில், ஆசிய மேம்பாட்டு வங்கியின் நிதியுதவி ரூ.1,442.00 கோடி (206.00 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இதில் மாநில அரசு மற்றும் பிற ஆதாரங்களின் பங்களிப்பு ரூ.2,709.00 கோடி (387.00 மில்லியன்

அமெரிக்க டாலர்) ஆகும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கால அளவு டிசம்பர் 2019 முதல் டிசம்பர் 2025 வரை ஆகும். இத்திட்டத்தின் கீழ், 6 துணைத்திட்டப் பணிகளுக்காக ரூ.1,321.11 கோடி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, அனைத்து துணைத்திட்டப் பணிகளும் பல்வேறு செயல்பாட்டு நிலைகளில் உள்ளன. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

- திருச்சி மாநகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்–கட்டம்–III
- ஆம்பூர் நகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- திருப்பூர் மாநகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்–கட்டம்–II
- வேலூர் மாநகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்–கட்டம்–III
- திருப்பூர் மாநகராட்சி – குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்
- மதுரை மாநகராட்சி – குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் மூன்றாம் நிலைக்கான திட்ட மதிப்பீடு ரூ.1,478.34 கோடி (193.50 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இதில், ஆசிய மேம்பாட்டு வங்கியின் நிதியுதவி ரூ.955.00 கோடி (125.00 மில்லியன் அமெரிக்க டாலர்) மற்றும் மாநில அரசு மற்றும் இதர ஆதாரங்களின் பங்களிப்பு ரூ.523.34 கோடி (68.50 மில்லியன் அமெரிக்க டாலர்). இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கால அளவு டிசம்பர் 2022 முதல் ஜூன் 2026 வரை ஆகும். இத்திட்டத்தின் மூன்றாம் நிலையின் கீழ், 3 துணைத்திட்டப் பணிகளுக்காக ரூ.1,241.80 கோடி (ஆசிய மேம்பாட்டு வங்கியின் நிதியுதவி ரூ.929.02 கோடி மற்றும் மாநில அரசின் நிதி ரூ.312.78 கோடி) வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, அத்துணைத் திட்டங்கள் பல்வேறு செயல்பாட்டு நிலைகளில் உள்ளன. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

- மதுரை மாநகராட்சி – குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்

- கோயம்புத்தூர் மாநகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- தூத்துக்குடி மாநகராட்சி – மழை நீர் வடிகால் திட்டம்–கட்டம்–IV

### 7.2.2. ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி–தமிழ்நாடு–நிலை–2–பகுதி–2 (SMIF–TN–II–2) திட்டம்

நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி–தமிழ்நாடு–நிலை–2–பகுதி–2 எனும் திட்டம், ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) நிதியுதவியுடன், 2014 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 2022 ஆம் ஆண்டு டிசம்பரில் நிறைவடைந்துள்ளது. இருப்பினும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்துவதற்கான ரூ.22.39 கோடி (2.75 மில்லியன் யூரோ) மதிப்பிலான தொழில்நுட்ப உதவிக் கூறு டிசம்பர் 2024 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், சுமார் 5,200

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு நகர்ப்புர நிருவாகம், நிதி, திட்ட உருவாக்கம், செயலாக்கம், இயக்கம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 7.2.3. ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டு மானியத் திட்டம் (MID–TN)

ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும், தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டு மானியத் திட்டம் (MID–TN) 2022 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில், சுற்றுச்சூழல் பாதுகாப்பை ஊக்குவிக்கும் மற்றும் / அல்லது காலநிலை நெகிழ்ச்சியை அதிகரிக்கும் புதுமையான திட்டங்களுக்கு நிதி உதவி செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.177.10 கோடி (22.22 மில்லியன் யூரோ). இதில்,

ஜெர்மன் மேம்பாட்டு வங்கியின் மானியம் ரூ.159.40 கோடி (20.00 மில்லியன் யூரோ) மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு ரூ.17.70 கோடி (2.22 மில்லியன் யூரோ) ஆகும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கால அளவு ஆகஸ்ட் 2022 முதல் டிசம்பர் 2027 வரை ஆகும். இத்திட்டத்தின் கீழ், செயல்படுத்தப்பட உள்ள துணைத்திட்டங்கள் கண்டறியப்பட்டு வருகின்றன.

**7.2.4. ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி–தமிழ்நாடு–நிலை–3 திட்டம் (SMIF–TN–III)**

ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும், நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி–தமிழ்நாடு–நிலை–3 திட்டம் (SMIF–TN–III) 2022 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில் காலநிலை மீள்தன்மையுடைய நகர்ப்புர உட்கட்டமைப்பு

திட்டங்களுக்கு நிதி உதவி செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.4,333.75 கோடி ஆகும். நகர்ப்புர உட்கட்டமைப்பு திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ரூ.4,265.50 கோடி (500.00 மில்லியன் யூரோ) மற்றும் தொழில்நுட்ப உதவி வழங்குவதற்கு ரூ.68.25 கோடி(8.00 மில்லியன் யூரோ). இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கால அளவு நவம்பர் 2022 முதல் ஜூன் 2030 வரை ஆகும். இத்திட்டத்தின் கீழ், 19 துணைத் திட்டங்களுக்கு, ரூ.2,760.05 கோடி நிதியுதவி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது மற்றும் இத்துணைத் திட்டங்கள் அனைத்தும் ஒப்புதல் / கொள்முதல் / செயலாக்கம் ஆகிய பல்வேறு நிலைகளில் உள்ளன. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

- ஒக்கியம் துரைப்பாக்கம் – பாதாள சாக்கடை திட்டம்,
- மாதவரம் – பாதாள சாக்கடை திட்டம்

- இடையஞ்சாவடி, சடையன்குப்பம் & கடப்பாக்கம் – பாதாள சாக்கடை திட்டம்
- புழல், மாத்தூர், வடபெரும்பாக்கம் & தீயம்பாக்கம் – பாதாள சாக்கடை திட்டம்
- திருச்சி மாநகராட்சி – கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்
- ஓசூர் மாநகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- மன்னார்குடி நகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- கோவை மாநகராட்சி – 3 கூடுதல் பகுதிகள் – பாதாள சாக்கடை திட்டம்
- கோவை மாநகராட்சி – ஒண்டிப்புதூர் பாதாள சாக்கடை திட்டம்
- அருப்புக்கோட்டை நகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- சென்னை பெருநகர மாநகராட்சி – பயோ மைனிங்
- மதுரை மாநகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- செங்கல்பட்டு நகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- திருச்சி மாநகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்

- திருப்பூர் மாநகராட்சி – கூடுதல் பகுதிகள் – பாதாள சாக்கடை திட்டம்
- மறைமலைநகர் பேரூராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- பழனி நகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- மயிலாடுதுறை நகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- திருநெல்வேலி மாநகராட்சி – 58 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

**7.2.5. உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு காலநிலை நெகிழ்வு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNCRUDP)**

உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு காலநிலை நெகிழ்வு நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்திற்கான (TNCRUDP) கடன் ஒப்பந்தங்கள் 05.03.2024 அன்று நிறைவேற்றப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் பங்கேற்கும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், நகர்ப்புர மேலாண்மையை வலுப்படுத்துவதும், குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம்

ஆகியவற்றில் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற நகர்ப்புர சேவைகளை எளிதில் அணுகுவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.3,838.65 கோடி (69.68 பில்லியன் ஜப்பான் யென்) ஆகும். இதில் உலக வங்கியின் நிதியுதவி ரூ.2,490.38 கோடி (ஜப்பான் யென் 45.20 பில்லியன்) மற்றும் மாநில அரசின் பங்களிப்பு ரூ.1,348.27 கோடி (ஜப்பான் யென் 24.48 பில்லியன்) ஆகும். இத்திட்ட செயலாக்க காலம் மார்ச் 2024 முதல் டிசம்பர் 2030 வரை ஆகும்.

மேற்கூறியவற்றில், ரூ.3,585.22 கோடி, விளைவுகளுக்கான திட்டத்திற்கும் (PforR), ரூ.247.20 கோடி முதலீட்டு திட்ட நிதிக்கும் (IPF) மற்றும் ரூ.6.23 கோடி முன் செலுத்துக் கட்டணமாகவும் உள்ளது. தமிழ்நாடு காலநிலை நெகிழ்வு நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 28 துணைத் திட்டங்களுக்கு ரூ.1,609.65 கோடி நிதியுதவி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது மற்றும் இத்துணைத் திட்டங்கள்

அனைத்தும் ஒப்புதல் / கொள்முதல் / செயலாக்கம் ஆகிய பல்வேறு நிலைகளில் உள்ளன. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

- சேலம் மாநகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- தூத்துக்குடி மாநகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- திருவண்ணாமலை நகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- புதுக்கோட்டை நகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- ஆவடி மாநகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- ஆவடி மாநகராட்சி – குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்
- காரைக்குடி நகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- காரைக்குடி நகராட்சி – 24x7 குடிநீர் வழங்கல் திட்டம்
- புதுக்கோட்டை நகராட்சி – 24x7 குடிநீர் வழங்கல் திட்டம்
- திருச்சி மாநகராட்சி – 24x7 குடிநீர் வழங்கல் திட்டம்
- தூத்துக்குடி மாநகராட்சி – 24x7 குடிநீர் வழங்கல் திட்டம்
- திருநெல்வேலி மாநகராட்சி – 24x7 குடிநீர் வழங்கல் திட்டம்
- ஈரோடு மாநகராட்சி – 24x7 குடிநீர் வழங்கல் திட்டம்
- வேலூர் மாநகராட்சி – 24x7 குடிநீர் வழங்கல் திட்டம்
- கடலூர் மாநகராட்சி – 24x7 குடிநீர் வழங்கல் திட்டம்

- திண்டுக்கல் மாநகராட்சி – 24x7 குடிநீர் வழங்கல் திட்டம்
- தாம்பரம் மாநகராட்சி – 24x7 குடிநீர் வழங்கல் திட்டம்
- நாகர்கோவில் மாநகராட்சி – 24x7 குடிநீர் வழங்கல் திட்டம்
- ராஜபாளையம் நகராட்சி – 24x7 குடிநீர் வழங்கல் திட்டம்
- நாமக்கல் நகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- தர்மபுரி நகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- தேனி–அல்லிநகரம் நகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- காஞ்சிபுரம் மாநகராட்சி – குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம்
- காஞ்சிபுரம் மாநகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- கிருஷ்ணகிரி நகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- திண்டுக்கல் மாநகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- கடலூர் மாநகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்
- திருவாரூர் நகராட்சி – பாதாள சாக்கடை திட்டம்

### 7.3 திட்ட மேம்பாட்டுச் சேவைகள்

தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL), பல்வேறு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், மற்றும் அரசு நிறுவனங்களுக்கு, திட்ட மேம்பாடு மற்றும்

ஆலோசனை சேவைகளை வழங்கி வருகிறது. இதில் கருத்துருவாக்கத் திட்டங்கள், சாத்தியக்கூறு ஆய்வுகள், திட்டமிடல் ஆய்வுகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கைகள் போன்றவற்றை தயாரிக்கபடுகிறது. திட்ட வளர்ச்சி மானிய நிதியின் (PDGF) கீழ் இயங்கும் தமிழ்நாடு நகர்ப்புர முன்னணி முதலீட்டுத் திட்டம், நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதி உதவி – தமிழ்நாடு – நிலை– 3, தமிழ்நாடு காலநிலை நெகிழ்வு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம், மற்றும் தமிழக அரசு நிதி மூலம் தயாரிக்கப்படுகிறது. விவரங்கள் கீழே வருமாறு :

- அடையாறு மறுசீரமைப்பு Hybrid Annuity Model (HAM) மாதிரியில் விரிவான சாத்தியக்கூறு அறிக்கை.
- கோவையில் செம்மொழி பூங்காவுக்கான பெருந்திட்டம் மற்றும் விரிவான திட்ட அறிக்கை
- தொல்காப்பியப் பூங்கா மறுமேம்பாட்டிற்கான விரிவான திட்ட அறிக்கை

- சென்னை நிகழ்நேர வெள்ள முன்னறிவிப்பு மற்றும் இடஞ்சார்ந்த முடிவெடுக்க உதவும் அமைப்பு
- கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தை பயோமைனிங் (Bio Mining) முறையில் மேம்படுத்துதல்–விரிவான சாத்தியக்கூறு அறிக்கை
- பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தை ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கான சாத்தியக்கூறு அறிக்கை
- பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் சுற்றுச்சூழல் பூங்கா (Eco Park) அமைக்க விரிவான திட்ட அறிக்கை
- சென்னை பெருநகரப் பகுதியில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களை இணைத்து ரிங் மெயின் அமைத்தல் தொடர்பான விரிவான திட்ட அறிக்கை (இரண்டு ரிங் மெயின்கள் சென்னை 174 Sq.km மற்றும் சென்னை பெருநகரப் பகுதிக்கான 1015 Sq.km).

- சென்னை நகரின் (Chennai Core City) 174 Sq.km தற்போதுள்ள கழிவுநீர் அமைப்பை மேம்படுத்த விரிவான திட்ட அறிக்கை
- கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு பாதாள சாக்கடை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை
- தாம்பரம் மாநகராட்சிக்கு பிரத்யேக குடிநீர் வழங்கல் தொடர்பான விரிவான திட்ட அறிக்கை.
- தாம்பரம் மாநகராட்சியின் விரிவாக்கப்பட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைக்க விரிவான திட்ட அறிக்கை.
- குன்றத்தூர் நகராட்சி மற்றும் 20 கிராம பஞ்சாயத்துகளை இணைத்து பாதாள சாக்கடை அமைக்க விரிவான திட்ட அறிக்கை.
- நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி பகுதிகள் மற்றும் 5 கிராம பஞ்சாயத்துகளை இணைத்து பாதாள சாக்கடை அமைக்க விரிவான திட்ட அறிக்கை.

### 7.4 திட்ட மேலாண்மை சேவைகள்

தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம், ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புர முன்னணி முதலீட்டு திட்டத்தின் கீழ் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு ஆலோசகர்கள் மூலம் திட்ட மேலாண்மை சேவைகளை வழங்குகிறது. அவற்றின் விவரம் பின்வருமாறு:

- திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கான இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களின் கீழ் பாதாள சாக்கடை திட்டத்தை செயல்படுத்துவதற்கான கட்டுமான மேலாண்மை மற்றும் மேற்பார்வை சேவைகள்.
- திருநெல்வேலி மாநகராட்சிக்கான இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களின் கீழ் பாதாள சாக்கடை திட்டத்தை செயல்படுத்துவதற்கான

கட்டுமான மேலாண்மை மற்றும் மேற்பார்வை சேவைகள்.

- வேலூர் மாநகராட்சிக்கான இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களின் கீழ் பாதாள சாக்கடை திட்டத்தை செயல்படுத்துவதற்கான கட்டுமான மேலாண்மை மற்றும் மேற்பார்வை சேவைகள்.
- சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கான பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான கட்டுமான மேலாண்மை மற்றும் மேற்பார்வை சேவைகள்.
- மதுரை மாநகராட்சிக்கான இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களின் கீழ் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான கட்டுமான மேலாண்மை மற்றும் மேற்பார்வை சேவைகள்.

### 7.5. குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF)

தமிழ்நாடு அரசால், மூலதன சந்தையில் நிதி திரட்டப்படுவதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர

நகரங்களில் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாடு போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF) என்ற அறக்கட்டளை உருவாக்கப்பட்டது. இந்த அறக்கட்டளை இலாப நோக்கமற்று செயல்பட்டு வருகிறது.

இந்த நிதியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

- உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி உதவியளித்தல்
- கூட்டு நிதி அமைப்பின் கீழ் மூலதனச் சந்தையிலிருந்து நிதி திரட்டுதல்
- நேரடி, பொது மற்றும் தனியார் துறை கூட்டு முதலீட்டின் மூலம் குடிநீர் மற்றும் கழிவுநீர் துறைகளில் தனியார் பங்கேற்பை ஊக்குவித்தல்
- நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மூலதனச் சந்தையிலிருந்து நேரடியாக நிதி திரட்ட உதவுதல்
- குடிநீர், சுகாதாரம் மற்றும் / அல்லது பிற உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு ஒன்றிய மற்றும்

/ அல்லது மாநில அரசின் நேரடி முகவராக செயல்படுதல்.

- இந்நிதியத்தால், இது வரை, வரி விதிக்கத்தக்க மற்றும் வரியில்லா பத்திரங்கள் வெளியீட்டின் மூலமாக ரூ.302.30 கோடி நிதி திரட்டப்பட்டுள்ளது. இதில், ரூ.222.30 கோடி முழுவதுமாக திருப்பி செலுத்தப்பட்டுள்ளது.

வேலூர் கூட்டு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், அருப்புக்கோட்டை கூட்டு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், திண்டிவனம் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் விழுப்புரம் பாதாள சாக்கடை திட்டம் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்த, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடன் வழங்குவதற்காக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர மேம்பாட்டு நிறுவனத்திடமிருந்து (HUDCO) ரூ.624.04 கோடி கடன் பெறப்பட்டுள்ளது.

## 8. சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை

நகர்ப்புரங்களில் உள்ள அனைவருக்கும் தூய்மையான, பசுமையான மற்றும் நிலையான ஆரோக்கியமான சுற்றுச்சூழலை வழங்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. இவ்விலக்கினை அடையும் பொருட்டு, ஆறுகள், நீர்நிலைகள், உப்பங்கழிகள் மற்றும் முகத்துவாரங்களின் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்கு சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையை அரசு உருவாக்கியுள்ளது.

மேலும், ஆறுகள் மற்றும் நீர்நிலைகளின் சுற்றுச்சூழலைச் சீரமைக்கத் தேவையான திட்டங்களை தயாரித்தல், ஒருங்கிணைத்தல், சீரமைப்புப் பணிகளை கண்காணித்தல் மற்றும் சென்னை பெருநகரத்திற்கு உட்பட்ட கூவம், அடையாறு, கொசஸ்தலையாறு, பக்கிங்காம் கால்வாயுடன் இன்னும் பிற கிளைக்கால்வாய்கள், முகத்துவாரங்கள் மற்றும் கழிமுகங்களை சீரமைத்தல் ஆகிய பணிகளை

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மூலம் செயல்படுத்தி வருகிறது.

மேற்கண்ட இலக்குகளை அடையவும், நகரின் சுற்றுச்சூழலை மேம்படுத்தவும், பல்வேறு சார்துறைகளுடன் ஒன்றிணைந்து சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

### 8.1 நிறைவுற்ற சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டங்கள்

#### 8.1.1 தொல்காப்பியப் பூங்கா–அடையாறு கழிமுக சுற்றுச்சூழல் சீரமைப்பு (58 ஏக்கர்)

தமிழ்நாடு அரசு, நகர்ப்புர கடலோர ஈரநில பாதுகாப்பின் ஓர் முன்னோடித் திட்டமாக, அடையாறு உப்பங்கழி மற்றும் முகத்துவாரத்தின் 358 ஏக்கர் அதன் தொடர்ச்சியாக திரு.வி.க பாலத்திற்கு கிழக்கே அமைந்துள்ள அடையாறு முகத்துவாரப் பகுதியையும் சீரமைப்பதற்கு ரூ.100 கோடி வழங்கியுள்ளது.

அடையாறு உப்பங்கழி மற்றும் முகத்துவாரப் பகுதிகளில் மண்டிக்கிடந்த சீமைக்கருவேல மரங்கள்,

குப்பைகள், கட்டடக்கழிவுகள் மற்றும் கழிவுநீர் கலந்து காணப்பட்டதால், உப்பங்கழி மற்றும் முகத்துவாரச் சுற்றுச்சூழல் மிகவும் பாதிப்படைந்ததன் விளைவாக நீர்பரப்புப்பகுதி சுருங்கி, ஓதநீரின் தொடர்பு முற்றிலும் குறைந்து, இச்சூழலில் பல்லுயிர்ப்பெருக்கம் பெரிதும் பாதிப்படைந்தன.

முதற்கட்டமாக, 58 ஏக்கர் நிலப்பரப்பளவில் உள்ள அடையாறு உப்பங்கழியின் சீரமைப்பு பணிகள் 2008–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. சீரமைப்பு பணிகள் 2011–ஆம் ஆண்டு முழுமையாக நிறைவு பெற்று தொடர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடையாறு உப்பங்கழியின் சுற்றுச்சூழல் சீரமைப்பில் முக்கிய பணிகளான கடல்நீர் ஓதத்தின் தொடர்பு மற்றும் நீர்பரப்பின் பகுதி அதிகரிக்கப்பட்டுள்ளது. மண்சார் தாவரங்களான உலர்வெப்ப மண்டல பசுமைமாறாக் காடுகளுக்குரிய தாவரங்கள், சதுப்புநிலத் தாவரங்கள் மற்றும் கோரைப்புற்கள் நடப்பட்டுள்ளன. மேலும், சுற்றுச்சூழல்

சார்ந்த கல்வியினை தொடர்புப்படுத்தும் வகையில் நில சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது தொல்காப்பியப் பூங்கா, சுற்றுச்சூழல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையமாக செயல்பட்டு வருகின்றது. சுற்றுச்சூழல் கல்வியினை சமுதாயத்திற்கு குறிப்பாக, மாணவர்கள் பெற்றிடும் வகையில் சுற்றுச்சூழல் கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது. இதுவரை, 1,446 பள்ளிகளைச் சேர்ந்த, 1,12,826 மாணவர்கள் மற்றும் 6,070 ஆசிரியர்கள், இப்பூங்காவில் நடத்தப்பட்டு வரும் சுற்றுச்சூழல் கல்வி நிகழ்ச்சியில் பங்குபெற்று பயனடைந்ததுடன், நகர்ப்புர ஈரநில சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த அவசியத்தினை உணர்ந்துள்ளனர். மேலும், தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் (TNUIFSL) சமூகப் பொறுப்புணர்வு திட்ட நிதி (CSR) பெறப்பட்டு, தொல்காப்பியப் பூங்காவில் பள்ளி மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் கல்வி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

தொல்காப்பியப் பூங்காவில் சுற்றுச்சூழல் சீரமைப்பின் முக்கியத்துவம் குறித்து, அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை பொதுமக்கள் உணர்ந்திடும் வகையில், திங்கள் முதல் சனிக்கிழமை வரை (அரசு விடுமுறை நாட்கள் தவிர) பொதுமக்கள் பார்வையிட அனுமதிக்கப்படுகின்றனர். இதுவரை, 32,973 நபர்கள் பார்வையிட்டு பயனடைந்துள்ளனர். தற்போது, தொல்காப்பியப் பூங்காவில் பொதுமக்கள் நடைப்பயிற்சி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு இதுவரை, 24,528 நபர்கள் பயனடைந்துள்ளனர். தற்போது, தொல்காப்பியப் பூங்கா அரசின் நகர்ப்புர ஈரநில சுற்றுச்சூழல் சீரமைப்பு முத்திரை பதிக்கப்பட்ட திட்டமாக திகழ்கிறது.

**8.1.2 அடையாறு முகத்துவாரச் சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம் (300 ஏக்கர்)**

அடையாறு கழிமுக (58 ஏக்கர்) சுற்றுச்சூழல் சீரமைப்பின் தொடர்ச்சியாக, அடையாறு முகத்துவாரச் சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம் (300 ஏக்கர்) இரண்டாம் கட்ட பணிகளை அடையாறு உப்பங்கழி,

முகத்துவாரம், சிறு தீவுகள், மணல் திட்டுகள் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் மேற்கொள்ள ரூ.24.93 கோடிக்கு தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இதன் முக்கியக் கூறுகளாக சீமைக்கருவேல மரங்கள் மற்றும் முட்புதர்கள் முற்றிலும் அகற்றப்பட்டு, கரைகள் திடப்படுத்தப்பட்டு, நெகிழி மற்றும் கட்டடக்கழிவுகளை தொடர்ந்து அகற்றி, உப்பங்கழியில் மிதந்த மட்காத நெகிழி பொருட்கள் மற்றும் திடக்கழிவுகளை அகற்றி மற்றும் ஆழப்படுத்தி, ஓதத்தின் தொடர்பு மற்றும் நீர்பரப்புப்பகுதி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதில், பல்லுயிர் பெருக்கத்தை அதிகரிக்கும் வகையில் சதுப்புநிலத் தாவரங்கள் மற்றும் உள்ளூர் தாவரங்கள் நடப்பட்டுள்ளன.

அடையாறு உப்பங்கழி மற்றும் முகத்துவாரப்பகுதிகளை பழைய நிலைக்கு மீட்டெடுக்க (358 ஏக்கர்) சமீபத்தில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, மெல்லுடலிகள், நண்டுகள்,

தும்பிகள், பட்டாம் பூச்சிகள், மீன்கள், இருவாழ்விகள், ஊர்வன, பறவைகள் மற்றும் பாலூட்டிகள் போன்ற 424 வகையான விலங்கினங்கள் உள்ளன. சீரமைப்பிற்கு முன்பு இந்த எண்ணிக்கை 141 ஆக இருந்தது.

**8.2 நடைபெற்று வரும் சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டங்கள்**

பெருநகரில் உள்ள ஆறுகளின் சுற்றுச்சூழலை மேம்படுத்த தமிழ்நாடு அரசினால், ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம் மற்றும் அடையாறு நதி சீரமைப்புத் திட்டம் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இச்சீரமைப்பின் துணைத்திட்டங்கள் தொடர்புடைய சார்துறைகளால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தூர்வாருதல், சிறுகால்வாய் அமைத்தல் மற்றும் வெள்ளத் தடுப்புச்சுவர் அமைத்தல் போன்ற பணிகள் நீர்வளத் துறையால் மேற்கொள்ளப்படுகின்றது. திடக்கழிவு அகற்றுதல், பாதுகாப்பு வேலிகள்

அமைத்தல், மிதவை தடுப்பான் அமைத்தல், பாலங்களை அழகுபடுத்துதல், உள்ளூர் தாவரங்கள் நடவு செய்தல் மற்றும் நதிக்கரையோர மேம்பாட்டுப் பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக இயக்குநரகம் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநரகத்தால் மேற்கொள்ளப்படுகின்றன. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் – கழிவுநீரை இடைமறித்தல் மற்றும் மாற்று வழிகளை அமைத்தல், நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்துதல் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டம் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கான மறுகுடியமர்வு மற்றும் மறுவாழ்வு திட்டங்கள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**8.2.1 ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம்**

தமிழ்நாடு அரசு ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்பு பணிகளை பருத்திப்பட்டு அணையிலிருந்து முகத்துவாரம் வரையிலான 32 கி.மீ தூரம் மேற்கொள்ள ரூ.735.08 கோடிக்கு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. இச்சீரமைப்புத் திட்டத்தின் முக்கிய கூறுகள் – கழிவுநீர் கூவம் நதியில் கலப்பதை தடுக்க மாற்று ஏற்பாடுகளை செய்தல், திடக்கழிவுகளை அப்புறப்படுத்துதல், நதியின் வெள்ளநீர் கொள்ளளவை மேம்படுத்துதல், கூவம் நதிக் கரையில் வாழும் மக்களுக்கான மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுக்கான திட்டம், பல்லுயிர் பெருக்கத்தை அதிகரித்தல் மற்றும் நதியின் கரையோர மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை ஆகும்.

இச்சீரமைப்பு திட்டப்பணிகள் அனைத்தும் அக்டோபர், 2024–ல் முடிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்சீரமைப்பு பணிகளின்

முன்னேற்றத்தின் அடிப்படையில், இதுவரை ரூ.572.58 கோடி நிதி சார்துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது (கூவம் நதிக் கரையில் வாழும் மீதமுள்ள குடும்பங்களை மறுகுடியமர்வு மற்றும் மறுவாழ்வு செய்யும் பணிகள் தவிர).

**8.2.2 அடையாறு நதி சீரமைப்புத் திட்டம்**

அடையாறு நதியின் தொடக்கம், ஆதனூர் ஏரி முதல் முகத்துவாரம் வரையிலான சுமார் 42 கிலோ மீட்டர் தூரத்திற்கான சுற்றுச்சூழல் சீரமைப்புப் பணிகளுக்கு தமிழ்நாடு அரசு ரூ.744.60 கோடி நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. இதன் முக்கிய பணிகள் – கழிவுநீர் மேலாண்மை, திடக்கழிவு அகற்றுதல், நதியின் வெள்ளநீர் கொள்ளளவை மேம்படுத்துதல், மறுகுடியமர்வு மற்றும் மறுவாழ்வுக்கான பணிகள், பல்லுயிர் பெருக்கத்தை அதிகரித்தல் மற்றும் நதியின் கரையோர மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை ஆகும்.

இச்சீரமைப்புப் பணிகள் தொடர்புடைய சார்துறைகளால் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சீரமைப்புப் பணிகள் அக்டோபர், 2024–ல் முடிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது (அடையாறு நதியில் முகத்துவாரம் தூர்வாரும் பணிகள் மற்றும் அடையாறு நதிக் கரையில் வாழும் மீதமுள்ள குடும்பங்களை மறுகுடியமர்வு மற்றும் மறுவாழ்வு செய்யும் பணிகள் தவிர). இச்சீரமைப்பு பணிகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில், இதுவரை சார்துறைகளுக்கு ரூ.409.21 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

**8.2.3 பக்கிங்காம் கால்வாய் மற்றும் அதன் கிளைக்கால்வாய்கள், கூவம் மற்றும் அடையாறு ஆறுகளின் கிளைக் கால்வாய்கள் சீரமைப்பு**

சென்னை பெருநகரில் உள்ள நீர்வழித்தடங்களை முழுமையாக சீரமைப்பதற்காக, பக்கிங்காம் கால்வாய் மற்றும் அதன் பிரதான கிளைக்கால்வாய்கள், கூவம் மற்றும் அடையாறு

ஆறுகளின் கிளைக்கால்வாய்கள் சீரமைப்பு திட்டப் பணிகளுக்காக தமிழ்நாடு அரசு ரூ.1,281.88 கோடி நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. தொடர்புடைய சார்துறைகளால் ஆயத்தப் பணிகளான டிஜிபிஎஸ் (Differential Global Positioning System – DGPS) மூலம் எல்லை நிர்ணயம் செய்தல் மற்றும் எல்லைக்கல் நடுதல் போன்ற முதற்கட்ட பணிகள் நீர்வளத்துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

**8.2.4 எண்ணூர் கழிமுகப்பகுதி சுற்றுச்சூழல் சீரமைப்பு**

எண்ணூர் கழிமுகப்பகுதி சுற்றுச்சூழல் சீரமைப்புப் பணிகளுக்கு ரூ.45.99 கோடி சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளைக்கு அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. தற்போது, தாவரங்கள் நடவு செய்யும் பணிகள் வனத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தாவரங்கள் நடவு செய்யும் பணிகள் இரண்டு ஆண்டுகளில் (2023 முதல் 2025 வரை) முடிக்க

வனத்துறை திட்டமிட்டுள்ளது. சீமைக்கருவேல மரங்கள் அகற்றுதல் மற்றும் சதுப்பு நிலத் தாவரங்கள் நடவு செய்யும் பணிகள் தொடங்கியுள்ளது. இதுவரை, மொத்தமுள்ள 1,60,000 சதுப்பு நில தாவரங்களில் 1,000 தாவரங்கள் மற்றும் 2,00,000 சதுப்பு நிலம் சார்ந்த தாவரங்களில் 50,000 தாவரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளன. எண்ணூர் கழிமுகப்பகுதியில் மொத்தமுள்ள 200 ஹெக்டேரில் 160 ஹெக்டேர் பரப்பளவில் சீமைக்கருவேல மரங்கள் அகற்றப்பட்டுள்ளன. இப்பணிகளை சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை கண்காணித்து வருகின்றது.

### 8.2.5 தொல்காப்பியப் பூங்கா மறுமேம்பாடு

தொல்காப்பியப் பூங்கா மறுமேம்பாட்டு பணிகள் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் மூலம் மேற்கொள்ள ரூ.42.45 கோடியில் அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மற்றும் பெருநகர சென்னை

மாநகராட்சியின் மூலம் மறுமேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் கீழ் தொல்காப்பியப் பூங்கா மறுமேம்பாட்டு பணிகளான புதிய நுழைவு வாயில், கண்காணிப்பு கோபுரம், பார்வையாளர் மையம், பார்வையாளர் மாடம், நடைபாதைகள், சிற்றுண்டியகம், புதிய கழிப்பறை, இணைப்பு பாலம் மற்றும் சுற்றுச்சுவர் சீரமைத்தல் போன்ற பணிகள் நடைப்பெற்று வருகின்றன. இப்பணிகள் செப்டம்பர், 2024-க்குள் நிறைவுபெறும்.

சாந்தோம் சாலையில் உயர்மட்ட நடைபாதை மேம்பாலம் (Skywalk) மற்றும் சிறுபாலம் (Box Culvert) ஆகிய பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் மேற்கொள்ள, கடல்சார் ஒழுங்குமுறை ஆணையத்திடமிருந்து (CRZ) அனுமதி பெறப்பட்டு பணிகள் தொடங்கப்படவுள்ளது.

**8.2.6 கோயம்புத்தூர் செம்மொழிப் பூங்கா அமைத்தல்**

கோவையில் உலகத்தரம் வாய்ந்த 'செம்மொழிப் பூங்கா' முதற்கட்டமாக கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலையை ஒட்டியுள்ள 45 ஏக்கர் காலியிடத்தில் அமைக்க ரூ.167.25 கோடிக்கு அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. இப்பணிகள் கோவை மாநகராட்சியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 18.12.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. தாவரவியல் பூங்கா, மாநாட்டு மையம் மற்றும் குழாய் பதித்தல் பணிகள் நடைப்பெற்று வருகின்றன. இப்பணிகள் மே, 2025–க்குள் நிறைவுபெறும்.

**8.2.7. அடையாறு நதியை தனியார் பங்களிப்புடன் (PPP) சீரமைத்தல்**

தமிழ்நாட்டில் நகர்ப்புரங்களில் வசிக்கும் மக்களுக்கு தூய்மையான மற்றும் பசுமையான சுற்றுச்சூழலை உருவாக்கிட அரசு உறுதி

கொண்டுள்ளது. சென்னையில் உள்ள முக்கிய நீர் வழித்தடங்களான அடையாறு, கூவம், பக்கிங்காம் கால்வாய் மற்றும் கொசஸ்தலையாறு ஆகியவற்றை சீரமைத்திட அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது. இதன் முதற்கட்டமாக, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மூலம் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கூடுவாஞ்சேரி தொடங்கி தாம்பரம், திருநீர்மலை, மணப்பாக்கம், ஆலந்தூர் மற்றும் சைதாப்பேட்டை ஆகிய பகுதிகள் வழியாக பாய்ந்து வங்கக்கடலில் கலக்கும் அடையாறு நதியை மீட்டெடுத்து அழகுறச் சீரமைக்கும் திட்டம் அரசு தனியார் பங்களிப்புடன் சுமார் ரூ.1,500 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும். அடையாறு ஆற்றின் இரு கரைகளிலும் 70 கிலோ மீட்டர் தூரத்திற்கு கழிவுநீர் குழாய்கள் அமைத்து கழிவுநீர் வெளியேறுவதற்கு ஏற்ற மாற்று வழிகளை அமைப்பது, நாள் ஒன்றிற்கு 110 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட 14 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல்,

ஆற்றின் கரையில் மக்களின் மனம் கவரும் வகையில் நான்கு பூங்காக்கள் அமைத்தல் மற்றும் நதிக்கரைகளில் தாவரங்கள் நடவு செய்து பசுமைப் பரப்பினை அதிகரிப்பது போன்ற சிறப்பு அம்சங்கள் கொண்ட இத்திட்டம் விரைவில் தொடங்கப்பட்டு 30 மாத காலகட்டத்தில் பணிகள் நிறைவு செய்யப்படும். சைதாப்பேட்டை முதல் திரு.வி.க. பாலம் வரையிலான பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு 15 மாதங்களுக்குள்ளாகவே இப்பணிகள் முடிக்கப்படும்.

## 9. தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (டுபிட்கோ)

தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO), நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி அளிப்பதற்காகவும், உட்கட்டமைப்பு திட்டங்களுக்காக நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழிகாட்டுதலை வழங்குவதற்காகவும், தமிழ்நாடு அரசால் 1990ம் வருடம், மார்ச் மாதம் 20ம் தேதி 1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டது.

### 9.1 திட்ட இயக்குநரகம் / திட்ட முகமை

டுபிட்கோ நிறுவனம் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்களுக்கு திட்ட இயக்குநரகமாகவும் / திட்ட முகமையுமாகவும் செயல்படுகிறது. டுபிட்கோ நிறுவனம் கீழ்க்காணும் திட்டங்களை செயல்படுத்தும் திட்ட இயக்குநரகமாகவும் / திட்ட முகமையுமாகவும் உள்ளது.

1. சீர்மிகு நகரத்திட்டம் (Smart Cities Mission)
2. அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் (Atal Mission for Rejuvenation and Urban Transformation)
3. அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் 2.0 (Atal Mission for Rejuvenation and Urban Transformation 2.0)
4. கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் (Kalaignar Nagarpura Mempattu Thittam)
5. சிங்காரச் சென்னை 2.0 (Singara Chennai 2.0)
6. நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (Nagarpura Salaigal Mempattu Thittam)

**9.2 நிதி மேலாளர்**

மேலும், டுபிட்கோ நிறுவனம் கீழ்க்காணும் திட்ட நிதியை நிர்வகிக்கிறது

1. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (Urban

Infrastructure Development Scheme for Small and Medium Towns) – சுழற்சி நிதி

2. மாநில நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (State Urban Infrastructure Development Fund)

**9.3 அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் (AMRUT)**

ஒன்றிய அரசு, அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டத்தை (AMRUT) ஜூன் 2015 இல் தொடங்கியது. இத்திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் முக்கிய திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

(அ) குடிநீர் வசதி

(ஆ) கழிவுநீர் வசதி மற்றும் கழிவு கசடு மேம்பாடு

(இ) மழைநீர் வடிகால்

(ஈ) பசுமை பகுதிகளை உருவாக்குதல் மற்றும் தரம் உயர்த்துதல், குழந்தைகளுக்கான பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கு மையங்கள் உருவாக்குதல்

(உ) நடைபாதைகள், வாகனம் சாராத போக்குவரத்து மற்றும் பொதுப் போக்குவரத்து, மற்றும் வாகன நிறுத்துமிடம்

இத்திட்டம் 31, மார்ச் 2024ல் நிறைவுற்றதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் அம்ரூத் திட்டங்களை செயல்படுத்த ஒன்றிய அரசு கீழ்க்காணும் 28 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை 2015ஆம் ஆண்டில் தேர்ந்தெடுத்தது.

**அட்டவணை 9.1**

| வ.எண். | உள்ளாட்சியின் பெயர் | வ.எண் | உள்ளாட்சியின் பெயர் |
|---|---|---|---|
| 1 | பெருநகர சென்னை மாநகராட்சி | 15 | ஆவடி மாநகராட்சி |
| 2 | கோயம்புத்தூர் மாநகராட்சி | 16 | பல்லவபுரம் நகராட்சி |
| 3 | மதுரை மாநகராட்சி | 17 | தாம்பரம் மாநகராட்சி |
| 4 | திருச்சி மாநகராட்சி | 18 | கடலூரர் மாநகராட்சி |
| 5 | சேலம் மாநகராட்சி | 19 | கும்பகோணம் மாநகராட்சி |
| 6 | திருநெல்வேலி மாநகராட்சி | 20 | காஞ்சிபுரம் மாநகராட்சி |
| 7 | திருப்பூர் மாநகராட்சி | 21 | திருவண்ணாமலை நகராட்சி |
| 8 | தூத்துக்குடி மாநகராட்சி | 22 | புதுக்கோட்டை நகராட்சி |
| 9 | தஞ்சாவூர் மாநகராட்சி | 23 | காரைக்குடி நகராட்சி |

| | | | |
|---|---|---|---|
| 10 | ஈரோடு மாநகராட்சி | 24 | நாகப்பட்டினம் நகராட்சி |
| 11 | வேலூர் மாநகராட்சி | 25 | ஆம்பூர் நகராட்சி |
| 12 | திண்டுக்கல் மாநகராட்சி | 26 | இராஜபாளையம் நகராட்சி |
| 13 | நாகர்கோவில் மாநகராட்சி | 27 | இராமேஸ்வரம் நகராட்சி |
| 14 | ஓசூர் மாநகராட்சி | 28 | வேளாங்கன்னி பேரூராட்சி |

## நிதிக்கூறு

'அம்ரூத்' திட்டங்களை செயல்படுத்துவதற்கான ஒன்றிய / மாநில அரசுகளின் மானியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் நிதி பங்கு விவரம் பின்வருமாறு

**அட்டவணை 9.2**

| வ. எண். | மக்கள் தொகை | ஒன்றிய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு |
|---|---|---|---|---|
| 1 | 10 இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்ட நகரங்கள் | 33.33 % | 20 % | 46.67 % |
| 2 | 10 இலட்சத்திற்கு கீழ் மக்கள் தொகை கொண்ட நகரங்கள் | 50 % | 20 % | 30 % |
| 3 | பசுமை பகுதி அமைத்தல் (அனைத்து அம்ரூத் நகரங்கள்) | 50 % | 20 % | 30 % |

### 9.3.1 அம்ருத் திட்டத்தின் மாநில ஆண்டு செயல் திட்டம் (I, II, III) பற்றிய விவரம்

'அம்ருத்' திட்டத்தின் மாநில ஆண்டு செயல் திட்டங்களின் (I,II,III) அடிப்படையில், தமிழ்நாட்டிலுள்ள 28 அம்ருத் நகரங்களில் இத்திட்டப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. அம்ருத் திட்டத்தின் கீழ் ரூ.11,441.42 கோடி மதிப்பீட்டில் 445 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு

**அட்டவணை 9.3**

**(ரூபாய் கோடியில்)**

| மாநில ஆண்டு செயல் திட்டம் | ஒப்புதல்அளிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை | ஒப்புதல்அளிக்கப்பட்ட மதிப்பீடு | ஒன்றிய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு |
|---|---|---|---|---|---|
| மாநில ஆண்டு செயல்திட்டம் I | 111 | 3,245.51 | 1,355.29 | 649.10 | 1,241.12 |
| மாநில ஆண்டு செயல்திட்டம் II | 171 | 3,700.45 | 1,531.47 | 740.09 | 1,428.89 |
| மாநில ஆண்டு செயல்திட்டம் III | 163 | 4,495.46 | 1,854.39 | 899.08 | 1,741.99 |
| **மொத்தம்** | **445** | **11,441.42** | **4,741.15** | **2,288.27** | **4,412.00** |

எடுத்துக்கொள்ளப்பட்ட 445 திட்டங்களில், ரூ.6,522 கோடி மதிப்பிலான 431 திட்டங்கள் நிறைவுற்றுள்ளன. ரூ.4,919.42 கோடி மதிப்பிலான 14 திட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின்படி பல்வேறு செயலாக்க நிலையில் உள்ளன.

**அட்டவணை 9.4**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூபாய் கோடி) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி – குடிநீர் வழங்கல் திட்டம் 24x7 | 506.04 |
| 2 | மதுரை மாநகராட்சி – லோயர் கேம்ப் முல்லை பெரியார் ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கல் தனித் திட்டம். | 1,020.00 |
| 3 | திருநெல்வேலி மாநகராட்சி பாதாளச் சாக்கடை திட்டம் கட்டம் – II | 289.01 |
| 4 | திருநெல்வேலி மாநகராட்சி பாதாளச் சாக்கடை திட்டம் – கட்டம் –III | 381.86 |
| 5 | சென்னையில் – மணலி, சின்ன சேக்காடு, காரம்பாக்கம் மற்றும் மணப்பாக்கம் ஆகிய பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த பாதாளச் சாக்கடைத் திட்டம் | 223.00 |

| | | |
|---|---|---|
| 6 | இராமேஸ்வரம் நகராட்சி பாதாளச் சாக்கடை திட்டம் | 40.34 |
| 7 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பாதாளச் சாக்கடை திட்டம் – கட்டம் II | 344.00 |
| 8 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பாதாளச் சாக்கடை திட்டம் – கட்டம் III | 264.12 |
| 9 | வேலூர் மாநகராட்சி பாதாளச் சாக்கடை திட்டம் கட்டம் – II | 343.69 |
| 10 | வேலூர் மாநகராட்சி பாதாளச் சாக்கடை திட்டம் கட்டம் – III | 248.26 |
| 11 | சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் – வளசரவாக்கம் குடிநீர் திட்டம் | 67.74 |
| 12 | திருப்பூர் மாநகராட்சி பாதாளச் சாக்கடை திட்டம் | 525.92 |
| 13 | கோயம்புத்தூர் மாநகராட்சி பாதாளச் சாக்கடை திட்டம் | 442.00 |
| 14 | நாகர்கோவில் மாநகராட்சி குடிநீர் வழங்கல் திட்டம் | 223.44 |

## 9.4 அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் 2.0

அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் 2.0 ஒன்றிய அரசால் 01.10.2021 அன்று தொடங்கப்பட்டது.

தமிழ்நாட்டிலுள்ள 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகள் அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ் திட்ட செயலாக்கத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

அம்ருத் நகரங்களில், நகரம் முழுவதும் ஒருங்கிணைந்த குழாய் வழியாக குடிநீர் வழங்குவதும் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதும் இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகும். நீர்நிலைகளை (நகர்ப்புர ஈரநிலங்கள் உட்பட) புத்துயிரூட்டுவது மட்டுமன்றி, பசுமை வெளிகளை உருவாக்குவதையும் இத்திட்டம் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 9.4.1 திட்ட நிதி ஒதுக்கீடு

பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒன்றிய அரசின் நிதியுதவி மற்றும் மாநில / நகர்ப்புர உள்ளாட்சிகளின் பங்கு விவரம் பின்வருமாறு

**அட்டவணை 9.5**

| வ. எண். | மக்கள் தொகை | ஒன்றிய அரசின் பங்கு – மானியம் | மாநில அரசின் பங்கு – மானியம் | உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு |
|---|---|---|---|---|
| 1 | 10 இலட்சத்திற்கும் மேல் மக்கள் தொகை கொண்ட நகரங்கள் | 25 % | 30% | 45% |
| 2 | 1 இலட்சத்திற்கும் மேல் மற்றும் 10 இலட்சத்திற்கும் கீழ் மக்கள் தொகை கொண்ட நகரங்கள் | 33% | 30% | 47% |
| 3 | 1 இலட்சத்திற்கும் குறைவாக மக்கள் தொகை கொண்ட நகரங்கள் | 50 % | 30% | 20% |

இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடமிருந்து ரூ.4,942 கோடி நிதியுதவி பெறும். இத்திட்டத்தின் கீழ் மூன்று கட்டங்களாக மொத்தம் ரூ.14,039.49 கோடி மதிப்பீட்டில் 1,270 திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. விவரம் பின்வருமாறு

**அட்டவணை 9.6**

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண். | திட்டங்கள் | எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 1 | குடிநீர் வழங்கல் | 201 | 7,376.79 |
| 2 | பாதாள சாக்கடைத் திட்டம் | 30 | 6,225.28 |
| 3 | நீர்நிலைகள் மேம்பாடு | 474 | 274.36 |
| 4 | பசுமை வெளி மேம்பாடு | 565 | 163.06 |
| | மொத்தம் | **1270** | **14,039.49** |

ஒப்பளிக்கப்பட்ட 1,270 திட்டங்களில், ரூ.203.41 கோடி மதிப்பிலான 469 திட்டங்கள் நிறைவுற்றுள்ளன, ரூ.9,762.91 கோடி மதிப்பிலான 615 திட்டங்கள் செயல்பாட்டிலும், ஏனைய திட்டங்கள் பல்வேறு நிலைகளிலும் முன்னேற்றத்தில் உள்ளன.

## 9.5 சீர்மிகு நகரத்திட்டம் (Smart Cities Mission)

சீர்மிகு நகரங்கள் திட்டத்தினை ஒன்றிய அரசு 2015ஆம் ஆண்டு தொடங்கியது. இத்திட்டத்திற்காக தமிழ்நாட்டிலிருந்து சென்னை, கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர், சேலம், வேலூர், திருப்பூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் ஈரோடு ஆகிய 11 நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ஒன்றிய அரசு தலா ரூ. 500 கோடி, மாநில அரசு தலா ரூ.500 கோடி என ஒவ்வொரு நகரத்திற்கும் மொத்தம் ரூ. 1,000 கோடி நிதி அளிக்கப்படுகிறது.

மாநில அளவிலான உயர்நிலை வழிகாட்டுதல் குழு 11 சீர்மிகு நகரங்களில் 731 திட்டங்களுக்கு அனுமதி அளித்துள்ளது. ரூ.10,711.04 கோடி மதிப்பிலான 731 திட்டங்களில் இதுவரை ரூ.9,052.53 கோடி மதிப்பிலான 693 திட்டங்கள் நிறைவுற்றுள்ளன. ரூ.1,658.51 கோடி மதிப்பிலான மற்ற 38 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன. திட்டங்களின் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 9.7**

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண். | சீர்மிகு நகரத்தின் பெயர் | திட்டங்களின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 1 | சென்னை | 49 | 1052.56 |
| 2 | கோயம்புத்தூர் | 54 | 956.52 |
| 3 | மதுரை | 16 | 983.90 |
| 4 | தஞ்சாவூர் | 102 | 963.82 |
| 5 | சேலம் | 103 | 965.00 |
| 6 | வேலூர் | 52 | 963.40 |
| 7 | திருப்பூர் | 28 | 965.00 |
| 8 | திருநெல்வேலி | 81 | 965.00 |
| 9 | தூத்துக்குடி | 75 | 965.67 |
| 10 | திருச்சி | 83 | 965.17 |
| 11 | ஈரோடு | 88 | 965.00 |
| | மொத்தம் | 731 | 10711.04 |

சீர்மிகு நகரத்திட்டம் 30.06.2024ல் முடிவடைவதாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.

## 9.6 கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம்

அரசு, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் (பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக) அடிப்படை வசதி மேம்பாடு திட்டங்களில் ஏற்படும் நிதிப் பற்றாக்குறை இடைவெளியை போக்க "கலைஞர் நகர்ப்புரப் மேம்பாட்டு திட்டத்தினை (Kalaignar Nagarpura Mempattu Thittam)" 2021 ஆம் ஆண்டு தொடங்கியது.

அரசு 2021ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் ரூ.1,000 கோடி நிதியுதவி அளிக்கிறது. 100% வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள், கழிவுநீர் இணைப்புகள், சுகாதாரம், உட்புறச் சாலைகள், தெருவிளக்குகள், சுகாதாரம், மயானங்களை நவீனமயமாக்குதல் மற்றும் பிற சமூக உட்கட்டமைப்புகளை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், இத்திட்டம் பின்தங்கிய பகுதிகள், குடிசைப்பகுதிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள உட்கட்டமைப்பு இடைவெளிகளை நிரப்பும் நோக்கம் கொண்டது. மாணவர்கள், வேலை தேடுபவர்களுக்கு உதவும் வகையில், கணினி மயமாக்கப்பட்ட நவீன நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள் உருவாக்குவதையும் இத்திட்டம் வலியுறுத்துகிறது.

மேலும், நகர்ப்புர உட்கட்டமைப்பு திட்டங்களான பேருந்து நிலைய மேம்பாடு, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களின் மேம்பாடு, சந்தைகளின்

கட்டுமானம், நீர்நிலைகளுக்கு புத்துயிர் அளித்தல், திடக்கழிவுகளை அகற்றுவதற்கான மின்–வாகனங்கள் வாங்குதல் மற்றும் பொதுக் கழிப்பறைகள் கட்டுதல் போன்றவற்றின் மீது இத்திட்டம் கவனம் செலுத்துகிறது.

அரசு, இத்திட்டத்தின் கீழ், மார்ச் 2023 வரை, ரூ.2,400 கோடி நிதியை விடுவித்துள்ளது.

**நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்காக ஒப்பளிக்கப்பட்ட திட்டங்கள்**

நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின்கீழ் இயங்கும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2021–2022 முதல் 2023–24 வரையிலான நிதியாண்டுகளில், மொத்தம் ரூ.1,527 கோடி மதிப்பிலான 1,532 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 9.8** **(ரூபாய் கோடியில்)**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு (2021–24) |
|---|---|---|---|
| 1 | குடிநீர் வழங்கல் | 25 | 222.13 |
| 2 | பூங்காக்கள் | 331 | 104.61 |
| 3 | மயான மேம்பாடு | 83 | 107.59 |
| 4 | அறிவுசார் மையம் | 70 | 131.55 |
| 5 | ஏரிகள் / நீர்நிலை மேம்பாடு | 254 | 152.9 |
| 6 | சாலைகள் | 643 | 461.38 |
| 7 | பேருந்து நிலையங்கள் | 37 | 88.41 |
| 8 | தினச்சந்தைகள் | 61 | 199.92 |
| 9 | வாரச் சந்தை | 20 | 40.03 |
| 10 | மீன் அங்காடி | 6 | 6.09 |
| 11 | சமுதாயக்கூடம் | 1 | 11.34 |
| 12 | வாகன நிறுத்துமிடம் | 1 | 1.05 |
| | மொத்தம் | **1,532** | **1,527** |

ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள 1,532 திட்டங்களில், ரூ.691.95 கோடி மதிப்பிலான 995 திட்டங்கள் முடிவுற்றுள்ளன மற்றும் பிற திட்டங்கள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**பேரூராட்சிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட திட்டங்கள்**

பேரூராட்சிகளுக்கு 2021-22 முதல் 2023-24 வரையிலான நிதியாண்டுகளில், மொத்தம் ரூ.1,445.24 கோடி (கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டத்தின் பங்கு ரூ.1,445.24 கோடி) மதிப்பிலான 2,154 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 9.9** **(ரூபாய் கோடியில்)**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட தொகை (2021-24) |
|---|---|---|---|
| 1 | அறிவுசார் மையம் | 13 | 20.44 |
| 2 | மயான மேம்பாடு | 77 | 113.42 |
| 3 | பேருந்து நிலைய மேம்பாடு | 28 | 54.6 |
| 4 | வாரச் சந்தை | 37 | 75.53 |

| | | | |
|---|---|---|---|
| 5 | தினசரி சந்தை | 1 | 2.02 |
| 6 | மீன் அங்காடி | 1 | 0.29 |
| 7 | சாலைகள் | 1127 | 584.76 |
| 8 | ஏரி / நீர்நிலைகள் | 250 | 73.04 |
| 9 | பூங்காக்கள் | 360 | 55.77 |
| 10 | குடிநீர் வழங்கல் | 148 | 303.25 |
| 11 | சமுதாயக் கூடம் | 2 | 2.45 |
| 12 | உலோகத்திலான விபத்து தடுப்புப் பட்டை | 33 | 5.06 |
| 13 | மின்கல வாகனங்கள் | 3 | 65.17 |
| 14 | மழைநீர் வடிகால் மற்றும் தடுப்புச் சுவர் | 74 | 89.44 |
| | **மொத்தம்** | **2,154** | **1,445.24** |

ஒப்பளிக்கப்பட்டுள்ள 2,154 திட்ட பணிகளில், ரூ.635.89 கோடி மதிப்பிலான 1,334 திட்டங்கள் நிறைவுற்றுள்ளன, ரூ.771.85 கோடி மதிப்பிலான 674 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன. பிற திட்டங்கள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

## 9.7 சிங்காரச் சென்னை 2.0

சென்னை மாநகரத்தை சிறப்பாக வாழக்கூடிய நகரமாக மாற்றும் நோக்கத்துடன் "சிங்கார சென்னை 2.0" எனும் திட்டத்தை 2021 ஆம் ஆண்டு அரசு தொடங்கியது, இத்திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் (CMWSSB) பல்வேறு உட்கட்டமைப்புப் பணிகளை செயல்படுத்தி வருகின்றன. அரசு 2021–22ஆம் நிதியாண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ரூ.500 கோடி நிதி அளித்து வருகிறது.

2021–22ஆம் நிதியாண்டு முதல் 2023–24ஆம் நிதியாண்டு வரை ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களின் விவரம் பின்வருமாறு:

## அட்டவணை 9.10

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | சிங்கார சென்னை 2.0 பங்கு (ரூ கோடியில்) |
|---|---|---|---|
| 1 | சாலைகள் – பேருந்து வழித்தடம் | 209 | 89.66 |
| 2 | உட்புறசாலைகள் | 414 | 29.69 |
| 3 | விலங்கு பிறப்பு கட்டுப்பாட்டு மையம் | 5 | 20.53 |
| 4 | பூங்காக்கள் | 138 | 63.31 |
| 5 | ஸ்பாஞ்ச் பூங்காக்கள் | 57 | 7.67 |
| 6 | விளையாட்டு மைதான மேம்பாடு | 105 | 43.12 |
| 7 | மேம்பாலங்களை அழகுபடுத்துதல் | 11 | 10.02 |
| 8 | மழைநீர் வடிகால் | 22 | 566.68 |
| 9 | மயான மேம்பாடு | 53 | 52.56 |
| 10 | கடற்கரையில் தனி வழித்தடம் | 2 | 2.13 |
| 11 | பள்ளிக்கு தேவையான பொருள்கள் | 1 | 4.15 |
| 12 | பள்ளிக்கூட கட்டடங்கள் | 75 | 168.40 |
| 13 | விக்டோரியா வளாகத்தை அழகுபடுத்துதல் | 1 | 32.62 |
| 14 | நீர்நிலை மேம்பாடு | 37 | 25.63 |
| 15 | மீன் அங்காடி | 1 | 1.35 |
| 16 | இறைச்சிக் கூடம் | 1 | 1.43 |
| 17 | செயற்கை நீருற்று | 26 | 1.29 |

| | | | |
|---|---|---|---|
| 18 | நிறம்மாறும் திறனுடைய வண்ண மின்விளக்குகளால் அலங்கரித்தல் | 1 | 1.81 |
| 19 | தெரு பெயர் பலகை | 1 | 8.43 |
| 20 | சமுதாயக் கூடம் | 1 | 13.47 |
| 21 | சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் – குடிநீர் திட்டம் | 6 | 174.91 |
| 22 | சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் – பாதாளச் சாக்கடை திட்டம் | 11 | 173.64 |
| | **மொத்தம்** | **1,178** | **1,492.50** |

இத்திட்டத்தின்கீழ், 2021–22ஆம் நிதியாண்டு முதல் 2023–2024ஆம் நிதியாண்டு வரை ரூ.1,492.50 கோடி மதிப்பிலான 1,178 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. ஒப்புதல் அளிக்கப்பட்ட 1,178 திட்டங்களில் ரூ.660.89 கோடி மதிப்பிலான 898 திட்டங்கள் நிறைவுற்றுள்ளன, 280 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன.

## 9.8 நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்டம்

நகர்ப்புரங்களில் பொருளாதார நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கும் மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்கும் முறையான சாலை உட்கட்டமைப்பு முக்கியமானது. பாதாளச் சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் வழங்கல் திட்டங்களின் செயலாக்கத்தினால் பல மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் சாலைகள் மோசமாக சேதமடைந்திருந்தன. பல உள்ளாட்சி அமைப்புகளில் மண் சாலைகள் உள்ளன, இவை அனைத்தும் அனைத்து கால நிலைகளையும் எதிர்கொள்ளத்தக்க தரமான சாலைகளாக மேம்படுத்தப்பட வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 19.10.2022 அன்று சட்டப் பேரவையில் பேரவை விதி எண் 110ன் கீழ், நகர்ப்புர உள்ளாட்சிகளின் சேதமடைந்த சாலைகளை மேம்படுத்த அரசு அடுத்த நான்கு ஆண்டுகளில் (2022–23ஆம் நிதியாண்டு முதல்)

ரூ.2,200 கோடி மானியமாக வழங்கும் என அறிவித்தார்கள்.

இதனடிப்படையில், நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்டத்தை (NSMT) செயல்படுத்த ரூ.2,200 கோடியை அனுமதித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண்.423 நாள் 19.11.2022ல் ஆணைகள் வெளியிடப்பட்டன. மேலும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஒப்புதல் வழங்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண்.19, நாள் 13.02.2023 ல் வெளியிடப்பட்டன. 2022–23ஆம் நிதியாண்டில், 8,501 சேதமடைந்த சாலை சீரமைப்புப் பணிகள் ரூ.655 கோடி செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 6,247 சாலைப் பணிகள் நிறைவுற்றுள்ளன, 2,254 சாலைப் பணிகள் செயலாக்கத்தில் உள்ளன. 2023–24ஆம் நிதியாண்டில், 11,265 சாலைப் பணிகள் ரூ.871.88 கோடி செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டு,

அதில் 5,982 சாலைப் பணிகள் நிறைவுற்றுள்ளன மற்றும் 5,303 சாலைப் பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

### 9.9 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் – சுழற்சி நிதி (UIDSSMT – Revolving Fund)

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி, டுபிட்கோ நிறுவனம் சுழற்சி நிதியை உருவாக்கி தகுதியான திட்டங்களுக்கு வட்டியில்லா கடன்களை வழங்குகிறது. 99 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் வீடுகளுக்கு குடிநீர் மற்றும் பாதாளச்சாக்கடை இணைப்பு அளித்தல் போன்ற திட்டங்களுக்கு வட்டியில்லா கடன் வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள விவரம் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 9.11** (ரூபாய் கோடியில்)

| வ. எண். | பணிகள் | நகராட்சிகள் / மாநகராட்சிகளின் எண்ணிக்கை | UIDSSMT சுழற்சி நிதியில் ஒப்புதல் வழங்கப்பட்டவை |
|---|---|---|---|
| 1 | குடிநீர் வழங்கல் | 73 | 169.58 |
| 2 | பாதாளச்சாக்கடை திட்டம் | 26 | 193.22 |
| | மொத்தம் | 99 | 362.80 |

இத்திட்டங்கள் பல்வேறு நிலையில் செயலாக்கத்தில் உள்ளன.

### 9.10 மாநில நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (SUIDF)

பெருநகர திட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ப, நிலையான உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக டுபிட்கோ நிறுவனம் ஒரு சுழற்சி நிதியை உருவாக்கியுள்ளது. பின்னர், இச்சுழற்சி நிதி, பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (MIDF) என மறுபெயரிடப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை மொத்தம் ரூ.2,391.00 கோடி உருவாக்கப்பட்டுள்ளது.

அரசு, "பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியை" (MIDF) "மாநில நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டு

நிதி" என பெயர் மாற்றம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. இந்த மாற்றத்தின்மூலம், அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளும் தங்களின் உட்கட்டமைப்புத் தேவைகளை நிறைவேற்ற குறைந்த வட்டியில் கடன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாநில நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் பின்வரும் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 9.12** **(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திருச்சிராப்பள்ளி புதிய பேருந்து நிலையம் | 159.98 |
| 2 | சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மூலம் மடிப்பாக்கம் பாதாளச் சாக்கடைத் திட்டம் | 115.60 |
| 3 | 8 மாநகராட்சிகள் மற்றும் 77 நகராட்சிகளில் தெரு விளக்குகளை ஆற்றல்திறன் கொண்ட எல்.இ.டி விளக்குகளாக மாற்றுதல் | 342.85 |

| | | |
|---|---|---|
| 4 | 11 நகராட்சிகளில் புதிய ஆற்றல் திறன் கொண்ட எல்.இ.டி விளக்குகள் பொருத்துதல் | 8.00 |
| 5 | பேரூராட்சிகளில் (439 பேரூராட்சிகள்) தெரு விளக்குகளை ஆற்றல் திறன் கொண்ட எல்.இ.டி விளக்குகளாக மாற்றுதல் | 155.56 |
| 6 | 93 பேரூராட்சிகளில் அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் பணிகளுக்கு தேவையான உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு | 153.17 |
| 7 | 18 மாநகராட்சிகள் / நகராட்சிகளில் அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் பணிகளுக்கு தேவையான உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு | 56.39 |
| 8 | கொசஸ்தலை ஆற்றுப் படுகையில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டுதல் | 280.00 |
| 9 | குடிநீர் வழங்கல் மற்றும் பாதாளச் சாக்கடைகளின் உகந்த பயன்பாட்டிற்காக 8 உள்ளாட்சி அமைப்புகளில் பாதாளச் சாக்கடை / குடிநீர் வீட்டு இணைப்பு அளித்தல் | 62.95 |
| 10 | 6 மாநகராட்சிகள் மற்றும் 10 நகராட்சிகளில் தெரு விளக்குகளை ஆற்றல் திறன் கொண்ட எல். இ.டி. விளக்குகளாக மாற்றுதல் | 85.22 |

| | | |
|---|---|---|
| 11 | கோயம்புத்துரர் மாநகராட்சி பகுதியில் புதிதாக விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல் திட்டம் – பில்லுரர் III | 410.61 |
| 12 | 17 பேரூராட்சிகளில் அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்ட குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கான உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு | 153.67 |
| 13 | அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களின் இறுதி தவணைக்கான ஒதுக்கீடு | 216.00 |
| 14 | ஈரோடு மாநகராட்சியில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணி | 15.00 |
| | மொத்தம் | **2,215.00** |

## 9.11 டுபிட்கோ உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டம் (TIFS)

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தன்னாட்சி நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்க டுபிட்கோ உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதி ஆதாரம், டுபிட்கோ நிறுவனத்தின் பங்கு மூலதனம், சேமநிதி, உபரிநிதி மற்றும் வங்கிகளில் இருந்து பெறப்படும் கடன் ஆகியவையாகும். கடனை திரும்ப

செலுத்துவதற்கான அதிகபட்ச கால அவகாசம் 10 ஆண்டுகள் ஆகும். ஒப்பளிக்கப்பட்ட அனைத்து திட்டங்களும் செயல்பாட்டில் உள்ளன.

## 10. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்

திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம், வெகுகாலமாக தமிழ்நாடு அரசிடம், தமது தொழிற்சாலைகளின் அத்தியாவசிய நீர் தேவைக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தர முக்கியமாக, முறைப்படுத்தப்பட்ட நீர் வழங்கல் வசதிகளைக் கோரிவந்தது. இந்த நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு, தமிழ்நாடு அரசு, முந்தைய தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்திற்கு (TACID) ஒரு திருப்பூர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை (TADP) உருவாக்க பணித்தது. அதன்படி, தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகமானது (TACID) ஒரு திருப்பூர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை (TADP) உருவாக்கி, உள்ளாட்சி அமைப்புகளுக்கான குடிநீர் விநியோக திட்டம், திருப்பூர் மற்றும் அதனை சார்ந்த நிறுவனங்களுக்கான நீர் வழங்கல் திட்டம், சுத்திகரிப்பு வசதிகளுடன் கூடிய ஒரு பாதாள சாக்கடைத் திட்டம் ஆகியவற்றை

செயல்படுத்த வகைசெய்தது. இதனை செயலாக்க, ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமானது தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் (TACID), திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் (TEA) மற்றும் உட்கட்டமைப்பு குத்தகை மற்றும் நிதி சேவை நிறுவனம் (IL&FS) இடையே 25.08.1994 அன்று சம பங்கு முதலீடு மற்றும் பல்வேறு பொதுவான விதிமுறைகளுடன் கையெழுத்தானது. இறுதியாக, 1995 ஆம் ஆண்டு புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம் லிமிடெட் (NTADCL), திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் 4 உறுப்பினர்களையும், IL&FS நிறுவனத்தின் 2 உறுப்பினர்களையும் மற்றும் தமிழ்நாடு அரசு சார்பாக ஒரு உறுப்பினரையும் கொண்டு தொடங்கப்பட்டது

நாளொன்றுக்கு 185 MLD நீர் வழங்கல் (சுமார் 250 MLD வரை விரிவுபடுத்தக்கூடிய), மற்றும் 15 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) (சுமார் 30 MLD வரை விரிவுபடுத்தக்கூடிய) ரூ.1,023 கோடி

மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கு தமிழ்நாடு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தை செயல்படுத்த, ஒரு சலுகை ஒப்பந்தமானது 11.02.2000 அன்று தமிழ்நாடு அரசு, திருப்பூர் நகராட்சி (இப்போது மாநகராட்சி) மற்றும் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் இடையே கையெழுத்தானது. இத்திட்டத்திற்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட ரூ.1,023 கோடியானது, ரூ.613.80 கோடி மூத்த கடனாக M/s IDBI தலைமையிலான 19 வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் கூட்டமைப்பு மூலமும், ரூ.86.50 கோடி துணை கடனாக ஏற்பாட்டாளர்கள் மூலமும், ரூ.322.70 கோடி சமபங்குகளாகவும் நிதி திரட்டப்பட்டது

புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகத்தின் சம பங்கு மூலதனம் ரூ.10 கோடி, முதன்முதலில் இந்திய அரசின் சார்பில் 1997–98–ல் TACID மூலமாக நிதியளிக்கப்பட்டது. ரூ.105 கோடி கூட்டு நிதியாக தமிழ்நாடு அரசு (ரூ.55 கோடி) மற்றும் IL&FS

(ரூ.50 கோடி) கூட்டாக IL&FS மற்றும் மாநில அரசின் 54:46 பங்களிப்பில் உருவாக்கப்பட்ட ஒரு சிறப்பு நோக்கு நிறுவனம், தமிழ்நாடு நீர் முதலீட்டுக் கழகம் (TWIC) மூலமாக நிதியளிக்கப்பட்டது. IL&FS நிறுவனம், ஒரு தனியார் பங்களிப்பு முதலீட்டாளரான AIDQUA Holdings Mauritius லிட்., என்ற நிறுவனத்தை 27.89% பங்களிப்பிற்காக ரூ.90.00 கோடி முதலீட்டில் கொண்டுவந்தது. 12.04.2001 அன்று, பங்குதாரர்களுக்கான ஒரு ஒப்பந்தமானது புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தின் நிர்வாக குழுவால் அனுமதிக்கப்பட்டு கையெழுத்தாகி, அதில் சில சிறப்பு அதிகாரங்களை M/s AIDQUA க்கு வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, பங்குதாரர் ஒப்பந்தத்தின் சாரம்சங்களை NTADCLன் அசல் நிறுவன அமைப்பு ஆவண விதிகளுக்கு (Articles of Association) பதிலாக புதிதாக மாற்றி அமைக்கப்பட்டது. இந்த முதலீடுகளைத் தவிர, NTADCLன் பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான

(EPC) குழுவான மஹிந்திரா மூலமாக ரூ.45 கோடி, அரசு சார்ந்த காப்பீடு நிறுவனங்கள் மூலமாக ரூ.45 கோடி மற்றும் IL&FS மூலம் ரூ.32.70 கோடி நேரடியாகப் பெறப்பட்டது.

இத்திட்ட கட்டுமானப் பணிகள் 2002ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு நீர் வழங்கல் சேவை 2006ல் தொடங்கப்பட்டது. இத்திட்டம் மூலம் 38.957 MLD குடிநீர் திருப்பூர் மாநகராட்சிக்கும், 18.26 MLD குடிநீர் 8 வழியோர கிராமங்களுக்கும் மற்றும் 5 பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு உட்பட்ட 600 வழியோர குடியிருப்புகளுக்கும் வழங்கப்படுகின்றது. இத்திட்டம் திருப்பூர் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பல நூற்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய சாயம் மற்றும் செயலாக்க நிறுவனங்களின் நீர் வழங்கல் தேவைகளை பூர்த்தி செய்கிறது. ஒரு பாதாள சாக்கடை கழிவுநீர் அகற்றும் அமைப்பு 15 MLD சுத்திகரிப்பு திறனுடன் கட்டப்பட்டு தற்போது 15,246 வீடுகளில் இருந்து சேகரிக்கப்பட்ட 8 MLD கழிவுநீர்

சுத்திகரிக்கப்படுகிறது. மேலும் திருப்பூர் மாநகராட்சிக்கு உட்பட்ட நகர்ப்புர ஏழை மக்களுக்காக குறைந்த செலவின கழிப்பறை வசதிகள் 31 சுகாதார வளாகங்கள் மூலம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த நீர் வழங்கல் திட்டம் ஒரு குறுக்கு மானிய மாதிரியில், அதாவது, இதன் வணிக அளவிலான வெற்றிகரமான செயல்பாடானது நிறுவனங்களுக்கான நீர் வழங்கலின் வருமானத்தை இணைத்தே உருவாக்கப்பட்டிருந்தது. ஆரம்பகாலத்தில், நிறுவனங்களுக்கான நீர் வழங்கல் மெதுவாக உயர்ந்து கொண்டிருந்தபோதிலும், மதிப்பிடப்பட்ட தேவையான 115 MLD என்ற அளவை 50 MLD என்ற அளவிற்கு மேலாக அடைய முடியவில்லை. குறைந்த அளவிலான நிறுவன நீர் வழங்கல் மற்றும் வருமானம், அதனோடு சேர்ந்த கூடுதலான முதலீட்டு செலவினங்கள், மேல் கூடுதலான கட்டுமான செலவினங்களினாலும் ஆரம்பகாலகட்டத்திலேயே

இந்நிறுவனம் கூடுதலான வருமான இழப்புகளை சந்திக்க நேர்ந்தது.

நிறுவனம் மிகுந்த நட்டங்களை சந்தித்துவந்த வேளையில், அதற்கும் மேலாக, மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் 30.01.2011 அன்று வெளியிட்ட பூஜ்ய திரவ வெளியேற்றல் ஆணை (ZLD), பெரும்பாலான சாயப்பட்டறைகள் மற்றும் வெளுத்தல் நிறுவனங்கள் மூடப்பட காரணமாக அமைந்தது. அது நிறுவனத்தின் வணிகத்தில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியதால் நிறுவனங்களுக்கான நீர் வழங்கல் 9 MLD க்கும் கீழாக குறைந்து, நிறுவனத்தின் நிதிச்சிக்கலை மேலும் அதிகரித்தது. இதனால், இந்நிறுவனம் அதன் கடனை திருப்பி செலுத்தும் சக்தியினை இழந்து அதன் நிகரமதிப்பு சற்றேறக்குறைய முழுவதுமாக துடைத்தெறியப்பட்டது.

இந்த இக்கட்டான நிதிச் சூழல் ஒரு நிறுவன கடன் மறுசீரமைப்பு தொகுப்பின் (Corporate Debt Restructuring Package – CDR) மூலம் 2011–12 இல்

சீரமைக்கப்பட்டது. CDRன் கீழ், பொது கடனீட்டாளர்கள் தங்களது கடனை மறுசீரமைத்து, வட்டி விகிதத்தை 11 சதவீதத்திலிருந்து 9.5 சதவீதமாக குறைத்து, மேலும் 15% வரையிலான கடன் நிலுவைத் தொகையை பங்குகளாக மாற்றியமைத்தார்கள். தமிழ்நாடு அரசு ரூ.150 கோடி பங்கு முதலீடு செய்தும், மேலும் 100 MLD வரையிலான குடிநீரை கூடுதலாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிறுவனத்திடம் கொள்முதல் செய்ய உறுதி அளித்தது. தற்போது, சுமார் 50 MLD நீரானது திருப்பூர் மாநகராட்சி மற்றும் வழியோர கிராமங்களுக்கு கூடுதலாக ரூ. 29.28 /கி.லி விலைக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கான ஆணை, அரசாணை (நிலை) எண்.25, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 16.03.2012–ல் அரசு வெளியிட்டு அதன் மூலம் ரூபாய் 1,042 கோடி நிறுவனத்திற்கு தமிழக அரசால் இதுவரை ஆதரவு அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த CDR தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தின் ஒப்புதல் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தின் ஒப்பிசைவினை பெற்றது. இருந்தபோதிலும், PE பங்குதாரர், M/s AIDQUA இதனை உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து வழக்கு நிலுவையில் உள்ளது.

கடன் மறுசீரமைப்பு நிலையில், தமிழ்நாடு அரசின் நிதி உதவியாலும், உயர்த்தப்பட்ட விலை ஆதரவினாலும் நிறுவனத்தின் நிதி செயல்பாடு விரைவாக மேம்பட்டு 2015–16 நிதியாண்டு முதல் இந்நிறுவனம் இலாபம் ஈட்டத் தொடங்கியது. இன்றைய தேதியில், IL&FS தவிர்த்து இந்நிறுவனமானது இதுவரை ரூ.385.21 கோடி அசலை திருப்பிச் செலுத்தி அதனுடன் சேர்த்து ரூ.1,028.87 கோடி வட்டியும் முழுவதும் செலுத்திவிட்டது. IL&FS நிறுவனமானது USAID கடன் விடுவிப்பை ரூ. 41.23 கோடி குறைவாக விடுவித்ததால் இந்நிறுவனம் IL&FS உடன் தாவாவில் உள்ளது.

குறிப்பிட்ட கால அளவுக்கு முன்னதாகவே கடனை திருப்பிச் செலுத்தியதால், இந்நிறுவனத்தின் நிர்வாகிகள், நீர் வழங்கும் சேவையை 185 MLD-ல் இருந்து 250 MLD-க்கு மேலும் விரிவாக்கம் செய்வதற்கு தேவை மதிப்பீட்டு ஆய்வினை மேற்கொள்கின்றனர். நிர்வாகம் சிறந்த அனுபவத்தை பெற்றுள்ளதாலும், குறுக்கு மானிய திட்டத்தை (Cross Subsidisation Model) செம்மையாக செயல்படுத்தி உள்ளதாலும், எதிர்வரும் காலங்களில் இத்திட்டத்தை உள்ளாட்சி அமைப்பு மற்றும் தொழிற்சாலை நீர் வழங்கல் சேவைகளை விரிவாக்க உள்ளது.

**2022-23ஆம் நிதியாண்டின் செயல்திறன் (தணிக்கை செய்யப்படவில்லை)**

2021-22 இல் ரூ.198.09 கோடியாக இருந்த நிறுவனத்தின் விற்றுமுதல் 2022-23ஆம் ஆண்டில் ரூ.245.37 கோடியாக உயர்ந்துள்ளது. இதனால், நிறுவனத்தின் 2022-2023ஆம் ஆண்டில் நிகர லாபம்

ரூபாய் 100.91 கோடியாக உயர்ந்தும் ஒட்டுமொத்த இழப்பு ரூபாய் 138.98 கோடியாகவும் உள்ளது.

**சமூக பொறுப்புணர்வு பணிகள்**

புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் 2023–24 ஆம் நிதியாண்டில் தங்களுடைய சமூகப் பொறுப்புணர்வு (CSR) செயல்களின் பகுதியாக, ரூ.1.65 கோடியை மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்திடம் வெள்ள நிவாரண நிதியாக வழங்கியுள்ளது.

## 11. தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம்

தமிழ்நாடு அரசு மற்றும் உட்கட்டமைப்பு குத்தகை மற்றும் நிதி சேவைகள் லிமிடெட் (Infrastructure Leasing and Financial Services Ltd) ஆகியவை இணைந்து, தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் (TWIC), என்ற ஒரு முதலீட்டு நிறுவனத்தை ஒரு சிறப்பு குறிக்கோள் நிறுவனமாக (Special Purpose Vehicle), நிறுவன சட்டம் 1956ன் கீழ் 2000–ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இந்நிறுவனம், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகத்தினை (NTADCL) தோற்றுவித்து, தண்ணீர் துறையில், முதல் பொது மற்றும் தனியார் கூட்டு பங்களிப்புடன் (PPP) புதிய திருப்பூர் பகுதி தண்ணீர் திட்டத்தை நாள் ஒன்றுக்கு 185 மில்லியன் லிட்டர் (MLD) திறனில் ரூ.1,023 கோடியில் செயல்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், தண்ணீர் மற்றும் கழிவுநீர் வடிகால் அமைப்புகள், மறுசுழற்சி, கடல்நீரைக் குடிநீராக்குதல், நதி மறுசீரமைப்பு,

தொழிற்கூட கழிவுநீர் மேலாண்மை ஆகிய பல்வேறு அம்சங்கள் பற்றிய செயல்திட்டங்களை வளர்த்தெடுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் பணிகளில் நிபுணத்துவம் பெற்று முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. மேலும், கருத்தாக்கம் முதல் நடைமுறைப்படுத்துதல் வரை நிலையான வளர்ச்சி மற்றும் கட்டமைப்புக்கான ஆயுள் சுழற்சி செலவுகளை குறைப்பதற்கான மாதிரியைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், பின்வரும் துறைகளில் ஆலோசனை, திட்ட மேலாண்மை ஆலோசனை, இயக்குதல் மற்றும் பராமரிப்பு சேவைப்பணிகள் ஆகியவற்றை வழங்குகிறது.

1. தண்ணீர் மறு பயன்பாட்டிற்கான குறிக்கோளுடன் நகர்ப்புர குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிகால் அமைப்புகள்
2. கடல்நீரைக் குடிநீராக்குதல்.

3. தொழிற்கூட கழிவுநீர் மேலாண்மை மற்றும் மறு சுழற்சி – பூஜ்ய திரவ வெளியேற்றம் (ZLD) உள்பட.
4. ஏரி மற்றும் ஆறுகளின் மாசுபாட்டைக் குறைத்தல்.
5. திறன் மேம்படுத்துதல் மற்றும் பயிற்சி .

தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், தண்ணீர் மற்றும் கழிவுநீர் பிரிவுகளில் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், ஒப்பந்தப்புள்ளி மேலாண்மை, திட்ட மேலாண்மை மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றுள்ளது.

**11.1 செயல்படுத்தப்பட்டுள்ள முக்கியமான சில திட்டங்கள்**

தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாடு முழுவதும் பின்வரும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதிலும் நிர்வகித்தலிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளது:

**11.1.1. நகர்ப்புர தண்ணீர், பயன்படுத்திய தண்ணீர் மற்றும் மறு பயன்பாடு**

இந்நிறுவனம், தமிழ்நாடு முழுவதிலும் பல்வேறு மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுடன் இணைந்து நீர் விநியோக வலையமைப்பு (water supply network), பாதாள சாக்கடை கழிவுநீர் திட்டங்கள் (UGSS), கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) மற்றும் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு மற்றும் எதிர்மறை சவ்வூடுபரவல் (TTRO) போன்றவற்றை நிறுவுவதில் அவர்களுக்கு உதவுகிறது. குறிப்பிடத்தக்க நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் பின்வருமாறு;

1. அம்ருத் மற்றும் சீர்மிகு நகரம் (Smart city) ஆகிய திட்டங்களின் கீழ் தமிழ்நாட்டில் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு விரிவான தண்ணீர் வழங்கல் மற்றும் மாவட்ட அளவீட்டுப் பகுதி ஆகியவற்றுக்கான ஆலோசகர்.

2. பாதாள சாக்கடை அமைப்பு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான ஆலோசகர்: தூத்துக்குடி மற்றும் விசாகப்பட்டினம் மாநகராட்சிகள், பம்மல் மற்றும் அனகாபுத்தூர் நகராட்சிகள்.
3. தமிழ்நாடு மாநிலத்தில் தண்ணீர் மறுபயன்பாட்டு தொகுப்புக்கான தேவையை ஆய்வு செய்து தயாரித்தல் மற்றும் தண்ணீர் மறு பயன்பாடு கொள்கை உருவாக்குவதற்கான ஆலோசகர்.
4. அம்ரூத் / சீர்மிகு நகரம் ஆகிய திட்டங்களின் கீழ் குடிநீர் வழங்கல் மற்றும் பாதாள சாக்கடை திட்டத்திற்கான திட்ட மேலாண்மை முகமை (PMA): தஞ்சாவூர், கும்பகோணம், தூத்துக்குடி.
5. சென்னை கொடுங்கையூர் மற்றும் கோயம்பேடு பகுதியில், 45 MLD திறன் கொண்ட பயன்படுத்தப்பட்ட நீரை மறு பயன்பாட்டிற்காக எதிர்மறை சவ்வூடு பரவல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் (TTRO)

அமைப்பதற்கான திட்ட மேலாண்மை ஆலோசனை பணி.

6. சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், தூத்துக்குடி மாநகராட்சியில் 28 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை நடைமுறைப்படுத்துதல் பற்றிய திட்ட மேலாண்மை ஆலோசனை பணி.
7. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்தின் (TANGEDCO) தூத்துக்குடி அனல் மின்நிலையத்திற்கான, 5 MLD திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் பணி.
8. SIPCOT நிறுவனத்திற்கு சுத்திகரிக்கப்பட்ட நீரை பெறுவதற்கும், அதனை மீண்டும் பயன்படுத்துவதற்கும் 20 MLD திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் (TTRO) அமைக்க இரண்டு கட்டங்களாக (தலா 10 MLD திறன்) ஓசூரில் கெலவரப்பள்ளி அணை நீரை பயன்படுத்தி

அமைக்க விரிவான திட்ட அறிக்கை மற்றும் ஒப்பந்த ஆவணங்கள் தயாரிக்க ஆலோசனை பணி.

9. ஆவடி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளுக்கு தற்போதுள்ள நீர் விநியோக முறையை மேம்படுத்துவதற்கும் மற்றும் சேர்க்கப்படாத பகுதிகளுக்கு நீர் விநியோகம் செய்வதற்கும், விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஆலோசனை பணி.

10. தூத்துக்குடி, திருநெல்வேலி, வேலூர் மற்றும் திண்டுக்கல் மாநகராட்சிகளில், முன்மாதிரியான நீர் மண்டல அமைப்பின் மூலம் 24x7 குடிநீர் விநியோக முறையின் வடிவமைப்பிற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஆலோசனை பணி.

11. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் நான்காம் கட்டமாக, பாதாளச் சாக்கடை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஆலோசனைப் பணி.

12. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் 100 MLD திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஆலோசனைப் பணி.
13. கோயம்புத்தூர் டைடல் பூங்காவில், 400 KLD திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான திட்ட அறிக்கை மற்றும் நிபந்தனை மதிப்பீடு தயாரிப்பதற்கான ஆலோசனைப் பணி.
14. திண்டிவனம், மணப்பாறை, பனப்பாக்கம், ராணிப்பேட்டை, இலுப்பைக்குடி, அல்லிகுளம், இ.குமாரலிங்கபுரம் & வேம்பூர் ஆகிய இடங்களில் உத்தேசிக்கப்பட்ட சிப்காட் தொழிற்பேட்டைக்கான மறுசுழற்சி செய்யப்பட்ட நீர் தேவையைப் பூர்த்தி செய்ய முன்மொழியப்பட்ட கிரிட் / ஆதாரத்திலிருந்து மறுசுழற்சி செய்யப்பட்ட நீரை மறுசுழற்சி செய்வதற்கான பொருத்தமான அமைப்புகளை கண்டறிவதற்கான சாத்தியக்கூறு

ஆய்வு அறிக்கை தயாரிப்பதற்கான ஆலோசனைப் பணி.

15. இந்தோ – ஜெர்மானிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தின் (IGSTC) மானியம் மூலமான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டம்: "இந்தியா மற்றும் ஜெர்மனியின் வருங்கால நகரங்களுக்கான, திறன்மிகு, நம்பகமான குடிநீர் மற்றும் பயன்படுத்தப்பட்ட நீர் கட்டமைப்பு வசதிகள்.

**11.1.2. பூஜ்ய திரவ வெளியேற்றம்** (ZLD) **வகையில் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்**

1. திருப்பூரில் 3 MLD முதல் 11 MLD வரை திறன் கொண்ட பூஜ்ய திரவ வெளியேற்ற அடிப்படையில் 9 ஜவுளி பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ரூ.540 கோடி மதிப்பில் மேம்படுத்துவதற்கான திட்ட மேலாண்மை முகமை சேவைப்பணிகள்.
2. தமிழ்நாடு அரசின் வட்டி இல்லா கடன் வாயிலாக, எட்டு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில், பூஜ்ய திரவ வெளியேற்ற அமைப்பை

மேம்படுத்துவதற்காக, திட்ட மேலாண்மை முகமை சேவைப்பணிகள் இந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டங்கள் முடிவடைந்த பின்னர், மேற்கண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை 15 ஆண்டு கால அடிப்படையில் இந்நிறுவனம் மேற்கொண்டுவருகிறது.

3. ஆம்பூரில் இரண்டு மற்றும் வாணியம்பாடி, பல்லாவரம் மற்றும் மேல்விசாரம் ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் ரூ. 143 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த 11.55 MLD திறன்கொண்ட தோல் பதனிடல் சார்ந்த ஐந்து பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான திட்ட மேலாண்மை முகமை சேவைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

4. தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், தற்போது திருப்பூரில் 3 ஜவுளித் தொழில் சார்ந்த பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் ஒரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான

தன்னிச்சையான இயக்குதல் மற்றும் பராமரிப்பு செயல்பாட்டாளராக செயல்பட்டு வருகிறது.

5. கரூர் மாவட்டம் காகிதபுரத்தில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்தின் தொழிற்சாலையில் 11 MLD பயன்படுத்தப்பட்ட நீரிலிருந்து நன்னீரை பிரித்தெடுக்கும் மீட்பு முறையை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்து வழங்கும் ஆலோசனை பணிகள் நிறைவேற்றப்பட்டது. இவற்றில் நாளொன்றுக்கு 1,20,000 லிட்டர் திறன் கொண்ட திரவ வெளியேற்றமில்லா முறையை தொழில் நுட்ப வணிகமயமாக்குவதற்கான சாத்தியக்கூறு மற்றும் முன்னோட்ட செய்முறையும் அடங்கும்.
6. பானிப்பட்டில் 42 MLD திறன் கொண்ட திரவ வெளியேற்றமில்லா பொது தொழிற்சாலை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்து வழங்கும் ஆலோசனை பணிகள் வழங்கப்பட்டது.

7. தெலுங்கானாவின் சங்காரெட்டி மாவட்டம் இந்திரக்கரன் ஜவுளி பூங்காவில் பொது தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான திட்ட மேலாண்மை ஆலோசனை பணி.
8. இந்தோ – ஜெர்மன் வளர்ச்சி கூட்டுறவு கீழ் Adellphi Consult GmbH, ஜெர்மனி உடன் இணைந்து மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்காக இந்தியாவில் கழிவு நீரை மறு உபயோகப்படுத்துதல் , மறு சுழற்சி செய்தல், திரவ வெளியேற்றமில்லா தொழில்நுட்பம் ஆகியவற்றிற்கான ஆயத்தப்பணிகளை மேம்படுத்துவதற்கான பணிகளை வழங்கும் ஆலோசகர்.
9. வங்காள தேசத்தில் கொனபாரி ஜவுளி தொகுப்பில் ஒருங்கிணைந்த தொழிற்சாலை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வுக்கான ஆலோசனை பணிகள் வழங்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**11.1.3. கடல்நீரைக் குடிநீராக்குதல்**

0.5 MLD முதல் 110 MLD வரை திறன் கொண்ட 17 கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்களுக்காக ஆலோசனை சேவைகளை தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் விரிவுபடுத்தியுள்ளது.(குஜராத்–9, தமிழ் நாடு–7 மற்றும் ஒடிசா–1).

1. குஜராத்தில் டஹேஜ் GIDC–ல் 100 MLD திறன் கொண்ட நிலையம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர்.
2. விழுப்புரம் மாவட்டம், மரக்காணத்தில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உத்தேசித்துள்ள 60 MLD திறனுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர்.
3. இராமநாதபுரம் மாவட்டம் குதிரைமொழியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உத்தேசித்துள்ள 60 MLD திறன் கொண்ட நிலையம்

அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர்.

4. கடலூரில் சிப்காட் உத்தேசித்துள்ள 20 MLD திறன் கொண்ட நிலையம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர்.

5. நெம்மேலியில் உள்ள 110 MLD திறன் கொண்ட உப்புநீக்கும் ஆலையின் செயல்பாடு மற்றும் பராமரிப்புக்கான செலவு மற்றும் ஏல ஆவணத்தை சரிபார்த்தல்.

6. நெம்மேலியில் உள்ள 110 MLD திறன் கொண்ட கடல் நீர் எதிர்மறை சவ்வூடுபரவல் உப்புநீக்கும் ஆலையின் (SWRO plant) செயல்பாடு மற்றும் பராமரிப்புக்கான தரம், அளவு, இரசாயன நுகர்வு, செயல்திறன், செலவு மற்றும் அறிக்கைகளை சரிபார்த்தல் மற்றும் ஒப்பிடுதல்.

7. ஒடிசாவில் உள்ள பாரதீப் துறைமுகத்தில் 10 MLD திறன் கொண்ட நிலையம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்

**11.1.4. நீராதாரங்களை மீட்டெடுத்தல் மற்றும் புனரமைத்தல்**

1. சென்னைப் பெருநகர மாநகராட்சியில் உள்ள 60 நீராதாரங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை.
2. உதகமண்டலம் ஏரிக்கான சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் ஆதார சோதனை செய்தல்.
3. தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட (முன்பு பல்லாவரம் நகராட்சி) ஜமீன் பல்லாவரம் பெரிய ஏரி மற்றும் கீழ்கட்டளை ஏரிக்காக திட்ட மேலாண்மை ஆலோசனை.
4. பெருநகர விசாகப்பட்டினம் மாநகராட்சியில் முடசர்லோவா ஏரி நீர்ப்பிடிப்பு பகுதிக்காக விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் திட்ட மேலாண்மை முகமை.

5. தமிழ்நாட்டில் 9 நகராட்சிகள் மற்றும் 18 பேரூராட்சிகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட ஆற்றுப் படுகைகளில், மாசுபாடுகளைக் குறைக்கும் பணிகளுக்காக, விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஆலோசகர் பணி (விரிவான திட்ட அறிக்கை நிலையில் உள்ளது).
6. சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளைக்காக (CRRT) கூவம், அடையாறு நதிகள் மற்றும் பக்கிங்காம் கால்வாய்களை மறுசீரமைக்கும் பணிகளுக்கு விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணி

## 11.2 நடைபெற்று வரும் திட்டங்கள்

மேற்கூறிய பணிகள் மற்றும் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து, தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் (TWIC) தற்போது பின்வரும் பணிகளைச் செயல்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது:–

i. இந்திய அரசின் ஜவுளித்துறை அமைச்சகம், ஒருங்கிணைந்த செயல்முறை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (IPDS) ராஜஸ்தான் மாநிலம், பாலியில் உள்ள நெக்ஸ்ட் ஜென் டெக்ஸ்டைல் பூங்காவிற்காக பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான திட்ட மேலாண்மை ஆலோசனை பணிகளுக்காக 50% மானிய தொகைக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ii. அம்ருட் 2.0 திட்டத்தின் மூலம் பேரூராட்சிகளின் இயக்குநரகத்தின் கீழ் பல்வேறு பேரூராட்சிகளில் 79 நீர் வழங்கல் திட்டங்களை செயல்படுத்த திட்ட மேலாண்மை ஆலோசனை

iii. தூய்மை இந்தியா இயக்கம் (SBM 2.0)இன் கீழ் 28 நகராட்சிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்/ கசடு கழிவு சுத்திகரிப்பு நிலைய கட்டுமானத்திற்கான விரிவான திட்ட அறிக்கை

**11.3 நடைபெற்று வரும் பெரிய அளவிலான திட்டங்கள்**

1. இந்திய அரசின் தேசிய தூய்மை கங்கை (NMCG) திட்ட நிதியுதவியின் கீழ், கான்பூர் ஜாஜ்மா (Jajmau) தோல் பதனிடுதல் தொகுப்புக்காக, 20 MLD திறன் கொண்ட பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான திட்ட மேலாண்மை முகமை.
2. கடல்நீரைக் குடிநீராக்குதலுக்கான திட்டங்கள்
   i. நெம்மேலியில், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்காக, 150 MLD திறன் கொண்ட நிலையம் அமைப்பதற்கான திட்ட மேலாண்மை ஆலோசகர்.
   ii. தூத்துக்குடி மாவட்டம் முள்ளக்காட்டில், சிப்காட் உத்தேசித்துள்ள 60 MLD திறன் கொண்ட நிலையம் கலப்பின வருடாந்திர மாதிரி (HAM– Hybrid Annuity Model) திட்டத்தின் கீழ் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை

தயாரித்தல் மற்றும் பரிவர்த்தனை ஆலோசகர் (ஒப்பந்தப்புள்ளி நிலை)

3. ஆவடி மாநகராட்சியில், விடுபட்டுப்போன பகுதிகளில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்திற்காக விரிவான திட்ட அறிக்கை மற்றும் பரிவர்த்தனை ஆலோசகர் பணி (ஒப்பந்தப் புள்ளி நிலை).

4. கோயம்புத்தூர் டைடல் பூங்காவில் தற்போதுள்ள 400 KLD திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்துவதற்கான ஒப்பந்த ஆவணங்கள் தயாரித்தல், ஒப்பந்த ஆவணங்கள் சரிபார்த்தல் மற்றும் மேலாண்மை, திட்ட மேலாண்மை ஆலோசகர் பணி.

5. ஓசூர் சிப்காட் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு எதிர்மறை சவ்வூடுபரவல் (TTRO) ஆலைகளின், இரண்டு கட்டங்களில் கட்டம் I & II (ஒவ்வொன்றும் 10 MLD) திட்ட மேலாண்மை ஆலோசகர் பணி மற்றும் கட்டம் III & IV பகுதியில் கூடுதல் உந்து

குழாய் அமைப்பு (additional conveyance) ஏல ஆவணத்தை சரிபார்த்தலுக்கான ஆலோசனை பணி.

6. சென்னை கொடுங்கையூரில், 45 MLD திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவல் முறையிலான மூன்றாம் நிலை (TTRO) சுத்திகரிப்பு ஆலையின் நிலை மதிப்பீட்டின் தொழில்நுட்ப தணிக்கை, நுண் துழை வடிகட்டி, காற்று ஒருமைப்பாடு சோதனை மற்றும் ஆய்வு சோதனை சரிபார்த்தல் மற்றும் உறுதிப்படுத்தல். மேலும் ஆலையின் ஒட்டுமொத்த செயல்திறனை மதிப்பிடுதல்.
7. ஓசூரில் உள்ள M/s டாடா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் உற்பத்தித் திட்ட தளத்திற்கு நீர் பகிர்மான அமைப்புடன் 3 MLD திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் (TTRO) அமைப்பதற்க்கான விரிவான திட்ட அறிக்கை, ஏல

ஆவணங்கள் தயாரித்தல் மற்றும் ஏல செயல்முறை மேலாண்மை தயாரிப்பதற்கான பணி.

8. இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள பிதுஜாவில் பொது காஸ்டிக் மீட்பு தொழிற்சாலை அமைப்பதற்கான திட்ட மேலாண்மை ஆலோசகர்.
9. ஒடிசா தொழில்துறை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்திற்காக (IDCO) தொழிற்சாலை தொகுப்பு / பூங்காக்களில் பூஜ்ஜிய திரவ வெளியேற்றம் கொண்ட பொது கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைகள், சுற்றுச்சூழல் திட்டமிடல் (திட/திரவ கழிவு மேலாண்மை உட்பட), ஒடிசா மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடம் இருந்து நிறுவுவதற்கான ஒப்புதல் (CTE) போன்ற கூறுகளுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் பரிவர்த்தனை ஆலோசகர் பணி.
10. SIPCOT பெருந்துறை, ஈரோடு மாவட்டத்தில், 2000 KLD திறன் கொண்ட பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (CETP) அமைப்பதற்கான விரிவான

திட்ட அறிக்கை (DPR) தயாரிப்பதற்கான ஆலோசனை.

11. மெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மண்டலத்தில் (MEPZ SEZ) ஜீரோ திரவ வெளியேற்றத்துடன் (ZLD) பொது கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைக்கான விரிவான திட்ட அறிக்கை (DPR) மற்றும் பரிவர்த்தனை ஆலோசகர் பணி.

12. இந்தோ – ஜெர்மானிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தின் (IGSTC) மானியம் மூலமான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டம் – "சுத்திகரிப்பு செய்யப்பட்ட தண்ணீரிலிருந்து மின்சாரத்தின் செயல்திறனை உப்பு மற்றும் நுண்துகள்களை நீக்குவதற்கான தண்ணீர் சுத்திகரிப்பு நடைமுறைகளை மிகச்சிறந்த முறையில் கண்காணித்தல் ".

## 11.4 விருதுகள்

1. குளோபல் வாட்டர் இன்ட்டலிஜன்ஸ் (GWI) விருது 2014 – ஆண்டின் தொழிற்கூட தண்ணீர் சார்ந்த திட்டத்திற்காக வழங்கப்பட்டது.
2. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தண்ணீர் மறு பயன்பாட்டு சங்கத்தால், 2014 ஆம் ஆண்டுக்கான தண்ணீர் மறு பயன்பாடு தொழிற்கூட திட்டத்திற்காக விருது வழங்கப்பட்டது.
3. ஏதென்ஸ் நகரில், தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்திற்கு, 2015 ஆம் ஆண்டுக்கான The 2030 WRG Corporate Water Stewardship விருது, GWI, UK – ஆல் வழங்கப்பட்டது .

## 11.5 இந்திய அரசுக்கான பணிகள்

தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், இந்திய அரசின் பல்வேறு வளர்ச்சி மற்றும் திட்டங்களுக்காக இணைந்து செயலாற்றி வருகிறது. வளர்ச்சி திட்டங்களின் விவரம் பின்வருமாறு:

1. தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்தின் பூஜ்ய திரவ வெளியேற்ற (ZLD) தொழில்நுட்பத்தை ஜவுளித்துறை அமைச்சகம் அங்கீகரித்துள்ளது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை மதிப்பீடு செய்து ஏற்றுக் கொண்டுள்ளது.
2. இந்தியாவில் ஜவுளித்துறை அமைச்சகத்தின் ஒருங்கிணைந்த செயல் முறை வளர்ச்சி திட்டத்திற்கு ஜவுளி அடிப்படையிலான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான, திட்ட மேலாண்மை ஆலோசகராக தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் விளங்குகிறது.
3. தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், தேசிய தூய்மை கங்கை திட்டத்திற்காக (NMCG) உத்திர பிரதேச மாநிலத்தில் உள்ள பல்வேறு தொழிற்சாலை தொகுப்புகளில் உள்ள தொழிற்சாலைகளுக்கான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையை

தயாரிப்பதற்கு திட்ட மேலாண்மை ஆலோசகராக விளங்கி வருகிறது. மேலும், இந்நிறுவனம் கான்பூரில் உள்ள ஜாஜ்மா தோல் பதனிடல் தொழிற்சாலைக்கான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான திட்ட பொறியாளராகவும் செயல்படுகிறது.

4. தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், துறைமுகங்களில் எதிர்மறை சவ்வூடு பரவல் வாயிலாக கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் அமைப்பதற்கு ஆலோசனைகளை அளிப்பதற்காக, தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனத்துடன் (NIOT) கூட்டு நிறுவனமாக விளங்குகிறது.

### 11.6. நிறுவனத்தின் நிதிநிலை

தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்தின் வருவாய் 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.27.60 கோடியாக இருந்த நிலையில், 2022-23 ஆண்டில் ரூ.25.71 கோடியாக உள்ளது.

## 12. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் (SDGs)

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை 2030–க்குள் அடைவதற்கு உயர் முன்னுரிமை அளிக்கிறது. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை நேரடியாக அடைவதற்கான பல்வேறு திட்டங்கள் மற்றும் செயல்முறைத் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு, அவையாவும் செயலாக்கத்தில் உள்ளன. இத்துறையால் எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளின் விவரங்கள் சுருக்கமாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

### a. உடல் நலம் மற்றும் நல்வாழ்வு (இலக்கு 3)

பெருநகர சென்னை மாநகராட்சியானது முழுமையான சுகாதார சேவைகள் அதாவது கர்ப்பகால முந்தைய மற்றும் பிந்தைய கவனிப்புகள், குழந்தைகள் நலம், தொற்று நோய்கள் மற்றும் தொற்றா நோய்களுக்கு சிகிச்சை மற்றும் அடிப்படை பகுப்பாய்வு

சோதனைகளை ஒரே குடையின் கீழ் அளித்து வருகின்றது. சென்னை நகரக் கூட்டாண்மை திட்டத்தின் ஒரு பகுதியாக தேசிய நகர்ப்புர நலவாழ்வு மையம் மற்றும் உலக வங்கி நிதியுதவியுடன் சுகாதார உட்கட்டமைப்பு மற்றும் மனித வளம் சீரமைக்கப்பட்டு மேம்படுத்தப்படும்.

**b. தரமான கல்வி (இலக்கு 4)**

வகுப்பறைக்கு தேவையான மற்றும் சீரான மின்சாரம், இணையவழி இணைப்பு, மடிகணினி, ஸ்மார்ட் போர்டு மற்றும் வகுப்பறைக்கான தளவாடங்கள் ஆகியவற்றைக் கொண்டு ஸ்மார்ட் வகுப்பறைகளாக மாற்றப்பட்டு வருகின்றன.

**c. பாலின சமத்துவம் (இலக்கு 5)**

பெருநகர சென்னை மாநகராட்சி ஆனது பெண்களின் நலனுக்காக நிர்பயா திட்டத்தின் கீழ் நவீன கழிப்பறைகள், வாழ்வாதாரங்கள், பாதுகாப்பு போன்ற பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. பாலின பிரச்சனைகளை கண்டறிய சென்னைப்

பெருநகர மாநகராட்சியில் பாலின ஆய்வகம் நிறுவப்பட்டு தீர்வுகள் காணப்படுகின்றன.

**d. சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம் (இலக்கு 6)**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நீர்நிலைகளை புனரமைக்கவும், நிலத்தடி நீர் மட்டத்தை அதிகரிக்கவும், சுற்றுப்புறங்களை அழகுபடுத்தவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிதாக அமைக்கப்பட்ட மழைநீர் வடிகால்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. தனிநபர் மற்றும் சமுதாய கிணறுகள் மழைநீர் சேகரிக்கும் கட்டமைப்புகளாக கட்டமைக்கப்பட்டுள்ளன. பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் அனைத்து பொது மற்றும் சமுதாயக் கழிப்பறைகள் நவீன வசதியுடன் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

**e. எளிய மற்றும் தூய்மையான சக்தி (இலக்கு 7)**

குறைந்த மின்சாரம் உபயோகிக்கும் வகையில் சிறந்த வெளிச்சம் அளிப்பதற்காக சோடியம் விளக்குகள் எல்.ஈ.டி விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி நடைபயிற்சி, மிதிவண்டி மற்றும் E–மிதிவண்டிஆகியவற்றின் மூலம் மோட்டார் இல்லா வாகன போக்குவரத்தை ஊக்குவிக்கிறது. இதன்மூலம் பொது மக்களின் ஆரோக்கியம் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**f. நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள் (இலக்கு 11)**

நகரங்கள் மற்றும் மனித குடியிருப்புகளை உள்ளடக்கிய, பாதுகாப்பான, மீள்திறன் மற்றும் நிலையான வளர்ச்சியை உருவாக்குதல். காற்றின் தரம், நகராட்சி மற்றும் பிற கழிவு மேலாண்மைக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மேலும், நகரங்களின் தனிநபர் சுற்றுச்சூழல் பாதிப்பைக்

குறைக்க பெருநகர சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

**g. இலக்குகளை அடைவதற்கான கூட்டமைப்பு (இலக்கு 17)**

நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை அடைய தமிழ்நாடு அரசு உலக வங்கியுடன் இணைந்து மூன்று கட்டங்களில் சென்னை நகரக் கூட்டாண்மைத் திட்டத்தினை செயல்படுத்தவுள்ளது.

## 13. பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் மற்றும் அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரி மூலம் பல்வேறு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பின் பணியாளர்களுக்கு திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

ஜெர்மன் மேம்பாட்டு வங்கியின் நிதியுதவியுடன், நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதியுதவி–தமிழ்நாடு–நிலை–II–பகுதி–2 (SMIF–TN–II–2) திட்டத்தின் கீழ், பின்வரும் 11 துறைகளில் திறன் மேம்பாடு மற்றும் பயிற்சித் திட்டங்களை வழங்குவதற்காக 52 பாடப்பிரிவுகள் மற்றும் 8 பணிப்பட்டறைகளை உள்ளடக்கிய ஒரு திட்ட அறிக்கையை தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் மூலம் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தயாரித்துள்ளது.

- நகர்ப்புர ஆளுகை மற்றும் மேலாண்மை
- நகர்ப்புர குடிநீர் மேலாண்மை

- நகர்ப்புர சுகாதார மேலாண்மை
- நகர்ப்புர போக்குவரத்து மற்றும் பாதுகாப்பான நகர்ப்புர சாலைகள்
- நகர்ப்புர திட்டமிடல் – நீல பசுமை உட்கட்டமைப்பு
- நிதி
- திட்ட மேலாண்மை
- கொள்முதல்
- சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை
- பொது நிருவாகம்
- நகர்ப்புர தரவு மேலாண்மை, தொழில்நுட்ப மென்பொருள், தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப பயன்பாடு

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், நகராட்சி நிருவாக இயக்குநரகம், பேரூராட்சிகளின் இயக்குநரகம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், சென்னை

நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் ஆகியவற்றின் 5200 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இத்திறன் மேம்பாட்டு திட்டங்கள் மூலம் பயன் பெறவுள்ளனர். இதுவரை, மொத்தம் 3,500 பங்கேற்பாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர், மீதமுள்ள 1,700 பங்கேற்பாளர்களுக்கு 2024ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

## 14. தொடர் செயல் திட்டம்

விரிவான தொலைநோக்கு திட்டத்திற்கு இணங்க, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையானது, மாநிலத்தின் அனைத்து நகர்ப்புரங்களில் வசிப்பவர்களுக்கு நல்ல வாழ்க்கைத் தரத்தை வழங்கவும், சுற்றுச்சூழலைப் பேணக்கூடிய சூழலைப் பராமரிக்கவும், அடிப்படை வசதிகளை வழங்கவும், உயிரோட்டமான சமூக இடங்களை உருவாக்கவும் பாடுபடுகிறது. நகர்ப்புர வளர்ச்சியில் அக்கறை, விரிவான தன்மை, உள்ளடக்கம், ஒருங்கிணைப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் பொது மக்களின் பங்கேற்பு ஆகிய அணுகுமுறை மூலம் இது அடையப்படும்.

கண்காணிப்பு, பின்னூட்ட வழிமுறைகள் மற்றும் மதிப்பீட்டு செயல்முறைகள் சேவை வழங்கலின் செயல்திறனை மேம்படுத்தவும், பல்வேறு திட்டங்கள் மற்றும் திட்டங்களின் விளைவுகளை மேம்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சரின் ஆற்றல்மிக்க தலைமையின் கீழ், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையானது அதன் தொலைநோக்குப் பார்வையை நடைமுறைப்படுத்த தீவிரமாகச் செயல்பட்டு, நம்பிக்கை மற்றும் லட்சியத்தின் முன்மாதிரியாக மாநிலத்தை முன்னேற்றும்.

**கே.என்.நேரு**

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.02.2024 அன்று ரூ.1516.82 கோடி மதிப்பீட்டில்,
நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை திறந்து வைத்தார்.



நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் – நெம்மேலி.



நாளொன்றுக்கு 120 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட (மண்டலம் - 2) கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் - கொடுங்கையூர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.05.2023 அன்று ரூ.61.98 கோடி மதிப்பீட்டில் வில்லிவாக்கத்துடன் கொளத்தூரை இணைக்கும் புதிய இரயில்வே மேம்பாலத்தை திறந்து வைத்தார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 30.08.2023 அன்று ரூ.1.09 கோடி மதிப்பீட்டில், கொளத்தூர், ஜவஹர் நகரில் உள்ள 5 இடங்களில் மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைக்கும் (Sponge Parks) பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 01.07.2023 அன்று ரூ.66.83 கோடி மதிப்பீட்டில், திரு.வி.க. நகர் மண்டலம், ஸ்டீபன்சன் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள செங்கை சிவம் பாலத்தை திறந்து வைத்தார்.



04.03.2024 அன்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேசிய நகர்ப்புர சுகாதாரத் திட்ட நிதியின் கீழ், ரூ.3.20 கோடி மதிப்பீட்டில், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு - 120, திருவல்லிக்கேணி, முத்தையா முதலி தெருவில், நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையத்தை திறந்து வைத்தார்.




விரிவுபடுத்தப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்கான பவானி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட குடிநீர் அபிவிருத்தித் திட்டம் – பில்லூர் – III. ரூ.779.86 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களால் 11.02.2024ல் துவக்கி வைக்கப்பட்டது.



விரிவுபடுத்தப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்கான பவானி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட குடிநீர் அபிவிருத்தித் திட்டம் - பில்லூர் - III. ரூ.779.86 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களால் 11.02.2024ல் துவக்கி வைக்கப்பட்டது.



14.03.2024 அன்று மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு அவர்கள் “முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி மாளிகை” பெயர்ப் பலகையினை ரிப்பன் கட்டட வளாகத்தில் திறந்து வைத்தார்.



30.09.2023 அன்று மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு அவர்கள் ரூ.2.09 கோடி மதிப்பீட்டில், தண்டையார்பேட்டை மண்டலம், பெரம்பூர் காமராஜர் நகரில், புதிதாக கட்டப்பட்டுள்ள நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையத்தை திறந்து வைத்தார்.



தொல்காப்பியப் பூங்கா மறுமேம்பாடு – மாதிரி வடிவம் (பணி நடைபெற்று வருகிறது).



தொல்காப்பியப் பூங்கா மறுமேம்பாடு – மாதிரி வடிவம் (பணி நடைபெற்று வருகிறது).



திருப்பூர் மாநகராட்சியில் பன்னடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைத்தல்
திட்டம் : சீர்மிகு நகரத் திட்டம் திட்ட மதிப்பீடு ரூ.12.87 கோடி.



திருப்பூர் மாநகராட்சியில் பேருந்து நிலையம் மேம்படுத்துதல்
திட்டம் : சீர்மிகு நகரத் திட்டம்      திட்ட மதிப்பீடு ரூ.30.60 கோடி.



நாகர்கோவில் மாநகராட்சியில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைத்தல்
திட்டம் : மூலதன மானிய நிதி திட்ட மதிப்பீடு ரூ.2.50 கோடி.



கொமாரபாளையம் நகராட்சியில் ராஜராஜன் நகர் பகுதியில் தார் சாலை அமைத்தல்
திட்டம் : கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் திட்ட மதிப்பீடு ரூ.2.02 கோடி.



திருப்பூர் மாநகராட்சியில் அம்ரூத் திட்டத்தின் கீழ் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்
திட்ட மதிப்பீடு ரூ.1120.57 கோடி.



புதுக்கோட்டை நகராட்சி சத்தியமூர்த்தி சாலையில் ரூ.9.25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட பூங்கா.



திருவண்ணாமலை மாவட்டம் – தேசூர் பேரூராட்சி அம்ரூத் 2.0 திட்டத்தில் ஆயர் குளம் புனரமைப்பு பணி
மதிப்பீட்டுத் தொகை ரூ.39.25 இலட்சம்.



நாமக்கல் மாவட்டம் – மோகனூர் பேரூராட்சி – கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதிய நவீன எரிவாயு தகனமேடை, கழிப்பிடம் மற்றும் வாகன நிறுத்துமிடம் மதிப்பீட்டுத் தொகை – ரூ.1.50 கோடி.



தஞ்சாவூர் மாவட்டம் – திருப்பனந்தாள் பேரூராட்சி, கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம்
அல்லிக்குளம் நீர்நிலை மேம்பாட்டுப் பணி.



விழுப்புரம் மாவட்டம் – செஞ்சி பேரூராட்சி, கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பேருந்து நிலையம் மதிப்பீட்டுத் தொகை ரூ.6.74 கோடி.




ஈரோடு மாவட்டம் – லக்கம்பட்டி பேரூராட்சி, வள்ளியம்பாளையம் சாலை – வெல்லங்காட்டு பாளையம் தடுப்புச் சுவருடன் கூடிய தார்சாலை அமைத்தல் – மதிப்பீடு 1.22 கோடி.



ஈரோடு மாவட்டம் – லக்கம்பட்டி பேரூராட்சி, அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் இந்திரா நகர் பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் மேம்பாடு செய்தல். மதிப்பீடு – 26.50 இலட்சம்.



இராமநாதபுரம் மாவட்டம் – ஆர்.எஸ். மங்கலம் பேரூராட்சி – அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் அரசு ஆளவந்தான் ஊரணி மேம்பாடு செய்தல். மதிப்பீடு – 1.46 கோடி.



கோயம்புத்தூர் மாவட்டம், விரிவுபடுத்தப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்கான (புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளுடன்)
பவானி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட குடிநீர் அபிவிருத்தித் திட்டம் – பில்லூர் III. நீர் சுத்திகரிப்பு நிலையம் – தாண்டி பெருமாள்புரம்.



கரூர் மாவட்டத்தில் உள்ள அரவக்குறிச்சி மற்றும் க.பரமத்தி ஒன்றியங்களைச் சார்ந்த 756 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். தலைமை நீரேற்று நிலையம் – செவ்வந்திபாளையம்.



திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஜோலார்பேட்டை, கந்திலி, திருப்பத்தூர் மற்றும் நாட்றம்பள்ளி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த
759 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். தரைமட்ட நீர்தேக்கத் தொட்டி, கொள்ளளவு - 6.15 இலட்சம் லிட்டர். பெரியகம்மியம்பட்டு.



திருப்பத்தூர் மாவட்டம் – ஆம்பூர் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம்
16.71 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் – கஸ்பா. A–ஆம்பூர் நகராட்சி.



செங்கல்பட்டு மாவட்டம் – திருப்போரூர் பேரூராட்சிக்கான பாதாளசாக்கடைத் திட்டம்
4.02 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் – காலவாக்கம்.



கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டத்திலுள்ள அன்னூர், அவிநாசி மற்றும் சூலூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 708 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 165 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். 11.51 MLD நீர் சுத்திகரிப்பு நிலையம் - நரியம்பள்ளி.